இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம்

ஆண்டு அறிக்கையும் கணக்குகளும்

2022

குறிக்கோள்

சர்வதேசத் தரமுடைய பல்கலைக்கழகமாகத் திகழும் வகையில் தேசத்தைக் கட்டியெழுப்பக் கூடிய ஆற்றல் மிக்க தலைவர்களை உருவாக்கும் கேந்திர நிலையமாக விளங்குதல்.

இலக்கு

அறிவைத் தேடுவதற்கும் பரப்புவதற்கும், நடைமுறைத் திறன்கள் மற்றும் நேர்மறையான மனப்பாங்குகளைச் செயல்படுத்துவதில் திறமை மிக்க ஆண்களையும் பெண்களையும் உருவாக்கக் கற்றல், ஆய்வு மற்றும் பயிற்சியினை ஊக்குவித்தல். இப்பல்கலைக்கழகமானது இலங்கை மற்றும் இலங்கையின் சபரகமுவ மாகாணத்தின் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக்கான சிறப்பு மையமாக விளங்கும்.

குறிக்கோள்கள்

உயர் கல்விக் கற்கைக்குச் சிறப்பான ஒரு மையமாக இருத்தல்.

நாட்டின் வளர்ச்சித் தேவைகளுக்கு ஏற்பப் பட்டதாரிகளை உருவாக்குதல்.

பணியாளர்களினதும் மாணவர்களினதும் ஆளுமை வளர்ச்சியை மேம்படுத்துதல்.

ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தித் துறையில் சர்வதேச அளவில் பாராட்டுகளைப் பெற்ற பிராந்திய நிறுவனம் என்ற அந்தஸ்தை அடைதல்.

தேசிய மட்டத்திலான தேவைகளுக்கு ஏற்ற துறைகளில் தொழிற்சார் நிகழ்ச்சித் திட்டங்களைத் தொடர்ந்தும் மேம்படுத்தல்.

பிராந்தியத்தில் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த ஒரு வள மையமாக இருத்தல்.

நோக்கங்கள்

- கல்வித் திட்டத்தின் தரம் மற்றும் பொருத்தத்தை தொடர்ந்து மேம்படுத்துதல்.
- கற்பித்தல் மற்றும் கற்றலுக்கான கடத்தும் சூழலை உருவாக்குதல்.
- உயர் கல்விக்கான அணுகலை அதிகரிக்க.
- ஆராய்ச்சிக்கான கடத்தும் சூழலை உருவாக்குதல்.
- கூட்டு ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்புகளை ஊக்குவிக்க
- சேனல்களைப் பரப்பும் ஆராய்ச்சி முடிவை விரிவுபடுத்த.
- பல்கலைக்கழக சமூகத்தின் உயர்தர ஆராய்ச்சியை அங்கீகரித்து விருது வழங்குதல்.
- பல்கலைக்கழக இமேஜை அதிகரிக்க.
- உடல், உள்கட்டமைப்பு மற்றும் மேற்கட்டுமான வசதிகளை மேம்படுத்துதல்.
- மனித வளங்களை வலுப்படுத்துதல்.
- பரஸ்பர பொருளாதார நலன்களைப் பகிர்ந்து கொள்வதற்கான திறன் மேம்பாட்டின் மூலம் உள்ளூர் சமூகத்தின் அதிகாரத்தை மேம்படுத்துதல்.
- பல்கலைக்கழக சமூகம் மற்றும் பரந்த சமூகத்தினரிடையே நல்லிணக்கத்தை மேம்படுத்துதல்.
- வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதற்கும் பரந்த ஏற்றுக்கொள்ளலுக்கும் பல்கலைக்கழக சமூகத்தினுள் மூலோபாய மேலாண்மைத் திட்டத்தை நிறுவனமயமாக்குதல்.

பல்கலைக்கழக இலச்சினை

பல்கலைக்கழக இலச்சினையானது வலயத்தையும் பல்கலைக்கழகத்தினால் சேவை வழங்கப்படும் மக்களையும் நிலவும் முன்மாதிரிகளையும் குறித்துக் காட்டும். மரபார்ந்த விளக்குச் சிட்டிகையும் அதன் சுடரும் அறிவையும் ஞானத்தையும் குறிக்கும்.

நூல் : **கல்வி**

சமனல கந்த : **சபரகமுவ மாகாணம்**

இரத்தினம் : **இரத்தினபுரி மாவட்டம்**

பல்கலைக்கழகக் கொடி

பல்கலைக்கழகக் கொடி மெரூன், பொன் ஆகிய இரு வண்ணங்களால் ஆனது. மெரூன் நிறம் பண்பட்ட தன்மையையும் பொன்னிறம் ஒழுக்கத்தையும் குறித்து நிற்கின்றன. கொடியின் மையப் பகுதியில் பல்கலைக்கழக இலச்சினை பொறிக்கப் பட்டுள்ளது.

பல்கலைக்கழக கீதம்

මේ ඔබේ සවියයි
(මෙ ඔපෙ සවියය්)
මේ මගේ සවියයි
(මෙ මකෙ සවියය්)
සබරගමුව සරසවියයි ..... //
(සපරකමුව සරසවියය්...) //

සමනල වැව පිපි නෙළුම් නෙලා ගෙන
(සමනල වෙව පිපි නෙලුම් නෙලාකෙන)
ගිරිකුළු වන රද මතින් ගලා යන
(කිරිකුලු වන රත මතින් කලා යන)
ජීවිතයේ කඳු මුදුන් සොයා ගෙන
(ජීවිතයෙ කන්දු මුදුන් සොයා කෙන)
හාගල කන්ද නගින්නේ ... //
(හාකල කන්ත නකින්නේ...) //

සිරිපා පහනින් එළිය ලබා ගෙන
(සිරිපා පහනින් එළිය ලපා කෙන)
මනරම් විදුණැන අකුරු දරාගෙන
(මනරම් විදුණෙන අකුරු තරාකෙන)
කළුගං පතුලේ රුවන් සොයාගෙන
(කලුකඟ් පතුලෙ රුවන් සොයාකෙන)
උඩුගම් බලා ඇදෙන්නේ ..... //
(උදුකම් පලා එතෙන්නේ...) //

දෙරණේ උරුමය ලොවට බෙදාගෙන
(තෙරණේ උරුමය ලොවට්ට පෙතාකෙන)
සිප් කගගින් රුදු අඳුර නසාගෙන
(සිප් කකකින් රුදු අන්දුරු නසාකෙන)
ඔබෙත් මගෙත් හීනය කලඑළි වන
(ඔපෙත් මකෙත් හීනය කලඑළි වන)
දිනය උදා වන්නේ ..... //
(තිනය උතා වන්නේ...) //

මේ ඔබේ සවියයි
(මෙ ඔපෙ සවියය්)
මේ මගේ සවියයි
(මෙ මකෙ සවියය්)
සබරගමුව සරසවියයි ..... //
(සපරකමුව සරසවියය්...) //

துணைவேந்தரின் மதிப்பாய்வு – 2022



இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகமானது ஒரு தேசியப் பல்கலைக்கழகமாகத் தனது 27 வருடகாலத்தினை மிக வெற்றிகரமாக நிறைவுசெய்யும் ஒரு சிறப்பான தருணத்தில் 2022 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கைக்காக இச்செய்தியை அளிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகமானது கொழும்பிலிருந்து 162 கிலோமீட்டர் தொலைவிலே கொழும்பு - பதுளை ஏ4 அதிவேக நெடுஞ்சாலை ஊடறுத்துச் செல்லும் பெலிஹுலோயா நகருக்கு அண்மையில் அமைந்துள்ளது. இந்தப் பல்கலைக்கழகம் சுமார் 253 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ளது.

இப்பல்கலைக்கழகம் தற்போது ஒன்பது (9) பீடங்களைக் கொண்டமைந்துள்ளது. பட்டதாரிக் கற்கைகள் பீடம், விவசாய விஞ்ஞான பீடம், பிரயோக விஞ்ஞான பீடம், வரைபட (கேத்திர) கணித பீடம், முகாமைத்துவக் கற்கைகள் பீடம், சமூக விஞ்ஞானங்கள் மற்றும் மொழிகள் பீடம், தொழினுட்பவியல் பீடம், மருத்துவ பீடம், கணினிக் கற்கைகள் பீடம் என்பனவே அவையாகும். மருத்துவ பீடமானது இரத்தினபுரியிலே குருவிட்ட பிரதேசத்தில் அமைந்துள்ளது. 2022 ஆம் ஆண்டில் இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகத்தின் உள்ளக மாணவர்களின் எண்ணிக்கை ஏறத்தாழ 8146 ஆகும். இவ் ஆண்டில் பல்கலைக்கழகத்திற்கு உள்ளீர்க்கப்பட்ட உள்ளக மாணவர்களின் எண்ணிக்கை 2022 ஆகவும், பட்டப்பின் படிப்பிற்காக உள்ளீர்க்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 829 ஆகவும் அமைந்துள்ளனமேலும், திறந்த மற்றும் தொலைக்கல்வி கற்றல் மையத்தினால் நடாத்தப்படும் கற்கை நெறிகளுக்காக 3265 மாணவர்கள் பதிவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இப்பல்கலைக்கழகமானது தனது மொத்த ஊழியர் படையில், 321 கல்வியாளர்களையும், 33 நிர்வாகம் மற்றும் செயற்குழு ஊழியர்களையும், 22 கல்வித்துறைசார் உதவி ஊழியர்களையும் 384 கல்விசாராப் பணியாளர்களையும் உள்ளடக்கியுள்ளது.

பல்வேறு நெருக்கடி நிலைமைகளுக்கு மத்தியிலும், பல்கலைக்கழகத்தின் புத்தாக்கத்திறனும் போற்றத்தக்க அர்ப்பணிப்புடன்கூடிய சேவையுணர்வும் கொண்ட கல்வியாளர்கள், நிர்வாக மற்றும் கல்விசாரா ஊழியர்களின் பங்களிப்பு, மாணவர்களின் சிறந்த ஒத்துழைப்பு ஆகியவற்றினால் விரிவுரைகள், செய்முறைப் பயிற்சிகள் மற்றும் தேர்வுகள் உட்பட பல்கலைக்கழகத்தின் கல்வி நவடிக்கைகள் யாவும் பல்வேறு மாற்று முறைகளைப் பயன்படுத்தி வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டன. மேலும் மேலும், கொவிட் - 19 பெருந்தொற்றுநோய் சூழ்நிலையை அடுத்து நிலவிய அனைத்து வகையான கட்டுப்பாடுகள், சிரமங்களுக்கு மத்தியிலும் பல்கலைக்கழகத்தின் பொதுப் பட்டமளிப்பு விழாவும் உரிய நேரத்தில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

பல்கலைக்கழகத்தின் பௌதீக அபிவிருத்தி நடவடிக்கைகள் வருடம் முழுவதும் எவ்வித இடைநிறுத்தமும் இன்றித் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டன. அவ்வகையில், பல்கலைக்கழக நூலகம் (ரூ.315 மில்லியன்) உட்பட பிரயோக விஞ்ஞான பீடம் (ரூ. 453 மில்லியன்), விவசாய பீடம் (ரூ. 798 மில்லியன்), மருத்துவ பீடம் (ரூ. 1014 மில்லியன்), தொழினுட்பவியல் பீடம் (ரூ. 2050 மில்லியன்) ஆகிய பீடங்களில் கட்டிட வளாகங்களை நிர்மாணித்தல், AHEAD செயற்திட்டத்தின் கீழ், பிரயோக விஞ்ஞான பீடம் (ரூ. 31 மில்லியன்), சமூக விஞ்ஞானங்கள் மற்றும் மொழிகள் பீடம் (34 மில்லியன்) ஆகிய பீடங்களுக்கான கட்டிடங்களை அமைத்தல், ஹெலபோஜுன்ஹல

உணவகத்தை அடுத்து எல்லைச் சுவர் கட்டுதல், விவசாயப் பண்ணையுடன் தொடர்புடைய புத்தாக்க அபிவிருத்திப் பணிகள் என்பன மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவ்வாறே, வளமுகாமைத்துவக் கட்டிடம், கழிவுநீர் சுத்திகரிப்புத் திட்டம் என்பவற்றின் வடிவமைப்பு, நிர்மாணம் தொடர்பான கருத்திட்ட நகல்களும், விளையாட்டு விஞ்ஞான பீடம், விலங்கியல் விஞ்ஞான பீடம் ஆகிய இரு புதிய பீடங்களின் நிர்மாணம் தொடர்பான முன்மொழிவுகளும் கையளிக்கப்படுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இப்பல்கலைக்கழகமானது பட்டக்கற்கை மாணவர்கள், கல்விசார் ஊழியர்களிடையே ஆய்வுக் கலாசாரத்தினை மேம்படுத்துவதற்கான வசதிகளை வழங்குவதற்கான பல்வேறு முன்னெடுப்புக்களை மேற்கொண்டு வருகிறது. இதனடியாக, 2022 ஆம் ஆண்டிலே மூன்று சர்வதேச மாநாடுகளும் மாணவர் ஆய்வுக் கருத்தரங்க அமர்வுகள் ஐந்தும் நடாத்தப்பட்டன. மேலும், பல்கலைக்கழகத்துக்கு வெளியில் இருந்து சுமார் 16 நிதியுதவி ஆராய்ச்சித் திட்டங்களினூடே கிட்டத்தட்ட ரூ. 500 மில்லியன் பெறுமதியான ஆராய்ச்சி நிதியை இப்பல்கலைக்கழக ஊழியர்களால் பெறக்கூடியதாய் இருந்தது. இதே ஆண்டில் இப்பல்கலைக்கழகத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகளின் பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்டு 05 காப்புரிமை விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதோடு, அவற்றை வணிக மயமாக்குவதற்காகத் தொழில் துறைப் பங்காளிகளுடன் 02 உரிம ஒப்பந்தங்களும் 03 புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் கைச்சாத்திடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

'ஸ்மார்ட்' பல்கலைக்கழக எண்ணக்கருவின் கீழ், மாணவர்களினதும் ஊழியர்களினதும் தகவல் முகாமைத்துவம் என்பவற்றை மேம்படுத்துவதற்கான முறைமைகளும், பௌதீக வளங்களை நிர்வகிப்பதற்கான அமைப்புகளை மேம்படுத்துவதற்கான முறைமைகளும் உள்ளீடு செய்யப்பட்டுள்ளன. சிரேஷ்ட முகாமைத்துவக் குழு, மாணவர் ஆதரவு சேவைகள், நலன்புரி அமைப்பு போன்ற பல்வேறு நிர்வாக அமைப்புகளை நிறுவி, அவற்றின் உதவியோடு பல்கலைக்கழகத்தின் நிர்வாகத்தை மிகவும் காத்திரமானதாகவும் திறன்மிக்கதாகவும் கட்டியெழுப்புவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்தப் பல்கலைக்கழகத்தில் தார்மீகமான நிர்வாகத்தை உறுதி செய்வதற்காகப் பத்துக் (10) கொள்கைகள் உருவாக்கப்பட்டுள்ளன. அத்துடன், சமூகத்திற்குச் சிறப்பான சேவையை வழங்கும் நோக்குடன் பல்கலைக்கழக ஊழியர்களின் திறன்கள் மேம்படுத்தும் வகையில் இவ்வருடத்தில் சுமார் 26 பயிலரங்குகளும் பயிற்சிப் பாசறைகளும் ஒழுங்குசெய்யப்பட்டமை கவனத்திற்குரியது.

இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகத்தினால் அதன் ஊழியர்கள் மற்றும் மாணவர்களின் போற்றத்தக்க சேவையினாலும் அர்ப்பணிப்பினாலும் 2022 ஆம் ஆண்டில் வெற்றிவாய்ந்த ஒரு நிலையினை எட்டக்கூடியதாக இருந்தது. மேலும், ஆண்டு முழுவதும் தொலைநோக்குப் பார்வையுடன் கூடிய தலைமைத்துவத்தையும் ஆதரவையும் வழங்கிய பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் கல்வி அமைச்சு ஆகியவற்றை இத்தருணத்தில் நான் நன்றியுடன் நினைவுகூர்கின்றேன். அவ்வகையில், மிகுந்த அர்ப்பணிப்புடன் பணியாற்றிய அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

சிரேஷ்ட பேராசிரியர் R.M.U.S.K. ரத்னாயக்க

துணைவேந்தர்

உள்ளடக்கம்

1. பல்கலைக்கழகம்

1.1 பல்கலைக்கழக வரலாறு 10
1.2 அறிமுகம் 10
1.3 வேந்தர் 12
1.4 பல்கலைக்கழக அதிகாரிகள் 12
1.5 பேரவை 14
1.6 மூதவை 15
1.7 நிறுவன அமைப்பு 20

2. பீடங்கள்

2.1 பட்டதாரிக் கற்கைகளுக்கான பீடம் 21
2.2 விவசாயவிஞ்ஞான பீடம் 25
2.3 பிரயோக விஞ்ஞான பீடம் 29
2.4 வரைபட (கேத்திர) கணித பீடம் 35
2.5 முகாமைத்துவக் கற்கைகள் பீடம் 37
2.6 மருத்துவ பீடம் 39
2.7 சமூக விஞ்ஞானங்கள் மற்றும் மொழிகள் பீடம் 42
2.8 தொழினுட்பவியல் பீடம் 46

3. கற்பித்தல் வளங்கள்

3.1 நூலகம் 47
3.2 கணினி விஞ்ஞானக் கற்கைகளுக்கான நிலையம் 53
3.3 உடற்கல்வித் துறை 64

4. கற்கை நிலையங்கள்

4.1 தொழில் வழிகாட்டல் அலகு 77
4.2 திறந்த மற்றும் தொலைக் கல்வி கற்றல் மையம் 82
4.3 பழங்குடிச் சமூகக் கற்கைகளுக்கான மையம் 85
4.4 பணியாளர்கள் மேம்பாட்டு நிலையம் 87
4.5 ஆய்வு மற்றும் அறிவுப் பரவலாக்கத்துக்கான நிலையம் 93
4.6 உள்ளக தர உத்தரவாத மையம் (CQA) 97
4.7 பல்கலைக்கழக வணிக இடைத்தொடர்புக் கூடம் (UBLC) 129
4.8 பால்நிலை சமத்துவம் மற்றும் சமநிலைக்கான மையம் 141

5. உள்வாரியான புதிய (உள்நாட்டு/ வெளிநாட்டு) மாணவர் நுழைவும் மாணவர் பதிவும் (மொத்த மாணவர்களில்)

5.1 உள்நாட்டு மாணவர்களுக்கான உள்வாரிப் பட்டக் கற்கை நெறிகளுக்கான புதிய நுழைவு 147
5.2 பட்டக் கற்கைநெறிகளுக்காக உள்வாரியான புதிய (உள்நாட்டு) மாணவர் நுழைவு 149
5.3 பட்டதாரிக் கற்கைநெறிகளுக்காக வெளிநாட்டு மாணவர் நுழைவு – (மொத்த மாணவர் எண்ணிக்கை) 159

6. பட்டப்பின் கற்கைநெறிகளுக்கான உள்வாரியான புதிய மாணவர் நுழைவு மற்றும் மாணவர் பதிவு (மொத்த மாணவர்களில்)

6.1 பட்டப்பின் கற்கைநெறிகளுக்கான உள்ளூர் மாணவர்களின் நுழைவு மற்றும் மாணவர் பதிவு (மொத்த மாணவர்களில்) 160

7. தேர்வுத் தரவு

7.1 உள்வாரிப் பட்டதாரி மாணவர் பெறுபேறுகள் – 2022 162

7.2 வெளிவாரிப் பட்டதாரி மாணவர் பெறுபேறுகள் – 2022 163

7.3 பட்டப்பின் கற்கை மாணவர் பெறுபேறுகள் – 2022 163

7.4 ஏனைய (வெளிவாரி) கற்கைநெறிகளின் பெறுபேறுகள் – 2022 164

8. மனித வளத் தரவுகள்

8.1 ஒப்புதல் அளிக்கப்பட்ட பதவிநிலையும் தற்போதைய ஊழியர்களும் 165

8.2 ஒப்புதல் அளிக்கப்பட்ட பதவிநிலையும் தற்போதைய கல்வியாளர்களும் 167

8.3. பட்டதாரி/பட்டப்பின் கற்கை மாணவர்களுக்குக் கற்பிக்குமுகமாக/ ஆய்வரங்கு/பயிலரங்குகளுக்காக வருகைதரும் வெளிநாட்டுக் கல்வியாளர்கள் பற்றிய விபரம் - 2022 176

8.4 பல்கலைக்கழகக் கல்வியாளர்கள் பெற்றுக்கொண்ட வெளிநாட்டு புலமைப்பரிசில்கள், கூட்டுறவுகள், பயிற்சிச் செயற்திட்டங்கள்- 2022 177

8.5 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செய்யப்பட்ட வெளிநாட்டு உயர்கல்வி நிறுவனங்கள்/ஆய்வு நிறுவங்கள்/ நிதி முகவர்கள் பற்றிய விபரம் 2022 178

8.6 பல்கலைக்கழகக் கல்வியாளர்கள், நிர்வாக, கல்விசார் உதவி ஊழியர்களில் பட்டப்பின் கற்கைகளுக்காகப் (உள்நாடு/வெளிநாடு) பதிவுசெய்தவர்கள் – 2022 180

8.7 பல்கலைக்கழகக் கல்வியாளர்கள், நிர்வாக, கல்விசார் உதவி ஊழியர்கள் பூர்த்திசெய்யப்பட்ட பட்டப்பின் கற்கைத் தகைமைகள் – 2022 183

9 கட்டுமானப் பணிகள்

9.1 பூர்த்திசெய்யப்பட்ட செயற்திட்டங்கள் 185

9.2 தொடர்கின்ற/ தற்போதைய செயற்றிட்டங்கள் - 2022 186

9.3 அமைச்சரவையால் ஒப்புதல் அளிக்கப்பட்டு நடைபெற்றுவரும் செயற்றிட்டங்கள் 186

9.4 புனர்நிர்மாணம் – புதிய செயற்திட்டங்கள் 187

9.5 அமைச்சரவையால் ஒப்புதல் அளிக்கப்பட்ட செயற்திட்டங்கள்/ புதிய செயற்திட்டங்களுக்கான கருத்திட்டங்களைத் தயாரித்தல் 188

10 ஆய்வு வெளியீட்டுத் தரவுகள்

10.1 கல்வியாளர்களின் வெளியீடுகளின் எண்ணிக்கை - 2022 189

10.2 (தரப்படுத்தப்பட்டதும் தரப்படுத்தப்படாததுமான) ஆய்விதழ்களில் வெளியான பரிந்துரைக்கப்பட்ட ஆக்கங்களின் பட்டியல் - 2022 195

10.3 அறிவியல் தொழினுட்ப அபிவிருத்திப் பெறுபேறுகள் பற்றிய விபரங்கள் – 2022 234

10.4 காப்புரிமை பற்றிய விபரங்கள் – 2022 236

10.5 பொது மக்களிடையே இடம்பெற்ற அறிவுப் பரவலாக்கம் பற்றிய தரவுகள் - 2022 237

10.6 தேசிய/ சர்வதேச ரீதியில் கிடைக்கப்பெற்ற விருதுகள் - 2022 250

11 விடுதித் தரவுகள் – 2022

11.1 பீடவாரியாக விடுதி வசதிகள் பெற்ற மாணவர் தொகை- 2022 255

11.2 நிரந்தர விடுதிகள் 256

11.3 வாடகை விடுதி வசதிகள் 257

12 மகாபொல புலமைப்பரிசில், பேர்ஸரி உதவித்தொகை பற்றிய
12.1 மகாபொல புலமைப்பரிசில் 259
12.2 பேர்ஸரி உதவித்தொகை 259
12.3 மகாபொல புலமைப்பரிசில், பேர்ஸரி உதவித்தொகை
பெற்றுக்கொள்ளும் மாணவர் தொகை - 2022 260
13 வருடாந்தக் கணக்கீடுகள் – 2022 263
14 நிலையான அபிவிருத்தி இலக்குகளை எய்துவதில்
இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகத்தின் பங்களிப்பு 295
15 தணிக்கை அறிக்கை – 2022 297
16 தணிக்கை அறிக்கைக்கான பதில்கள் – 2022 310

1. பல்கலைக்கழகம்

1.1 பல்கலைக்கழகத்தின் வரலாறு

இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகத்தின் (இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம்) வரலாற்றை நோக்கும் போது ஆரம்பத்தில் 1991 ஆம் ஆண்டில் பெலிஹுலோயாவில் இணைந்த பல்கலைக்கழகக் கல்லூரியாகவே நிறுவப்பட்டுள்ளமையை அறியலாம். 1995 ஆம் ஆண்டில் கல்வி மற்றும் உயர்கல்வி அமைச்சரால் நாட்டில் இணைந்த பல்கலைக்கழகக் கல்லூரிகளை மீண்டும் கட்டமைக்கும் சாத்தியக் கூறுகள் குறித்து ஆய்வு செய்ய ஒரு குழு நியமிக்கப்பட்டது. குறித்த குழுவினரின் பரிந்துரைகளுக்கு இணங்க ரஹங்கல மற்றும் புத்தலையில் அமைந்துள்ள மற்ற இரண்டு இணைந்த பல்கலைக்கழகக் கல்லூரிகளுடன் ஒன்றிணைப்பதன் மூலம் சபரகமுவ இணைந்த பல்கலைக்கழகக் கல்லூரியை ஒரு தேசிய பல்கலைக்கழகத்தின் நிலைக்கு உயர்த்த அரசாங்கம் முடிவு செய்தது. அது சபரகமுவ பல்கலைக்கழகத்தின் ஊவா வளாகம் என மறுபெயரிடப்பட்டது. ஒருங்கிணைப்பதற்கு முன்பு பெலிஹுலோயா மற்றும் புத்தலையில் உள்ள இணைந்த கல்லூரிகள் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டிருந்தன. அத்துடன், ரஹங்கல இணைந்த பல்கலைக்கழகக் கல்லூரி பேராதெனிய பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டிருந்தது. ஒருங்கிணைந்த மூன்று பல்கலைக்கழகக் கல்லூரிகளையும் ஒன்றிணைத்து 1996 ஆம் ஆண்டு பெப்ரவரி 2 ஆம் திகதி சபரகமுவ பல்கலைக்கழகம் உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

அதையடுத்து, ரஹங்கல மற்றும் புத்தலையில் உள்ள இணைந்த பல்கலைக்கழகக் கல்லூரிகள் விவசாய விஞ்ஞான பீடம் மற்றும் பிரயோக விஞ்ஞான பீடங்களாக மாற்றப்பட்டு முறையே 2001 மற்றும் 2008 ஆம் ஆண்டுகளில் பெலிஹுலோயா பிரதான வளாகத்திற்கு மாற்றப்பட்டன.

1.2 அறிமுகம்

இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம் சமனலவெவ நீர்த்தேக்கத்திற்கு இடது புறத்தில், கொழும்பு - பதுளை நெடுஞ்சாலையிலிருந்து சுமார் 160 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. இப்பல்கலைக்கழகம் ஒன்பது (09) கற்கைப் பீடங்களைக் கொண்டுள்ளது. அவையாவன வருமாறு:

- பட்டதாரிக் கற்கைகள் பீடம்
- விவசாய விஞ்ஞான பீடம்
- பிரயோக விஞ்ஞான பீடம்
- வரைபட (கேத்திர) கணித பீடம்
- முகாமைத்துவக் கற்கைகள் பீடம்
- மருத்துவ பீடம்
- சமூக விஞ்ஞானங்கள் மற்றும் மொழிகள் பீடம்
- தொழினுட்பவியல் பீடம்
- கணினி விஞ்ஞான பீடம் (புதிதாய் வர்த்தமானியில் இடம்பெற்றது)

இந்த ஒன்பது பீடங்களுடன், பதினொரு கற்கை மையங்களும் உள்ளன. அவை பின்வருமாறு:

- கணினி ஆய்வுகளுக்கான மையம் (CCS)
- தொழில் வழிகாட்டல் பிரிவு (CGU)
- திறந்த மற்றும் தொலைக் கல்வி மையம் (CODL)
- ஊழியர் மேம்பாட்டு மையம் (SDC)
- பழங்குடிச் சமூகக் கற்கைகளுக்கான மையம்
- ஆய்வு மற்றும் அறிவுப் பரவலுக்கான மையம்
- உள்ளக தர உத்தரவாத மையம் (CQA)
- பல்கலைக்கழக வணிக இணைப்பாக்கப் பிரிவு (UBLC)
- பல்கலைக்கழக நூதனசாலை
- சர்வதேசக் கூட்டிணைவு மையம் (ICU)
- பால்நிலை சமத்துவம் மற்றும் சமநிலைக்கான மையம் (CGEE)

பல்கலைக்கழக ஊழியர்கள் மற்றும் மாணவர் நலன்கருதி வழங்கப்பட்டுள்ள நலன்புரி வசதிகள் வருமாறு:

- அனைத்து மாணவர்களுக்குமான விடுதி வசதிகள்
- ஊழியர்களுக்கான வதிவிட வசதிகள்
- ஆயுர்வேத வைத்திய நிலையம்
- முன்பள்ளி
- விவசாய பீட பண்ணை வதிவிடம்
- விருந்தினர் விடுதிகள்
- மருத்துவ நிலையம்
- விளையாட்டு மைதானம் மற்றும் உடற்பயிற்சி மையம்
- “சித் அரன” உளவள ஆலோசனை மையம்

பல்கலைக்கழகத்தினால் ஒழுங்குசெய்யப்பட்ட வருடாந்தக் கருத்தரங்குகள்:

- இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகத்தின் சர்வதேசக் கருத்தரங்கு (ICSUSL)
- விவசாய விஞ்ஞானத் துறைகளுக்கான சர்வதேசக் கருத்தரங்கு (AgInsight)
- வருடாந்த ஆய்வு அமர்வுகள் (ARS)
- முகாமைத்துவ ஆய்வுகளுக்கான சர்வதேசக் கருத்தரங்கு (ICMR)
- சமூக விஞ்ஞானங்கள் மற்றும் மொழிகள் பீடத்தின் மாணவர் ஆய்வு அமர்வு (SRS)
- முகாமைத்துவ இளமாணி மாணவர்களுக்கான ஆய்வு அமர்வு (MURS)
- கணினித்துறைசார் மேம்பட்ட ஆய்வுக்கான சர்வதேசக் கருத்தரங்கு (ICAKC)
- பிரயோக விஞ்ஞான இளமாணி மாணவர்களுக்கான ஆய்வு அமர்வு (APSURS)
- வரைபட (கேத்திர) கணித இளமாணி மாணவர்களுக்கான ஆய்வு அமர்வு (Geosym)

1.3 வேந்தர்

வண. பேராசிரியர் கும்புறுகமுவே வஜிர தேரர்

1.4 பல்கலைக்கழக அதிகாரிகள்

பல்கலைக்கழகக் கட்டளைச் சட்டத்தின் 33 ஆம் பிரிவின் 1978 ஆம் ஆண்டின் திருத்தச் சட்ட இலக்கம் 16 இன்படி அமைந்த பல்கலைக்கழக அதிகாரிகள் பற்றிய விபரம் வருமாறு:

துணை வேந்தர்

பேராசிரியர் R.M.U.S.K. ரத்னாயக்க

BScHons (Sp.) in Agriculture (RUH), MSc (Biotechnology) (PDN), PhD (AIT) Thailand

பீடங்களின் தலைவர்கள்

பீடாதிபதி, பட்டதாரிக் கற்கைகள் பீடம்

பேராசிரியர் H.M.S. ப்ரியநாத்

BA (SJP), MA (SJP), PhD (CMB)

பீடாதிபதி, விவசாய விஞ்ஞான பீடம்

பேராசிரியர் P.M.A.S. கருணாரத்ன

BScHons (Agriculture) (PDN), MPhil (Crop Physiology) (PDN), PhD (Crop Modelling) (University of Nottingham, United Kindom)

பீடாதிபதி, பிரயோக விஞ்ஞான பீடம்

பேராசிரியர் E. P. N. உதயகுமார

BScHons (RUH), MSc (Forestic and Environmental Management), PhD (Asian Institute of Technology, Thailand)

(20.05.2022 முதல்)

கலாநிதி. R.S. சபரகமுவ

BScHons (Sp.) (PDN), MPhil (PDN), PhD (UoA, New Zealand)

(19.05.2022 வரை)

பீடாதிபதி, வரைபட (கேத்திர) கணித பீடம்

திரு. விபுல அபேரத்ன

BSc (Surveying Geodesy, Photogrammetry), MSc (Photogrammetry and Geoinformatics, Stuttgart University of Applied Sciences, Germany)

பீடாதிபதி, முகாமைத்துவக் கற்கைகள் பீடம்

பேராசிரியர் W. K. அதுல C. ஞானபால

BSc (Tourism Management) (SUSL), MSc (SJP), PhD (Xiamen-P R, China)

பீடாதிபதி மருத்துவ பீடம்
பேராசிரியர் M. N. விக்ரமரத்ன
PhD in Biochemistry Loyola University, Chicago Chicago, Illinois USA

பீடாதிபதி, சமூக விஞ்ஞானங்கள் மற்றும் மொழிகள் பீடம்
கலாநிதி M.A.C.S.S. ஃபெர்னாண்டோ
BScHons (Statistics) (SJP), MPhil (PDN), PhD (University of Auckland)

பீடாதிபதி தொழினுட்பவியல் பீடம்
பேராசிரியர் K. R. கொஸ்வத்தகே
PhD (KOBE University, Japan), MSc (KOBE University, Japan), BSc in Physics (CMB)
(08.03.2022 முதல்)

கலாநிதி A. D. அம்பிட்டியாவத்த
BSc (Agriculture) (RUH), MSc (Agriculture) (PDN), D.Eng (Water Resource Engineering) (Wuhan, PR China)
(14.02.2022 வரை)

பதிவாளர்

திரு. சமன் உயன்கொட
BA (Sp. Geography) (SJP), MSSc (Geography) by research (KLN), MPM (SLIDA), PGM in Public Management) (SLIDA), PGD in e-Government (PIM)

நூலகர்

திருமதி. T.N. ஞெய்சூரி
BA (KLN), MSSc (LIS) (KLN), Chartered நூலகர்

பொருளாளர்

திரு. K. A. R. S. ஜயக்கொடி
BCom (SJP), PGD (IGNOU), APFA (SL), Dip (Accountancy), ICA PI, AAT (SL)
(01.08.2022 முதல்)

திரு. சேனாதீர (பதில் பொருளாளர்)
BBM (KLN)
(31.07.2022 வரை)

1.5 பேரவை

பல்கலைக்கழகக் கட்டளைச் சட்டப் பிரிவு 44 இன், 1978 ஆம் ஆண்டுக்கான 16 ஆவது திருத்தச் சட்டத்தின் பிரகாரம் அமைந்த, பல்கலைக்கழகத்தின் ஆளும் அதிகார அலகான பேரவையானது, பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டமைந்துள்ளது:

முன்னாள் அலுவலக உறுப்பினர்கள்

சிரேஷ்ட பேரா. R.M.U.S.K. ரத்னாயக்க	துணைவேந்தர் - தலைவர்
பேரா. H.M.S. ப்ரியநாத்	பீடாதிபதி- பட்டதாரிக் கற்கைகள் பீடம்
பேரா. P.M.A.S. கருணாரத்ன	பீடாதிபதி- விவசாய விஞ்ஞான பீடம்
பேரா. E. P. N. உதயகுமார	பீடாதிபதி, பிரயோக விஞ்ஞான பீடம் (20.05.2022 முதல்)
கலாநிதி R.S. சபரகமுவ	பீடாதிபதி, பிரயோக விஞ்ஞான பீடம் (19.05.2022 வரை)
திரு. P. G. V. அபேரத்ன	பீடாதிபதி, வரைபட(கேத்திர)கணித பீடம்
பேரா. W.K. அதுல C. ஞானபால	பீடாதிபதி, முகாமைத்துவக் கற்கைகள் பீடம்
பேரா. M.N. விக்ரமரத்ன	பீடாதிபதி, மருத்துவ பீடம்
கலாநிதி. M.A.C.S.S.ஃபெர்ணான்டோ	பீடாதிபதி, சமூக விஞ்ஞானங்கள் மற்றும் மொழிகள் பீடம்
பேரா. K. R. கொஸ்வத்தகே	பீடாதிபதி, தொழினுட்பவியல் பீடம்(28.02.2022 முதல்)
கலாநிதி A. D. அம்பிட்டியாவத்த	பீடாதிபதி தொழினுட்பவியல் பீடம்(27.02.2022 வரை)

மூதவைப் பிரதிநிதிகள்

பேரா. T.S.P. ஜயவீர	விவசாய விஞ்ஞான பீடம்
பேரா. K.V.D.E. மெனிகே	சமூக விஞ்ஞானங்கள் மற்றும் மொழிகள் பீடம்(22.08.2022 வரை)
பேரா. W. M. ஆரியரத்ன	சமூக விஞ்ஞானங்கள் மற்றும் மொழிகள் பீடம்(26.09.2022 முதல்)

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்கு குழுவினால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்

வண. கரகொட உயங்கோட மைத்ரி மூர்த்தி மகா நாயக்க தேரர்
பேரா. வண. கொன்கஸ்தென்ன ஆனந்த தேரர்
வண. அனுநாயக்க தம்பஹல சீலானந்த தேரர்
பேரா. A. பமுனு ஆராச்சி
திரு. பியதிஸ்ஸ ரணசிங்க
திரு. M.M. ரஃபீக்
திரு. H.W. குணதாச
திரு. திலக் தர்மரத்ன
கலாநிதி அனோஜா ரொட்ரிகோ
திரு. W.M.S.S. வீரசேகர
செல்வி ரஞ்சனி ஜயகொடி
திரு. தேசபந்து சூரியபட்டபந்தி

பேரவைச் செயலாளர்

திரு. சமன் உயங்கொட

2022 ஆம் ஆண்டில் கவுன்சில் 12 கூட்டங்களை நடாத்தியது.

1.6 மூதவை

பல்கலைக்கழகத்தின் கல்விசார் அதிகார அலகாக இருக்கும் மூதவையானது, 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகக் கட்டளைச் சட்டத்தின் 46 வது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம், பின்வரும் உறுப்பினர்களை உள்ளடக்கி செவ்வையாக்கம் செய்யப்பட்டது.

தலைவர்

சிரேஷ்ட பேரா. R.M.U.S.K. ரத்னாயக்க துணை வேந்தர் - தலைவர்

மூதவை உறுப்பினர்கள்

சிரேஷ்ட பேரா. R.M.U.S.K. ரத்னாயக்க	துணை வேந்தர் – தலைவர்
பேரா. H.M.S. ப்ரியநாத்	பீடாதிபதி, பட்டதாரிக் கற்கைகள் பீடம்
பேரா. P.M.A.S. கருணாரத்ன	பீடாதிபதி, விவசாய விஞ்ஞான பீடம்
பேரா. E. P. N. உதயகுமார	பீடாதிபதி, பிரயோக விஞ்ஞான பீடம் (20.05.2022 முதல்)
கலாநிதி R.S. சபரகமுவ	பீடாதிபதி, பிரயோக விஞ்ஞான பீடம் (19.05.2022 வரை)
திரு. P. G. V. அபேரத்ன	பீடாதிபதி, வரைபட(கேத்திர)கணித பீடம்
பேரா. W.K. அதுல ஞானபால	பீடாதிபதி, முகாமைத்துவக்

கற்கைகள் பீடம்

பேரா. M.N. விக்ரமரத்ன	பீடாதிபதி, மருத்துவ பீடம்
கலாநிதி M.A.C.S.S. ஃபெர்ணான்டோ	பீடாதிபதி, சமூக விஞ்ஞானங்கள் மற்றும் மொழிகள் பீடம்
பேரா. K. R. கொஸ்வத்தகே	பீடாதிபதிதொழினுட்பவியல் பீடம் (28.02.2022 முதல்)
கலாநிதி A. D. அம்பிட்டியாவத்தa	பீடாதிபதிதொழினுட்பவியல் பீடம் (27.02.2022 வரை)

பேராசிரியர்கள்

சிரே. பேரா. A.A.Y. அமரசிங்ஹ	ஏற்றுமதி விவசாயத் துறை
சிரே. பேரா. P.V.A. லால்	ஏற்றுமதி விவசாயத் துறை
பேரா. P.I. யாபா	ஏற்றுமதி விவசாயத் துறை
பேரா. A.W. விஜேரத்ன	விவசாய வணிக முகாமைத்துவத் துறை
பேரா. M. இஷாம்	விவசாய வணிக முகாமைத்துவத் துறை
பேரா. G.M.L.P. அபொன்சு	பௌதீக விஞ்ஞானங்கள் மற்றும் தொழினுட்பவியல் துறை
பேரா. D.A.I. தயாரத்ன	கணக்கியல் மற்றும் நிதித் துறை
பேரா. J.M.C.K. ஜயவர்தன	இயற்கை வளத்துறை
பேரா. K.V.D.E. மெனிகே	புவியியல் மற்றும் சுற்றுச்சூழல் முகாமைத்துவத் துறை
பேரா. C.N. வல்பிட்ட	கால்நடை உற்பத்தித் துறை
பேரா. P. கபில திசாநாயக்க	ஏற்றுமதி விவசாயத் துறை
பேரா. D.M.A. குணரத்ன	கால்நடை உற்பத்தித் துறை
பேரா. (திருமதி) S K குணதிலக	இயற்கை வளத்துறை
பேரா. M.S.M. அஸ்லம்	சுற்றுலா முகாமைத்துவத்துறை
பேரா. S.D.A. சந்தநாயக்க	பௌதீக விஞ்ஞானங்கள் மற்றும் தொழினுட்பவியல் துறை
பேரா. R.M.K.T. ரத்னாயக்க	பௌதீக விஞ்ஞானங்கள் மற்றும் தொழினுட்பவியல் துறை
பேரா. M.L.M.C. திஸாநாயக்க	ஏற்றுமதி விவசாயத் துறை
பேரா. H.S.R. ரொஸாரியோ	விவசாய வணிக முகாமைத்துவத் துறை
பேரா. R.K. முதுகுமாரன	கால்நடை உற்பத்தித் துறை
பேரா. M. சுனில் ஷாந்த	பொருளியல் மற்றும் புள்ளிவிபரவியல் துறை
பேரா. A. அருண சாந்தாராச்சி	பொருளியல் மற்றும் புள்ளிவிபரவியல் துறை
பேரா. A. சரத் ஆனந்த	சமூகவியல் துறை
பேரா. K.P.L. நிஷாந்த	புவியியல் மற்றும் சுற்றுச்சூழல் முகாமைத்துவத் துறை
பேரா. H.A.D. ருவந்தீபிகா	கால்நடை உற்பத்தித் துறை
பேரா. W.M. ஆரியரத்ன	மொழிகள் துறை
பேரா. R.G.S. ரத்னாயக்க	மொழிகள் துறை
பேரா. M.M.P. சுமித்	கால்நடை உற்பத்தித் துறை
பேரா. B.T.G.S. குமார	கணினி மற்றும் தகவலமைப்புத் துறை
பேரா. D.N. ஜயந்த	கணக்கியல் மற்றும் நிதித் துறை

பேரா. இராஜ் ரத்னாயக்க	சுற்றுலா முகாமைத்துவத்துறை
பேரா. S.H.P. மல்காந்தி	விவசாய வணிக முகாமைத்துவத் துறை
பேரா. L.M.C.S. மெனிகே	கணக்கியல் மற்றும் நிதித் துறை
பேரா. R. S. S. W. ஆரச்சி	சுற்றுலா முகாமைத்துவத்துறை (12.07.2022 முதல்)
பேரா. S. மலவபத்திரன	பௌதீக விஞ்ஞானங்கள் மற்றும் தொழினுட்பவியல் துறை (03.04.2022 முதல்)
பேரா. T. U. I. பீரிஸ்	கணக்கியல் மற்றும் நிதித் துறை (12.07.2022 முதல்)
பேரா. பிரியங்கா வீரசேகர	மொழிகள் துறை (12.07.2022 முதல்)
பேரா. சமன் கொஸ்வத்தே	தொலையுணர்தல் மற்றும் புவியியல் தகவலமைப்புத் துறை (25.05.2022)
பேரா. G. D. K. குமார	ஏற்றுமதி விவசாயத் துறை (08.03.2022)

நூலகர்

திருமதி T.N. ஞெய்சூரி	நூலகர்

துறைத்தலைவர்கள்

பேரா. T.S.P. ஜயவீர	தலைவர், கால்நடை உற்பத்தித் துறை
கலாநிதி J.B.D.A.P. குமார	தலைவர், ஏற்றுமதி விவசாயத் துறை
பேரா. D.A.M. டி சில்வா	தலைவர், விவசாய வணிக முகாமைத்துவத்
துறை கலாநிதி L. S. லேகம்கே	தலைவர், கணினி மற்றும் தகவலமைப்புத் துறை (06.12.2022 முதல்)
பேரா. S. வசந்தப்பிரியன்	தலைவர், கணினி மற்றும் தகவலமைப்புத் துறை (08.11.2022 வரை)
பேரா. R. G. U. ஜயலால்	தலைவர், இயற்கை வளத்துறை (25.05.2022 முதல்)
கலாநிதி E.P. குடாவிதானகே	தலைவர், இயற்கை வளத்துறை (03.04.2022 வரை)
கலாநிதி W.S.M. செனெவிரத்ன	தலைவர், உணவு மற்றும் தொழினுட்பவியல் துறை
கலாநிதி A.W.S. சந்தன	தலைவர், விளையாட்டு விஞ்ஞான மற்றும் உடற்கல்வித் துறை
கலாநிதி C.H. பதுரலிய	தலைவர், பௌதீக விஞ்ஞானங்கள் மற்றும் தொழினுட்பவியல் துறை
கலாநிதி H. திவிதுரே	தலைவர், அளவையியல் மற்றும் புவிப்பரப்பியல் (Geodesy) துறை
கலாநிதி G. S. N. பெரேரா	தலைவர், தொலையுணர்தல் மற்றும் புவியியல் தகவலமைப்புத் துறை (25.05.2022 முதல்)
கலாநிதி S. கொஸ்வத்தே	தலைவர், தொலையுணர்தல் மற்றும் புவியியல் தகவலமைப்புத் துறை (03.04.2022 வரை)

பேரா. D.G. தர்மரத்ன	தலைவர், கணக்கியல் மற்றும் நிதித் துறை
கலாநிதி P.K.S. முனசிங்ஹ	தலைவர், சுற்றுலா முகாமைத்துவத்துறை
திரு. D. ஜாசிங்ஹ	தலைவர், வணிக முகாமைத்துவத்துறை, பணிப்பாளர் / CODL
திரு. I.A. ஏக்கநாயக்க	தலைவர், வணிக முகாமைத்துவத்துறை,
கலாநிதி R.A.H.M. ரூபசிங்ஹ	தலைவர், பொருளியல் மற்றும் புள்ளிவிபரவியல் துறை
திருமதி B. M. L. R. K. பஸ்நாயக்க	தலைவர், ஆங்கில மொழிக் கற்பித்தல் துறை (08.03.2022 முதல்)
கலாநிதி K.S.N. பிரசங்கனி	தலைவர், ஆங்கில மொழிக் கற்பித்தல் துறை (14.02.2022 வரை)
கலாநிதி U.P. லேகம்கே	தலைவர், சமூகவியல் துறை
கலாநிதி ரொஹான் அபேவிக்ரம	தலைவர், மொழிகள் துறை (12.07.2022 முதல்)
கலாநிதி H.A.M.A. ஹபுகொட	தலைவர், மொழிகள் துறை (07.06.2022 வரை)
கலாநிதி (திருமதி) R.J.M.உடுபோருவ	தலைவர், புவியியல் மற்றும் சுற்றுச்சூழல் முகாமைத்துவத் துறை
கலாநிதி (திருமதி) K.M.G.M.K.K. குலதுங்க	தலைவர், உடலியல் துறை
கலாநிதி (திருமதி) P.D.V.M. பெரேரா	பதில் தலைவர், நுண்ணுயிரியல் துறை
கலாநிதி R.M.M.K.N. ரத்னாநாயக்க	தலைவர், மருந்தியல் துறை
கலாநிதி திலீப பெனகல	தலைவர், உடற்கூற்றியல் துறை (25.05.2022 முதல்)
கலாநிதி G.N. புஷ்பகுமார	தலைவர், உடற்கூற்றியல் துறை (14.02.2022 வரை)
கலாநிதி (திருமதி) G.U. ராமதாச	தலைவர், மருத்துவத்துறை
கலாநிதி N.D.N. அசேல மென்டிஸ்	பதில் தலைவர், தடயவியல் மருத்துவம் (03.04.2022 முதல்)
கலாநிதி B.M.C. திஸாநாயக்க	பதில் தலைவர், சமூக மருத்துவத் துறை
கலாநிதி R.P.D.S.R.C. பதிரன	பதில் தலைவர், மகப்பேற்றியல் மற்றும் பெண்ணோயியல் துறை (06.12.2022 முதல்)
கலாநிதி ஓஷாதி நல்லபெரும	பதில் தலைவர், மகப்பேற்றியல் மற்றும் பெண்ணோயியல் துறை (08.11.2022 வரை)
கலாநிதி(திருமதி) G.A.C.கமகரனகே	பதில் தலைவர், நோயியல் துறை
கலாநிதி M.G.U. சம்பத்	தலைவர், குழந்தை மருத்துவத்துறை
திரு. G.L.S. கல்கமுவ	பதில் தலைவர், ஒட்டுண்ணியியல் நோய் மருத்துவத் துறை
கலாநிதி N.D. அமல் வகீஷ	தலைவர், உயிரியல் இரசாயனத் துறை
கலாநிதி V.I. தர்மவர்தன	தலைவர், உளநோய மருத்துவத் துறை
கலாநிதி W.G.M.S. பெரேரா	தலைவர், உயிரியலமைப்புத் தொழினுட்பத் துறை
கலாநிதி N. P. லியனவடுகே	தலைவர், பொறியியல் தொழினுட்பவியல் துறை (08.03.2022 முதல்)

பேரா. K.R. கொஸ்வத்தகே	தலைவர், பொறியியல் தொழினுட்பவியல் துறை (14.02.2022 வரை)
திரு. R. M. N. B. ரத்னாயக்க	தலைவர், தகவல் தொழினுட்பவியல் துறை (25.05.2022 முதல்)

பீடத்தின் இயக்குனர் குழுப் பிரதிநிதிகள்


கலாநிதி D.D. விக்ரமநாயக்க	விவசாய விஞ்ஞான பீடம்
கலாநிதி R. K. C. ஜீவந்தி	விவசாய விஞ்ஞான பீடம் (06.12.2022 முதல்)
கலாநிதி (செல்வி) U.A.P. இஷங்கா	பிரயோக விஞ்ஞான பீடம்
கலாநிதி S. ஜொனிடன்	பிரயோக விஞ்ஞான பீடம்
கலாநிதி P.G.R.N.I. புஸ்ஸெல்ல	வரைபட (கேத்திர) கணித பீடம்
கலாநிதி A. K. R. N. ரணசிங்ஹ	வரைபட (கேத்திர) கணித பீடம் (08.03.2022 முதல்)
கலாநிதி N.P. லியனவடுகே	தொழினுட்பவியல் பீடம் (14.02.2022 வரை)
கலாநிதி P.K.G.S.S. பண்டார	தொழினுட்பவியல் பீடம்
கலாநிதி C.S.S.S.K. கமகரணகே	மருத்துவ பீடம் கலாநிதி
இரோஷா நிக்கலஸ்	மருத்துவ பீடம்
கலாநிதி D. A. N. S. Y. திஸாநாயக்க	சமூக விஞ்ஞானங்கள் மற்றும் மொழிகள் பீடம் (08.11.2022 முதல்)
திருமதி RPS. ஹேமலதா ஹெட்டியாரச்சி	சமூக விஞ்ஞானங்கள் மற்றும் மொழிகள் பீடம் (14.02.2022 வரை)
கலாநிதி A. M. I. குணரத்ன	சமூக விஞ்ஞானங்கள் மற்றும் மொழிகள் பீடம் (07.06.2022 முதல்)
கலாநிதி K.R.W.K.H. அபேவிக்ரம	சமூக விஞ்ஞானங்கள் மற்றும் மொழிகள் பீடம் (07.06.2022 வரை)
திரு. R. A. G. பண்டார	முகாமைத்துவக் கற்கைகள் பீடம் (14.02.2022 முதல்)
கலாநிதி W.M.P.S.B. வாஹல	முகாமைத்துவக் கற்கைகள் பீடம்

மூதவைச் செயலாளர்

திரு. சமன் உயங்கொட
BA (Sp. Geography) (SJP), MSSc (Geography) by research (KLN), MPM (SLIDA), PGM in Public Management) (SLIDA), PGD in e-Government (PIM)

மூதவையானது 2022 ஆம் ஆண்டில் 12 கூட்டங்களையும் 2 சிறப்புக் கூட்டங்களையும் நடாத்தியது.

1.7 நிறுவனக் கட்டமைப்பு



2. பீடங்கள்

2.1 பட்டதாரிக் கற்கைகள் பீடம்

2.1.1 சுருக்க வரலாறு

இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகமானது (இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம்) பட்டதாரிக் கற்கைக்கான தகைமையினை பட்டதாரிக் கற்கைகள் பீடத்தின் (FGS) மூலம் வழங்குகின்றது. 2015 நவம்பர் 9 ஆம் திகதி நடைபெற்ற பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் 928 வது கூட்டத்தில் பட்டதாரிக் கற்கைகள் பீடத்தை நிறுவ அங்கீகாரம் வழங்கியது. பட்டதாரிக் கற்கைகளுக்கான பீடமானது விவசாய விஞ்ஞானம், கணினி மற்றும் தகவலமைப்புகள், வரைபட (கேத்திர) கணிதம், மனிதப்பண்பியல், முகாமைத்துவம், பௌதீகவியல் மற்றும் இயற்கை விஞ்ஞானம், சமூக விஞ்ஞானம், விளையாட்டு விஞ்ஞானம் மற்றும் உடற்கல்வியியல் கற்கை, பௌதீகவியல் மற்றும் இயற்கை விஞ்ஞானம், மருத்துவம், தொழினுட்பவியல், பழங்குடிச் சமூகக் கற்கைகள் எனப் பல்வேறுபட்ட துறைகளில் முதுகலைமாணிப் பட்டங்களை வழங்குகின்றது. இத்துறை சார்ந்த பட்டதாரிக் கற்கை நெறிகளைப் பயிலும் மாணவர்கள், ஆய்வுத்துறை சார்ந்து தமது அறிவை மேம்படுத்திக் கொள்வதற்கும் தொழிற்றுறை முன்னேற்றத்துக்கும் உறுதுணையாக இருக்கும். அதுமட்டுமின்றி, தற்போது நிலவிவரும் ஒழுங்கமைப்புகளை மறுவரையறை செய்வதில் தேசியப் பரப்பினைத் தாண்டி அவர்கள் பயனடையக்கூடியதாகவும் இருக்கும்.

பட்டதாரிக் கற்கைகள் பீடமானது தற்போது (2022) பன்னிரண்டு (12) பட்டப்பின் கற்கை நெறிகளை வழங்கி வருகிறது. அவற்றுள் எட்டுக் கற்கைநெறிகள் முதுமாணித் தரத்தைக் கொண்டவையாகும். மேலும், வணிக நிர்வாகத்துறையில் பட்டப்பின் டிப்ளோமா, வணிக நிர்வாகத்துறை முதுமாணி (MBA), நிதித்துறையில் MBA, சந்தைப்படுத்தல் துறையில் MBA, சுற்றுலாத்துறையில் MBA, ஆயுர்வேத மருத்துவமனை நிர்வாகத்துறையில் MSc, தகவல் தொழினுட்பத்துறையில் முதுவிஞ்ஞானமாணி, ஆங்கிலம் மற்றும் கல்வியியல் துறையில் முதுமாணிப் பட்டங்கள் என்பவற்றோடு முதுகலை மட்டத்தில் முதுமாணிக் கற்கை மற்றும் கலாநிதிக் கற்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்கு ஏற்றவாறான ஆய்வுப் பயிற்சியினையும் இப்பீடம் வழங்குகின்றது. அத்துடன், பட்டதாரிக் கற்கைகள் பீடமானது வணிகப் பொருளாதாரத் துறையில் முதுவிஞ்ஞானமாணி (MSc), பெருந்தோட்டப் பயிர் உற்பத்தியும் முகாமைத்துவமும் எனும் துறையில் முதுவிஞ்ஞானமாணி (MSc), நிலையான பயிர் உற்பத்தித் துறையில் முதுவிஞ்ஞானமாணி (MSc) எனும் பட்டக் கற்கை நெறிகளை வெகு விரைவில் ஆரம்பிக்கவுள்ளது. இந்த அனைத்துக் கற்கைநெறிகளும் இலங்கைப் பல்கலைக்கழக ஆணைக்குழு பாட வரையறைகளுக்கு உட்பட்ட வகையில், இலங்கையின் தரநிர்ணயச் சட்டகங்களுக்கு (SLQF) அமைவாக வடிவமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. பட்டதாரிக் கற்கைகள் பீடத்தில் தற்போது எல்லாமாக 829 முதுமாணிப்பட்ட மாணவர்கள் தமது கற்கைகளை வெற்றிகரமாகத் தொடர்ந்து வருகின்றனர். இந்நிலையில், தரமான கற்பித்தல் மற்றும் ஆய்வுப் பயிற்சி மூலம் கற்கை நெறிகளைத் திறம்பட வழங்குவதற்கும், உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் சவால்களைக் காத்திரமாக எதிர்கொள்ளக்கூடிய வகையில், அந்தந்த முதுமாணித் துறைகளில் தகுதிவாய்ந்த பட்டதாரிகள் உருவாகுவதற்கான சிறந்த வாய்ப்பினைப் பெற்றுக் கொடுப்பதே FGS இன் நோக்கமாகும்.

பீடாதிபதி பேரா. H.M.S. ப்ரியநாத்
BA (SJP), MA (SJP), PhD (CMB)

இணைப்பாளர்கள்

பேரா .D.G. தர்மரத்ன	MBA/PGD வணிக நிர்வாகம் (2017 உட்ச்சேர்ப்பு)
கலாநிதி R.S.S.W. ஆராச்சி	MBA/PGD வணிக நிர்வாகம் (2018 உட்ச்சேர்ப்பு)
பேரா .D.G. தர்மரத்ன	MBA/PGD வணிக நிர்வாகம் (2019 உட்ச்சேர்ப்பு)
கலாநிதி T.U.I. பீரீஸ்	MBA/PGD வணிக நிர்வாகம் (2020 உட்ச்சேர்ப்பு)
பேரா. D.N.ஜயந்த	MBA/PGDவணிக நிர்வாகம் (2021/2022 உட்ச்சேர்ப்பு)
கலாநிதி T.C. கமகே	ஆயுர்வேத மருத்துவமனை முகாமைத்துவத்தில் MSc (2017 உட்ச்சேர்ப்பு)
பேரா .L.M.C.S. மெனிகே	ஆயுர்வேத மருத்துவமனை முகாமைத்துவத்தில் MSc (2018 உட்ச்சேர்ப்பு)
கலாநிதி H.P.R. பிரியங்கர	ஆயுர்வேத மருத்துவமனை முகாமைத்துவத்தில் MSc (2019 உட்ச்சேர்ப்பு)
கலாநிதி P.K.S. முனசிங்ஹ	ஆயுர்வேத மருத்துவமனை முகாமைத்துவத்தில் MSc (2020 உட்ச்சேர்ப்பு)
கலாநிதி L.A.C.சஜீவனீ	ஆயுர்வேத மருத்துவமனை முகாமைத்துவத்தில் MSc (2021 உட்ச்சேர்ப்பு)
கலாநிதி H. திவிதுர	அளவையியல் விஞ்ஞானத்தில் MSc (2017 உட்ச்சேர்ப்பு)
கலாநிதி H. திவிதுர	அளவையியல் விஞ்ஞானத்தில் MSc (2018 உட்ச்சேர்ப்பு)
கலாநிதி H. திவிதுர	அளவையியல் விஞ்ஞானத்தில் MSc (2019 உட்ச்சேர்ப்பு)
கலாநிதி. S. கொஸ்வத்த	அளவையியல் விஞ்ஞானத்தில் MSc (2020/2021 உட்ச்சேர்ப்பு)
கலாநிதி .R. அபேவிக்ரம	ஆங்கிலம் மற்றும் கல்வியியலில் MA/PGD (2020/2021 உட்ச்சேர்ப்பு)
கலாநிதி .U.A.P. இஷங்கா	தகவல் தொழினுட்பத்தில் முதுகலை (2021 உட்ச்சேர்ப்பு)

உதவிப் பதிவாளர் திருமதி T.P.N.P. குருகே
BSc (Finance) (SJP)
(01.03.2021 முதல்)

செல்வி.G.W.N.R.விஜேரத்ன(பிரதிஉதவிப் பதிவாளர்)
BA (SUSL), Dip (English)
(28.02.2021 வரை)

உதவித் தனாதிகாரி திரு.V.K.S. சத்துமல்
BSc (Finance) (CMB)

2.1.2 பீடத்தினால் நடாத்தப்படும் பட்டதாரிக் கற்கைநெறிகள்

- வணிக நிர்வாகத்தில் முதுகலை டிப்ளோமா
- ஆங்கிலம் மற்றும் கல்வியியலில் முதுகலை டிப்ளோமா
- வணிக நிர்வாகத்தில் முதுமாணி
- வணிக நிர்வாகத்துறையில் முதுமாணி (நிதியியல்)
- வணிக நிர்வாகத்துறையில் முதுமாணி (சந்தைப்படுத்தல்)
- வணிக நிர்வாகத்துறையில் முதுமாணி (சுற்றுலா)
- ஆயுர்வேத மருத்துவமனை முகாமைத்துவத்தில் முதுவிஞ்ஞானமாணி
- நில அளவையியல் விஞ்ஞானத்தில் முதுவிஞ்ஞானமாணி

- ஆங்கிலம் மற்றும் கல்வியியலில் முதுகலைமாணி
- தகவல் தொழினுட்பவியலில் முதுமாணி
- முதுதத்துவமாணி
- கலாநிதி

2.1.3 கவன ஈர்ப்புக்குரிய விடயப்பரப்புகள்

விவசாய விஞ்ஞானத் துறை

- வணிக விவசாய முகாமைத்துவம்
- விவசாயச் சூழலியல் மற்றும் வள முகாமைத்துவம்
- விலங்கு உயிரியல் வள முகாமைத்துவம்
- நீர் உயிரியல் வள முகாமைத்துவம்
- பயிர் விருத்தியும் பயிர்ப் பாதுகாப்பும்
- பயிர் உற்பத்தித் தொழினுட்பம்
- உணவு வணிக முகாமைத்துவம்

கணினி மற்றும் தகவலமைப்புத் துறை

- கணினி விஞ்ஞானம்
- தகவல் தொழினுட்பவியல்
- மென்பொருட் பொறியியல்

வரைபட (கேத்திர) கணிதம்

- புவிப்பரப்பியல் (Geodesy)
- புவியியலும் தகவலமைப்புகளும்
- நீர்நிலையியல்
- நில முகாமைத்துவம்
- நில அளவையியல்
- தொலையுணர்தல்

மனிதப்பண்பியல்

- ஆங்கிலம்
- ஜேர்மன்
- ஊடகக் கற்கைகள்
- சிங்களம்
- தமிழ்

முகாமைத்துவம்

- சூழலியல் முகாமைத்துவம்
- நிதியியல் துறை
- சந்தைப்படுத்தல் துறை
- பூங்காக்களும் புனரமைப்பும்
- சுற்றுலாத்துறை

பௌதீக மற்றும் இயற்கை விஞ்ஞானம்

- பிரயோகப் பௌதீகவியல்
- இரசாயனவியல் தொழினுட்பம்
- உயிரியல் வளப்பேணுகை
- புவி அறிவியல்
- சூழலியல் விஞ்ஞானம்
- உணவு விஞ்ஞானம் மற்றும் தொழினுட்பவியல்
- பௌதீக விஞ்ஞானம்

சமூக விஞ்ஞானம்

- உயிரியற் புள்ளிவிபரவியல்
- வணிகப் பொருளாதாரம் மற்றும் புள்ளிவிபரவியல்
- வளர்ச்சிப் பொருளியல்
- வளர்ச்சிக் கற்கைகள்
- அளவைப் பொருளியல்
- சூழலியல் பொருளாதாரம்
- நிதியியல் பொருளாதாரம்
- பேரிடர் அனர்த்த முகாமைத்துவம்
- மனித வளப் பொருளாதாரம்
- நிலப்பயன்பாட்டுத் திட்டம்
- நூலகம் மற்றும் தகவல் விஞ்ஞானம்
- சமூகவியல் மருத்துவம்
- பிராந்திய, கலாசாரக் கற்கைகள்
- பிராந்திய அபிவிருத்தியும் திட்டமிடலும்

விளையாட்டு விஞ்ஞானமும் உடற்கல்வியும்

- உடற்கல்வி
- விளையாட்டு விஞ்ஞானம்

பழங்குடிச் சமூகக் கற்கைகள்

- **பழங்குடியினர் பற்றிய அறிவியல்**
- **சமூகக் கற்கைகள்**

தொழினுட்பவியல்

- **பொறியியற் தொழினுட்பவியல்**
- **உயிரமைப்புத் தொழினுட்பவியல்**

மருத்துவம்

2.2 விவசாய விஞ்ஞான பீடம்

2.2.1 சுருக்க வரலாறு

இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகத்தின் விவசாய விஞ்ஞான பீடமானது ஆரம்பத்தில் 1995 ஆம் ஆண்டில் ரஹங்கலவில் நிறுவப்பட்டது, பின்னர் 2001 இல் பெலிஹுலோயாவில் உள்ள பிரதான பல்கலைக்கழக வளாகத்திற்கு மாற்றப்பட்டது. 2001 முதல் பெலிஹுலோயாவில் மட்டுப்படுத்தப்பட்ட வசதிகளுடன் கல்விசார் பாடநெறிகள் நடத்தப்பட்டன. உட்கட்டமைப்பு மற்றும் பிற கல்விசார் வசதிகளை மேம்படுத்துவதற்காக 2005 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் முறையே ரூ. 82.5 மில்லியன் மற்றும் ரூ. 120 மில்லியன் தொகையை உலக வங்கி மானியங்களிலிருந்து பெற்றுக் கொள்ள முடிந்தது. ஒரு முழுமையான பாடத்திட்டத் திருத்தம் மேற்கொள்ளப்பட்டு, பட்டக் கற்கைநெறியானது விவசாய விஞ்ஞானம் மற்றும் முகாமைத்துவம் என மறுபெயரிடப்பட்டது.

பீடாதிபதி

பேரா. P.M.A.S. கருணாரத்ன
BScHons (Agriculture) (PDN), MPhil (Crop Physiology) (PDN), PhD (Crop Modelling) (University of Nottingham, United Kindom)

துறைத் தலைவர்கள்

விவசாய வணிக முகாமைத்துவத் துறை

பேரா. D.A.M. டி சில்வா
BSc (Agri.) (RUH), MBA in Agribusiness Management (PDN), PhD (Hiroshima University, Japan)

ஏற்றுமதி விவசாயத் துறை

கலாநிதி J.B.D.A.B. குமார
BSc (Sp.) (SUSL), MSc (Jawaharlal Neheru University, India), Phd (PDN)

கால்நடை உற்பத்தித் துறை

கலாநிதி T.S.P. ஜயவீர
BVScHons (PDN), MSc (Food Science and Nutrition) (Ghent University, Belgium), PhD (PDN)

உதவிப் பதிவாளர்

செல்வி. N.D.R தர்மபால
BSc (Sp) (SUSL), MBA in Management (UK),MAAT (SL), CMA (Passed Finalist)

2.2.2 பீடத்தினால் நடாத்தப்படும் கற்கை நெறிகள்

இப்பீடமானது விவசாய வணிக முகாமைத்துவம், ஏற்றுமதி விவசாயம் மற்றும் கால்நடை உற்பத்தி ஆகிய மூன்று கற்கைத் துறைகளைக் கொண்டமைந்துள்ளது. விவசாய விஞ்ஞான பீடமானது பின்வரும் நான்கு வருட சிறப்புக் கற்கைகளுக்கான பட்டங்களை வழங்கி வருகின்றது:

விவசாய விஞ்ஞானம் மற்றும் முகாமைத்துவத் துறையில் விஞ்ஞான இளமாணிப் பட்டம் (B.Sc.)

(மாணவர்கள் விவசாய வணிக முகாமைத்துவம், வணிகம்சார் தோட்ட வேளாண்மை, பெருந்தோட்ட விவசாயம் மற்றும் கால்நடை உற்பத்தி ஆகிய நான்கு துறைகளில் சிறப்புக் கற்கைக்கான பட்டங்களைப் பெற்றுக் கொள்ளலாம்).

உணவு வணிக முகாமைத்துவத் துறையில் விஞ்ஞான இளமாணி (சிறப்பு)ப் பட்டம் (B.Sc. Hons).

ஏற்றுமதி விவசாயத் துறையானது விவசாய- சூழலியல் வள முகாமைத்துவம், பயிர் விருத்தி மற்றும் தாவரப் பாதுகாப்பு, பயிர் உற்பத்தித் தொழினுட்பம் தொடர்பான மூன்று கல்விசார் கையேடுகளை வழங்குகின்றது. முதல் நான்கு அரையாண்டுகளில் (முதல் 2 ஆண்டுகள்), மாணவர்கள் விவசாயம் தொடர்பான அடிப்படைப் பாடநெறிகளைக் கற்க வேண்டும். அதன் பிறகு பெருந்தோட்ட விவசாயம், தோட்டக்கலை, கால்நடை உற்பத்தி அல்லது விவசாய வணிக முகாமைத்துவம் என்பன தொடர்பாக இரண்டு மேலதிக அரையாண்டுகளில் (3 வது ஆண்டில்) சிறப்புக் கற்கையை மேற்கொள்ள வேண்டும். மாணவர்கள் தங்கள் விருப்பத் தேர்வுகளுக்கு ஏற்ப, இரண்டாம் ஆண்டு இறுதியில் தங்களுக்கான சிறப்புத் கற்கைத் துறையைத் தேர்ந்தெடுக்க வேண்டும். ஒவ்வோர் அரையாண்டிலும் பண்ணைப் பயிற்சி, கணினி விஞ்ஞானம் மற்றும் ஆங்கிலக் கற்கை முதலான பாடநெறிகள் முதல் மூன்று ஆண்டுகளில் கற்பிக்கப்படுகின்றன. மேலும், மாணவர்கள் பட்டப் படிப்பைப் பூரணப்படுத்த ஒவ்வோர் அரை ஆண்டிலும் ஒவ்வொரு பாடத்திலும் திருப்திகரமான தரத்தைப் பெற்றிருக்க வேண்டும்.

மேலும், மாணவர்கள் தங்கள் இறுதி ஆண்டின் முதல் அரையாண்டில் (நான்காம் ஆண்டில்) தங்கள் விருப்பங்களுக்கு ஏற்ப நான்கு தேர்ந்தெடுக்கப்பட்ட கற்கை நெறிகளைத் தெரிவுசெய்ய வேண்டும். இறுதி ஆண்டின் இரண்டாவது அரையாண்டு தொழிற்துறைப் பயிற்சிக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. இது பட்டப்படிப்புப் பாடத்திட்டத்தின் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்த ஒரு சிறப்பு அங்கமாகும். இந்நான்காம் வருடத்தில் மாணவர்கள் தமது சிறப்புத் துறையில் ஓர் ஆய்வை மேற்கொள்ள வேண்டும். இக்கற்கைநெறி ஆங்கில மொழி மூலமாகவே பயிற்றுவிக்கப்படும்.

மாணவர்களுக்கும் விவசாயிகளுக்கும் இடையில் அறிவு மற்றும் திறன்கள் பரிமாற்றிக் கொள்ளப்படுவதை உறுதிப்படுத்தும் வகையில், இப்பிரதேசத்தில் உள்ள விவசாயிகளுடன் இணைந்த களச்செயற்பாடுகளை மேற்கொள்வதை இப்பட்டப்படிப்பின் பயிற்சித் திட்டங்களை விவசாய விஞ்ஞான பீடம் ஒழுங்கமைத்துள்ளது. இதன் விளைவாக, விவசாய விஞ்ஞான பீடமானது சுற்றியுள்ள சமூகங்களுடன் நெருக்கமான தொடர்புகளை உருவாக்கி மேம்படுத்தியுள்ளது.

மேலும், மாணவர்களுக்குப் பல்வேறு தொழிற்துறைகளைப் பார்வையிடக் கூடிய வாய்ப்புகளை வழங்குவதனூடாகத் தொழில் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களின் செயல்பாடுகள் தொடர்பில் காத்திரமான அனுபவ அறிவினைப் பெற்றுக் கொள்வதற்கும் வழியமைத்துக் கொடுக்கப் படுகின்றது.

2.2.3 பீடத்தின் பண்ணை

விவசாய பீடத்தின் பண்ணை முன்கஸ்தென்ன பிரதேசத்தில் 2003 ஆம் ஆண்டு ஒழுங்கமைக்கப்பட்டது. அது 33 ஏக்கர் பரப்பளவுள்ள பிரதேசத்தில் அமைந்துள்ளது. பீடத்தின் பண்ணையைப் பொறுத்தளவில் அது கால்நடை உற்பத்திப் பிரிவு, பயிர் உற்பத்திப் பிரிவு, பண்ணை இருப்புப் பிரிவு ஆகிய மூன்று பிரதான பிரிவுகளைக் கொண்டமைந்துள்ளது. மாணவர்களின் நடைமுறை அறிவையும் ஆய்வுப் பயிற்சியையும் மேம்படுத்துவதே இதன் பிரதான நோக்கமாகும்.

கால்நடை வளர்ப்புப் பிரிவானது பின்வரும் அலகுகளைக் கொண்டமைந்துள்ளது:

- பன்றி வளர்ப்பு அலகு
- கோழி வளர்ப்பு அலகு

    1. முட்டைக் கோழி வளர்ப்பு அலகு
    2. ப்ராய்லர் வளர்ப்பு அலகு

- பசு வளர்ப்பு அலகு
- முயல் வளர்ப்பு அலகு
- ஆடு வளர்ப்பு அலகு
- கலப்பின வளர்ப்பு அலகு

பீடத்தின் பண்ணையில் பின்வரும் செயற்பாடுகள் இடம்பெறுகின்றன:

- மூலிகைத் தோட்டச்செய்கை
- பண்ணை விலங்குப் பராமரிப்பு
- பாற்சேகரிப்பு
- விலங்குப் பராமரிப்பு
- பண்ணைச் சுற்றுலா வழிகாட்டல்
- சுயசந்தைப்படுத்தல் செயற்பாடுகள்
- பாதுகாப்பான விவசாய நடைமுறைகள்
- பறவைக் கண்காணிப்பு
- வனத் தடங்காணல்
- நடைபயணம்

பயிர் உற்பத்தி அலகு

பண்ணையானது பிரதானமாக பின்வரும் நிலையான பயிர்ச்செய்கைகளில் ஈடுபட்டு வருகின்றது.

விவசாயப் பண்ணைத் தங்கல்

விவசாயப் பண்ணை இருப்பானது, இலங்கை சபரகமுவ மாகாணத்தின் பெலிஹுலோய பிரதேசத்தில் மேற்கொள்ளப் படுவதோடு, விவசாய வணிக முகாமைத்துவத் துறையினால் அது நிர்வகிக்கப்படுகின்றது. இது கொழும்பு – பதுளை நெடுஞ்சாலையை அடுத்துள்ள மிக முக்கியமான பிராந்தியத்தில் அமைந்துள்ளது.

விவசாயப் பண்ணைத் தங்கலானது மூன்று முக்கியமான காட்சியிடங்களைக் கொண்ட பாசறைகளைக் கொண்டமைந்துள்ளது:

- வாவிக் காட்சி
- பண்ணைக் காட்சி
- மலைக்காட்சி.

2.3 பிரயோக விஞ்ஞான பீடம்

2.3.1 சுருக்க வரலாறு

இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகத்தின் பிரயோக விஞ்ஞான பீடம் ஆரம்பத்தில் புத்தல இணைந்த பல்கலைக்கழகக் கல்லூரியாக (BAUC) ஜூன் 21, 1993 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. புத்தலை இணைந்த பல்கலைக்கழகக் கல்லூரியானது, உணவு விஞ்ஞானம் மற்றும் தொழினுட்பம், ஆங்கில மொழி ஆகிய இரண்டு டிப்ளோமா கற்கை நெறிகளை வழங்கியது. 1996 ஆம் ஆண்டின் முற்பகுதியில் இணைக்கப்பட்ட பல்கலைக்கழகக் கல்லூரிகள் முழுமையான தேசிய பல்கலைக்கழகமாகத் தரமுயர்த்தப்பட்டதன் பின், மூன்று இணைந்த பல்கலைக்கழகக் கல்லூரிகளான சபரகமுவ இணைந்த பல்கலைக்கழகக் கல்லூரி, ஊவா இணைந்த பல்கலைக்கழகக் கல்லூரி மற்றும் புத்தள இணைந்த பல்கலைக்கழகக் கல்லூரி ஆகியவை ஒன்றிணைக்கப்பட்டு சபரகமுவ பல்கலைக்கழகமாக உருவாக்கப்பட்டது. இதன்போது, புத்தலை இணைந்த பல்கலைக்கழகக் கல்லூரி இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகத்தின் பிரயோக விஞ்ஞான பீடமாக மாறியது.

மார்ச் 2008 முதல் நடைமுறைக்கு வரும் வகையில், இப்பீடமானது பெலிஹுலோயாவில் உள்ள பிரதான பல்கலைக்கழக வளாகத்திற்கு மாற்றப்பட்டது.

2.3.2 பீட முகாமைத்துவம்

பீடாதிபதி

கலாநிதி R.S. சபரகமுவ
BScHons (Sp.) (PDN), MPhil (PDN), PhD (UoA, New Zeeland)
(19.05.2022 வரை)

பேரா. E. P. N. உதயகுமார
B.Sc. (Special) (Hons) (URUH), M.Sc. (USJP), PhD (AIT, Thailand)
(20.05.2022 முதல்)

துறைத் தலைவர்கள்

இயற்கை வளத்துறை

பேரா. R.G.U. ஜயலால்
B. Sc. (Hons) (UPDN), M.Sc. (USJP), PhD (UPDN),M. Biol
(25.05.2022 முதல்)

கலாநிதி E.P. குடாவிதானகே
BScHons (Sp.) (UOC), MSc (UOC), PhD (NUS, Singapore)
(03.04.2022 வரை)

உணவு விஞ்ஞானம் மற்றும் தொழினுட்பவியல் துறை

கலாநிதி W.S.M. செனெவிரத்ன
BSc (OUSL), MSc (South Korea), PhD (SouthKorea)

பௌதிக விஞ்ஞானம் மற்றும் தொழினுட்பவியல் துறை	கலாநிதி பதுரலிய BScHons (Sp.) (SJP), MSc (PDN), PhD (UK)
கணினித் துறை மற்றும் தகவலமைப்புத் துறை	பேரா. S. வசந்தப்பிரியன் BScHons (Sp.) (PDN), MSc (Einhoven University of Technology, Nettherland), PhD (Wuhan University of Technology, China) (08.11.2022 வரை)
	கலாநிதி L. S. லேகம்கே PhD (MIS) (Nagaoka University, Japan) BSc & M. Eng. In Computation & Mgt.(06.12.2022 முதல்)
விளையாட்டு விஞ்ஞானம் மற்றும் உடற்கல்வித் துறை	கலாநிதி A.W.S. சந்தன BSc (Sp), BA, MA, MA, MA, MPhil, PhD, PGDE
உதவிப் பதிவாளர்	திரு. M. சுதர்ஷன் BSc in Nursing (PDN), Dip in Sports Sciences & Excercises (PDN) (07.04.2022 வரை)
	திருமதி. D. L. W. மதுகா அனுரங்கி BSc (Sp) in Finance (USJP) (04.04.2022 முதல்)

2.3.2 பீடத்தினால் நடாத்தப்படும் கற்கை நெறிகள்

இப்பீடமானது ஐந்து துறைகளை உள்ளடக்கியுள்ளது. அவையாவன: இயற்கை வளங்கள் துறை, பௌதீக விஞ்ஞானம் மற்றும் தொழினுட்பவியல் துறை, உணவு விஞ்ஞானம் மற்றும் தொழினுட்பவியல் துறை, கணினி மற்றும் தகவலமைப்புத் துறை மற்றும் விளையாட்டு விஞ்ஞானம் மற்றும் உடற்கல்வித் துறை என்பனவாகும்.

இப்பீடமானது க.பொ.த. (உ.த) தேர்வில் சுயவிருப்பின் அடிப்படையில் நேரடியாக நுழைவு பெறும் மாணவர்களுக்கு உணவு விஞ்ஞானம் மற்றும் தொழினுட்பம், சுற்றுச்சூழல் விஞ்ஞானம் மற்றும் இயற்கைவள முகாமைத்துவம், இரசாயனத் தொழினுட்பம், கணினி விஞ்ஞானம் மற்றும் தொழினுட்பம், பிரயோக இயற்பியல், கணினி மற்றும் தகவல் அமைப்புகள், விளையாட்டு மற்றும் முகாமைத்துவம் மற்றும் உடற்கல்வி ஆகியவற்றில் B.Sc. (சிறப்பு) பட்டதாரிக் கற்கை நெறிகளை வழங்குகின்றது.

பௌதீக விஞ்ஞானம் மற்றும் தொழினுட்பம் சுற்றுச் சூழல் விஞ்ஞானம் மற்றும் முகாமைத்துவம் ஆகியவற்றில் நான்கு ஆண்டுக் கற்கைநெறிகளை உள்ளடக்கி வடிவமைக்கப்பட்டுள்ள நிலையில், பொது விஞ்ஞானமாணிப் பட்டம் பெற்று மூன்று ஆண்டுகளில் மாணவர்கள் வெளியேறவும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. ஏனைய மாணவர்கள் தமது சிறப்புப் பட்டதாரிக் கற்கையைக் கட்டாயமாக நான்கு ஆண்டுகள் பூர்த்தி செய்தாக வேண்டும்.

விளையாட்டு விஞ்ஞானம் மற்றும் முகாமைத்துவம், உடற்கல்வி ஆகியவற்றில் விஞ்ஞான இளமாணிப் பட்டதாரிக் கற்கை நெறிகளுக்கு மாணவர்களைத் தெரிவு செய்யும்போது க.பொ.த. (உ/த) பெறுபேறுகள் மற்றும் செயல்திறன் தேர்வு (எழுத்து மூலப் பரீட்சை) மூலம் தெரிவு செய்யப்படுவார்கள். விளையாட்டு மற்றும்

முகாமைத்துவம், உடற்கல்வி ஆகியவற்றில் பட்டக் கற்கை நெறிகளைத் தெரிவுசெய்ய விரும்பும் மாணவர்கள் க.பொ.த. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையிலும், எழுத்து மூலச் செயல்திறன் தேர்வு மூலமும் தெரிவுசெய்யப்படுவர். என்றாலும், மேற்படி துறைகளில் பட்டப்படிப்புக்கான நுழைவினைப் பெறுவதற்குத் தேர்வுப் பரீட்சைக்கு மேலதிகமாக உடல் தகுதிக்கான தேர்வையும் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. இருப்பினும், இத்தேர்வு நடைமுறை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் ஒரு சுற்றறிக்கை மூலம் தற்போது திருத்தி அமைக்கப்பட்டுள்ளமையால், இளமாணிப் பட்டதாரிகளைப் பீடத்தில் சேர்ப்பதற்கு மேலதிக உளச்சார்புப் பரீட்சையினை எதிர்கொள்ள வேண்டிய தேவை இனி இருக்காது.

பீடத்தினால் வழங்கப்படும் பட்டதாரிக் கற்கை நெறிகள் அனைத்தும் தற்போதைய வேலைவாய்ப்பு நிலைவரங்களைக் கருத்திற்கொண்டு தேசிய மற்றும் சர்வதேச அளவில் காணப்படும் தேவைப்பாடுகளுக்கு ஏற்ற வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன. இக்கற்கைநெறிகள் ஆங்கில மொழியிலேயே பிரத்தியேகமாக நடாத்தப்படுகின்றன. இந்தப் பட்டதாரிக் கற்கை நெறிகள் கணினி விஞ்ஞானம், பொருளியல், முகாமைத்துவம் போன்ற பாடங்களைச் சேர்த்துக் கொள்வதன் மூலம் பல்துறை அறிவினை வழங்கும் நோக்கோடு வடிவமைக்கப்பட்டுள்ளன. நமது பட்டதாரி மாணவர்கள் தாம் பட்டம் பெறும் சிறப்புத் துறைக்கு மேலதிகமாக ஒரு பரந்த அறிவுடன் சேவையாற்றவும் பல்துறை சார்ந்து சிறப்பாகச் செயற்படவும் இது வழியமைக்கின்றது.

இப்பீடமானது தனது கல்வி நடவடிக்கைகளுக்கு மேலதிகமாக நாட்டு மக்களுக்கும் சமூகத்தின் வளர்ச்சிக்கும் பங்களிப்பு வழங்குமுகமாக, அறிவைப் பரவலடையச் செய்யும் நிகழ்ச்சித் திட்டங்களை முன்னெடுத்துச் செல்கின்றமை குறிப்பிடத்தக்கது. அத்தகைய நிகழ்ச்சித் திட்டங்களில் பல்கலைக்கழக ஊழியர்களும் மாணவர்களும் ஆண்டுதோறும் பங்கேற்று வருகின்றனர்.

பிரயோக விஞ்ஞான பீடம் வழங்கும் பட்டக் கற்கைநெறிகள்

தகவலமைப்புகள் துறையில் விஞ்ஞான இளமாணி (சிறப்பு)ப் பட்டம்

உணவு விஞ்ஞானம் மற்றும் தொழினுட்பவியலில் விஞ்ஞான இளமாணி (சிறப்பு)ப் பட்டம்

சூழலியல் விஞ்ஞானம் மற்றும் இயற்கைவள முகாமைத்துவத்தில் விஞ்ஞான இளமாணிப் பட்டம்

சூழலியல் விஞ்ஞானம் மற்றும் இயற்கைவள முகாமைத்துவத்தில் விஞ்ஞான இளமாணி (சிறப்பு)ப் பட்டம்

பௌதீக விஞ்ஞானத்தில் விஞ்ஞான இளமாணிப் பட்டம்

பிரயோகப் பௌதீகவியலில் விஞ்ஞான இளமாணி (சிறப்பு)ப் பட்டம்

இரசாயனத் தொழினுட்பவியலில் விஞ்ஞான இளமாணி (சிறப்பு)ப் பட்டம்

கணினி விஞ்ஞானம் மற்றும் தொழினுட்பவியலில் விஞ்ஞான இளமாணிச் (சிறப்பு)ப் பட்டம்

உடற்கல்வித் துறையில் விஞ்ஞான இளமாணி (சிறப்பு)ப் பட்டம்

விளையாட்டு விஞ்ஞானத்துறை மற்றும் முகாமைத்துவத்தில் விஞ்ஞான இளமாணி (சிறப்பு)ப் பட்டம்

கணினி மற்றும் தகவலமைப்புத் துறை

கணினி மற்றும் தகவலமைப்புகள் துறையானது, தகவலமைப்புகள் துறையில் விஞ்ஞான இளமாணிப் பட்ட (சிறப்பு)க் கற்கை நெறியினை 2008 ஆம் ஆண்டிலேயே தொடங்குவதற்கான முன்னெடுப்புகளை மேற்கொண்டு இருந்தாலும், 2011 ஆம் ஆண்டு மார்ச் முதலாம் திகதி தான் அது ஆரம்பித்து வைக்கப்பட்டது. இப்பாடத்திட்டம் குறிப்பாக, கணினி மற்றும் தகவல் தொழினுட்பத்தில் திறமையான பட்டதாரிகளை உருவாக்கும் நோக்கோடு வடிவமைக்கப்பட்டுள்ளது. தற்போது இத்துறையானது நன்கு நிறுவப்பட்ட மூன்று ஆய்வகங்களையும் 312 மாணவர்களையும் கொண்டுள்ளது.

மேற்கண்ட பட்டப்படிப்புக்கான கேள்வி பல ஆண்டுகளாகப் பெருமளவு அதிகரித்துள்ளது. இந்நிலையில், வருடாந்த மாணவர் சேர்க்கையானது ஒரு தொகுதிக்கு அதிகபட்சம் 80 மாணவர்கள் என்ற அளவை எட்டியுள்ளது. இத் துறையானது பட்டதாரிகளுக்கு விரிவுரைகள் மற்றும் செயல்முறைகளை நடாத்துவதில் தொழினுட்ப ஆதரவைப் பெறுவதற்கும், அவர்களின் சிறு அளவிலான செயற்திட்டங்கள் மற்றும் இறுதி ஆண்டுச் செயற்திட்டங்களைக் கொண்டு நடாத்த வாய்ப்புகளைப் பெற்றுக் கொடுக்கவும் தனியார் கணினித் தொழிற்துறைகளுடன் நெருக்கமான தொடர்புகளைப் பேணி வருகின்றது. இதனால் பட்டப்படிப்பினை நிறைவுசெய்த உடனேயே இப்பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்புகளைப் பெறுவதற்கான வாய்ப்பும் அதிகரித்துள்ளது. இத்துறையானது இரண்டு பேராசிரியர்களையும், ஐந்து சிரேஷ்ட விரிவுரையாளர்களையும், பதினொரு தகுதிகாண் விரிவுரையாளர்களையும் கொண்டமைந்துள்ளது.

உணவு மற்றும் தொழினுட்பவியல் துறை

உணவு விஞ்ஞானம் மற்றும் தொழினுட்பவியல் துறையானது 2005 இல் நிறுவப்பட்டது. என்றாலும், 1996 ஆம் ஆண்டில் இப்பீடம் தொடங்கப் பட்டதிலிருந்து உணவு விஞ்ஞானம் மற்றும் தொழினுட்பத்திற்கான விஞ்ஞான இளமாணிப் பட்டக் கற்கையானது இயற்கைவளத் துறையின் கீழ் வழங்கப்பட்டு வருகிறது. கற்கை நெறிகளில் உணவு விஞ்ஞான அடிப்படைத் தொழினுட்பம், பிரயோக உணவுத் தொழினுட்பம், பொது விஞ்ஞானம், புள்ளிவிபரவியல், கணினி விஞ்ஞானம் மற்றும் தொழினுட்பம், உணவு சந்தைப்படுத்தல், தொழிற்றுறைப் பொருளியல், விஞ்ஞானத் தொடர்பாடல் மற்றும் தொழிற்துறை அபிவிருத்தி என்பன போன்ற துறைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. உணவு விஞ்ஞானம் மற்றும் தொழினுட்பவியல் துறையில் தொழில்முறை வாழ்க்கையைத் தொடர விரும்பும் மாணவர்களுக்கு உதவும் வகையில் இந்த பட்டக் கற்கை நெறிகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. பட்டப்படிப்பில் இருந்து பெறப்பட்ட அறிவு மற்றும் திறன்கள் பட்டதாரிகளுக்கு அரசாங்கத்திலும், தனியார் துறையிலும், உள்நாட்டிலும், சர்வதேச அளவிலும் அதிகரித்து வரும் உணவுத்துறை விஞ்ஞானிகள் மற்றும் தொழினுட்பவியலாளர்களின் தேவையைப் பூர்த்தி செய்ய உதவுகின்றன. உணவு விஞ்ஞானம் மற்றும் தொழினுட்பம் தொடர்பான துறைகளில் முதுநிலைப் பட்டதாரிக் கற்கைகளுக்கு இந்தப் பட்டக் கற்கை ஒரு சிறந்த வழிகாட்டியாக அமைகின்றது. தற்போது, இத்துறையில் ஒரு பேராசிரியர், ஏழு சிரேஷ்ட விரிவுரையாளர்கள் மற்றும் இரண்டு தகுதிகாண் விரிவுரையாளர்கள் பணியாற்றி வருகின்றனர்.

மேலும், சிறந்த பல சிரேஷ்ட கல்வியாளர்களும் தொழில்துறை வல்லுநர்களும் தத்தமது சிறப்புத் துறைகளில் வருகைதரு விரிவுரையாளர்களாக இப்பீடத்திற்குப் பங்காற்றி வருகின்றனர். இத்துறையானது உணவுப் பகுப்பாய்வு ஆய்வுகூடம், உணவு நுண்ணுயிரியல் ஆய்வுகூடம், உணவு பதப்படுத்தும் ஆய்வுகூடம், இறைச்சிப் பதப்படுத்தும் ஆய்வுகூடம் மற்றும் பால் பதப்படுத்தும் ஆய்வுகூடம் போன்ற துறைகளில் பட்டப் படிப்பை மேற்கொள்வோருக்கான ஆய்வக அமர்வுகள் மற்றும் அவற்றோடு தொடர்புடைய ஆராய்ச்சிகளை மேற்கொள்ள சகல வசதிகளையும்

கொண்ட ஐந்து ஆய்வுகூடங்களைக் கொண்டமைந்துள்ளது. இங்கு தற்போது 150 மாணவர்கள் கல்வி கற்றுக் கொண்டிருக்கின்றனர்.

இயற்கை வளத்துறை

இயற்கை வளங்கள் துறையானது 1996 இல் ஆரம்பிக்கப்பட்டு இயற்கை வளங்களில் பொதுக் கற்கைக்கான விஞ்ஞான இளமாணிப் பட்டத்தை வழங்கி வருகின்றது. சுற்றுச் சூழல் பாதுகாப்பு, இயற்கை வள முகாமைத்துவம் மற்றும் பாதுகாப்பு, பல்லுயிர் பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவம், சுற்றுச்சூழல் வலுவாக்கம் மற்றும் சூழலியல் ஆகிய துறைகளில் இலங்கையிலும் உலகெங்கிலும் உள்ள தற்போதைய தொழிற் சந்தையை நிரம்பல் செய்யும் வகையில் இந்தப் பட்டதாரிக் கற்கைநெறி வடிவமைக்கப்பட்டுள்ளது.

2006 ஆம் ஆண்டில், ஆரம்பத்தில் இயற்கை வளங்களில் மூன்று வருட விஞ்ஞான இளமாணிப் பட்டக் கற்கைநெறி வழங்கப்பட்டு வந்தது. பின்னர் பட்டதாரிகளுக்கான வேலைவாய்ப்புகளை மேம்படுத்தும் நோக்கில் அக்கற்கைநெறியானது சுற்றுச்சூழல் விஞ்ஞானம் மற்றும் இயற்கைவள முகாமைத்துவம் என்ற வகையில் தரமுயர்த்தப்பட்டு மறுசீரமைக்கப்பட்டது. தற்போது இப்பட்டதாரிக் கற்கைநெறியானது சுற்றுச்சூழல் விஞ்ஞானம், உயிரியல் விஞ்ஞானம் மற்றும் புவியியல் விஞ்ஞானம் எனும் மூன்று முக்கிய துறைகளைக் கொண்டுள்ளது. இது சுற்றுச்சூழல் விஞ்ஞானம் மற்றும் இயற்கைவள முகாமைத்துவத்தில் நான்கு வருட விஞ்ஞான இளமாணி (சிறப்பு)ப் பட்டம், சுற்றுச்சூழல் விஞ்ஞானம் மற்றும் இயற்கைவள முகாமைத்துவத்தில் மூன்று வருட விஞ்ஞான இளமாணிப் (பொதுத்துறை) பட்டம் ஆகிய இரண்டு பட்டதாரிக் கற்கைநெறிகளைக் கொண்டுள்ளது. இக்கற்கைநெறிகள் இத்துறை சார்ந்த முதுகலை பட்டதாரிக் கற்கைகளுக்கும் சிறப்பாக வழிகாட்டி நிற்கின்றன. இத்துறையானது வருடாந்தம் அறுபது மாணவர்களைப் சேர்த்துக் கொள்ளும் திறனைக் கொண்டுள்ளது. தற்போது இத்துறையில் ஐந்து பேராசிரியர்கள், ஐந்து சிரேஷ்ட விரிவுரையாளர்கள், ஒரு விரிவுரையாளர் எனப் பத்து கல்விசார் ஊழியர்கள் பணியாற்றி வருகின்றனர்.

பௌதீக விஞ்ஞானங்கள் மற்றும் தொழினுட்பவியல் துறை

பௌதீக விஞ்ஞானம் மற்றும் தொழினுட்பவியல் துறையானது இரசாயனத் தொழினுட்பம், பிரயோக பௌதீகவியல் மற்றும் கணினி விஞ்ஞானம் மற்றும் தொழினுட்பம் ஆகிய மூன்று பிரதான துறைகளில் பட்டக் கற்கையினை வழங்குகிறது. அதாவது, கணிதம், புள்ளிவிபரவியல் மற்றும் முகாமைத்துவக் கற்கை என்பன இக்கற்கை நெறியோடு துணைப் பாடங்களாக உள்ளடக்கப்பட்டுள்ளன. இத்துறையானது நான்கு சிறப்புப் பட்டக் கற்கைநெறிகளை வழங்குகின்றது. அவையாவன: இரசாயனத் தொழினுட்பத்தில் விஞ்ஞான இளமாணி (சிறப்பு)ப் பட்டம் (காலம்: 4 ஆண்டுகள்), கணினி விஞ்ஞானம் மற்றும் தொழினுட்பத்தில் சிறப்புப் பட்டம் (காலம்: 4 ஆண்டுகள்), பிரயோகப் பௌதீகவியலில் விஞ்ஞான இளமாணி (சிறப்பு) பட்டம் (காலம்: 4 ஆண்டுகள்), (பிரயோக விஞ்ஞானம்) பிரயோகப் பௌதீகவியல் விஞ்ஞான இளமாணி (சிறப்பு)ப் பட்டம் (காலம்: 3 ஆண்டுகள்) என்பனவாகும்.

ஒவ்வொரு துறையிலும் வழங்கப்படும் அனைத்துக் கோட்பாட்டுப் பாடநெறி அலகுகளும் செயல்முறைப் பயிற்சியோடு தொடர்புடையனவாகவே வடிவமைக்கப்பட்டுள்ளன. இது அடிப்படை அனுபவத் தேர்ச்சியுடன் தன்னம்பிக்கையோடு செயல்படும் திறனை மாணவர்களுக்கு வழங்குகிறது. மேலும், மூன்றாவது மற்றும் நான்காவது கல்வி ஆண்டுகளில் மாணவர்களின் படைப்பாற்றல் மற்றும் புத்தாக்கச் சிந்தனைகளைத் தூண்டும் வகையில் சிறு செயற்றிட்டங்களும் நடாத்தப்படுகின்றன. இறுதி ஆண்டில் ஒரு முழு அரையாண்டு காலம்

மேற்கொள்ளப்படும் செயற்திட்டமானது (ஆராய்ச்சி அல்லது தொழில்துறைப் பயிற்சி) பட்டதாரிகளைத் தொழிற்துறைச் சூழலுக்குப் பழக்கப்படுத்தி விடுவதோடு, பட்டப்படிப்பை நிறைவு செய்யுமுன்னர் தொழில்துறையில் அனுபவத்தையும் வழங்குகிறது. இந்த இலக்கை அடையும் வகையில் அவர்களை அந்தந்த துறைகளில் நிபுணர்களாக உருவாக்குவதை நோக்காகக் கொண்டு பல்கலைக்கழகச் சூழலும் கற்பித்தல் திட்டங்களும் வடிவமைக்கப்பட்டுள்ளன. மேலும், இந்நாட்டில் உள்ள அனைத்துப் பல்கலைக்கழகங்களோடும் ஒப்பிடுகையில் பிரயோக பௌதீகவியலில் விஞ்ஞான இளமாணி (சிறப்பு)ப் பட்டம் வழங்கும் ஒரேயொரு துறை இருப்பது இங்குதான் என்பது குறிப்பிட்டுக் கூறத்தக்கதாகும்.

இத்துறையில் எல்லா வசதிகளையும் கொண்ட நான்கு ஆய்வுகூடங்கள் உள்ளன. அவையாவன: பௌதீகவியல் ஆய்வுகூடம், இரசாயனவியல் ஆய்வுகூடம் I, இரசாயனவியல் ஆய்வுகூடம் II, இரசாயனவியல் ஆராய்ச்சி ஆய்வுகூடம் என்பனவாகும். இத்துறையில் கற்கும் மாணவர் தொகை 117ஆகும். மேலும், ஒரு தலைமைப் பேராசிரியர், ஒரு சிரேஷ்ட பேராசிரியர், எட்டு சிரேஷ்ட விரிவுரையாளர்கள், எட்டு தகுதிகாண் விரிவுரையாளர்கள், ஒரு தற்காலிக உதவி விரிவுரையாளர், ஒரு தற்காலிக விரிவுரையாளர் ஆகியோர் இத்துறையில் பணியாற்றுகின்றனர்.

விளையாட்டு விஞ்ஞானம் மற்றும் உடற்கல்வித் துறை

2008 ஆம் ஆண்டு முதல் பிரயோக விஞ்ஞான பீடத்தால் விளையாட்டு விஞ்ஞானம் மற்றும் முகாமைத்துவத் துறையில் விஞ்ஞான இளமாணி (சிறப்பு)ப் பட்டம், உடற்கல்வித் துறையில் விஞ்ஞான இளமாணி (சிறப்பு)ப் பட்டம் என்ற இரண்டு பட்டதாரிக் கற்கை நெறிகள் வழங்கப்பட்டு வருகின்றன. 2011 மார்ச் 01 ஆம் திகதி விளையாட்டு விஞ்ஞானம் மற்றும் உடற்கல்வித் துறை நிறுவப்பட்டது. விளையாட்டு விஞ்ஞானம் மற்றும் முகாமைத்துவப் பட்டதாரிக் கற்கை நெறிகள் அனைத்தும் முதன்மை, இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலைக் கல்வி மட்டங்களிலும், பிறதொழில் நிறுவனங்களிலும் விளையாட்டுகளைக் கற்பிப்பதற்குத் தேவையான அடிப்படை விளையாட்டு விஞ்ஞானத் திறன்கள் மற்றும் முகாமைத்துவத் திறன்களை உள்ளடக்கி மிகச் சிறப்பாக வடிவமைக்கப்பட்டுள்ளன.

உடற்கல்வி தொடர்பான பட்டதாரிக் கற்கை நெறியானது, குறிப்பாக உடற்கல்வி நடவடிக்கைகள் மற்றும் பயிற்சிகள் நடைமுறை விஞ்ஞான ரீதியாக இத்துறைசார்ந்து திறமையான பட்டதாரிகளை உருவாக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இப்பட்டதாரிக் கற்கை நெறியின் காலம் நான்கு ஆண்டுகள் ஆகும். தற்போது இப்பட்டதாரிக் கற்கை நெறிக்குப் பெரும் கேள்வி நிலவுகின்றது. இது ஆண்டுதோறும் அதிகரித்து வரும் மாணவர் உள்நுழைவு எண்ணிக்கையிலிருந்து தெளிவாகிறது. தற்போது மாணவர் சேர்க்கை அதன் அதிகபட்ச நிலையை எட்டியுள்ளது. இரண்டு பட்டதாரிக் கற்கைநெறிகளும் நான்கு ஆண்டுகளுக்குள் ஆற்றல் மிக்க தகைசார் பட்டதாரிகளை உருவாக்கத்தக்க வகையில், நடைமுறைப் பிரயோகங்கள் மற்றும் செயற்திட்டங்களை உள்ளடக்கியனவாக நன்கு வடிவமைக்கப் பட்டுள்ளன.
அத்தோடு, தேசிய மற்றும் சர்வதேச விளையாட்டுப் போட்டிகள் மற்றும் பயிற்சித் திட்டங்களில் மாணவர்கள் பங்கேற்க ஏதுவாக இந்தத் துறை பல விளையாட்டு அமைப்புகளுடன் இணைந்தும் செயல்படுகிறது. இத்துறையில் எல்லா வசதிகளையும் கொண்ட இரண்டு ஆய்வுகூடங்கள் உள்ளன. அவை: உடற்பயிற்சி உயிரியல் இரசாயன மற்றும் ஆராய்ச்சி ஆய்வுக்கூடம் என்பனவாகும். இத்துறையில் கற்கும் மாணவர் தொகை 374 ஆகும். இத்துறையில் ஆறு சிரேஷ்ட விரிவுரையாளர்கள், இரு விரிவுரையாளர்கள், ஆறு தகுதிகாண் விரிவுரையாளர்கள், இரண்டு பயிற்சியாளர்கள், இரண்டு தற்காலிக உதவி விரிவுரையாளர்கள் ஆகியோர் பணியாற்றுகின்றனர். இத்துறையின் மூலம் புகழ்பெற்ற விளையாட்டுத்துறை நிபுணர்களைத் தருவித்தும் மாணவர்களுக்குக் கோட்பாட்டுக் கற்கைநெறிகள் மற்றும் பயிற்றுவிப்புகள் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

2.4 வரைபட(கேத்திர)கணித பீடம்

2.4.1 சுருக்க வரலாறு

இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகத்தின் எட்டு பீடங்களில் ஒன்றான வரைபட (கேத்திர) கணித பீடமானது 2004 இல் நிறுவப்பட்டது. 1997 ஆம் ஆண்டு அளவையியல் விஞ்ஞானத்துறையில் B.Sc. பட்டக் கற்கைநெறி ஆரம்பிக்கப்பட்டது. இலங்கையின் பல்கலைக்கழக வரலாற்றைப் பொறுத்தவரையில் அளவையியல் விஞ்ஞானத்துறையில் ஒரு பிரத்தியேகப் பட்டக் கற்கையானது நாட்டில் அத்துறை சார்ந்து நிலவிய தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் அறிமுகப்படுத்தப்பட்டமை இதுவே முதல் தடவையாகும். இக்கற்கை நெறியானது நான்கு ஆண்டுகளைக் கொண்ட சிறப்புப் பட்டத்திற்குரியதாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இத்துறையில் முதல் தொகுதி மாணவர்கள் 1997 இல் இப்பட்டதாரிக் கற்கை நெறியில் உள்ளீர்க்கப்பட்டு 2002 இல் தமது பட்டங்களைப் பெற்றனர்.

பீடாதிபதி

திரு. P.G. விபுல அபேரத்ன
BSc (Surveying Geodesy, Photogrammetry), MSc (Photogrammetry and Geoinformatics, Stuttgart University of Applied Sciences, Germany)

துறைத் தலைவர்கள்

அளவையியல் மற்றும் புவிப்பரப்பியல் (Geodesy) துறை — கலாநிதி H. திவிதுரே
BScHons (Surveying Sciences) (SUSL), MSc (International Institute for Geo-Information Sciences & Earth Observation –Netherlands)

தொலையுணர்தல் மற்றும் புவியியல் தகவலமைப்புத் துறை — கலாநிதி சன்க்க N. பெரேரா
PhD in Engineering (Technische Universitat Dresden) MSc, BSc in Computation & Mgt.
(25.05.2022 முதல்)

கலாநிதி R.M.K.G.S.P.B. கொஸ்வத்தே
BSc (Surveying Sciences, SUSL), MPhil (PDN), PhD (Spatial Scieces, USQ, Australia)
(03.04.2022 வரை)

உதவிப் பதிவாளர்

திருமதி K.M. பூர்ணிமா
BSc (SJP)

2.4.2 பீடத்தினால் நடாத்தப்படும் கற்கை நெறிகள்

இப்பீடமானது அளவையியல் விஞ்ஞானத்தில் ஐந்து சிறப்புப் பிரிவுகளில் விஞ்ஞான இளமாணி (சிறப்பு)ப் பட்டங்களை வழங்குகின்றது. அவையாவன:

1) புவிப்பரப்பியல் (Geodesy)சார் அளவையியல் விஞ்ஞானத்தில்
   விஞ்ஞான இளமாணி (சிறப்பு)ப் பட்டம்
2) நில முகாமைத்துவம்சார் அளவையியல்துறையில்
   விஞ்ஞான இளமாணி (சிறப்பு)ப் பட்டம்
3) கடலியல்சார் அளவையியல் விஞ்ஞானத்தில்
   விஞ்ஞான இளமாணி (சிறப்பு)ப் பட்டம்
4) தொலையுணர்தல்சார் அளவையியல் விஞ்ஞானத்தில்
   விஞ்ஞான இளமாணி (சிறப்பு)ப் பட்டம்
5) புவியியல் தகவலமைப்புசார் அளவையியல் விஞ்ஞானத்தில்
   விஞ்ஞான இளமாணி (சிறப்பு)ப் பட்டம்

2.5 முகாமைத்துவக் கற்கைகள் பீடம்

2.5.1 சுருக்க வரலாறு

1996 ஆம் ஆண்டு செப்டம்பரில் கணக்கியல் மற்றும் நிதித் துறை மற்றும் வணிக முகாமைத்துவத் துறையின்கீழ் மூன்று ஆண்டுகளுக்கான பட்டதாரிக் கற்கைக்குரிய பட்டத்தை வழங்குவதன் மூலம் வணிகக் கற்கைகளுக்கான பீடம் தனது கற்கை நெறிகளைத் தொடங்கியது. முதல் ஆண்டு பொதுக் கற்கை மற்றும் இரண்டு ஆண்டுகள் சிறப்புக் கற்கை நிறைவடைந்த பின்னர், நிதி முகாமைத்துவம், வணிக முகாமைத்துவம், சந்தைப்படுத்தல் முகாமைத்துவம், சுற்றுலா முகாமைத்துவம் ஆகிய துறைகளில் விஞ்ஞான இளமாணிப் பட்டங்களை வழங்கிவருகின்றது. ஆறு தொகுதி பட்டதாரி மாணவர்கள் நிதி முகாமைத்துவம், வணிக முகாமைத்துவம், சந்தைப்படுத்தல் முகாமைத்துவம், சுற்றுலா முகாமைத்துவம் ஆகிய துறைகளில் முறையே 1997, 1998, 1999, 2000, 2001 மற்றும் 2002 ஆண்டுகளில் தங்கள் விஞ்ஞான இளமாணி (சிறப்பு)ப் பட்டங்களைப் பெற்றுள்ளனர்.

தற்போது முகாமைத்துவக் கற்கைகள் பீடமானது வங்கியியல் மற்றும் காப்பீட்டுத் துறை, சுற்றுச்சூழல் வணிக முகாமைத்துவம், விருந்தோம்பல் முகாமைத்துவம் ஆகிய துறைகள் உள்ளிட்ட விஞ்ஞான இளமாணி (சிறப்பு)ப் பட்டங்களை வழங்கும் ஏழு பட்டக் கற்கைநெறிகளைக் கொண்டமைந்துள்ளது.

பீடாதிபதி

பேரா. W.K. அதுல ஞானபால
BSc (Tourism MANAGEMENT) (SUSL), MSc (SJP), PhD(Xiamen- P R China)

துறைத் தலைவர்கள்

கணக்கியல் மற்றும் நிதியியல்துறை
கலாநிதி D.G. தர்மரத்ன
BSc (Financial MANAGEMENT) (SUSL), MBA (PDN), PhD(CMB)

வணிக முகாமைத்துவத்துறை
திரு. I.A. ஏக்கநாயக்க
BSc (Business MANAGEMENT) (SUSL), MBA (SJP)

சந்தைப்படுத்தல் முகாமைத்துவத்துறை திரு. D. ஜாசிங்ஹ
BSc (Bus Admin) (SJP), MSc (SJP)

சுற்றுலா முகாமைத்துவத்துறை
கலாநிதி P.K.S. முனசிங்ஹ
BSc (Tourism MANAGEMENT) (SUSL), MBA (PIM - SJP),PhD (AUT, New Zealand)

உதவிப் பதிவாளர்
செல்வி P.A.P. குணசேகர
BSc in Food Sciences and Technology (PDN)

2.5.2 பீடத்தினால் நடாத்தப்படும் கற்கை நெறிகள்

முகாமைத்துவக் கற்கைகள் பீடத்தின் நான்கு துறைகளினூடே எல்லாமாக ஏழு பட்டக் கற்கைநெறிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

கற்கைத்துறை	**கற்கைநெறிகள்**
வணிக முகாமைத்துவத்துறை	வணிக முகாமைத்துவத்துறையில் விஞ்ஞான இளமாணி (சிறப்பு)ப் பட்டம்
சந்தைப்படுத்தல் முகாமைத்துவத் துறை	சந்தைப்படுத்தல் முகாமைத்துவத் துறையில் விஞ்ஞான இளமாணி (சிறப்பு)ப் பட்டம்
கணக்கியல் மற்றும் நிதியியல் துறை	நிதி முகாமைத்துவத் துறையில் விஞ்ஞான இளமாணி (சிறப்பு) வங்கி மற்றும் காப்பீட்டுத் துறையில் விஞ்ஞான இளமாணி (சிறப்பு)ப் பட்டம்
சுற்றுலா முகாமைத்துவத்துறை	சுற்றுலா முகாமைத்துவத் துறையில் விஞ்ஞான இளமாணி (சிறப்பு)ப் பட்டம் சூழலியல் வணிக முகாமைத்துவத் துறையில் விஞ்ஞான இளமாணி (சிறப்பு) விருந்தோம்பல் முகாமைத்துவத் துறையில் விஞ்ஞான இளமாணி (சிறப்பு)ப் பட்டம்

2.6 மருத்துவ பீடம்

2.6.1 சுருக்க வரலாறு

இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடமானது இலங்கையில் உள்ள மருத்துவ பீடங்களின் வரிசையில் அண்மையில் இணைந்து கொண்டுள்ளது. இது ஆகஸ்ட் 01, 2018 இன் வர்த்தமானி அறிவிப்பு எண் 2082/32 இன் கீழ் 2018 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. இது இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகத்தின் 8வது பீடமாகக் காணப்படுகின்றது. மருத்துவத் தொழில் சமூகத்தின் மிக முக்கியமான தேவைகளில் ஒன்றாகும். ஆகவேதான் மருத்துவப் பட்டங்களைப் பெற அநேக சவால்களும், தகுதிகளில் போட்டித் தன்மையும் இருந்துகொண்டு இருக்கின்றது.

இந்தப் பீடமானது 15 துறைகளை உள்ளடக்கியுள்ளது. அவை அவற்றின் கல்விக்கான நோக்கம் மற்றும் குறிக்கோள்களின் அனைத்து அம்சங்களையும் அடைய அர்ப்பணிப்புடன் செயல்படுகின்றன. MBBS கற்கை நெறியானது நான்கு முக்கிய துறைகளை அடிப்படையாகக் கொண்டமைந்துள்ளது. அவையாவன: கோட்பாட்டுக் கல்வி, மருத்துவப் பராமரிப்பு, சமூக ஈடுபாடு மற்றும் ஆராய்ச்சி என்பனவாகும். இம்மருத்துவ பீடமானது மருத்துவ முன்கற்கைக்கான பட்டப் பாடநெறிகளைப் பயிற்றுவிக்குமுகமாகத் தற்காலிகமாகக் குருவிட்டயில் நிறுவப்பட்டுள்ளது. மேலும், பீடத்துக்கான ஒரு புதிய கட்டிடம் இரத்தினபுரி புதுநகர்ப் பகுதியிலே உள்ள நிலத்திலும், தொழில்சார் பிரிவொன்று இரத்தினபுரி மாவட்டப் பொது மருத்துவமனையை அடுத்தும் கட்டப்பட்டுள்ளன. அத்துடன், இப்புதிய பீட வளாகத்தினுள் நிர்வாகக் கட்டிடமொன்றும் நிறுவப்பட்டு, 19 ஆம் திகதி ஒக்டோபர் 2022 அன்று இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகத் துணைவேந்தரால் உத்தியோகபூர்வமாகத் திறந்துவைக்கப்பட்டது. அதுமட்டுமன்றி, இப்பீடமானது மாணவர்களுக்கு அனைத்துவித மருத்துவப் பயிற்சி வசதிகளையும் வழங்குவதோடு, மாணவர்களுக்குத் தேவையான மனிதவளங்கள், பௌதீக வளங்கள் கொண்ட மிகச் சிறந்த கற்றல் சூழமைவினையும் கொண்டமைந்துள்ளது. இரத்தினபுரியில் அமைந்துள்ள போதனா வைத்தியசாலையானது மருத்துவ பீட மாணவர்களுக்குத் தேவையான மருத்துவப் பயிற்சிகளையும் வழங்குகின்றது. தற்போது இப்பீடத்தில் ஒவ்வோர் உள்நுழைவின் போதும் 100 மாணவர்களுக்கு இடமளிக்கப்பட்டு, நான்கு கற்கை வருட மாணவர்களையும் சேர்த்து மொத்தம் 354 பேர் மருத்துவப் பட்டக் கற்கை (MBBS)யினைத் தொடர்கின்றனர்.

பீட முகாமைத்துவம்

பீடாதிபதி

பேரா. M.N. விக்ரமரத்ன
Graduateship in Chemistry (Institute of Chemistry), PhD in Biochemistry, Loyola University, Chicago, Illinois USA

துறைத் தலைவர்கள்

உயிரியல் இரசாயனத்துறை

கலாநிதி அமல் வகீஷ
Graduateship in Cemistry (Institute of Chemistry Ceylon, Sri Lanka), MI Chem C., MPhil in Biochemistry (SJP), PhD in Biochemistry (UOC)

உடலியல் துறை	கலாநிதி K.M.G.M.K.K. குலதுங்க BVSc, PhD in Human Biology (Japan)
உடற்கூற்றியல் துறை	கலாநிதி K.D.C.A. பனகல MBBS. MD (Orthopaedic Surgery)
சமூக மருத்துவத் துறை	கலாநிதி B.M.C. தஸநாயக்க (பதில் தலைவர்) MBBS (RUH), MSc in Community Meicine (UOC), MPHM (Mahidol University, Thailand)
தடயவியல் மருத்துவம் மற்றும் நச்சுவியல் துறை	கலாநிதி N.D.N. அசேல மென்டிஸ் (பதில் தலைவர்) MBBS, DLM, MD, D-ABMDI, ATHE, SEDA UK
மருத்துவத் துறை	கலாநிதி உதயங்கனி ராமதாச MBBS (UOC), MD (Medicine) (UOC), FRCP (London), FCCP, Dip Pall Medicine (Clinical) RACP
நுண்ணுயிரியல் துறை	கலாநிதி விந்தியா பெரேரா (பதில் தலைவர்) BVScHons (Pera)
மகப்பேற்றியல் மற்றும் பெண்ணோயியல் துறை	கலாநிதி ஓஷதி நல்லபெரும (பதில் தலைவர்) MBBS (PDN), MD (UOC) (2022 ஒக்டோபர் வரை) கலாநிதி R.P.D.S.R.C. பதிரன (பதில் தலைவர்) MBBS (Pera), MD (Colombo) (2022 ஒக்டோபர் முதல்)
குழந்தை மருத்துவத்துறை	கலாநிதி M.G.U. சம்பத் (பதில் தலைவர்) MBBS (RUH), DCH (UOC), MD Paediatrics (UOC) (2022 டிசம்பர் வரை) கலாநிதி உதயங்கனி ராமதாச MBBS (Colombo), MD (Medicine) (Colombo), FRCP (Lon), FCCP, Dip Pall Med (Clinical) RACP (2022 டிசம்பர் முதல்)
ஒட்டுண்ணியியல் நோய் மருத்துவத் துறை	திரு. G.L.S. கல்கமுவ (பதில் தலைவர்) BScHons, MPhil (PDN)
நோயியல் துறை	கலாநிதி G.A.C. கமகரணகே (பதில் தலைவர்) MBBS (SJP) DPath, MD in Clinical Haematology (UOC)
மருந்தியல் துறை	கலாநிதி R.M.M.K.N.A.M.A.L. ரத்னாயக்க MBBS (Pera), MSc (Medical Toxicology), MSc (Clinical Pharmacology & ampamp; Therapeutics), MA, MPhil (Toxinology), PG Dip in Toxicology, PG Dip in Buddhist Studies, PG Dip in Occupational Health & Safety

உளநோய மருத்துவத் துறை	கலாநிதி வஜிர தர்மவர்தன MBBS (UOC), MD (UOC)
அடிப்படைப் பராமரிப்பு மற்றும் குடும்பவியல் மருத்துவத் துறை	கலாநிதி B.S. மதுபாஷினி MBBS, MSc (Community Medicine)
அறுவை சிகிச்சை துறை	கலாநிதி வஜிர தர்மவர்தன MBBS (UOC), MD (UOC)
சிரேஷ்ட உதவிப் பதிவாளர்	திருமதி A.A.S. ப்ரியதர்ஷனீ BA (Sp.), MPhil (Economics) (PDN), Dip in English, Dip in HRM (17.07.2022 வரை)
	செல்வி அர்ச்சனா யோகநாதன் BA in Social Sciences (Open University), HND in English (18.07.2022 முதல்)

2.6.2 பீடத்தினால் நடாத்தப்படும் கற்கை நெறிகள்

MBBS – மருத்துவத்துறை இளமாணி மற்றும் அறுவைசிகிச்சைத்துறை இளமாணிப் பட்டக் கற்கைநெறிகள்

மருத்துவ பீடமானது பின்வரும் கற்கைத்துறைகளை உள்ளடக்கியுள்ளது:

1. உடற்கூற்றியல் துறை
2. உயிரியல் இரசாயனத் துறை
3. உடலியல் துறை
4. ஒட்டுண்ணியியல் நோய் மருத்துவத் துறை
5. நுண்ணுயிரியல் துறை
6. தடயவியல் மருத்துவம் மற்றும் நச்சுவியல் துறை
7. நோயியல் துறை
8. சமூக மருத்துவத் துறை
9. குடும்பவியல் மருத்துவத் துறை
10. மருந்தியல் துறை
11. அறுவை சிகிச்சை துறை
12. மருத்துவத் துறை
13. குழந்தை மருத்துவத்துறை
14. மகப்பேற்றியல் மற்றும் பெண்ணோயியல் துறை
15. உளநோய மருத்துவத் துறை

2.7 சமூக விஞ்ஞானங்கள் மற்றும் மொழிகள் பீடம்

2.7.1 சுருக்க வரலாறு

சமூக விஞ்ஞானங்கள் மற்றும் மொழிகள் பீடமானது சபரகமுவ பல்கலைக்கழகத்துடன் இணைத்து 1996 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. இப்பீடம் ஆரம்பத்தில் மொழிகள் துறை மற்றும் சமூக விஞ்ஞானத் துறை எனும் இரண்டு கற்கைத் துறைகளைக் கொண்டிருந்தது. பீடத்தின் மூன்றாவது துறையான, ஆங்கில மொழிக் கற்பித்தல் துறை 2004 இல் ஆரம்பிக்கப்பட்டது. நான்காவது துறையான பொருளாதாரம் மற்றும் புள்ளிவிபரவியல் துறை 2009 இல் ஆரம்பிக்கப்பட்டது. புவியியல் மற்றும் சூழலியல் முகாமைத்துவத் துறை 2015 ஆம் ஆண்டில் ஐந்தாவது துறையாக நிறுவப்பட்டது. 1996 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பீடம் அதன் கல்வி நடவடிக்கைகளில் முன்னாள் இணைக்கப்பட்ட பல்கலைக்கழகக் கல்லூரியின் மாணவர்களை, அவர்களின் ஆங்கில டிப்ளோமாக் கற்கை நெறிகளுடன் இரண்டு ஆண்டுகளுக்கு பிறகு ஒரு பட்டக் கற்கைநெறியைத் தொடர அனுமதித்தது. 1998 ஆம் ஆண்டிலிருந்தே இப்பீடம் உயர்தரத்தில் தகுதி பெற்ற மாணவர்களுக்கான பதிவுகளை மேற்கொள்ளத் தொடங்கியது.

இப்பீடமானது நோக்கு மற்றும் இலக்குகளை அடிப்படையாகக் கொண்டு அதன் துறைகளின் மூலம் கற்கைநெறிகளுக்கான சிறப்புப் பட்டங்களை வழங்கி வருகிறது. 2007 ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வந்த மூன்று ஆண்டு காலப் பாடநெறிகளுக்குச் சிறப்புப் பட்டம் வழங்குதல் எனும் தனது ஆரம்பகால எண்ணக்கருவை மாற்றியமைத்து, மூன்று ஆண்டுகால சமூக விஞ்ஞானத்துக்கான சிறப்புப் பட்டக் கற்கையைத் தவிர, பொருளியல், புள்ளிவிபரவியல், புவியியல், அரசறிவியல், சமூகவியல் மற்றும் மானிடவியல் ஆகிய துறைகளில் நான்கு ஆண்டுகளுக்கான சிறப்புக் கற்கைநெறிகள் அறிமுகப்படுத்தப்பட்டன. 2013 ஆம் ஆண்டு முதல் சிங்களம், தமிழ், ஆங்கிலம், ஜெர்மன், ஜப்பானிய, சீன மற்றும் ஹிந்தி மொழிகளில் நான்கு ஆண்டுகளுக்கான சிறப்புக் கற்கைநெறிகளும் அறிமுகப்படுத்தப் பட்டன. 2014 ஆம் ஆண்டில், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்பத்தில் கலைத்துறை சிறப்புப் பட்டத்தையும், 2015 இல் மொழிபெயர்ப்புக் கற்கையில் கலைத்துறை சிறப்புப் பட்டத்தையும் இப்பீடம் அறிமுகப்படுத்தியது.

தற்போது, பீடமானது நான்கு ஆண்டுகளுக்கான சிறப்புப் பட்டங்களையும், மூன்று ஆண்டுகளுக்கான பொதுப் பட்டங்களையும் மட்டுமே வழங்கி வருகிறது.

சமூக விஞ்ஞானங்கள் மற்றும் மொழிகள் பீடம் மாணவர்களை மனிதநேய பாரம்பரியத்தோடு இணைத்து பல துறைகளில் ஆழ்ந்த புலமையையும் விரிவான புரிந்துணர்வையும் பெற்றுக் கொடுத்து அவர்களைத் தொழில்முறை வாழ்க்கைக்குத் தயார்படுத்துகிறது. சமகால உலகில் உள்ள பிரச்சினைகளை வெற்றிகரமாக எதிர்கொண்டு தமது துறைசார் பணிகளுக்குப் பயன்படும் வகையில் தாம் பெற்ற அறிவைப் பயன்படுத்துவதற்கான திறனை மேம்படுத்தும் வகையில் இப்பீடத்தின் கற்கைநெறிகள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

இப்பீடமானது சுயாதீனமான விமர்சன சிந்தனை, தர்க்க ரீதியான பகுப்பாய்வு, பயனுள்ள தகவல் தொடர்பு என்பவற்றை மேம்படுத்தி, குழுநிலைப் பணிகளில் மாணவர்களின் திறனை வளர்ப்பதற்குப் பாடுபடுகிறது. எனவே, இப்பீடத்தின் கலைத் துறை பட்டப் படிப்பானது வகுப்பறை வேலை மற்றும் மாணவர்களின் சுயாதீனமான வாசிப்பு, எழுத்து, ஆய்வு மற்றும் செயற்திட்டப் பணிகள் என்பவற்றை ஒருங்கிணைத்து மாணவர்களுக்கு அளிக்கும் வகையில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. மேலும், இலங்கையில் உள்ள அனைத்துப் பல்கலைக்கழகங்களோடும் ஒப்பிடுகையில், பல்கலைக்கழக ஆணைக்குழுவினால் கலைத்துறை சார்ந்த அனைத்துப் பட்டக் கற்கைநெறிகளுக்கும் "ஏ" தரச்சான்றிதழ் பெற்ற ஒரே பீடமாக இது தலைசிறந்து விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. அத்துடன், 27 ஆம் திகதி பெப்ரவரி மாதம் 2015

இல் சிறப்பு வர்த்தமானியின் இல.1903/63 இற்கு அமைவாக, தகவல் தொழினுட்பவியல் துறையானது இப்பீடத்தின் ஆறாவது கற்கைத் துறையாக இணைத்துக்கொள்ளப்பட்டது.

பீட முகாமைத்துவம்

பீடாதிபதி

கலாநிதி M.A.C.S.S. ஃபெர்ணான்டோ
BScHons (Statistics) (SJP), MPhil (PDN), PhD (University of Auckland)

துறைத் தலைவர்கள்

பொருளியல் மற்றும் புள்ளிவிபரவியல்துறை

கலாநிதி R.A.H.M. ரூபசிங்ஹ
BSc (Computing and Information Systems) (SUSL), MSc (Computer Science and Engineering) (University of Aizu, Japan), PhD (Computer Sciences and Engineering) (University of Aizu, Japan)

ஆங்கில மொழிக் கற்பித்தல் துறை

கலாநிதி K.S.N. பிரசங்கனி
BAHons (Languages) (SUSL), MA in Linguistics (KLN), PhD (Applied Linguistics) (University Malaysia, Sarawak)
(14.02.2022 வரை)

கலாநிதி லக்மினி பஸ்நாயக்க
[BAHons in English (SUSL), MA in Linguistics (Kel, SL), MPhil in English Literature (Keele, UK), PhD in AppliedLinguistics (Kel, SL)
(08.03.2022 முதல்)

புவியியல் மற்றும் சூழலியல் முகாமைத்துவத்துற

கலாநிதி R.J.M. உடபோருவ
BAHons (Geography) (SJP), PG Dip (MRT), PhD(UOC)

மொழிகள் துறை

கலாநிதி H.A.M.A. ஹபுகொட
BAHons (SUSL), MA (SUSL), PhD (UOC)
(07.06.2022 வரை)

கலாநிதி ரொஹான் அபேவிக்ரம
BA Hons (SUSL), MA
(SUSL), PhD (Colombo
(12.07.2022 முதல்)

சமூகவியல் துறை

கலாநிதி உபுல லேகம்கே
BAHons (PDN), PG Dip (TESL) (UOC), MA (KLN), MSSc (KLN), MA (UOC), PhD (SIJ)

தகவல் தொழினுட்பவியல்துறை

திரு. R.M.N.B. ரத்னாயக்க
BSc Hons (Peradeniya), MSc (Peradeniya), MPhil (Peradeniya)

உதவிப் பதிவாளர் திருமதி. யஷோதா சந்திரசேகர
LL.B Hons (Law) (UOC)

2.7.2 பீடத்தினால் நடாத்தப்படும் கற்கைநெறிகள்

சமூக விஞ்ஞானங்கள் மற்றும் மொழிகள் பீடம் ஐந்து துறைகளைக் கொண்டமைந்துள்ளது. அவையாவன: பொருளியல் மற்றும் புள்ளிவிபரவியல் துறை, புவியியல் மற்றும் சூழலியல் முகாமைத்துவத் துறை, மொழிகள் துறை, சமூக விஞ்ஞானத்துறை மற்றும் ஆங்கில மொழிக் கற்பித்தல் துறை என்பனவாகும்.

இப்பீடத்தினால் பின்வரும் கற்கைநெறிகளுக்காகப் பட்டங்கள் வழங்கப்படுகின்றன:

1. கலைத் துறை (சிறப்பு)ப் பட்டம் (நான்கு ஆண்டுகள்)
2. கலைத் துறைப் பொதுப் பட்டம் (மூன்று ஆண்டுகள்)

பீடத்தில் உள்ள அனைத்து துறைகளின் ஆதரவோடு BA பொதுப் பட்டக் கற்கைநெறியும் நடாத்தப்படுகிறது. அதேவேளை, அதனோடு தொடர்புடைய பின்வரும் பாடங்களில் இளங்கலைமாணி (சிறப்பு)ப் பட்டங்களும் வழங்கப்படுகின்றன:

பொருளியல் மற்றும் புள்ளிவிபரவியல் துறை

பொருளியலில் இளங்கலைமாணி (சிறப்பு)ப் பட்டம்

புள்ளிவிபரவியலில் இளங்கலைமாணி (சிறப்பு)ப் பட்டம்

தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்பத்தில் இளங்கலைமாணி (சிறப்பு)ப் பட்டம் (ஆங்கில மொழியில் மட்டும் வழங்கப்படுகிறது)

புவியியல் மற்றும் சுற்றுச்சூழல் முகாமைத்துவத் துறை

புவியியலில் இளங்கலைமாணி (சிறப்பு)ப் பட்டம்

மொழிகள் துறை

சிங்களமொழியில் இளங்கலைமாணி (சிறப்பு)ப் பட்டம்

தமிழ்மொழியில் இளங்கலைமாணி (சிறப்பு)ப் பட்டம்

ஆங்கிலமொழியில் இளங்கலைமாணி (சிறப்பு)ப் பட்டம்

ஜெர்மன் மொழியில் இளங்கலைமாணி (சிறப்பு)ப் பட்டம்

ஜப்பானிய மொழியில் இளங்கலைமாணி (சிறப்பு)ப் பட்டம்

சீன மொழியில் இளங்கலைமாணி (சிறப்பு)ப் பட்டம்

ஹிந்தி மொழியில் இளங்கலைமாணி (சிறப்பு)ப் பட்டம்

மொழிபெயர்ப்புக் கற்கையில் இளங்கலைமாணி (சிறப்பு)ப் பட்டம்

சமூகவியல் துறை

அரசறிவியலில் இளங்கலைமாணி (சிறப்பு)ப் பட்டம்

சமூகவியலில் இளங்கலைமாணி (சிறப்பு)ப் பட்டம்

ஆங்கில மொழிக் கற்பித்தல் துறை (DELT)

ஆங்கில மொழிக் கற்பித்தல் துறையானது (DELT) ஆங்கிலத்தை பிரதான/துணைப் பாடமாகவும், இரண்டாம் மொழிப் (ESL) பாடமாகவும் கற்பிக்கின்றது. அதுமட்டுமன்றி, மாணவர்களின் பல்கலைக்கழகக் காலம் முழுவதும் இத்துறையினால் ஆங்கில மொழிப் பாடநெறி கற்பிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

தகவல் தொழினுட்பவியல்துறை

2.8 தொழினுட்பவியல் பீடம்

2.8.1 சுருக்க வரலாறு

இத்தொழினுட்பவியல் பீடமானது இன் வர்த்தமானி அறிவிப்பு இலக்கம் 2056/5 இன் படி 29 ஆம் திகதி ஜனவரி 2018 அன்று நிறுவப்பட்டது. இப்பீடம் பொறியியல் தொழினுட்பவியல் துறை, உயிரமைப்புத் தொழினுட்பவியல் ஆகிய இரு துறைகளை உள்ளடக்கியுள்ளது.

பீடாதிபதி

பேரா. K.R. கொஸ்வத்தகே
BSc (Sp.) (Physics) (UOC), MSc (Kobe University, Japan), PhD (Kobe University, Japan)
(28.02.2022 முதல்)

கலாநிதி A.D. அம்பிட்டியாவத்த
BSc (Agriculture) (RUH), MSc (Agriculture) (PDN), D. Eng (Water Resource Engineering) (Wuhan, PRChina)
(27.02.2022 வரை)

துறைத் தலைவர்கள்

பொறியியல் தொழினுட்பவியல் துறை

கலாநிதி N.P. லியனவடுகே
PhD (Material.Physics (Superconducting materials), University of Peradeniya, National Physical Laboratory New Delhi)
(28.02.2022 முதல்)

பேரா. K.R. கொஸ்வத்தகே
BSc (Sp.) (Physics) (UOC), MSc (Kobe University, Japan), PhD (Kobe University, Japan)
(14.02.2022 வரை)

உயிரமைப்புத் தொழினுட்பவியல்

கலாநிதி W.G.M.S. பெரேரா
BScHons (Sp.) (Chemistry) (PDN), PhD (Chemistry) (University of Texas at San Antonio, USA)

உதவிப் பதிவாளர்

திருமதி N. அகல்யா
BBA (Financial MANAGEMENT), CBA (CA Sri Lanka)

2.8.2 பீடத்தினால் நடாத்தப்படும் கற்கைநெறிகள்

உயிரமைப்புக்கள் தொழினுட்பவியலில்: BBST (சிறப்பு)

பொறியியல் தொழினுட்பவியலில் BET (சிறப்பு)

3. கற்பித்தல் வளங்கள்

3.1 நூலகம்

3.1.1 நூலக விவரணம்

பிரதான நூலகமானது முழுப் பல்கலைக்கழகத்திற்கும் அவர்களின் கல்விசார் கற்கைநெறிகளில் சிறந்த தரத்தை அடையும் வகையில் தனது சேவைகளைச் சிறப்பாக வழங்கிவருகிறது. முகாமைத்துவப் பீட நூலகமானது முகாமைத்துவக் கற்கை நெறிகள் பீடத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்கின்றது. விவசாய விஞ்ஞான பீட நூலகமானது விவசாய விஞ்ஞான பீடத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்கின்றது. மருத்துவ பீடமானது தனக்கான பிரத்தியேக நூலகமொன்றினைக் கொண்டமைந்துள்ளது. நூலகத்தின் சேகரிப்புகள் மற்றும் சேவைகள் பாடத்திட்டத்தின் அடிப்படை நோக்கம், ஆய்வுத் தேவைகள் என்பவற்றோடு பொருந்தும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன.

சபரகமுவ பல்கலைக்கழகத்தின் நூலகங்கள் தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் புதிய சவால்களுக்கு ஈடுகொடுக்கும் வண்ணம் வாசகர்களை மையமாகக் கொண்ட தரமான தகவல் தயாரிப்புகள், சேவைகள் மற்றும் மாற்றமுறும் தகவல் தேவைகளுக்கு ஏற்ப சேவைகளை வழங்கிவருகின்றது.

2020 ஆம் ஆண்டின் இறுதியில் நூலகங்களின் அனைத்து புத்தகங்களினதும் தொகுப்பு சுமார் 134,000 ஆகும். இதில் கொள்வனவு செய்யப்பட்ட புத்தகங்கள், நூலகத்திற்கு நன்கொடையாகக் கிடைக்கப்பெற்ற புத்தகங்கள் 133694 உள்ளிட்டு, சிறுபிரசுரங்கள் ஒலி-ஒளிநாடாக்கள் மற்றும் மின்னியல் தகவல் மூலங்களும் அடங்கும்.

சபரகமுவ பல்கலைக்கழக நூலகமானது அதன் செயற்திறனை உறுதிப்படுத்த திறந்த மூல மென்பொருளான KOHAவைப் பயன்படுத்துகிறது. நூலகச் சேகரிப்புகள் இரவல் பிரிவு, குறிப்புப் பிரிவு, நிரந்தர குறிப்பெடுக்கும் பிரிவு, நிரந்தரப் பிரிவு, பிற தொகுப்புகள் மற்றும் கடந்த கால வினாப்பத்திர சேகரிப்புகள் என்றவாறு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

3.1.2 உள்ளக நடவடிக்கைகள்

3.1.3 நூலகக் குழு

நூலகக் குழுவானது, செனட்டின் ஒரு துணைக் குழுவாகவும், சபரகமுவ பல்கலைக்கழக நூலகத்தின் முதன்மை நிர்வாக அமைப்பாகவும் காணப்படுகின்றது. நூலகக் குழுக் கூட்டம் ஒவ்வொரு மாதமும் தவறாமல் இடம்பெறுமாறு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. குழுவின் செயலாளராக நூலகர் இருப்பார். குழுவின் தலைவர் பல்கலைக்கழகத் துணைவேந்தர் ஆவார்.

நூலகங்களின் நோக்கங்கள்

சுயகற்கையையும் சுய முன்னேற்றத்தையும் ஊக்குவிப்பதன் ஊடாக பல்கலைக்கழகங்களை முன்னேற்றுவதை பிரதான இலக்காகக் கொண்டு இயங்குவதில் நாட்டில் உள்ள பல்கலைக்கழக நூலகங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. சபரகமுவ பல்கலைக்கழகத்தில் பிரதான நூலகம் தவிர மூன்று கிளை நூலகங்கள் உள்ளன. முகாமைத்துவக் கற்கைகள் பீட நூலகம், விவசாய விஞ்ஞான பீட நூலகம், மருத்துவ பீட நூலகம் என்பனவே அவையாகும். பிரதான நூலகமானது தற்போது சமூக விஞ்ஞானங்கள் மற்றும் மொழிகள் பீடம், பிரயோக விஞ்ஞான பீடம், வரைபட (கேத்திர) கணித பீடம், தொழினுட்பவியல் பீடம், பட்டதாரிக் கற்கைகள் பீடம் முதலான ஐந்து பீடங்களின் கற்றல் தேவைகளை நிறைவுசெய்கிறது. விவசாய விஞ்ஞான பீடம், முகாமைத்துவக் கற்கைகள் பீடம், மருத்துவ பீடம் ஆகியவற்றில் அமைந்துள்ள நூலகங்கள் அவ்வந்த பீட மாணவர்களின் கற்றல் தேவைகளைப் பூர்த்திசெய்து வருகின்றன. தற்போது இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகமானது இலத்திரனியல் தகவல் வழங்கலை மேம்படுத்துவதில் செயற்றிறனுடன் ஈடுபட்டுவருகிறது.

இலங்கை சபரகமுவ பல்கலைக்கழக வலைபின்னலானது பிரதான நூலகத்திற்கான புதிய கட்டிடத்தை மேம்படுத்துவதோடு, அதன் காப்பாளர்களுக்கான வசதிவாய்ப்புக்களை விரிவாக்கம் செய்யவும் தீர்மானித்துள்ளது. நூலகத்தினால் புதிய கட்டிட நிர்மாணத்துக்குச் சமாந்திரமாகத் தரத்திலும் அளவிலும் மனித வள மேம்பாட்டுக்கு அப்பால் கொடைவழங்குநர் மூலமும் கொள்வனவின் மூலமும் பெறப்பட்ட உசாத்துணை மூலங்கள் முதலான பௌதீக வளங்களை மேம்படுத்துவதில் கவனக்குவிப்பு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

3.1.4 பிற செயற்பாடுகள் - 2022

நியமனங்கள், பதவி உயர்வுகள், நிகழ்வுகள்

நியமனங்கள்

கலாநிதி I.M. நவரத்ன அவர்கள் பிரதான நூலகத்தின் துணை நூலகராகப் பதவி உயர்த்தப்பட்டு 01.03.2022 முதல் பணியேற்றுள்ளார்.

நிகழ்வுகள்

நிலையான வளர்ச்சி இலக்குகள் (SDGs) தொடர்பான சேகரிப்புகளைப் பெறுதல், ஒழுங்கமைத்தல், மேம்படுத்துதல் ஆகியவற்றோடு, சுகாதாரம், தொழில்முனைவு, விவசாய மேம்பாடு, தனிநபர் மேம்பாடு, தகவலறிவு, இலத்திரனியலறிவு, கலாசாரப் பாரம்பரியம், உலகளாவிய கூட்டாண்மை, பசுமைச்சூழல், சுற்றுச்சூழல் என்பன தொடர்பான தகவல்களை அணுகுவதற்கான வாய்ப்பினையும் ஏற்படுத்திக் கொடுத்தல்.

நூலகங்களுக்கு இடையேயான கடன் (ILL) சேவையினை வழங்குதல். மேலும், இலங்கை அறிவியல் மற்றும் தொனுட்பத் தகவல் வலையமைப்பு (SLSTINET), சுகாதார இலக்கியம், நூலகம் மற்றும் தகவல் சேவைகள் (HELLIS), விவசாய தகவல் வலையமைப்பு (AGRINET) போன்ற நூலக வலையமைப்புகளுடனான ஒத்துழைப்பினை மேம்படுத்தி, இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகத்திலும் ஏனைய உயர்கல்வி நிறுவனங்களிலும் பிற ஆய்வு நிறுவனங்களிலும் உள்ள பயனர்களினது தடையற்றதும் நியாயமானதுமான முறையில் அமைந்த சமநிலையான தகவல் பெறுகையினை உறுதி செய்தல்.

இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகத்தினை அடுத்துள்ள பாடசாலை நூலகங்களுக்கு SUSL இன் நூலக உதவியாளர்கள் ஒன்றியம் தொடர்ந்தேர்ச்சையாக வழங்கிவரும் இதழ் நன்கொடை முதலான சமூக நலன் சார்ந்த முன்முயற்சிகள் மூலம் சமமான தகவல்பெறுகை, சமூக சமத்துவம், நூலகப் பாவனையைப் பரவலாக்கல் ஆகியவற்றை உறுதி செய்தல்.

நூலகக் குழுவின் ஒப்புதலின் கீழ் 2023 முதல் தொடங்கப்படவுள்ள பசுமை நூலகத் திட்டத்துடன் இணைந்து, நூலகத்தின் மூலம் காய்கறிகள், பழங்கள் மற்றும் பிற பயிர்களைப் பயிரிடுதல், அவற்றைப் பராமரித்தல் முதலான செயற்பாடுகளை முன்னெடுத்தல்.

நூலகத்தின் துப்புரவு பணியாளர்களினால் மழைக்காலங்களில் மழைநீர் சேகரிப்பின் அடிப்படை நடைமுறைகள் பின்பற்றப்படுவதன் மூலம் சேகரிக்கப்படும் மழைநீரைத் தோட்டச் செய்கைக்குப் பயன்படுத்துவதால் குழாய்நீர்ப் பாவனை குறைக்கப்படுதல்.

07.12.2022 அன்று தென்னிலங்கைப் பிரதேசத்தை நோக்கி மேற்கொள்ளப்பட்ட நூலக ஊழியர்களின் ஒரு நாள் சுற்றுலாப் பயணத்தின் மூலம் பணிவாழ்வுச் சமநிலையைப் பேணிக் கொண்டாட்ட நிலையினை ஏற்படுத்துவதன் மூலம் மனநலனை மேம்படுத்துதல். பிரியாவிடை நிகழ்வுகள், பிறந்தநாள் கொண்டாட்டங்கள், சேவைசார்ந்த கொண்டாட்டங்கள் ஆகியவை நூலக ஊழியர்களிடையே ஒற்றுமையை வலுப்படுத்துகின்றன.

வாசிப்பு, குறிப்பெடுப்பு, ஆராய்ச்சிப் பணி முதலானவற்றை ஊக்குவிக்கும் இடமாக நூலகச் சூழலை மேம்படுத்துதல்.

மேலும், ஆண்டு முழுவதும் 24/7 முழுநேர வாசிகசாலை வசதிகள் வழங்கப்படுகின்றன. பயனர்களின் கோரிக்கைக்கு அமைவாக நூலகம் திறந்திருக்கும் நேரம் நீட்டிக்கப்பட்டுள்ளது. புதிதாக நிறுவப்பட்ட சைபர் வலயத்தினூடே VLE மற்றும் பிற இணையவழி அடிப்படையிலான தளங்களை அணுகுவதற்கு சிறந்த அலைவரிசையுடன்கூடிய இணைய அணுகலைப் பயனர்களுக்கு வழங்குதல்.

புதிதாக நிறுவப்பட்ட ஆய்வுக்கான கனசதுர அலகின் (கியூப் மூலம் வாழ்நாள் முழுவதும் மேற்கொள்ளத்தக்கவாறான சுய-கற்றல் வாய்ப்புகளை மேம்படுத்துதல். இணைய இணைப்பு வழங்கப்பட்டுள்ளதோடு, ஒதுக்கப்பட்டுள்ள கணினிகளைப் பயன்படுத்தி ஆய்வுச் செயற்பாடுகளை முன்னெடுக்கலாம். குறித்த ஆராய்ச்சி/செயற்றிட்டம் நிறைவுபெறும் வரை ஆராய்ச்சியாளர்களின் ஆவணங்களை ஆய்வுக்கான கனசதுர அலகில் உள்ள அலமாரியில் சேமித்து வைக்கலாம்.

நூலகத்தின் கல்விசார் ஊழியர்கள் இலக்கியத் தேடல், தேடல் நுட்பங்களை அறிமுகப்படுத்துதல், இலக்கிய ஆய்வுகளை நடத்துதல், மேற்கோள்கள் மற்றும் குறிப்புகள் எழுதும் முறை, Turnitin செயலி மூலம் எழுத்துப் பிரதிகளின் அசல் - நகல் தன்மையைப் பரிசீலித்தல், புலமைத் திருட்டினைத் தடுத்தல், பதிப்புத் திருட்டினைத் தடுத்தல், ஆய்வறிக்கை/ ஆய்வேடு ஆகியவற்றின் வடிவமைப்பு, ஆய்வுச் சட்டகத்தினைச் செவ்வையாக மேம்படுத்தி வளர்த்தெடுத்தல், தொழிற்றுறை மற்றும் கல்வித்துறை சார்ந்து சுயவிவரக் கோவையை உருவாக்குதல் ஆகியவற்றுக்கு உதவியளித்தல்.

நூலக ஊழியர்களின் ஆக்கத்திறனையும் செயல்திறனையும் அதிகரிக்கும் வகையில் IT திறன்களை மேம்படுத்தும் பயிற்சிப் பயிலரங்க அமர்வுகளை நடத்துதல்.

புதிதாக உருவாக்கப்பட்டுள்ள் சைபர் வலயத்தினூடே தடையில்லா இணைய வசதிகளை வழங்குவதன் மூலம் நூலகத்தின் அதிகாரப்பூர்வ YouTube சேனலில் உள்ள புலமைசார் காணொளிகள் உள்ளடங்கலாகப் புலமைசார் மின் தரவுத்தளங்கள், மின் இதழ்கள், மின்னூல்கள், அனிமேஷன் காணொளிகள், அரச மின்தகவல் மூலங்கள் எனப் பல்வேறு மின் மூலாதாரங்களுக்கான அணுகலினை வழங்குவதன் மூலம் இணையவழிக் கற்றலை மேம்படுத்துதல். நூலகத்தால் பராமரிக்கப்படும் டிஜிட்டல் களஞ்சியமானது முழுப் பல்கலைக்கழகச் சமூகத்தினதும் நிறுவனமயப்பட்ட ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்கும் வெளியீடுகளுக்குமான சிறந்த களமாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. டிஜிட்டல் களஞ்சியத்திற்கான தடையற்ற அணுகலில் ஏற்பட்டுள்ள சாத்தியப்பாடானது "அனைவருக்குமான தகவல் அணுகல்" நிலைக்கு உத்தரவாதம் அளிக்கிறது.

நூலகம் டிஜிட்டல் ஸ்கேனிங் யூனிட்டை நிறுவி, புதிதாக வாங்கிய டிஜிட்டல் ஸ்கேனரைக் கொண்டு டிஜிட்டல் ஸ்கேனிங் திட்டத்தைத் தொடங்கியது. புதிதாக நிறுவப்பட்ட டிஜிட்டல் ஸ்கேனிங் பிரிவின் செயல்பாடுகளில் ஈடுபடுவதற்காக சிறப்பாக அடையாளம் காணப்பட்ட ஊழியர்களுக்கான பயிற்சி. வழக்கமான நூலகச் சேவைகளை டிஜிட்டல் முறையில் அடுத்த நிலைக்கு மாற்றவும், நூலகத்தில் காகிதப் பயன்பாட்டைக் குறைக்கவும் இது பயன்படுகிறது. இந்த அலகு முக்கியமாக 2 நூலக சேவைகளை வழங்குகிறது:

இந்த நூலகமானது டிஜிட்டல் நகலுருப்படுத்தும் அலகொன்றினை நிறுவி, புதிதாகக் கொள்வனவு செய்யப்பட்ட டிஜிட்டல் ஸ்கேனரைக் கொண்டு டிஜிட்டல் நகலுருப்படுத்தும் திட்டத்தினை முன்னெடுத்துள்ளது. புதிதாக நிறுவப்பட்ட இந்த டிஜிட்டல் நகலுருப்படுத்தும் அலகின் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கெனச் சிறப்பாக அடையாளம் காணப்பட்ட ஊழியர்களுக்கான பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. இதனடியாக, வழக்கமான நூலகச் சேவைகளை டிஜிட்டல் முறையில் அடுத்த கட்டத்துக்குக் கொண்டு செல்லவும், நூலகத்தில் காகிதப் பயன்பாட்டைக் குறைக்கவும் வழி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த அலகின் ஊடாக இரண்டு பிரதான நூலக சேவைகள் வழங்கப்படுகின்றன:

சமகால உள்ளடக்கங்கள் மற்றும் குறியீட்டு சேவை - இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகத்தின் பிரதான நூலகமானது, அண்மைக் கால இதழ்களின் தொகுப்புகள் தொடர்பான தகவல்களைப் பரப்புவதற்கு ஏற்ற விதத்தில் சமகால உள்ளடக்கச் சேவை (CCS)யினைத் தொடங்கியுள்ளது. இச்சமகால உள்ளடக்கங்களை பிரதான நூலக இணையதளம் (https://www.sab.ac.lk/lib/periodicals) மூலம் அணுகலாம். இந்த உள்ளீட்டுத் தகவல் சேவையின் மூலம் கல்வியியல் இதழ்கள், ஆராய்ச்சி முன்னெடுப்புகள், இதழ்கள், அறிக்கைகள், கையேடுகள், கடந்த கால வினாப் பத்திரங்கள், முதுமாணிப்பட்ட ஆய்வறிக்கைகள், ஆய்வேடுகள், நகலுருப்படுத்தப்பட்ட செய்தித்தாள் பிரதிகள், அரசாங்க வெளியீடுகளுக்கான இணைய இணைப்புகள் ஆகியவற்றினைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும்.

செய்தித்தாள்களில் பிரசுரமான இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகச் சமூகத்தினதும் ஏனையோரினதும் புலமைசார் ஆக்கங்களினை வெட்டிச் சேகரிக்கும் சேவை மூலம் அச்சுப் பதிப்புப் பிரிவில் பயனர்களுக்குக் கிடைக்கும் வகயில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. அக்கட்டுரைகளின் நகலுருப்படுத்தப்பட்ட

பிரதிகளை https://www.sab.ac.lk/lib/periodicals மூலம் அணுகலாம்.

சப்ரகமுவ மாகாணம், இரத்தினபுரி மாவட்டம், சமனலவெவ செயற்திட்டங்கள் என்பவை தொடர்பான தகவல்கள் இலங்கைத் தேசிய அறிவியல் நிறுவகத்துடன் (NSF) இணைந்து நூலகத்தின் மின் களஞ்சியத்தில் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. "சப்ரகமுவ சேகரிப்பு" எனும் இத்தகவல் மூலமானது பிரதான நூலகத்தில் காணக்கிடைக்கிறது. இச்சேகரிப்பில் செவ்வியல் பிரதிகள், SUSL ஆய்வுகள், வெளியீடுகள், SUSL கையேடுகள், SUSL அறிக்கைகள், SUSL பற்றிய செய்தித்தாள் கட்டுரைகள், பீடக் கையேடுகள், துண்டுப்பிரசுரங்கள், செய்திமடல்கள் போன்றவை உள்ளடங்கியுள்ளன. இந்தத் தொகுப்பின் ஒரு பகுதி இடமாற்றப்பட்டு SUSL அருங்காட்சியகத்தில் எதிர்காலத் தலைமுறையினரிடையே கலாசார பாரம்பரியத்தைப் பாதுகாத்து ஒப்படைக்கும் நோக்கங்களுக்காக வைக்கப்பட்டுள்ளது.

அச்சுப் பிரதிகளை வரையறுத்துக் கொள்வதன் மூலமும், இணையவழி ஆவணங்கள், இணையவழிப் பகிர்தல், ஸ்கேனிங் எனும் நகலுருப்படுத்தல் முதலான நடைமுறைகளை அதிகரிப்பதன் மூலமும் காகிதப் பயன்பாடு இயன்றவரை குறைக்கப்படுகிறது. நூலக அனுமதிப் படிவங்கள் இணையவழிப் படிவங்களாக மாற்றப்பட்டுள்ளன. நூலகப் பயனர்களுக்கான நினைவூட்டல்கள் மின்மடல்கள் வழியாக அனுப்பப்படுகின்றன. நூலகக் குழுவின் கூட்ட அறிக்கைக் குறிப்புகள் மின் ஆவணங்களாக விநியோகிக்கப்படுகின்றன. மனிதப் பங்கேற்புடன்கூடிய நூலக நிகழ்வுகளுக்கான அழைப்பிதழ்கள் மின்னஞ்சல் மற்றும் புலனம் (WhatsApp) மூலம் விநியோகிக்கப்படுகின்றன. நூலகத்துக்கான தண்டப்பணமும் மின் கட்டண வழிமுறையினூடே அறவிடப்படுகிறது. அனைத்து அச்சுப்பொறிகளினதும் இயல்புநிலை அமைப்பாக இரட்டைப் பக்க அச்சிடுதல் முறைமையே உள்ளீடு செய்யப்பட்டுள்ளது. ஏலவே பயன்படுத்தப்பட்ட உறைகள் உள்ளகத் தொடர்புகளின்போது மீள் பயன்பாட்டுக்கு உட்படுத்தப்படுகின்றன. கடிதங்கள் மூலம் பெறப்பட்ட முத்திரைகளின் அடிப்படையில் முத்திரை சேகரிப்பு உருவாக்கப்பட்டு பலாங்கொடை பொது நூலகத்திற்கு நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளது. தேவையற்றவற்றை அகற்றும் கொள்கையின் கீழ், பரிந்துரைகளின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட பொருட்கள் நன்கொடையாக அளிக்கப்படலாம்.

கழிவுப்பொருள் முகாமைத்துவமானது நூலகத்தில் வழக்கமாகக் கைக்கொள்ளப்படும் ஒரு நடைமுறையாகும். கழிவுப் பொருட்கள் தனித்தனியாக மூன்று வெவ்வேறு வண்ணக் குப்பைத் தொட்டிகளில் இடப்படுகின்றன. இலகுவில் தூக்கி எறியக்கூடிய பொருட்களை மாற்றீடுகளாகப் பயன்படுத்துவதன் மூலம் பிளாஸ்டிக் பயன்பாடு குறைக்கப்பட்டுள்ளதோடு, பீங்கான் குவளைகள், களிமண் தண்ணீர் போத்தல்கள், களிமண் பானைகள், மதிய உணவுப் பெட்டிகள், மையூற்றுப் பேனாக்கள், துணித் துடைப்பான்கள் போன்றனவும் பதிலிகளாகப் பயன்படுத்தப்படுகின்றன.

மனிதப் பங்கேற்புடன்கூடிய நூலக நிகழ்வுகளின்போது ஆரோக்கியமான உணவும் பானங்களும் வழங்கப்படுகின்றன.

அனைத்துக் கணினிகளும் உறங்குநிலைப் பயன்முறையில் செயல்படுத்தப்பட்டுள்ளதோடு, பகல் பொழுதுகளில் இயற்கை வெளிச்சமும்

காற்றோட்டமும் உள்ள நூலகப் பகுதிகளில் மின்விசிறிகளும் விளக்குகளும் அணைத்து வைக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

நூலகத் தொழில் தொடர்பான பயிற்சிகள்/ பயிலரங்குகள்/ கருத்தரங்குகள்/ மாநாடுகள் மற்றும் மின் செய்தி இதழ்கள் தொடர்பான பிரசுரங்கள் நூலக ஊழியர்களின் புலனக் (WhatsApp) குழு மற்றும் பிற SUSL குழுக்களின் மூலம் விநியோகிக்கப்படுகின்றன.

நூலகச் சேவைகள், தொழிற்பாடுகள், செயற்பாடுகள், விதிமுறைகள், சட்டதிட்டங்கள், நிகழ்வுகள், செய்திகள் ஆகியவற்றை வெளிப்படுத்துவதற்கு அதிகாரப்பூர்வ நூலக இணையதளம், பேஸ்புக் பக்கம், யூடியூப் சேனல், ட்விட்டர் பக்கம் ஆகியவை பயன்படுகின்றன. அத்துடன், நூலகத்தின் தனியடையாளத்தினைப் பல்கலைக்கழகச் சமூகத்திற்குள்ளும் அதற்கு அப்பாலும் மேம்படுத்துதல்.

நூலக இணையதளத்தில் செயற்படுத்தப் பட்டிருக்கும் உடனடி உரையாடற் சேவையானது பிற தகவல் தொடர்பு வழிமுறைகளுக்கான கட்டணங்களைக் குறைத்து, பயனர்கள் விரைவான எதிர்வினைகளைப் பெற்றுக்கொள்ளவும் வழியமைக்கிறது.

ஒருங்கிணைந்த நூலக முகாமைத்துவ அமைப்பானது (KOHA) செயல்திறனையும் காத்திரத்தன்மையினையும் மேம்படுத்துகிறது. அத்தோடு, மனிதச் செயற்பாடுகளின் போதான பிழைகளைக் குறைக்க உதவுகிறது.

நூலகத்திற்கான உள்ளகத் தர உத்தரவாத மையமானது (QAC) நூலகத்தின் வினைத்திறனை மேம்படுத்துவதற்கும், அதன் அதிகாரத்துவத்தையும் நம்பகத்தன்மையையும் உறுதிசெய்வதற்கும், செயல்திறன்/சேவை மற்றும் தயாரிப்புத் தரம் என்பவற்றை உறுதிப்படுத்துவதற்கும், நூலகம் மற்றும் நூலகம் தொடர்பான செயற்பாடுகளைத் தரப்படுத்துவதற்குமான ஓர் அடிப்படை அலகாகச் செயல்படுகிறது.

இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகத்துடன் இணைந்து ஆசிய அறக்கட்டளை நிறுவனமானது ஸூம் தளத்தின் மூலம் குழந்தைகளுக்கான மின்-கதைப் புத்தகங்கள் பற்றிய திட்டத்தை அறிமுகப்படுத்தியது.

செயற்பாடுகள்

ஆண்டு	அடைவு	அமைப்பு
2022	2022 ஆம் ஆண்டுக்கான மிகச் சிறந்த ஆய்வுக் கட்டுரைக்கான சிரேஷ்ட ஆய்வாளர் விருது சபரகமுவ பல்கலைக்கழக சிரேஷ்ட உதவி நூலகர் கலாநிதி மஞ்சுள விஜேவிக்ரம அவர்களுக்கு வழங்கப்பட்டது.	இலங்கைப் பல்கலைக்கழக நூலகர்கள் கூட்டமைப்பு

பங்குபற்றிய மனிதவள மேம்பாட்டுக்கான பயிலரங்குகள் / பயிற்சி நிகழ்வுகள் – 2022

பங்கேற்பாளர்	பயிலரங்கு/ பயிற்சி நிகழ்வு/ கருத்தரங்கு	திகதியும் நிகழ்விடமும்
T.N. ஞெய்சூரி/ நூலகர் H.P.K.N.D. சிரிவீர/ உதவிப் பதிவாளர், அனைத்துக் கல்வியாளர்கள், நிர்வாகி, நூலகத்தின் கல்விசாரா ஊழியர்கள்	பல்கலைக்கழக ஊழியர்கள் மத்தியில் தொற்று மூலம் பரவாத நோய்கள் குறித்த விழிப்புணர்வுப் பயிலரங்கு பல்கலைக்கழகத்தின் குறைபாடுகள் பற்றிய விடயங்களைக் கையாள்பவர்களு அந்தக் குறைபாடுகளை நிவர்த்திக்கும் கொள்கை, காத்திரமான இயக்கும் நடைமுறைகள் (SOP) என்பன பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சி	ஊழியர் மேம்பாட்டு மையம்
H.P.K.N.D. சிரிவீர /உதவிப் பதிவாளர்	நிதியியல் நடைமுறைகள் குறித்த பயிலரங்கு	ஊழியர் மேம்பாட்டு மையம்

3.2 கணினி விஞ்ஞானக் கற்கைகளுக்கான நிலையம்

3.2.1 அறிமுகம்

கணினிக் கற்கைகளுக்கான நிலையமானது இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகத்திற்குத் தகவல் தொழினுட்பம் தொடர்பான பல கல்விசார் மற்றும் தொழினுட்பச் சேவைகளை வழங்கிவருகிறது. இந்த நிலையம் கல்வி மற்றும் கல்விசாரா ஊழியர்களுக்கும் கல்விசார் துணை ஊழியர்களுக்கும் தொழினுட்பப் பாடத்திட்டத்தை வகுப்பதற்கு உதவுவதோடு, அத்துறைசார்ந்த பல்வேறு பயிற்சிகளையும் அளிப்பதோடு, பல்வேறு பீடங்களின் கற்கைகளை மேற்கொள்ளவும் அவற்றை மேற்பார்வையிடவும் பங்களிப்புச் செய்து வருகின்றது.

கணினிக் கற்கைகளுக்கான நிலையமானது முழுப் பல்கலைக்கழகச் சமூகத்திற்கும் பல்கலைக்கழக வலையகச் சேவை மற்றும் மின்னஞ்சல் வசதியை வழங்கி வருகிறது. கணினிக் கற்கைகளுக்கான நிலையமானது வளாகம் முழுவதற்கும் இணையதள மற்றும் வலையமைப்பு வசதிகள், பிற வலையமைப்புச் சேவைகளுக்கு நிகரான கற்றலுக்குரிய சூழல், மின்னியல் கற்றல் வசதி மற்றும் வன்பொருள், மென்பொருள் பராமரிப்புச் சேவைகள் ஆகிய சேவைகளை வழங்குகிறது.

3.2.2 வரலாறு

சபரகமுவ பல்கலைக்கழக கணினி மையத்தின் வரலாறானது 1991 இல் சபரகமுவ மாகாணத்தின் இணைந்த பல்கலைக்கழகக் கல்லூரி (AUC) திறக்கப்பட்ட காலத்திற்குப் பின்னோக்கிச் செல்கிறது. இது முதன்முதலில் சமனலவெவ நீர்மின்சக்தி திட்டத்திற்குச் சொந்தமான ஒரு குடியிருப்புக்கான கட்டிடத்தில் நிறுவப்பட்டதோடு, இப்போது இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகத்தின் D1-4 விடுதியில் அமைந்துள்ளது. ஆரம்பத்தில், இது 1Mb RAM, 40MB வன் வட்டுகளையும் (Hard disks) மற்றும் OKI 9-pin dot-matrix அச்சு இயந்திரத்தையும் கொண்ட 10 Tatung 286 கணினிகளையும் கொண்டிருந்தது. ஒன்றிணைந்த பல்கலைக்கழக கல்லூரியாக இருந்தபோது மறைந்த ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச, அவர்களால் இந்நிலையம் திறந்து வைக்கப்பட்டது.

ஒன்றிணைந்த பல்கலைக்கழகக் கல்லூரியானது ஆரம்ப ஆண்டுகளில் டிப்ளோமா கற்கை நெறிகளுக்கு மாணவர்களைச் சேர்த்ததுடன், கணக்கியல் மற்றும் நிதி, சுற்றுலா முகாமைத்துவ டிப்ளோமா மற்றும் ஆங்கிலத்தில் டிப்ளோமா போன்ற மூன்று கற்கை நெறிகளையும் நடாத்தியது. கணினி மையத்தால் வழங்கப்படும் கணினிக் கற்கைநெறிகளுக்கு ஏனைய அனைத்துக் கற்கை நெறிகளாலும் வழங்கப்படும் டிப்ளோமாவைப் பெறுவது கட்டாயமாகும்.

சில காலங்களுக்குப் பிறகு, போதைப்பொருட் பாவனையால் பாதிக்கப்பட்டவர்களிடமிருந்து வசூலிக்கப்பட்ட அபராதங் களிலிருந்து சமூகப் பணிகளுக்காக நன்கொடை வழங்கும் நிதித் திட்டத்தை ஆரம்பித்த பலங்கொட மாவட்ட நீதிபதியிடமிருந்து 15,000/= ரூபாவையும், "சிரமதான பிரசாரங்கள்" ஊடாக ஊழியர்கள், மாணவர்கள் மற்றும் கிராமவாசிகளின் உதவியுடன் தற்போதுள்ள கணினி மையக் கட்டிடத்தின் கட்டுமானப் பணிகளை ஆரம்பிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இறுதியாக, இந்த மையம் அரசாங்க நிதி உதவியுடன் பூர்த்தி செய்யப்பட்டது. சமனலவெவ திட்டத்திலிருந்து பெற்றுக் கொண்ட கட்டிடங்களுக்கு மேலதிகமாக இணைந்த பழைய பல்கலைக்கழகக் கல்லூரி கேட்போர் கூடத்துடன் ஒன்றாக இணைத்துக் கட்டப்பட்ட முதல் கட்டிடம் இதுவாகும்.

ஆரம்பத்தில் கணினி மையத்திற்கான உத்தியோகத்தர் குழுவில் ஒருவர் கணினி மையத்திற்கு விரிவுரைகள் மற்றும் செய்முறைகளை நடத்துவதற்காகக் கணினித் தொழினுட்பத்தில் பயிற்றுவிப்பாளராக நியமிக்கப்பட்டார். இதற்கிடையில், கணினி மையத்தின் பணிகளை விரிவுபடுத்தும் வகையில் மேலும் இரண்டு பயிற்றுவிப்பாளர்கள் நியமிக்கப்பட்டனர். மேலும், இது ஒன்றிணைந்த பல்கலைக்கழகக் கல்லூரி அமைப்பில் அங்கீகரிக்கப்பட்ட உத்தியோகத்தர்களைக் கொண்ட ஒரே நிலையம் என்பது குறிப்பிடத்தக்கது.

இணைந்த பல்கலைக்கழகக் கல்லூரியானது ஒரு தேசிய பல்கலைக்கழகமாக மேம்படுத்தப்பட்ட பின்னர் 1996 ஆம் ஆண்டில் இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகமாக மாற்றியமைக்கப்பட்டது. கணினி மையம் அதன் சேவைகளை பல்வேறு பட்டதாரிக் கற்கை நெறிகளுக்கு வழங்கத் தொடங்கியது. குறிப்பாக, தகவல் தொழினுட்பம் அல்லாத பீடங்களுக்கான தகவல் தொழினுட்பம் தொடர்பான பாடங்களுக்கான பாட வழிகாட்டிகளை வடிவமைப்பதன் மூலம் விரிவுரைகள் மற்றும் செய்முறை வகுப்புகளை நடத்தி தனது சேவைகளை வழங்கியது. மேலும், பல்கலைக்கழகத்திற்கான கணினிகள் மற்றும் கணினித் தொழினுட்பம் தொடர்பான ஒப்பந்த அடிப்படையிலான பிற உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கான ஆவணங்களைத் தயாரிப்பதற்கும், அவற்றை மதிப்பீடு செய்வதற்குமான தொழினுட்ப அறிவை வழங்கியதோடு, பல்கலைக்கழகத்தின் எழுதுவினைஞர்களுக்கு அவர்களின் அன்றாட வேலைகளில் தொழினுட்ப அறிவைத் திறம்படப் பயன்படுத்துவதற்கும், கல்விசார் ஊழியர்களுக்கு உதவுவதற்கும் முதுமாணிக் கற்கைகளுக்கான ஆய்வேடுகளைத் தயாரிப்பதற்கும் கற்பித்தல் கையேடுகளைத் தயாரிப்பதற்கும் தேவையான தொழினுட்ப அறிவை வழங்கிச் சேவையாற்றியது.

பல்கலைக்கழகத்தினதும் அதன் செயல்பாடுகளினதும் விரிவாக்கத்துடன், கணினி மையம், கணினிக் கற்கைகளுக்கான மையம் என மறுபெயரிடப்பட்டது. குறிப்பாக, முகாமைத்துவக் கற்கைகள் பீடம், சமூக விஞ்ஞானங்கள் மற்றும் மொழிகள் பீடம் என்பவற்றினால் மேற்கொள்ளப்படும் பட்டதாரிக் கற்கைகளோடு தொடர்பான பாடநெறிகளுக்குத் தேவையான உதவிகளைப் பரந்தளவில் வழங்க ஒரு பணிப்பாளரின் கீழ் அது மீண்டும் ஒழுங்கமைக்கப்பட்டது. அதன் சேவைகளை விரிவு படுத்துவதற்காகத் தற்போதுள்ள மையத்திற்கு அருகில் மற்றொரு கட்டிடம் அமைக்கப் பட்டது. அதேநேரத்தில் பல்கலைக்கழகத்தின் உள்ளக வலையமைப்பை LEARN வழியாக இணையத்துடன் இணைத்துள்ளதுடன், முழுப் பல்கலைக்கழகச் சமூகத்திற்கும் இணையம் மற்றும் வலையமைப்புச் சேவைகளை வழங்கவும் பராமரிக்கவும் ஆரம்பித்தது. சபரகமுவ பல்கலைக்கழக வலையத் தளத்தைத் தொடங்குதல் மற்றும் மின்கற்றல் சூழலை வழங்குதல் ஆகியவை மையத்தால் வழங்கப்பட்ட சேவைகளின் முக்கிய அம்சங்களாகும்.

அதேவேளை, கணினிக் கற்கைகள் மையம் வழங்கும் சேவைகளை வலுப்படுத்துவதற்காக, அதன் ஊழியர்களின் தொகையும் அதிகரிக்கப்பட்டுள்ளது. தற்போது, 2012 ஆம் ஆண்டு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் பட்டியலின் படி, கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஊழியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்:

3.2.3 நிரந்தர ஊழியர்

பணிப்பாளர் - திரு. R.L. தங்கல்ல
சிரேஷ்ட விரிவுரையாளர்- தரம் II/
பிரயோக விஞ்ஞான பீடம்

கல்விசார் ஊழியர் பற்றிய விபரம்

பெயர்	பதவிநிலை	மின்மடல் முகவரி
கலாநிதி R.V.S.P.K. ரணதுங்க	சிரேஷ்ட விரிவுரையாளர் (தரம் I)	spkr@ccs.sab.ac.lk
திரு. R.M.N.B. ரத்னாயக்க	சிரேஷ்ட விரிவுரையாளர் (தரம் I)	nevil@ccs.sab.ac.lk
கலாநிதி H.K. சாலிந்த பிரேமதாச	சிரேஷ்ட விரிவுரையாளர் (தரம் I)	salinda@ccs.sab.ac.lk
திரு. N.J. மல்ராஜ் சில்வா	விரிவுரையாளர்	malraj@ccs.sab.ac.lk
திரு. S. நிமிஷான்	விரிவுரையாளர் (தகுதிகாண்)	nimishan@ccs.sab.ac.lk

கல்விசார் உதவி ஊழியர் பற்றிய விபரம்

பெயர்	பதவிநிலை	மின்மடல் முகவரி	பணி அமர்த்திய இடம்
திரு. W.H.D. பிரேமவர்தன	CT பயிற்றுநர் (தரம்I)	ccwhd@ccs.sab.ac.lk	CCS/AGR
திரு. W.R.Y.S. சமரசேகர	CT பயிற்றுநர் (தரம்II)	yasantha@ccs.sab.ac.lk	CCS/SSL
செல்வி A.C. நாணயக்கார (கற்கைவிடுமுறையில்)	CT பயிற்றுநர் (தரம்II)	chethana@ccs.sab.ac.lk	CCS/SSL
திரு. H.M.M.A. ஹேரத்	CT பயிற்றுநர் (தரம்II)	mahesh@ccs.sab.ac.lk	CCS/MGT
திரு. A.C.P.K. சிரிவர்தன (கற்கைவிடுமுறையில்)	பயிற்றுநர் (தரம்II)	chaminda@geo.sab.ac.lk	CCS/AGRI
திருமதி J.D.U. இந்துமினி	பயிற்றுநர் (தரம்II)	indumini@ccs.sab.ac.lk	CCS/GEO/MGT
செல்வி K.T. தனஞ்சலி	பயிற்றுநர் (தரம்II)	dananjali@ccs.sab.ac.lk	CCS/SSL/MGT
திரு. E.S.A. குணசிங்ஹ	வலைதள முகாமைத்துவ உதவியாளர் (தரம்I)	suranjith@ccs.sab.ac.lk	CCS
திரு. S.A.S.K.J. பெரேரா	வலைதள முகாமைத்துவ உதவியாளர் (தரம்II)	sadeepa@ccs.sab.ac.lk	CCS
திரு. J.N.C. மல்லிகரத்ன	கணினி நிரலாளர் (தரம்II)	chamara@ccs.sab.ac.lk	CCS
திரு. JNC மல்லிகரத்ன	கணினி நிரலாளர் (தரம்II)	chamara@ccs.sab.ac.lk	CCS
செல்வி J.M.L.R.P. ஜயசிங்ஹ	தற்காலிகச் செயல்முறை விளக்குநர்	hiru.0316@gmail.com	CCS/SSL
திருமதி H.K.N. உதயங்கனி	தற்காலிகச் செயல்முறை விளக்குநர்	niroshima@ccs.sab.ac.lk	CCS/AGRI

சமூக விஞ்ஞானங்கள் மற்றும் மொழிகள் பீடக் கணினி மையத்தின் ஒருங்கிணைப்பராக சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. RMNP ரத்நாயக்க அவர்களும், விவசாய விஞ்ஞான பீடத்திற்கான பயிற்றுநர் மற்றும் ஒருங்கிணைப்பாளராகத் திரு. W. H. D. பிரேமவர்தன அவர்களும், முகாமைத்துவக் கற்கைகள் பீடத்தின் கணினி மையத்தின் ஒருங்கிணைப்பாளராகத் திரு. HMMA ஹேரத் அவர்களும் பணியாற்றுகின்றனர். அந்தந்த பீட நிர்வாக சபைகளில் பங்கேற்கும் ஒருங்கிணைப்பாளர்கள், பீடங்களுக்குத் தேவையான மனித வளங்கள் மற்றும் தகவல் தொழினுட்பம் தொடர்பான பிற சேவைகளை ஒதுக்கீடு செய்யுமுகமாக கணினிக் கற்கைகள் மையத்தின் பணிப்பாளருடன் ஒருங்கிணைக்கப்படுவார்கள்.

விவசாய விஞ்ஞான பீடம், வரைபட(கேத்திர)கணித பீடம், சமூக விஞ்ஞானங்கள் மற்றும் மொழிகள் பீடம், முகாமைத்துவக் கற்கைகள் பீடம் ஆகிய நான்கு பீடங்களினதும் வேண்டுகோள்களுக்கு அமைவாகத் தகவல் தொழினுட்பவியல் துறைசார்ந்த விரிவுரைகளையும் நடைமுறைப் பயிற்சிகளையும் வழங்குமுகமாகப் பயிற்றுநர்களும் செயல்முறை விளக்குநர்களும் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

வலையமைப்பு உதவி முகாமையாளர்களாகத் திரு. E.S.A குணசிங்ஹ, திரு. S.A.S.K.J பெரேரா ஆகியோர் பல்கலைக்கழக LAN இன் செயல்திறனைப் பேணி, அதனை மேம்படுத்தும் பணிக்குப் பொறுப்பாளர்களாக உள்ளனர். அத்துடன், பணிப்பாளரின் மேற்பார்வையின்கீழ், தேவைப்படும்போது புதிய வலையமைப்புச் சேவைகளை செயல்படுத்தும் பொறுப்பிலும் அவர்கள் ஈடுபடுவர்.

கணினி நிரலாளர் என்ற வகையில், திரு. JNC மல்லிகரத்னா பல்கலைக்கழக இணையதளப் பராமரிப்பு, அதன் மேம்பாடு, கட்டணங்களினூடான நுழைவினைக் கையாளுதல் முதலான பொறுப்புகளையும் பணிப்பாளரால் கோரப்படும் நிரலாக்கம் தொடர்பான பிற பொறுப்புகளையும் கையாளுவார்.

கல்விசாரா ஊழியர் பற்றிய விபரம்:

பெயர்	பதவிநிலை	மின்மடல் முகவரி	பணி நியமனம்	பணியின் தன்மையும் பணிப் பொறுப்பிடமும்
திரு.P.S. பிரேமலால்	கணினிச் செயலி உதவியாளர் (தரம்.I)	sanjewa@ccs.sab.ac.lk	CCS	SUSL/மென்பொருட் பராமரிப்பு
திரு.H.J.C. செனரத்	தொழினுட்ப அலுவலர் (தரம் II)	hjcsenarath@gmail.com	CCS	SUSL/வன்பொருட் பராமரிப்பு
திரு. NVM சத்துரங்க	தொழினுட்ப அலுவலர் (தரம்III)	nvmchathuranga@adm.sab.ac.lk	CCS	SUSL/ வன்பொருட் பராமரிப்பு
திரு. PKIS பிட்டதெனிய	தொழினுட்ப அலுவலர் (தரம் III)	pkispitadeniya@adm.sab.ac.lk	CCS	SUSL/ வன்பொருட் பராமரிப்பு
திரு.D.A. சத்துரங்க	ஊழியர் (தரம் III)	asithachathuranga5@gmail.com	CCS	CCS
திரு. G.A.R. இந்திக்க	ஆய்வுகூட உதவியாளர் (கடைநிலை)	ranilindika2244@gmail.com	CCS	CCS

முழுப் பல்கலைக்கழகத்திலும் உள்ள மையங்கள் மற்றும் அலுவலகங்களுக்கு மேலதிகமாக ஒவ்வொரு பீடத்திலும் உள்ள கணினிகள் மற்றும் அதனோடு தொடர்புடைய துணைக்கருவிகளின் மென்பொருள், வன்பொருட் சிக்கல்களைத் தீர்ப்பதற்காகக் கணினிச் செயலிகளுக்கான உதவியாளரும் தொழினுட்ப அலுவலர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். திரு. சஞ்சீவ பிரேமலால், திரு. ஜனக செனரத் ஆகியோர் தற்போது அவ்வாறான பணிகளில் ஈடுபட்டு வருவதுடன், உபகரணங்களின் குறைபாடுகள் குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் அறிக்கை சமர்ப்பித்து, அவற்றைச் சீர்செய்வதற்கான தீர்மானங்களையும் பெற்றுக்கொள்கின்றார்.

3.2.4 தற்போதைய நிலை

வெவ்வேறு பீடங்களினதும் வேண்டுகோளுக்கு அமைவாக, மையத்தினால் வழங்கப்படும் கல்வியியற் சேவைகள் முக்கியமாக சமூக விஞ்ஞானங்கள் மற்றும் மொழிகள் பீடம், முகாமைத்துவக் கற்கைகள் பீடம், விவசாய விஞ்ஞான பீடம் ஆகியவற்றிற்கு வழங்கப்படுத்தப்படுகின்றன.

அத்துடன், முழுப் பல்கலைக்கழகச் சமூகத்திற்கும் இணையம் மற்றும் இணைய சேவை போன்ற பிற தகவல் தொழினுட்பச் சேவைகள் வழங்கப்படுகின்றன. அதற்கு மேலதிகமாக, கணினி மையமானது நூலக அமைப்பு, ஐபி தொலைபேசி அமைப்பு, ஐபி கேமரா அமைப்பு, வயர்லெஸ் வலையமைப்புகள் போன்ற பிற அமைப்பினரால் நிறுவப்பட்ட வலையமைப்புகளில் இயங்கும் சேவைகளுக்கான பராமரிப்பு உதவிகளையும் வழங்குகிறது.

தற்போது பெரும்பாலான பீடங்கள் தகவல் தொழினுட்பவியலுடன் தொடர்புடைய கற்கைநெறிகளை நடாத்தும் பொருட்டுத் தத்தமது வளாகங்களுக்குள்ளேயே தமக்கான கணினி மையங்களை நிறுவியுள்ளன. எனவே, அப்பீடங்கள் இதற்கு மேலும் தத்தமது பாடத்திட்டங்களை நடாத்துவதற்கு CCS இற்கான கட்டிடங்களைப் பயன்படுத்த வேண்டிய அவசியமில்லை. அதற்குப் பதிலாகக் கணினி மையத்தால் வழங்கப்படும் சேவைகளைக் கல்விசாரா மற்றும் நிர்வாக ஊழியர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்துதல், தகவல் தொழினுட்பம் தொடர்பான கல்விசார் ஊழியர்களினுடைய தேவைகளைப் பூர்த்தி செய்தல் என்றவாறு பரவலாக வழங்குவதற்கு அவை பயன்படுத்தப்படலாம்.

இந்த ஐந்து கணினி மையங்களிலும் உள்ள கணினி தொடர்பான அனைத்துக் கல்வியியற் செயற்பாடுகளையும் CCS மேற்பார்வை செய்கிறது. அத்துடன், வளாகம் அளாவியுள்ள வலையமைப்பின் வலையகம், மின்-கற்கை, DNS, மின்னஞ்சல், டிஜிட்டல் நூலக அமைப்பு, மாணவர் தகவல் சேவை மற்றும் வலையமைப்புச் சீராக்கப் பணிகள் உள்ளிட்ட அனைத்தையும் பராமரித்து வருகிறது.

2013 ஆம் ஆண்டில், இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் ஒருங்கிணைந்த நிதியில் இருந்தான ஒதுக்கீடுகளினால் உட்கட்டமைப்பு வசதிகள், தகவல் தொழினுட்பவியலுடன் தொடர்புடைய கல்வித் திட்டங்கள் என்பன மேலும் மேம்படுத்தப்பட்டுள்ளன. இந்த நிதியின் மூலம், பல்கலைக்கழகம் இணைய அலைவரிசையை 20Mbps இலிருந்து 100Mbps ஆக அதிகரிக்கவும், அனைத்துக் கல்விசார் மற்றும் நிர்வாக ஊழியர்களினதும் பணியிடங்களில் கணினி வசதிகளின் அளவினை அதிகரிக்கவும் முடிந்தது.

பல்கலைக்கழகத்தின் இணையப் பயன்பாட்டின் அதிகத் தேவை காரணமாக, இணைய வழங்குநர்கள் அலைவரிசையை 2018 இல் 225 Mbps வரை அதிகரிக்குமாறு கோரியுள்ளனர். இது, SLT உடன் இணைந்து டயலொக் சேவையின் 100Mbps காப்புப்பிரதி இணைப்புடன் 700 Mbps வரை அதிகரிக்கப்பட்டுள்ளது. அதன்படி, ஃபைபர் இணைப்பாதாரத்தின் உள்ளக அலைவரிசையை அதிகரிக்குமாறு கணினி மையம் முன்மொழிந்தது. அத்துடன், தற்போது பல்கலைக்கழக இணைய இணைப்புகள் 600Mbps அலைவரிசையுடன் இயங்குகின்றன.

பல்கலைக்கழகத்தினுள் மாணவர்களுக்குச் சிறந்த கற்றல் சூழலை வழங்குவதற்காக இலவச Wi-Fi பகுதிகள் செயல்படுத்தப்பட்டுள்ளன. அதன்படி, அனைத்துப் பீடங்களும் வைஃபை வசதி கொண்டவையாய் மாற்றப்பட்டுள்ளன. மேலும், கணினிக் கற்கை

மையமானது கல்வி அமைச்சுடன் இணைந்து மாணவர் விடுதிகள், மாணவர்களின் கற்கைப் பிரதேசங்களிலும் Wi-Fi வலயங்களை அதிகரிக்குமுகமாக இலவச Wi-Fi செயற்திட்டத்தினைத் தொடங்கியுள்ளது.

கொவிட்-19 பெருந்தொற்றுப் பரவலடைந்திருந்த சூழ்நிலையில், பல்கலைக்கழக அமைப்பினுள் அனைத்துவிதமான கல்விச் செயற்பாடுகள், மாணவர்களின் மதிப்பீட்டுச் செயல்முறைகள் உள்ளிட்ட அனைத்துவிதமான பல்கலைக்கழகச் செயற்பாடுகளையும் முழுமையாக இணையவழியூடே நடத்த வேண்டியிருந்தது.

எனவே, கணினிக் கற்கைகளுக்கான மையமானது, உட்சபட்ச வினைத்திறனுடன் அந்தச் செயற்பாடுகளை ஒருங்கிணைத்து வழங்க வேண்டியிருந்தது.

VLE (Virtual Learning Environment) எனப்படும் மெய்ந்நிகர் கற்கைச் சூழமைவைத் தவிர, பட்டதாரிக் கற்கைகள் பீடம் மற்றும் திறந்த மற்றும் தொலைக் கற்றல் மையம் உட்பட ஒவ்வொரு பீடத்திலும் பரீட்சைத் தேவைகளுக்காகத் தனித்தனி VLE ஆகத் தனி சேவையகம் கொள்வனவு செய்யப்பட்டு நிறுவப்பட்டுள்ளது.

ஒவ்வொரு கல்வியாளருக்கும் தெரிவு செய்யப்பட்ட ஏனைய ஊழியர்களுக்குமான இணையவழிச் செயற்பாடுகளுக்கான தனித்தனி ஸூம் (கூட்டங்கள், உரையாடல்கள், ஃபோன், வலையரங்கம் உள்ளிட்ட இணையவழி நிகழ்வுகள் இடம்பெறும் ஸூம் கணக்கின் பாதுகாப்பு, நம்பத்தன்மை வாய்ந்த காணொளி இயங்குதளக்) கணக்குகள் உருவாக்கப்பட்டுள்ளன.

பல்கலைக்கழகக் கல்வியாளர்களின் வேண்டுகோளுக்கு அமைவாக Turnitin (Turnitin எனும் அமெரிக்க நிறுவனத்தினால் நடத்தப்படும் புலமைத் திருட்டைக் கண்டறியும் இணையவழிச் சேவையாகும்) கணக்குகள் உருவாக்கப்பட்டுள்ளன.

பல்கலைக்கழக டிஜிட்டல் களஞ்சியம் செயல்படுத்தப்பட்டுள்ளதோடு, அதில் டிஜிட்டல் பயன்பாட்டிற்காகச் சுமார் 1500 க்கும் மேற்பட்ட கட்டுரைகள் சேமிக்கப்பட்டுள்ளன.

CCS உதவியகம்

இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் அனைத்துவிதமான தகவல் தொழினுட்பம்சார் தேவைகள் மற்றும் சிக்கல்கள் தொடர்பில் நாடப்பட வேண்டிய முதற்புள்ளியாக CCS உதவி மையம் அமைந்துள்ளது. இது மாணவர்கள், கல்வியாளர்கள், கல்விசாரா ஊழியர்கள், நிர்வாகப் பணியாளர்கள் போன்றவர்களினுடைய மின்மடல்கள் உள்ளிட்டு, அன்றாடத் தகவல் தொழினுட்பம் தொடர்பான விஷயங்களில் முன்வைக்கப்படும் கோரிக்கைகளை நிறைவேற்றுகிறது.

CCS மாணவர் உதவியகம்

கணினிக் கற்கை மையத்தின் (CCS) மாணவர் உதவி மையம் என்பது CCS ஆல் பணியமர்த்தப்பட்ட தொழினுட்பப் பணியாளர்களைக் கொண்டு அமைந்துள்ளது. இவர்கள் ஒவ்வொரு பீடத்திலும் அமைந்திருக்கும் கணினி மையங்களில் பயனர்களுக்கு ஏற்படும் கணினி தொடர்பான சிக்கல்களைத் தீர்க்க உதவுவதற்காக பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

பணிகள்

கணினிக் கற்கை மையத்தின் (CCS) சேவை மைய ஊழியர்கள் பல்கலைக்கழகத்தில் உள்ள அனைத்துவிதமான பொறியியல், தொழினுட்ப, மின்னணு, மின் மற்றும் கணினிப் பழுதுபார்ப்பு, சரிசெய்தல் ஆகிய பணிகளைத் திறம்படக் கையாளுகின்றனர். இதன் மூலம் கல்விச் செயற்பாடுகள் மட்டுமன்றி நிர்வாகச் செயற்பாடுகள் உள்ளிட்ட அனைத்துவிதமான பல்கலைக்கழகச் செயற்பாடுகளையும் மிகவும் சீராகவும் திறம்படவும் மேற்கொள்ளக்கூடியதாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

கணினிக் கற்கை மையத்தினால் வழங்கப்படும் முதன்மைச் சேவைகள்:

கல்விசார் சேவைகளுக்கும் கல்வி உதவிச் சேவைகளுக்கும் மேலதிகமாக கணினிக் கற்கை மையமானது பல்கலைக்கழகத்திற்குப் பின்வரும் சேவைகளை வழங்கிவருகிறது:

- கணினி அமைப்புமுறைகளைப் பாதுகாத்துப் பராமரிக்கும் வகையிலான தொழினுட்ப உதவி
- வலையமைப்பு உள்ளீடு, கட்டமைப்புச் சீராய்வு, மறுசீரமைப்பு
- இலத்திரனியல், மின்பொருள், அலைபேசிப் பராமரிப்பு
- விரிவுரையாளர்களுக்கும், சிறப்பு நிகழ்வுகளுக்கும் தொழினுட்ப உதவியளித்தல், கேட்போர்கூட நிகவுகளையும் கணினிச் சேவை மையப் பயிற்சி நிகழ்வுகளையும் திறன்படக் கையாளுதல்

பணிநிலை	விவரணம்
இயக்குதள அமைப்புக்களை மீளுள்ளீடு செய்தல்	கணினியின் இயங்குதளத்தை மீண்டும் நிறுவுதல், அந்த இயக்க முறைமைகளுக்கான சமீபத்திய பாதுகாப்பு இணைப்புகள் மற்றும் பொருத்தமான சகலவித வன்பொருள் இயக்கிகளும் ஒரே சேவையாக ஒருங்கிணைக்கப்பட்டுள்ளமை
மென்பொருள் உள்ளீடு	அனைத்துவிதமான கல்விச் செயற்திட்டங்களுக்கும் தேவையான அனைத்து மென்பொருட்களையும் வழங்கி நிறுவுவதோடு, கணினி மையங்களில் உள்ள கணினிகளுக்கு மட்டுமின்றி விரிவுரையாளர்கள், நிர்வாக ஊழியர்கள், கல்விசாரா ஊழியர்கள், மாணவர்கள் அடங்கலாக அனைத்துத் தனிப்பட்ட மடிக் கணினிகளுக்கும் அவற்றை உள்ளீடு செய்துள்ளமை
வைரஸ், மென்பொருள், ஆட்வெயார் மென் பொருள் அகற்றுகை	பொதுவாக ஆட்வெயார், ஸ்பை- எனக் குறிப்பிடப்படும் கணினியின் செயல்திறன், செயல்பாடுகளை பாதிக்கக்கூடிய தீங்கிழைக்கக் கூடியதும் பல்கலைக்கழக வலையமைப்பின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையக் கூடியதுமான அபாயத்தை ஏற்படுத்தும் எண்மக் குறியீடுகளையும் வைரஸ்களையும் அகற்றுதல்
வலையமைப்பு இணைப்பாக்கம்/ சிக்கல் சீரமைப்பு	உள்ளமைவு அமைப்புகள், மென்பொருள் இயக்கிகள் அல்லது வைரஸ்கள் மற்றும் மின்னல், மின் சிதைவுகள் போன்ற வெளிப்புறப் பேரழிவுகளின் காரணமாக பல்கலைக்கழகச் சமூகத்தின் இணைய அணுகலைக் கட்டுப்படுத்தும் கம்பி அல்லது வயர்லெஸ்

	வலையமைப்புச் சிக்கல்களைச் சீர்செய்தல்
செயலிகளைச் சீரமைத்தல் (மைக்ரோசாப்ட் ஒபீஸ்)	(மைக்ரோசாப்ட் ஒபீஸ்) உடைய தொடர்ச்சியற்றதும் சிக்கலானதுமான இயங்குகையைச் சரிசெய்யுமுகமாக செயலிகளைச் சீரமைத்தல்

பல்கலைக்கழக வலைதள மடல்

கணினிக் கற்கை மையமானது xxx.sab.ac.lk எனும் பல்கலைக்கழக இணையதளவெளியின் மூலம் அனைத்துக் கல்விவியாளர்கள், நிர்வாக ஊழியர்கள் மற்றும் அனைத்து மாணவர்களுக்கும் வரம்பற்ற சேமிப்பகத் திறன் கொண்ட மின்னஞ்சல் வசதியை வழங்குகிறது.

SUSL மடல்

கணினிக் கற்கை மையமானது மைக்ரோசொஃப்ட் நிறுவனத்துடன் இணைந்து பல்கலைக்கழகத்தின்அனைத்துக் கல்விவியாளர்கள், நிர்வாக ஊழியர்கள் மற்றும் அனைத்து மாணவர்களுக்கும் ms.sab.ac.lk எனும் இணையதளவெளியின் மூலம் ஏனைய மின்மடல் வசதிகளை 1 ஜிபி அளவிலான சேமிப்பக ஒதுக்கீட்டினூடே வழங்கிவருகின்றது.

மெய்ந்நிகர்க் கற்கைச் சூழமைவு (VLE)

கணினிக் கற்கை மையமானது பல்கலைக்கழகத்தில் உள்ள அனைத்துக் கல்வியாளர்களுக்கும் மாணவர்களுக்கும் விரிவுரைக்கான குறிப்பு ஆவணங்களைப் பகிர்ந்து கொள்ளல், கணிப்பீடுகளை நடத்துதல் என்பன போன்ற நடவடிக்கைகளுக்கு ஏற்றவாறான மின்-கற்றல் மற்றும் மெய்நிகர் கற்றல் முகாமைத்துவத்துக்குத் தேவையான உள்கட்டமைப்பு வசதிகளை வழங்குகிறது.

மெய்ந்நிகர்க் கற்கைச் சூழமைவுப் பரீட்சைகள் (EVLE)

கணினிக் கற்கை மையமானது மெய்ந்நிகர் கற்கைச் சூழமைவில் இணையவழிப் பரீட்சைகளை நடாத்துவதற்கு ஏதுவான முறையில் பல்கலைக்கழகத்தில் உள்ள ஒவ்வொரு பீடத்திலும் தனியான சேவையகத்தினை நிறுவியுள்ளது.

இணைய ஒளிபரப்பு

கணினிக் கற்கை மையமானது பல்கலைக்கழகத்தில் இடம்பெறும் கருத்தரங்குகள், பட்டமளிப்பு விழாக்கள், பரிசளிப்பு விழாக்கள் முதலான விசேட நிகழ்வுகளை இணையவழி ஒளிபரப்புவதற்கான வசதிகளை வழங்குகின்றது. மேலும், அவற்றின் போது தேவையான (HD கெமரா, வலையமைப்புக் கேபிள்கள் முதலான) உபகரணங்களையும் அது வழங்கி உதவுகின்றது.

ஸூம் கணக்குகள்

பல்கலைக்கழகத்தின் அனைத்துக் கல்வியாளருக்கும் தெரிவு செய்யப்பட்ட ஏனைய ஊழியர்களுக்குமான ஸூம் கணக்குகள் தொடங்கப்பட்டுள்ளன.

டர்னிட் இன் (Turnitin) கணக்குகள்

பல்கலைக்கழகக் கல்வியாளர்களின் வேண்டுகோளுக்கு அமைவாக டர்னிட் இன் எனப்படும் புலமைத் திருட்டினைக் கண்டறியும் கணக்குகள் உருவாக்கப்பட்டுள்ளன.

பல்கலைக்கழகின் அகன்ற வலையமைப்பு

எங்கள் வளாகம் அளாவியுள்ள உள்ளூர் பிரதேச வலையமைப்பானது கணினிக் கற்கைகள் மையத்தால் நடாத்தப்பட்டுப் பராமரிக்கப் படுகிறது. இது சர்வர் அறையில் உள்ள எங்கள் வலையமைப்பு உதவி முகாமையாளர்களால் நிர்வகிக்கப்படுகிறது. கணினிச் சேவையக (server) அறையில் CISCO ரவுட்டர்கள், ப்ரொக்ஸி சேவையகம், DNS சர்வர், CISCO சுவிட்சுகள், வெப் சர்வர், மின் கற்கைச் சேவையகம், வைரஸ் கார்டு சேவையகம் (மையப்படுத்தப்பட்ட சர்வர்) போன்றவை உள்ளன. 2014 ஆம் ஆண்டில் ப்ரொக்ஸி, DNS மற்றும் மின் கற்கைச் சேவையகம் ஆகிய மூன்று சேவையகங்களை மேம்படுத்துவதன் மூலம் வலையமைப்புச் செயல்பாடுகள், மின் கற்றல் அமைப்பு என்பனவற்றின் செயல்திறன் அதிகரிக்கப் பட்டுள்ளது. தற்போதுள்ள கணினி ஆய்வகத்திலிருந்து சேவையக அறையைப் பிரித்துப் பாகப்படுத்தியதன் மூலம், மனிதப் பாதுகாப்பு மற்றும் சேவையகங்களின் இலகுப் பராமரிப்பு ஆகியவை உறுதி செய்யப்பட்டுள்ளன. 20KVA தயார்நிலை ஜெனரேட்டர் மற்றும் நான்கு 2KVA UPS அமைப்புகளைப் பயன்படுத்தி மாற்று மின் உற்பத்தி அமைப்பை இயக்குவதன் மூலம், ஒரு நாளின் 24 மணி நேரமும் வாரத்தில் 7 நாட்களும் வலையமைப்பின் செயல்பாடுகள் தொழிற்படுவது உறுதி செய்யப்பட்டுள்ளது.

எட்டுப் பீடங்களும் தற்போது ஃபைபர் ஆப்டிக் மூலாதார இணைப்புடன் ஒன்றிணைக்கப்பட்டுள்ளன என்பதோடு, அடுத்த சில ஆண்டுகளில் இந்த மூலாதார இணைப்பினை மேம்படுத்தத் தயாராகவும் உள்ளன. தற்போது எங்களின் பயன்படுபொருள் இணைய அலைவரிசை 600Mbps ஆக உள்ளதோடு, அதன் பௌதீக இணைப்பானது 100Mbps அலைவரிசையைக் கையாளும் திறன் கொண்டதாகவும் அமைந்துள்ளது.

2022 ஆம் ஆண்டுக்கான இலக்குகள்:

- பணி இலகு கருதி முழுப் பல்கலைக்கழகத்திற்குமாகப் புதிய தொழில்நுட்ப அதிகாரிகளை நியமித்தல்
- SUSL இன் இணையவழிக் கொடுப்பனவுகளுக்கான கட்டண நுழைவாயிலை ஒருங்கிணைத்தல்
- சேவையகத்திற்குத் தேவையான வன்பொருள் மற்றும் வலையமைப்புப் பராமரிப்புக்கான கருவிகளை வாங்குதல்
- அருகிலுள்ள கிராமப்புற பள்ளிகளுக்குக் கணினி பழுதுபார்க்கும் சேவைகளை வழங்குதல்.
- SUSL இன் அனைத்து இணையவழி அமைப்புகளுக்கும் தேவையான சேவையக வெளியினைத் தயார் செய்து, ஒதுக்கீடு செய்தலும் கட்டமைத்தலும்

2022 ஆம் ஆண்டில் அடையப்பெற்ற இலக்குகள்:

- பல்கலைக்கழகத்தின் பல்வேறு அலுவலகங்கள் மற்றும் கற்கைத் துறைகளில் மென்பொருள், வன்பொருள் மற்றும் வலையமைப்புத் தொடர்பான பணிகளைச் செய்யக்கூடிய வகையில் புதிதாகப் பணியமர்த்தப்பட்ட தொழினுட்ப அதிகாரிகளுக்கு 2 மாதப் பயிற்சி அளிக்கப்பட்டது.

- SUSL இணையத்தளத்திற்கான 2வது கட்டண நுழைவாயிலாக இலங்கை வங்கியின் கட்டண நுழைவாயில் கட்டமைக்கப்பட்டு ஒருங்கிணைக்கப்பட்டது.

- கிராமப்புறப் பள்ளிக்கூடங்களுக்குக் கணினி பழுதுபார்க்கும் சேவைகள் வழங்கப்பட்டுள்ளன.

- பல்கலைக்கழகத்தினால் புறமொதுக்கப்பட்ட சுமார் 35 கணினிகள் முழுமையாகப் பழுதுபார்க்கப்பட்ட பிறகு கிராமப்புறப் பள்ளிக்கூடங்களுக்கு வழங்கப்பட்டன.

- 2021 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட மாணவர் வைஃபை திட்டத்தின் உள்ளக வலையமைப்பு இணைப்பு நிறைவுசெய்யப்பட்டுள்ளது.

3.3 உடற்கல்வித் துறை

3.3.1 நோக்கு

இலங்கையின் தலைவிதியை நிர்ணயிக்கும் ஆற்றல்மிக்க தலைவர்களை, தேசத்தைக் கட்டியெழுப்புபவர்களை உருவாக்கும், சர்வதேச ரீதியாக உயர்கல்வியில் சிறந்து விளங்கும் மையமாக அமைந்திருத்தல்.

இலக்கு

இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் உடற்கல்வித் துறையானது பல்கலைக்கழகச் சமூகத்தின் விளையாட்டுத் திறன்களை மேம்படுத்துவதனையும் செழுமைப்படுத்துவதனையும், குறிப்பாக ஆண்களையும் பெண்களையும் தேசிய மற்றும் சர்வதேசப் போட்டிகள் மற்றும் சுற்றுப்போட்டிகளுக்காகத் தயார்படுத்துவதையும் இலக்காகக் கொண்டுள்ளது. அத்துடன், விளையாட்டுத் துறையுடன் தொடர்புடைய தொழில்களுக்காக ஆண்களையும் பெண்களையும் தயார்படுத்தும் வகையிலான அறிவுறுத்தல்களையும் பயிற்சிகளையும் வழங்கி, அத்துறைசார் ஆய்வு முயற்சிகளிலும் ஈடுபடுத்தும் பாடநெறிகள் மூலம் தேசத்திற்கும் உலகத்திற்கும் சேவை செய்வதற்கும் சேவை செய்வதனையும் தனது இலக்காக வகுத்துக் கொண்டுள்ளது.

3.3.2 ஊழியர்கள்

பணிப்பாளர்:	திரு. W.A. லலித் ரோஹன
பயிற்றுநர்:	திருமதி B.K. சமந்த்தா பிரின்ஸி லலனி
	திரு. G.S.K. போபிட்டிய (தற்காலிகம்)
	திரு.P.D.D.I. குணதிலக
	திரு. A.R.K.P. ராஜமந்த்ரி
முகாமைத்துவ உதவியாளர்:	திருமதி R.A. பாக்யா நிரஞ்சலி
	பிரசங்கிகா ரணவீர
நீச்சல் தடாக ஊழியர்:	பதவி வெற்றிடம் உள்ளது
மைதான உதவியாளர்:	திரு. E.B.H.P. ஹேவகே
	திரு. N.A.J.S. சமரதுங்க
	திரு. K.M.C. உதய குமார
பணி உதவி:	திரு. P.R. நந்தசேன
	செல்வி W.S. கோஷிலா

3.3.3 வருடாந்த நிகழ்ச்சித்திட்டம் 2022

2022 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்டிருந்த செயற்பாடுகள் பின்வருமாறு:

மாதம்	திட்டமிடப்பட்டிருந்த நிகழ்ச்சி	எதிர்பார்க்கை நிகழ்விடம்
ஜனவரி	பயிற்சி அமர்வுகள்	SUSL
	பயிற்சிப் போட்டிகள் (அனைத்துவகை விளையாட்டுகளுக்குமானது)	உறுதிசெய்யப்படவில்லை
	அனைத்துவகை விளையாட்டுகளுக்குமான பயிற்சி அமர்வுகள்	உறுதிசெய்யப்படவில்லை
	பயிற்சிப் பாசறைகள் (அனைத்துவகை விளையாட்டுகளுக்குமானது)	உறுதிசெய்யப்படவில்லை
	மேல்நிலை தேசிய கூடைப்பந்தாட்டமும் ஹொக்கி விளையாட்டுப் போட்டியும்	உறுதிசெய்யப்படவில்லை
	உலகப் பல்கலைக்கழக ஒட்டப்பந்தய சாம்பியன்ஷிப் போட்டிகளுக்கான தெரிவுப் போட்டி	பேராதெனிய
	அழைப்பின்பேரில் நிகழும் பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டிகள் மற்றும் ஏனைய போட்டிகள் (ஒழுங்கமைத்தலும் பங்கேற்றலும்)	உறுதிசெய்யப்படவில்லை
	அனைத்துவகை விளையாட்டுகளுக்குமான நட்பார்ந்த போட்டிகள்	உறுதிசெய்யப்படவில்லை
	புதுமுக மாணவர் விளையாட்டுப் போட்டி	SUSL
	SLUSA கூட்டம்	கொழும்புப் பல்கலைக்கழகம்
	பல்கலைக்கழகங்களுக்கிடையிலான பாரந்தூக்கும் போட்டி (பெண்கள்)	SUSL
	அழைப்பின்பேரில் நிகழும் சர்வதேச சதுரங்கப் (செஸ்) போட்டி	SUSL
	'செவன்ஸ்' விளையாட்டுப் போட்டி	ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் /COL/ MOR
	விளையாட்டு ஆலோசனைகளுக்கான நிர்வாகக் கூட்டம்	SUSL
பெப்ரவரி	அனைத்துவருட மாணவர் அணிகளுக்கிடையிலான போட்டிகள் (அனைத்துவகை விளையாட்டுகளுக்குமானது)	உறுதிசெய்யப்படவில்லை
	பீடங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டி	SUSL
	பயிற்சி அமர்வுகள். (அனைத்துவகை விளையாட்டுகளுக்குமானது)	SUSL
	புதுமுக மாணவர் விளையாட்டுப் போட்டி	SUSL
	அணித்தலைவர் மற்றும் உபதலைவருக்கான பயிலரங்கு	உறுதிசெய்யப்படவில்லை
	அழைப்பின்பேரில் நிகழும் பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டிகள் மற்றும் ஏனைய போட்டிகள் (ஒழுங்கமைத்தலும் பங்கேற்றலும்)	உறுதிசெய்யப்படவில்லை
	நட்பார்ந்த போட்டிகள் (அனைத்துவகை விளையாட்டுகளுக்குமானது)	உறுதிசெய்யப்படவில்லை

	உடல்வலுச் சோதனைச் செயல்முறை	SUSL
	பயிற்சிப் பாசறைகள் (அனைத்துவகை விளையாட்டுகளுக்குமானது)	உறுதிசெய்யப்படவில்லை
	அழைப்பின்பேரில் நிகழும் போட்டிகளை ஒழுங்கமைத்தல் (அனைத்துவகை விளையாட்டுகளுக்குமானது)	உறுதிசெய்யப்படவில்லை
	GS கூட்டம்	Balangoda
	பிரதேச விளையாட்டுப் போட்டி	உறுதிசெய்யப்படவில்லை
	ஊவா Vs சபரா பல்கலைக்கழக மாபெரும் போட்டி (ரக்பி)	உறுதிசெய்யப்படவில்லை
	கராத்தே தரநிர்ணயப் பரீட்சை	SUSL
	SLUSA கூட்டம்	கொழும்புப் பல்கலைக்கழகம்
	விளையாட்டு ஆலோசனைகளுக்கான நிர்வாகக் கூட்டம்	SUSL

மாதம்	திட்டமிடப்பட்டிருந்த நிகழ்ச்சி	எதிர்பார்க்கை நிகழ்விடம்
மார்ச்	பயிற்சி அமர்வுகள்.	SUSL
	பீடங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டி	SUSL
	மாவட்ட விளையாட்டுப் போட்டி	இரத்தினபுரி
	பயிற்சிப் பாசறைகள் (அனைத்துவகை விளையாட்டுகளுக்குமானது)	உறுதிசெய்யப்படவில்லை
	நட்பார்ந்த போட்டிகள் (அனைத்துவகை விளையாட்டுகளுக்குமானது)	உறுதிசெய்யப்படவில்லை
	அழைப்பின்பேரில் நிகழும் திறந்த மற்றும் பாடசாலை மட்ட சதுரங்கப் போட்டி	SUSL
	மாணவர்க்கிடையிலான தரநிர்ணய விளையாட்டுப் போட்டி	SUSL
	நாடுகளுக்கிடையிலான உலகப் பல்கலைக்கழக சாம்பியன்ஷிப் போட்டி	உறுதிசெய்யப்படவில்லை
	ஆசியப் பல்கலைக்கழக ஹொக்கி போட்டி	உறுதிசெய்யப்படவில்லை
	உலகப் பல்கலைக்கழக சாம்பியன்ஷிப் தேர்வுப் போட்டி	கொழும்பு/ஶ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகம்
	அழைப்பின்பேரில் நிகழும் பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டிகள் மற்றும் ஏனைய போட்டிகள் (ஒழுங்கமைத்தலும் பங்கேற்றலும்)	உறுதிசெய்யப்படவில்லை
	பீடங்களுக்கிடையிலான புதுமுக மாணவர் விளையாட்டுப் போட்டிகள்	SUSL
	SLUSA கூட்டம்	கொழும்புப் பல்கலைக்கழகம்
	விளையாட்டு ஆலோசனைகளுக்கான நிர்வாகக் கூட்டம்	SUSL
ஏப்ரல்	பயிற்சி அமர்வுகள். (அனைத்துவகை விளையாட்டுகளுக்குமானது)	SUSL
	நட்பார்ந்த போட்டிகள் (அனைத்துவகை விளையாட்டுகளுக்குமானது)	உறுதிசெய்யப்படவில்லை
	பயிற்சிப் பாசறைகள் (அனைத்துவகை விளையாட்டுகளுக்குமானது)	உறுதிசெய்யப்படவில்லை
	ஊழியர்களுக்கான பெட்மிட்டன் போட்டி	SUSL
	அணித்தலைவர் மற்றும் உபதலைவருக்கான பயிலரங்கு	SUSL
	அழைப்பின்பேரில் நிகழும் பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டிகள் மற்றும் ஏனைய போட்டிகள் (ஒழுங்கமைத்தலும் பங்கேற்றலும்)	உறுதிசெய்யப்படவில்லை
	அழைப்பின்பேரில் நிகழும் பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான மொரா கோப்பை விளையாட்டுப் போட்டி	மொரட்டுவ பல்கலைக்கழகம்
	அழைப்பின்பேரில் நிகழும் பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான நீச்சல் சாம்பியஷிப் (களனி/கொழும்பு/பேரா/சபரா)	கொழும்பு
	பிரதேச விளையாட்டுப் போட்டிகள்	உறுதிசெய்யப்படவில்லை
	உலகப் பல்கலைக்கழக தேர்வுப் போட்டி	கொழும்பு/ஶ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகம்
	நாடுகளுக்கிடையிலான உலகப் பல்கலைக்கழக விளையாட்டுப் போட்டி	உறுதிசெய்யப்படவில்லை

	நீச்சல் பயிற்சிக்கான சிறப்புப் பாசறை	ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகம்
	SLUSA கூட்டம்	கொழும்பு அல்லது மொரட்டுவ பல்கலைக்கழகம்
	விளையாட்டு ஆலோசனைகளுக்கான நிர்வாகக் கூட்டம்	SUSL
ஏப்ரல்	பயிற்சி அமர்வுகள்.	SUSL
	பயிற்சிப் பாசறைகள் (அனைத்துவகை விளையாட்டுகளுக்குமானது)	உறுதிசெய்யப்படவில்லை
	நட்பார்ந்த போட்டிகள் (அனைத்துவகை விளையாட்டுகளுக்குமானது)	உறுதிசெய்யப்படவில்லை
	பயிற்சி விளையாட்டுப் போட்டிகள் (அனைத்துவகை விளையாட்டுகளுக்குமானது)	உறுதிசெய்யப்படவில்லை
	அழைப்பின்பேரில் நிகழும் பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டிகள் மற்றும் ஏனைய போட்டிகள் (ஒழுங்கமைத்தலும் பங்கேற்றலும்)	உறுதிசெய்யப்படவில்லை

மாதம்	திட்டமிடப்பட்டிருந்த நிகழ்ச்சி	எதிர்பார்க்கை நிகழ்விடம்
மே	அழைப்பின்பேரில் நிகழும் பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான போட்டிகளை ஒழுங்கமைத்தல்	SUSL
	மாகாண விளையாட்டுப் போட்டிகள்	கேகாலை
	பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான ரகர் மற்றும் கிரிக்கட் போட்டிகள்	உறுதிசெய்யப்படவில்லை
	பிரதேச விளையாட்டுப் போட்டிகள் (கிரிக்கட், ரகர்)	உறுதிசெய்யப்படவில்லை
	ஆறுபேர் அணிப் போட்டிகள்	உறுதிசெய்யப்படவில்லை
	உலகப் பல்கலைக்கழக சாம்பியன்ஷிப் தேர்வுப் போட்டி	கொழும்புப் பல்கலைக்கழகம்
	விளையாட்டு ஆலோசனைகளுக்கான நிர்வாகக் கூட்டம்	SUSL
	SLUSA கூட்டம்	கொழும்புப் பல்கலைக்கழகம்
ஜூன்	பயிற்சி அமர்வுகள்.	SUSL
	பயிற்சிப் பாசறைகள் (அனைத்துவகை விளையாட்டுகளுக்குமானது)	உறுதிசெய்யப்படவில்லை
	நட்பார்ந்த போட்டிகள் (அனைத்துவகை விளையாட்டுகளுக்குமானது)	உறுதிசெய்யப்படவில்லை
	பயிற்சி விளையாட்டுப் போட்டிகள் (அனைத்துவகை விளையாட்டுகளுக்குமானது)	உறுதிசெய்யப்படவில்லை
	பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான உள்ளக சிறப்புப் பயிற்சி அமர்வுகள்	கொழும்பு /பேராதெனிய
	அழைப்பின்பேரில் நிகழும் பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான போட்டிகளை ஒழுங்கமைத்தல்	SUSL
	பிரதேச விளையாட்டுப் போட்டிகள் (கிரிக்கட்/ரகர்)	உறுதிசெய்யப்படவில்லை
	SLUSA கூட்டம்	கொழும்புப் பல்கலைக்கழகம்
	விளையாட்டு ஆலோசனைகளுக்கான நிர்வாகக் கூட்டம்	SUSL
	'கலர்ஸ்' பரிசளிப்பு விழா	SUSL
ஜூலை	பயிற்சி அமர்வுகள் (அனைத்துவகை விளையாட்டுகளுக்குமானது)	SUSL
	நட்பார்ந்த போட்டிகள் (அனைத்துவகை விளையாட்டுகளுக்குமானது)	உறுதிசெய்யப்படவில்லை
	பயிற்சி விளையாட்டுப் போட்டிகள் (அனைத்துவகை விளையாட்டுகளுக்குமானது)	உறுதிசெய்யப்படவில்லை
	'செவன்ஸ்' விளையாட்டுப் போட்டிகள்	மொரட்டுவ/ கொழும்புப் பல்கலைக்கழகம்
	உலகப் பல்கலைக்கழக சாம்பியன்ஷிப் போட்டிகளுக்காகத் தேர்வுசெய்யப்பட்ட மாணவர்க்கான பயிற்சிகள்	உறுதிசெய்யப்படவில்லை
	தடகளப் போட்டிகளுக்கான 03 நாள் சிறப்புப் பயிற்சிப் பாசறைகள்	தியகம அல்லது சுகததாச ஸ்டேடியம்
	அழைப்பின்பேரில் நிகழும் பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டிகளும் ஏனைய	உறுதிசெய்யப்படவில்லை

	விளையாட்டுப் போட்டிகளும் (ஒழுங்கமைத்தலும் பங்கேற்றலும்)	
	அழைப்பின்பேரில் நிகழும் ஊழியர்களுக்கான பெட்மிட்டன் சாம்பியன்ஷிப் போட்டி	கொழும்புப் பல்கலைக்கழகம்
	Organizing Invitation Inter University tournament	SUSL
	அழைப்பின்பேரில் நிகழும் பல்கலைக் கழகங்களுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டிகள் மற்றும் ஏனைய போட்டிகள் (ஒழுங்கமைத்தலும் பங்கேற்றலும்)	உறுதிசெய்யப்படவில்லை
	பிரதேச விளையாட்டுப் போட்டிகள்	இரத்தினபுரி
	SLUSA கூட்டம்	கொழும்புப் பல்கலைக்கழகம்
	விளையாட்டு ஆலோசனைகளுக்கான நிர்வாகக் கூட்டம்	SUSL
ஆகஸ்ட்	பயிற்சி அமர்வுகள் (அனைத்துவகை விளையாட்டுகளுக்குமானது)	பேராதனைப் பல்கலைக்கழகம்
	நட்பார்ந்த போட்டிகள் (அனைத்துவகை விளையாட்டுகளுக்குமானது)	உறுதிசெய்யப்படவில்லை
	பயிற்சி விளையாட்டுப் போட்டிகள். (அனைத்துவகை விளையாட்டுகளுக்குமானது)	உறுதிசெய்யப்படவில்லை
	Anatomy Carpow சதுரங்க விளையாட்டுக்கான திறந்த போட்டி	கண்டி

மாதம்	திட்டமிடப்பட்டிருந்த நிகழ்ச்சி	எதிர்பார்க்கை நிகழ்விடம்
ஆகஸ்ட்	அழைப்பின்பேரில் நிகழும் பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டிகள் மற்றும் ஏனைய போட்டிகள் (ஒழுங்கமைத்தலும் பங்கேற்றலும்)	உறுதிசெய்யப்படவில்லை
	பயிற்சிப் பாசறைகள் (அனைத்துவகை விளையாட்டுகளுக்குமானது)	உறுதிசெய்யப்படவில்லை
	ஆறுபேர் அணி/செவன்ஸ்/ 3x3 விளையாட்டுப் போட்டிகள்	உறுதிசெய்யப்படவில்லை
	ஆசியப் பல்கலைக்கழக கடற்கரைக் கைப்பந்தாட்ட சாம்பியன்ஷிப் போட்டி	உறுதிசெய்யப்படவில்லை
	மொரா கிங்க்ஸ் சர்வதேச தரநிர்ணய சாம்பியன்ஷிப்	உறுதிசெய்யப்படவில்லை
	அழைப்பின்பேரில் நிகழும் பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டிகள் மற்றும் ஏனைய போட்டிகள் (ஒழுங்கமைத்தலும் பங்கேற்றலும்)	மொரட்டுவ பல்கலைக்கழகம்
	இலங்கைப் பல்கலைக்கழக விளையாட்டுப் போட்டிகள் (SLUG)	உறுதிசெய்யப்படவில்லை
	உலகப் பல்கலைக்கழக விளையாட்டுப் போட்டிகள்	உறுதிசெய்யப்படவில்லை
	SLUSA கூட்டம்	கொழும்புப் பல்கலைக்கழகம்
	விளையாட்டு ஆலோசனைகளுக்கான நிர்வாகக் கூட்டம்	SUSL
செப்டம்பர்	பயிற்சி அமர்வுகள்	கொழும்புப் பல்கலைக்கழகம்
	நட்பார்ந்த போட்டிகள் (அனைத்துவகை விளையாட்டுகளுக்குமானது)	SUSL அல்லது ஏனைய பல்கலைக்கழகங்கள்
	பயிற்சிப் பாசறைகள் (அனைத்துவகை விளையாட்டுகளுக்குமானது)	உறுதிசெய்யப்படவில்லை
	ஆறுபேர் அணி/செவன்ஸ்/ 3x3 விளையாட்டுப் போட்டிகள் (கூடைப் பந்தாட்டம், ரகர், உதைப்பந்தாட்டம், கிரிக்கட்)	உறுதிசெய்யப்படவில்லை
	அழைப்பின்பேரில் நிகழும் பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டிகள் மற்றும் ஏனைய விளையாட்டுப் போட்டிகள்	ருஹுணு பல்கலைக்கழகம்
	திறந்த கழக வலைபந்தாட்டப் போட்டிகள்.	கொழும்புப் பல்கலைக்கழகம்
	மாணவர்க்கும் ஊழியர்களுக்குமான விளையாட்டுத்துறைசார் மருந்துவகைகள் குறித்த பயிலரங்கு	SUSL
	SLUSA கூட்டம்	உறுதிசெய்யப்படவில்லை
	விளையாட்டு ஆலோசனைகளுக்கான நிர்வாகக் கூட்டம்	கொழும்புப் பல்கலைக்கழகம்
	ஆறுபேர் அணி/செவன்ஸ்/ 3x3 விளையாட்டுப் போட்டிகள் (கூடைப் பந்தாட்டம், ரகர், உதைப்பந்தாட்டம், கிரிக்கட்)	SUSL
ஒக்டோபர்	பயிற்சி அமர்வு	உடவளவ
	பயிற்சிப் பாசறைகள்	உறுதிசெய்யப்படவில்லை

	திட்டமிடப்பட்டிருந்த நிகழ்ச்சி	எதிர்பார்க்கை நிகழ்விடம்
நவம்பர்	அழைப்பின்பேரில் நிகழும் தரநிர்ணய சதுரங்க விளையாட்டுப் போட்டி	உறுதிசெய்யப்படவில்லை
	ஆறுபேர் அணி/செவன்ஸ்/ 3x3 விளையாட்டுப் போட்டிகள் (கூடைப் பந்தாட்டம், ரகர், உதைப்பந்தாட்டம், கிரிக்கட்)	உறுதிசெய்யப்படவில்லை
	ஆசியப் பல்கலைக்கழக சாம்பியன்ஷிப் போட்டி	உறுதிசெய்யப்படவில்லை
	நீச்சலின் போதான உயிர்காப்புப் பயிற்சிப் பாசறையை ஒழுங்கமைத்தல்	SUSL
	SLUSA கூட்டம்	கொழும்புப் பல்கலைக்கழகம்
	விளையாட்டு ஆலோசனைகளுக்கான நிர்வாகக் கூட்டம்	SUSL
	பயிற்சி அமர்வு	SUSL/கொழும்பு
	பயிற்சிப் பாசறைகள் (அனைத்துவகை விளையாட்டுகளுக்குமானது)	உறுதிசெய்யப்படவில்லை
	3x3 விளையாட்டுப் போட்டிகள்	உறுதிசெய்யப்படவில்லை
	தேசிய ஒலிம்பிக் அகாடெமி நிகழ்ச்சி	பண்டாரவெல
	உலகப் பல்கலைக்கழக சாம்பியன்ஷிப்	உறுதிசெய்யப்படவில்லை
	'செவன்ஸ்' விளையாட்டுப் போட்டிகள்	இரத்தினபுரி
நவம்பர்	பிரதேச விளையாட்டுப் போட்டிகள்	உறுதிசெய்யப்படவில்லை
	SLUSA பரிசளிப்பு	கொழும்பு
	அழைப்பின்பேரில் நிகழும் பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டிகள் மற்றும் ஏனைய விளையாட்டுப் போட்டிகள்	உறுதிசெய்யப்படவில்லை
	SLUSA கூட்டம்	கொழும்பு
	விளையாட்டு ஆலோசனைகளுக்கான நிர்வாகக் கூட்டம்	SUSL
டிசம்பர்	பயிற்சி அமர்வு	SUSL
	பயிற்சிப் பாசறைகள் (அனைத்துவகை விளையாட்டுகளுக்குமானது)	உறுதிசெய்யப்படவில்லை
	சிங்கப்பூர் செஸ் கழக திறந்த விளையாட்டுப் போட்டி (இலங்கை)	உறுதிசெய்யப்படவில்லை
	ஆசியப் பல்கலைக்கழக விளையாட்டுப் போட்டிகள்	உறுதிசெய்யப்படவில்லை
	வெளிநாட்டு விளையாட்டுப் போட்டிகள்	உறுதிசெய்யப்படவில்லை
	சர்வதேசப் பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான சதுரங்க சாம்பியன்ஷிப் (வெளிநாடு)	உறுதிசெய்யப்படவில்லை
	தரநிர்ணய பரீட்சை (கராத்தே 3)	SUSL
	சர்வதேச கராத்தே சாம்பியன்ஷிப் போட்டி	இந்தியா
	அணித்தலைவர் மற்றும் உபதலைவருக்கான பயிலரங்கு	உறுதிசெய்யப்படவில்லை
	உடல்வலுச் சோதனைச் செயல்முறை	உறுதிசெய்யப்படவில்லை
	புத்தி சர்வதேச தரநிர்ணய சதுரங்க விளையாட்டு சாம்பியன்ஷிப் போட்டி	உறுதிசெய்யப்படவில்லை
	SLUSA கூட்டம்	கொழும்பு
	விளையாட்டு ஆலோசனைகளுக்கான நிர்வாகக் கூட்டம்	SUSL

அடைவுகள்

பல்கலைக்கழக மட்டம்

கோவிட் பெருந்தொற்று நோய் பரவல் காரணமாக, அனைத்து விளையாட்டுப் போட்டிகளும் ஒழுங்கு செய்யப்படவில்லை. எனினும், சதுரங்கம், தைக்வொண்டோ, கராத்தே ஆகிய போட்டிகள் மட்டும் இணையவழி மூலம் நடாத்தப்பட்டன.

01. சதுரங்கம் (பெண்) - 03ம் இடம்

02. தைக்வொண்டோ (பெண்)

- தனிநபர் பூம்சே - 01ம் இடம்
- தனிநபர் பூம்சே - 03ம் இடம் (02)

03. கராத்தே (ஆண்) - 03ம் இடம் (02)

04. கராத்தே (பெண்) - 03ம் இடம்

சர்வதேச மட்டம்

இல.	போட்டி நிகழ்வின் பெயர்	திகதி, நிகழ்விடம் நாடு	SUSL இன் பிரதிநிதிகள்	போட்டி/ நிகழ்வு	அடைவு
01	2021 ஆசியப் பல்கலைக்கழகச் சதுரங்கச் சாம்பியன் போட்டி (இணையவழி)	2-13 செப்டம்பர் 2021	R.I. Gகயேனி 16/GES/905	சதுரங்கப் போட்டி	பங்கேற்பு

பங்குபற்றிய போட்டி நிகழ்ச்சிகள் - 2022

அழைப்பின்பேரிலான போட்டிகள்

இல	போட்டி நிகழ்வின் பெயர்	திகதி
01	இரத்தினபுரி மாவட்டப் பிரிவு 111 கிரிக்கட் போட்டிகள்	
	முதலாவது போட்டி	23-01-2022
	இரண்டாவது போட்டி	30-01-2022
	அரையிறுதிப் போட்டி	05-02-2022
	இறுதிப் போட்டி	06-02-2022
02	இலங்கை கிரிக்கட்S பிரிவு 11 ஊக்குவிப்புப் போட்டிகள்	
03	சிரேஷ்ட தேசிய ஹொக்கி சாம்பியன்ஷிப் தெரிவுப் போட்டி - 2022	06 செப்டம்பர் 2022
04	NSBMU விளையாட்டுக்களுக்கான கூடைப்பந்து சாம்பியன்ஷிப் போட்டி- 2022	27,28 செப்டம்பர் 05 ஒக்டோபர் 2022
05	தங்க மற்றும் வெள்ளிக்கோப்பைக்கான கால்பந்தாட்டப் போட்டி	15,16 ஒக்டோபர் 2022
06	பல்கலைக்கழக பெண்கள் மேம்பாட்டுக்கான அடையாள ரக்பி உதைபந்தாட்டப் போட்டி	23 ஒக்டோபர் 2022
07	23 வயதிற்குக் கீழ்ப்பட்ட கனிஷ்ட பிரிவுக்கான தேசிய கூடைப்பந்தாட்ட சாம்பியன்ஷிப் தெரிவுப் போட்டி - 2022	14 ஒக்டோபர் 2022 – பேரா. பல்கலை.
08	சபரகமுவ மாகாண ஏழுபேர் அணி ரக்பி உதைபந்தாட்டப் போட்டி - 2022	25 செப்டம்பர் 2022

நட்பார்ந்த மற்றும் பயிற்சிப் போட்டிகள்

இல.	போட்டியின் பெயர்	காலம்
01	சபரகமுவ பல்கலைக்கழக அணிக்கும் கேகாலை வித்தியாலய அணிக்கும் இடையிலான ரகர் பயிற்சிப் போட்டி	29 ஏப்ரல் 2022
02	ஊவா – வெல்லஸ்ஸ பல்கலைக்கழக அணியுடனான நட்பார்ந்த எல்லே விளையாட்டுப் போட்டி	05 நவம்பர் 2022

பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான சாம்பியன் போட்டி - 2022

இல	விளையாட்டு	நிர்ணயித்த திகதி/கள்
01	பெட்மிட்டன்	11, 12, 13 நவம்பர் 2022
02	பேஸ்போல்	9, 10, 11 டிசம்பர் 2022
03	கூடைப்பந்தாட்டம்	27,28, 29 டிசம்பர் 2022
04	கெரம்	07, 08 டிசம்பர் 2022
05	சதுரங்கம்	06, 07, 08ஜனவரி 2023
06	கிரிக்கட்	06 நவம்பர் 2022 முதல்
07	எல்லே	06, 07 , 08 ஜனவரி 2023
08	உதைபந்தாட்டம்	02, 03, 04 டிசம்பர் 2022
09	ஹொக்கி	10, 11, 12 டிசம்பர் 2022
10	கராத்தே	02, 03, 04 டிசம்பர் 2022
11	வலைப்பந்தாட்டம்	07, 08 டிசம்பர் 2022
12	ஓட்டப்போட்டி	07 டிசம்பர் 2022
13	படகோட்டம்	30 நவம்பர் 2022
14	ரக்பி உதைபந்தாட்டம்	04 நவம்பர் – 17 டிசம்பர் 2022
15	நீச்சல்	07, 08 ஜனவரி 2023
16	டேபிள் டென்னிஸ்	17, 18 டிசம்பர் டிசம்பர் 2022
17	தைக்வொன்டோ	10, 11 டிசம்பர் 2022
18	டென்னிஸ்	18, 19, 20 நவம்பர் 2022
19	தடகளப் போட்டி	26, 27 நவம்பர் 2022
20	வொலிபோல்	17, 18, 19 , 20 டிசம்பர்
21	பாரந்தூக்குதல்	07, 08 ஜனவரி 2023
22	ரெஸ்லின் - மல்யுத்தம்	18 டிசம்பர் 2022

இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகத்தினால் ஒழுங்குசெய்யப்பட்ட போட்டி நிகழ்வுகள்

01. அழைப்பின்பேரில் நிகழும் பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான எல்லே விளையாட்டுப் போட்டி - 2022 (பெலிஹுலோய XVI எல்லே விளையாட்டுப் போட்டி)

02. அழைப்பின்பேரில் நிகழும் பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான கபடி விளையாட்டுப் போட்டி - 2022

சாதனைகள்

பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான போட்டிகள்

01. பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான எல்லே சாம்பியன்ஷிப் (பெண்கள்) -1ம் இடம்
02. பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான ஹொக்கி சாம்பியன்ஷிப் (பெண்கள்)-1ம் இடம்
03. பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான கராத்தே சாம்பியன்ஷிப் (பெண்கள்)-1ம் இடம்
04. பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான தைக்வொண்டோ சாம்பியன்ஷிப் (பெண்கள்)-1ம் இடம்
05. பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான தடகள சாம்பியன்ஷிப் (பெண்கள்) -1ம் இடம்
06. பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான தடகள சாம்பியன்ஷிப் (ஆண்கள்) -1ம் இடம்
07. பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான கரப்பந்தாட்ட சாம்பியன்ஷிப் (பெண்கள்)-1ம் இடம்
08. பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான மல்யுத்த சாம்பியன்ஷிப் (ஆண்கள்)-1ம் இடம்
09. பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான கரப்பந்தாட்ட சாம்பியன்ஷிப் (ஆண்கள்)-2ம் இடம்
10. பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான கூடைப்பந்தாட்ட சாம்பியன்ஷிப் (பெண்கள்)- 2ம் இடம்
11. பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான எல்லே சாம்பியன்ஷிப் (ஆண்கள்) - 2ம் இடம்
12. பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான கராத்தே சாம்பியன்ஷிப் (ஆண்கள்)- 2ம் இடம்
13. பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான டேபிள் டென்னிஸ் சாம்பியன்ஷிப் (ஆண்கள்)- 2ம் இடம்
14. பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான கூடைப்பந்தாட்ட சாம்பியன்ஷிப் (ஆண்கள்)- 3ம் இடம்
15. பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான ஓட்டப்போட்டி சாம்பியன்ஷிப்- 3ம் இடம்
16. பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான பெட்மிட்டன் சாம்பியன்ஷிப் (பெண்கள்)- 3ம் இடம்
17. பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான ரகர் சாம்பியன்ஷிப் - 3ம் இடம்

தேசியப் பல்கலைக்கழகங்களுக்கு இடையிலானசாம்பியன்ஷிப் – 2022 போட்டியில் இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம் மூன்றாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது.

4. கற்கை மையங்கள்

4.1 தொழில் வழிகாட்டல் அலகு

4.1.1 சுருக்க வரலாறு

இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகத்தின் தொழில் வழிகாட்டல் அலகானது இலங்கைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு (UGC)வின் முன்னெடுப்புக்கு அமைவாக 1998 ஏப்ரலில் நிறுவப்பட்டது. இந்த அலகானது பல்கலைக்கழகத் துணைவேந்தரின் நேரடிக் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வருகின்றது.

4.1.2 ஊழியர்

இந்த அலகானது தற்போது ஒரு பணிப்பாளர், தொழிற்துறை ஆலோசகர், முகாமைத்துவ அலுவலர் ஆகியோரைக் கொண்டமைந்துள்ளது.

உதவிப் பணிப்பாளர்- கலாநிதி (திருமதி) R.M.A.S. பண்டார
விவசாய விஞ்ஞான பீடம்

தொழிற்துறை ஆலோசகர் -திரு. தீபால் விஜயசேகர
(பெப்ரவரி, 2022 வரை)

4.1.3 சுருக்க விபரம்

தொழில் வழிகாட்டல் அலகானது பட்டதாரிகள் பட்டம் பெற்றபின் குறைந்தபட்ச காத்திருப்புக் காலத்துடன் அதிகபட்சமாக வேலைவாய்ப்பை அடைவதற்கும், வெற்றிகரமான எதிர்காலத் தொழில் வாழ்க்கையை அமைத்துக் கொள்வதற்கும் உதவும் வகையில் அவர்களுக்குச் சரியான வழிகாட்டுதல்களை வழங்கும் வகையில் தனது செயற்பாடுகளை அமைத்துக்கொள்வதைக் குவிமையப் படுத்துகின்றது.

மேலும், இந்த மையமானது பல்கலைக்கழகத்திற்கும் வேலைவாய்ப்பு நிறுவனங்களுக்கும் இடையே பரஸ்பர நன்மை பயக்கும் வகையில் உறவுகளை மேம்படுத்துவதில் கவனம் செலுத்துகிறது.

4.1.4 2022 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள்

தொழில் வழிகாட்டல் செயன்முறைகளை வலுப்படுத்தும் நோக்கில் பின்வரும் செயற்பாடுகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன:

- CGU இற்கான பீட ஒருங்கிணைப்பாளர்கள் நியமனம்
- ஒவ்வொரு பீடத்திலும் உப தொழில் வழிகாட்டல் அலகுகள்/தொழில் வழிகாட்டல் கூடம் நிறுவப்படல்
- CGU இற்கான வலைதளம் மேம்படுத்தப்படல்
- CGU இற்கான முகநூல் பக்கம் மேம்படுத்தப்படல்
- CGU இற்கான யூட்யூப் அலைவரிசையொன்று மேம்படுத்தப்படல்
- CGU இற்கான LinkedIn பக்கம் மேம்படுத்தப்படல்

CGU இனால் மேற்கொள்ளப்பட்ட பயிலரங்குகள், பிற செயற்பாடுகள் பற்றிய சுருக்க விபரங்கள் பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

பயிலரங்கு / நிகழ்வு/ செயற்பாடு	**வளவாளர்**	**திகதி/ நேரம்**	**பயனாளர்/ இலக்குக் குழுவினர்**	**நிகழ்ச்சி விபரம்**
மெய்ந்நிகர் கற்றல் நிகழ்வு குறித்த பயிலரங்கு	திரு. ஜாலிய ரத்னாயக்க, தொழில் வழிகாட்டல் ஆலோசகர், இலங்கை ரஜரட்ட பல்கலைக் கழகம்	24.01.2022 பி.ப. 6.30 – பி.ப. 8.30	முகாமைத்துவக் கற்கைகள் பீடப் பட்டதாரி மாணவர்கள்	SUSL உடைய CGU உம் கொழும்பு பங்குச் சந்தையின் இரத்தினபுரிக் கிளையும் ஒருங்கிணைந்து மெய்ந்நிகர் கற்றல் நிகழ்வு ஒன்றினை ஒழுங்கு செய்திருந்தது.
AIMS உடன் இணைந்து உங்கள் தொழிற் தகைமைகளைத் தரமுயர்த்திக் கொள்ளுங்கள் - வலையரங்கு	AIMS நிறுவனத்தின் பிரதிநிதிகள்	02.04.2022 பி.ப. 6.00	முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் பிரயோக விஞ்ஞான பீடப் பட்டதாரி மாணவர்கள்	AIMS உடன் இணைந்து மாணவர்கள் எவ்வாறு தமது தொழிற் தகைமைகளை மேம்படுத்திக் கொள்வது, தொழில் நிறுவனங்களில் தமக்கான அதிக வாய்ப்புக்களை உருவாக்கிக் கொள்வது எவ்வாறு என்பன தொடர்பில் விழிப்புணர்வு ஊட்டும் இலவச வலையரங்கு
சமூக ஊடகங்களும் மனநலமும்- வலையரங்கு	கலாநிதி லங்கேஷ் முனசிங்ஹ, சிரேஷ்ட விரிவுரையாளர், மென்பொருட் பொறியியல் கற்பித்தல் அலகு, சமூக விஞ்ஞானத் துறை களனிப் பல்கலைக்கழகம்	26.05.2022 பி.ப. 7.00	அனைத்துப் பீடங்களிலும் உள்ள ஆர்வமுள்ள மாணாக்கர்	இணைய வெளியில் சமூகச் செயற்பாடுகளி னால், டிஜிட்டல் சாதனங்கள் ஏற்படுத்தும் மன உளைச்சல் குறித்த இணையவழி நிகழ்வு
உங்கள் தொழில் துறை எனும் ஏணிப்படியில் ஏறுங்கள்	இலங்கை யுனிலிவர் நிறுவனப் பிரதிநிதிகள்	27.06.2022 பி.ப. 6.00	முகாமைத்துவக் கற்கைகள் பீட 3 ஆம் 4 ஆம் ஆண்டு மாணவர்கள்	இலங்கை யுனிலிவர் நிறுவனம் முதலான பல்தேசிய நிறுவனங்களில் தொழிற் பயிற்சி வாய்ப்புகள் தொடர்பில் விழிப்புணர்வு ஊட்டும் நிகழ்வு

பயிலரங்கு/ நிகழ்வு/ செயற்பாடு	வளவாளர்	திகதியும் நேரமும்	பயனாளர்/ இலக்குக் குழுவினர்	நிகழ்ச்சி விபரம்
				'உங்கள் தொழில் துறை எனும் ஏணிப்படியில் ஏறுங்கள்' – இது CGU உடன் ருஹுன பல்கலைக் கழகமும் ஒருங்கிணைந்து மேற்கொண்ட ஓர் இணையவழி அமர்வாகும்.
தொழிற் துறை வளர்ச்சிக்கான ஆங்கிலம்	செல்வி D.D. தனஞ்சலி மன்னப்பெரும ஆங்கில மொழி விரிவுரையாளர், SUSL	29.07.2022	சமூக விஞ்ஞானங்கள் மற்றும் மொழிகள் பீட ஆங்கிலக் கற்கை மாணவர்கள்	SUSLஇன் முன்னாள் மாணவர் வளவாளராகக் கலந்துகொண்ட இந்நிகழ்வு CGU உம் சமூக விஞ்ஞானங்கள் மற்றும் மொழிகள் பீடத்தின் தொழில் வழிகாட்டல் அலகும் இணைந்து ஒழுங்கமைத்ததாகும்.
"தீப்பொறிகள்-ஸ்பார்க்ஸ்" - யுனிலிவர் மாணவத் தூதுவர் விழிப்புணர்வுச் செயலமர்வு	இலங்கை யுனிலிவர் நிறுவனப் பிரதிநிதிகள்	02.09.2022	அனைத்துப் பீடங்களிலும் உள்ள ஆர்வமுள்ள மாணாக்கர்	"தீப்பொறிகள்-ஸ்பார்க்ஸ்" -யுனிலிவர் மாணவத் தூதுவர் பதவிக்கு இவ் வருடத்தில் ஆர்வமுள்ள மாணவர்கள் விண்ணப்பிப்பது தொடர்பில் விழிப்புணர்வுச் செயலமர்வு
ஒரு வெற்றி வாய்ந்த தொழில் வழிகாட்டியாவது எப்படி என்பது தொடர்பில் கல்வியாளர் களுக்கான தொழில் வழிகாட்டல் பயிலரங்கு	திரு. ஹேமிந்த ஜயவீர	14 செப்டம்பர் 2022, மு.ப. 8:30 முதல் பி.ப. 12.30 வரை	வெவ்வேறு பீடங்களைச் சேர்ந்த கல்வியாளர்கள் (அவ்வந்தப் பீடங்களினது பீடாதிபதிகளால் முன்மொழியப் பட்டவர்கள்), தொழினுட்ப வியல் பீடப் பட்டதாரி மாணவர்கள்	இப்பயிலரங்கு பணியாளர் மேம்பாட்டு மையத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற தோடு, அதில் பின்வரும் விடயதானங்கள் கலந்தாய்வுக்கு உட்படுத்தப்பட்டன: மாணவர்களுக்குத் தொழில் வழிகாட்டல் வழங்கப்படுவதன் முக்கியத்துவம், உளவள வழிகாட்டல் முறைகள், உளவளவாளருக்கும் வழிகாட்டலைப் பெறுவோருக்கும் இடையிலான உறவுநிலையைக் கையாளும் முறை, தொழில் வழிகாட்டலில் பொருத்தமான தீர்மானமெடுத்தலும் அமுலாக்கலும் (வினா – விடை, குழுப்பணி, கலந்தாய்வு)

பயிலரங்கு/ நிகழ்வு/ செயற்பாடு	வளவாளர்	திகதியும் நேரமும்	பயனாளர்/ இலக்குக் குழுவினர்	நிகழ்ச்சி விபரம்
முதுமாணி மற்றும் கலாநிதிப் பட்டக் கற்கைகளுக் கான DAAD புலமைப்பரிசில் குறித்த பயிலரங்கு	திரு. நதீஷ் பல்லியகுரு, DAAD இற்கான இலங்கைப் பிரதிநிதி	17 செப்டம்பர் மு.ப. 10.30- மதியம் 12.00	ஆர்வமுள்ள பட்டதாரி மாணாக்கர், பட்டதாரிகள், கல்வியாளர்கள்	இப்பயிலரங்கு SUSLஇன் பணியாளர் மேம்பாட்டு மையத்தினால் நடாத்தப்பட்டது. இப்பயிலரங்கில் பல்வேறு பட்டக் கற்கைகளுக்கான நிதி மூலங்கள், அவற்றுக்கு விண்ணப்பிக்கும் முறைகள், ஜேர்மனியில் ஒரு பட்டதாரி மாணவராய்ச் செலவுகளை முகாமைத்துவப் படுத்தும் விதங்கள் என்பவற்றைத் தெளிவுறுத்தி, நிகழ்வின் முடிவில் வினா – விடை அமர்வு ஒன்றும் ஒழுங்கு செய்யப்பட்டு இருந்தது,
"கார்ப்பரேட் உலகின் அடிப்படைத் திறன்கள்" குறித்த பயிலரங்கு	திரு. ரின்ஸே கூரே, முகாமைத்துவப் பயிற்றுவிப்பாளர், சிறப்பு நிபுணர், தொழிலதிபர்	19 செப்டம்பர் மு.ப. 9.30 - மு. ப. 11.30	அனைத்துப் பீடங்களிலும் உள்ள ஆர்வமுள்ள மாணாக்கர்	இப்பயிலரங்கு வரைபட (கேத்திரகணித) பீட கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இப் பயிலரங்கில், பட்டதாரிகளிடம் கார்ப்பரேட் துறை எதிர்பார்க்கும் திறன்கள், தகைமைகள், மனப்பாங்குகள் குறித்துக் கலந்துரையாடப் பட்டது.

பயிலரங்கு/ நிகழ்வு/ செயற்பாடு	வளவாளர்	திகதியும் நேரமும்	பயனாளர்/ இலக்குக் குழுவினர்	நிகழ்ச்சி விபரம்
“உபாதிதாரி விவசாயக உதானய” – 2022 (NEDA அமைப்புடன் இணைந்து பட்டதாரித் தொழில் முனைவோர் மேம்பாடு) – எனும் தலைப்பில் தேர்வு செய்யப்பட்ட பட்டதாரிகள் உடனான நேர்காணல் நிகழ்வு	NEDA அமைப்பின் பிரதிநிதிகள்	22 செப்டம்பர் மு.ப. 10.00 – பி.ப. 2.00	அனைத்துப் பீடங்களையும் சேர்ந்த ஆர்வமுள்ள மாணவர்கள்	நிதியுதவிக்கான விண்ணப்பங்களின் அடிப்படையில் தேர்வு செய்த பொருத்தமான பட்டதாரி மாணவர் களுக்கான திறன் மேம்பாடு தொடர்பிலான பயிலரங்குகளுக் காக SUSL இன் CGU-இல் இந்த நேர்காணல் இடம்பெற்றது.

4.2 திறந்த மற்றும் தொலைக் கற்றல் மையம்

4.2.1 சுருக்க வரலாறு

இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகத்தின் வெளிவாரிப் பிரிவின் வரலாறு 1992 ஆம் ஆண்டு, அதாவது இப்பல்கலைக்கழகம் நிறுவப்படுவதற்கு முன்பு, சபரகமுவ இணைந்த பல்கலைக்கழகக் கல்லூரியாக ஆரம்பிக்கப்படவும் முன்பிருந்தே ஆரம்பிக்கிறது.


ஆரம்பத்தில், இந்த அலகு இப்பிராந்தியத்தில் உள்ள இளைஞர்களுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட துறைகளில் தொழில்சார்ந்த சான்றிதழ் பாடநெறிகளை வழங்கும் நோக்கிலமைந்த ஒரு சமூக மேம்பாட்டு மையமாகவே இருந்தது.

1996 இல் இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம் நிறுவப்பட்ட பின்னர், 2000 ஆம் ஆண்டில் இந்த மையம் இப்பகுதியில் உள்ள ஏழை மக்களுக்கு பரந்த அளவில் உதவிபுரிந்து வழிகாட்டல் வேண்டும் என்ற எதிர்பார்ப்புடன் (EDPESU) என மறுபெயரிடப்பட்டது. மேலும், 2015 இல் EDPESU என்பது மாற்றம் செய்யப்பட்டு, திறந்த மற்றும் தொலைகற்றல் மையம் (CODL) எனப் புதுப்பெயர் சூட்டப்பட்டது.

4.2.2 நிர்வாகக் குழு உறுப்பினர்கள்

சிரேஷ்ட பேரா. உதய ரத்னாயக்க	- துணைவேந்தர் (குழுத் தலைவர்)
பேரா. P.M. ஆஷா S. கருணாரத்ன	- பீடாதிபதி, விவசாய விஞ்ஞான பீடம்
பேரா. அதுல C. ஞானபால	- பீடாதிபதி, முகாமைத்துவக் கற்கைகள்
பீடம்பேரா. E.P.N. உதயகுமார	- பீடாதிபதி, பிரயோக விஞ்ஞான பீடம்
கலாநிதி M.A.C.S.S. ஃபெர்ணான்டோ	- பீடாதிபதி, சமூக விஞ்ஞானங்கள் மற்றும் மொழிகள் பீடம்
திரு. சமன் உயங்கொட	- பதிவாளர்
திரு. K.A.R.S. ஜயகொடி	- பொருளாளர்
திரு. D. ஜாசிங்ஹ	- பணிப்பாளர், CODL (குழுச் செயலாளர்)
வண. G. புத்தானந்த தேரர்	- UGC இன் நியமன உறுப்பினர்
திரு. H.W. குணதாச	- பேரவை உறுப்பினர்
பேரா. P.K. திஸாநாயக்க	- தலைவர், கற்கைக் குழுமம், விவசாய விஞ்ஞான பீடம்
பேரா. D.A.I. தயாரத்ன	- தலைவர், கற்கைக் குழுமம், முகாமைத்துவக் கற்கைகள் பீடம்
பேரா. சரத் ஆனந்த	- தலைவர், கற்கைக் குழுமம், சமூக விஞ்ஞானங்கள் மற்றும் மொழிகள் பீடம்
பேரா. B.T.G.S. குமார	- தலைவர், கற்கைக் குழுமம், பிரயோக விஞ்ஞான பீடம்
செல்வி S.N. பிரியதர்ஷினி	- சிரேஷ்ட உதவிப் பதிவாளர், CODL
செல்வி N.P. விஜேந்திர	- உதவிப் பொருளாளர், CODL

4.2.3 தீர்மானம் மேற்கொள்ளும் செயன்முறை



நிரந்தர ஊழியர்

சிரேஷ்ட உதவிப் பதிவாளர்	-	01
உதவிப் பொருளாளர்	-	01
முகாமைத்துவ உதவியாளர்கள்	-	04
முன்பள்ளி உதவியாளர்	-	01
இயந்திரங்கள் இயக்குவோர்	-	01
பணி உதவி	-	01

4.2.4 பட்டக்கற்கை உயர் டிப்ளோமாக்கள், டிப்ளோமா மற்றும் சான்றிதழ் பாடநெறிகள்

1. வணிக நிர்வாகத்துறையில் பொதுத்துறை (வெளிவாரி) இளமாணிப் பட்டம்
2. இளங்கலைமாணி (வெளிவாரி)ப் பட்டம் - முன்மொழியப்பட்டுள்ளது
3. தகவல் தொழினுட்பவியலில் இளமாணிப் பட்டம் – முன்மொழியப்பட்டுள்ளது
4. ஆங்கிலத்தில் உயர் கற்கை டிப்ளோமா
5. கூட்டுறவு வணிக முகாமைத்துவத்தில் உயர் கற்கை டிப்ளோமா
6. விளையாட்டுப் பயிற்றுவிப்பு மற்றும் உடற்கல்வித்துறையில் உயர் கற்கை டிப்ளோமா
7. கால்நடை உற்பத்தித் துறையில் உயர் கற்கை டிப்ளோமா
8. ஆங்கிலத்தில் டிப்ளோமா
9. முன்பள்ளி ஆசிரியர் பயிற்சிநெறியில் டிப்ளோமா

10. வணிக முகாமைத்துவத்தில் டிப்ளோமா
11. சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் முகாமைத்துவத்தில் டிப்ளோமா
12. நிதி முகாமைத்துவத்தில் டிப்ளோமா
13. மென்பொருள் பொறியியல் டிப்ளோமா
14. இரத்தினவியலில் டிப்ளோமா
15. வணிகத்தொழிற்துறைப் பயிற்சிநெறியில் டிப்ளோமா
16. விளையாட்டுப் பயிற்றுவிப்பு மற்றும் உடற்கல்வித்துறையில் உயர்தரச் சான்றிதழ் பாடநெறி
17. நிலையான அமைதிக்கான உள்ளகச் சேவை வழங்கல் தொடர்பான உயர்தரச் சான்றிதழ் பாடநெறி
18. ஆங்கிலத்தில் சான்றிதழ் பாடநெறி
19. கணினி மற்றும் தகவல் தொழினுட்பத்தில் சான்றிதழ் பாடநெறி
20. இணையதள அடிப்படையிலான (CAD, WEB, JAVA) செயலி மேம்பாட்டில் சான்றிதழ் பாடநெறி
21. பாரம்பரிய விளையாட்டுக்கள் மற்றும் வெளிக்களச் செயற்பாடுகள் தொடர்பான சான்றிதழ் பாடநெறி

4.2.5 வெளிவாரிக் கற்கைநெறிகளுக்காக நுழைவுபெற்ற மாணவர்கள் (2022)

வெளிவாரிப் பட்டதாரிக் கற்கைநெறிகளுக்கான புதிய மாணாக்கர் சேர்க்கை (மொத்த மாணவர் எண்ணிக்கை) - 2022

பாடநெறிக் கற்கை	கற்கை ஆண்டு	புதிய சேர்க்கையாளர் (ஜனவரி-டிசம்பர் 2022)			மாணவர் சேர்க்கை (31 டிசம்பர் 2022 இல் பதிவு செய்த மாணவர் மொத்த எண்ணிக்கை)		
		ஆண்	பெண்	மொத்தம்	ஆண்	பெண்	மொத்தம்
வணிக நிர்வாகத்துறை இளமாணி பொதுத்துறை (வெளிவாரிப்) பட்டம்	2021/ 2022	-	-	-	81	164	245

4.3 பழங்குடிச் சமூகக் கற்கைகளுக்கான மையம்

4.3.1 சுருக்க வரலாறு

பழங்குடிச் சமூக ஆய்வுகளில் முதுமாணிப் பட்டக் கற்கையைத் தொடர ஆர்வமுள்ளவர்களுக்கு உரிய வசதிகளை வழங்கும் நோக்கில் இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகத்தில் பழங்குடிச் சமூகக் கற்கைகளுக்கான மையம் 2006 டிசம்பர் 18 ஆம் திகதி நிறுவப்பட்டது. அதன்படி, இந்த மையம் மூன்று கற்கை நெறிகளை அறிமுகப்படுத்தியுள்ளது. அவையாவன: முதுகலை டிப்ளோமா (PGD), முதுதத்துவமாணி (MPhil) கலாநிதிப் பட்டம் (PhD) என்பனவாகும்.

4.3.2 ஊழியர்

பழங்குடிச் சமூகக் கற்கைகளுக்கான மையமானது ஒரு பணிப்பாளர், முகாமைத்துவ உதவியாளரான ஒரு சிரேஷ்ட ஊழியர் ஆகியோரைக் கொண்டமைந்துள்ளது.

பணிப்பாளர் - கலாநிதி H. U. S. பிரதீப், சமூக விஞ்ஞானங்கள் மற்றும் மொழிகள் பீடம்

4.3.3 விபரவரைவு

பழங்குடிச் சமூக ஆய்வுகளில் முதுமாணிப் பட்டக் கற்கையைத் தொடர ஆர்வமுள்ளவர்களுக்கு உரிய வசதிகளை வழங்கும் நோக்கில் இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகத்தில் பழங்குடிச் சமூகக் கற்கைகளுக்கான மையம் 2006 டிசம்பர் 18 ஆம் திகதி நிறுவப்பட்டது. அதன்படி, இந்த மையம் மூன்று கற்கை நெறிகளை அறிமுகப்படுத்தியுள்ளது. அவையாவன: முதுகலை டிப்ளோமா (PGD), முதுதத்துவமாணி (MPhil) கலாநிதிப் பட்டம் (PhD) என்பனவாகும். பழங்குடிச் சமூகக் கற்கைகள் மையத்தில் மேற்படி பாடநெறிகளைக் கற்க விரும்பும் விண்ணப்பதாரிகள் இலங்கையிலோ உலகின் வேறு எந்த நாட்டிலுமோ பழங்குடிச் சமூகம் பற்றிய ஆய்வுகளைத் தொடர ஊக்குவிக்கப்படுகிறார்கள். இந்த மையம் ஆண்டுதோறும் மாணவர்களின் துறைசார் கற்கைத் திறனை அதிகரிக்கவும், தங்கள் பட்டக் கற்கை நெறிகள் தொடர்பான ஆய்வுகளை வெற்றிகரமாகவும் தாமதமின்றியும் நிறைவுசெய்வதை ஊக்குவித்து வருகிறது.

4.3.4 2022 ஆம் ஆண்டுக்கான அடைவுகள்

- பட்டப்பின் கற்கையில் ஏழுபேர் பட்டம் பெற்றமை (M.Phil./Ph.D.)
- நான்கு கலாநிதிப்பட்ட ஆய்வேடுகள் மதிப்பாய்வு செய்யப்பட்டமை
- மூன்று முதுதத்துவமாணி ஆய்வேடுகள் மதிப்பாய்வு செய்யப்பட்டமை
- பட்டப்பின் கற்கைக்கான (M.Phil./Ph.D.) ஐந்து முன்மொழிவுகள் மதிப்பாய்வு செய்யப்பட்டமை
- பட்டப்பின் கற்கைக்காகச் (M.Phil./Ph.D.) ஒன்பது ஆய்வு முன்மொழிவுகள் அளிக்கை செய்யப்பட்டுள்ளமை
- மூன்று மாணவர்களுக்கு தேர்வுக்கான நேர்முகங்கள் நடாத்தி முடிக்கப்பட்டமை (முதுதத்துவமாணி)
- ஐந்து மாணவர்களுக்கு தேர்வுக்கான நேர்முகங்கள் நடாத்தி முடிக்கப்பட்டமை (கலாநிதிப் பட்டம்)
- *ஆக்யான' ஆய்வு மின்னிதழின் முதலாம் தொகுதி வெளியிடப்பட்டமை*
- ஜனவரி 2021 ஆம் ஆண்டுக்கான முதுதத்துவமாணி/ கலாநிதிப்பட்டக் கற்கைகளுக்காக நான்கு மாணவர்கள் பதிவு செய்துள்ளமை
- இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகத்தின் சமூகவியல் துறையின் கூட்டிணைவுடன் CIKCS கருத்தரங்கத் தொடரொன்று ஒழுங்குசெய்யப்பட்டு ஐந்து அதிதி விரிவுரைகள் நிகழ்த்தப்பட்டமை
- CIKCS இற்கான YouTube அலைவரிசையொன்று தொடங்கப்பட்டமை

4.4 ஊழியர் மேம்பாட்டு மையம்

4.4.1 சுருக்க வரலாறு

இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகத்தின் பணியாளர் மேம்பாட்டு மையம் (SDC) எப்போதும் நட்பார்ந்த சூழலில் ஊழியர்களிடமிருந்து திறமையான மற்றும் பயனுள்ள சேவையைப் பெறுவதற்கும் தேசிய வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்வதற்கும் இலங்கையில் உள்ள பல்கலைக்கழக அமைப்பில் உள்ள சமூகங்களின் அறிவு மற்றும் திறன்களை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த மையம் மேல்மட்ட முகாமைத்துவம், கல்வித்துறைசார் ஊழியர்கள், நிர்வாக மற்றும் பணியாளர் பிரிவுகள், கல்வி சார் உதவி ஊழியர்கள், தொழினுட்ப அதிகாரிகள் மற்றும் பிற கல்விசாரா மற்றும் நிர்வாக ஊழியர்களுக்கான பயிற்சித் திட்டங்கள், பட்டறைகள் மற்றும் பிற செயல்பாடுகளை அவர்களின் அறிவு, திறன்கள் மற்றும் அணுகுமுறைகளை மேம்படுத்த ஏற்பாடு செய்கின்றது.

4.4.2 ஊழியர்

இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகத்தின் பணியாளர் மேம்பாட்டு மைய (SDC) மானது பணியாளர் மேம்பாட்டு மையங்களின் தரவரிசைப்படி II ஆம் தர வரிசையின்கீழ் வகைப்படுத்தப் பட்டுள்ளது. எனவே, ஒருங்கிணைப்பாளர்களுக்கான பணிநிலை ஏற்பாடுகள் பரிந்துரைக்கப் படவில்லை. இருப்பினும், பகுதி நேரப் பணிப்பாளர் ஒருவரும், பகுதி நேர நிகழ்ச்சித் திட்ட முகாமையாளர் ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பணியாளர் மேம்பாட்டு மையம் (SDC) நேரடியாக துணை வேந்தரின் கண்காணிப்பில் இருப்பதோடு, ஒரு பகுதிநேரப் பணிப்பாளரால் நிர்வகிக்கப்படுகிறது.

பணிப்பாளர் - பேரா. அருண சாந்தாராச்சி

நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர்- செல்வி Y. S. சந்திரசேகர
(உதவிப் பதிவாளர்/ சமூக விஞ்ஞானங்கள் மற்றும் மொழிகள் பீடம்)

முகாமைத்துவ உதவியாளர் (தரம்- I) - H. I. A. பெரேரா

பணி உதவியாளர் (தரம் – III) - B. S. H. ஜயசிரி

பணியாளர் மேம்பாட்டு மையத்திற்கான ஒலி/ஒளிப்பதிவுத் (Audio-visual) தொழினுட்பவியலாளர்/ அலுவலர் எவரும் இதுவரை நியமிக்கப் படவில்லை.

4.4.3 முகாமைத்துவக் குழு

1) சிரேஷ்ட பேரா. R. M. U. S. K. ரத்னாயக்க -துணைவேந்தர் -தலைவர்
2) பேரா. அருண சாந்தாராச்சி - **பணிப்பாளர்** /SDC - MC செயலாளர்

3) பேரா. H. M. S. பிரியநாத் - பீடாதிபதி/பட்டதாரிக் கற்கைகள் பீடம்
4) கலாநிதி M. M. P. சுமித் - பீடாதிபதி/விவசாய விஞ்ஞான பீடம்
5) கலாநிதி E. P. N. உதயகுமார - பீடாதிபதி/பிரயோக விஞ்ஞான பீடம் (20.02.2022 முதல்)
6) கலாநிதி R. S. சபரகமுவ - பீடாதிபதி/பிரயோக விஞ்ஞான பீடம் (19.05.2022 வரை)
7) திரு. P. G. V. அபேரத்ன - பீடாதிபதி/வரைபட(கேத்திர)கணித பீடம்
8) பேரா. W. K. A. C. ஞானபால - பீடாதிபதி/முகாமைத்துவக் கற்கைகள் பீடம்
9) பேரா. M. N. விக்ரமரத்ன - பதில் பீடாதிபதி/ மருத்துவ பீடம்

10) கலாநிதி M. A. C. S. S. ஃபெர்ணான்டோ -பீடாதிபதி/ சமூக விஞ்ஞானங்கள் மற்றும் மொழிகள் பீடம்

11) பேரா. K. R. கொஸ்வத்தகே - பீடாதிபதி /தொழினுட்பவியல் பீடம்
12) கலாநிதி அசங்க D. அம்பிட்டியாவத்த - பீடாதிபதி /தொழினுட்பவியல் பீடம்
13) திரு. சமன் உயங்கொட - பதிவாளர்
14) திரு. K. A. R. S. ஜயகொடி - பொருளாளர் (01.08.2022 முதல்)
15) திரு. W. A. M. P. சேனாதீர - பதில் பொருளாளர் (31.07.2022 வரை)
16) திருமதி T. N. ஞெய்சூரி - நூலகர்
17) பேரா. R. M. K. T. ரத்னாயக்க - பௌதீக விஞ்ஞானம் மற்றும் தொழினுட்பவியல் துறை, பிரயோக விஞ்ஞான பீடம்
18) பேரா. R. J. M. உடபோருவ - புவியியல் மற்றும் சூழலியல் விஞ்ஞானங்கள் துறை, சமூக விஞ்ஞானங்கள் மற்றும் மொழிகள் பீடம்
19) திரு. H. W. குணதாச - பேரவை உறுப்பினர்
20) திரு. பியதிஸ்ஸ ரணசிங்ஹ - பேரவை உறுப்பினர்

4.4.4 செயற்றிட்டக் குழு

பேரா. அருண சாந்தாராச்சி	-	பணிப்பாளர் / SDC - தலைவர்
செல்வி Y.S. சந்திரசேகர செயலாளர் of SDC	-	நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர் –
சிரேஷ்ட பேரா. லால் P. விதான ஆரச்சி	-	விவசாய விஞ்ஞான பீடம்
பேரா. G.M.L.P. அபொன்சு	-	பிரயோக விஞ்ஞான பீடம்
திருமதி J.A.S. ஜயகொடி	-	வரைபட(கேத்திர)கணித பீடம்
திரு. C.N.R. விஜேசுந்தர	-	முகாமைத்துவக் கற்கைகள் பீடம்
பேரா. A. சரத் ஆனந்த பீடம்	-	சமூக விஞ்ஞானங்கள் மற்றும் மொழிகள்
கலாநிதி N.D. அமல் வகீஷ	-	மருத்துவ பீடம்
கலாநிதி G.D.K. குமார	-	விவசாய விஞ்ஞான பீடம்
கலாநிதி H.K.S. பிரேமதாச	-	கணினிக் கற்கைகள் மையம்
திரு. R.L. தங்கல்ல	-	பணிப்பாளர் / கணினிக் கற்கைகள் மையம்
கலாநிதி K.S.N. பிரசங்கனி	-	தலைவர்/ ஆங்கில மொழிக் கற்பித்தல் துறை/ சமூக விஞ்ஞானங்கள் மற்றும் மொழிகள் பீடம்
திரு. D. ஜாசிங்ஹ	-	பணிப்பாளர் / திறந்த மற்றும் தொலைக்கல்வி கற்றல் மையம்
கலாநிதி (திருமதி) R.M.A.S. பண்டார	-	பணிப்பாளர் / தொழில் வழிகாட்டல் அலகு

4.4.5 2022 ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பயிலரங்குகள்

பயிலரங்கு இடம்பெற்ற திகதி	பயிலரங்கின் பெயர்	வளவாளரின் பெயர்	இலக்குக் குழு
2022.01.07 2022.01.13	ஆளுமை விருத்தியும் உளவள வழிகாட்டலும்	கலாநிதி W. M. J. வெல்கம	2021/2022ஆண்டுக் கான கற்பித்தல் முறையியல் பயிற்சி நெறிக்காகத் தெரிவுசெய்யப்பட்ட கல்வியாளர்கள்
2022.01.21 2022.01.22 2022.03.04 2022.03.05	கற்றல் கற்பித்தல் முறைமைகள்	பேரா. சலிந்த பெனரகம	
2022.01.25 2022.01.26 2022.01.27 2022.01.28	வினைத்திறனும் தர முகாமைத்துவமும்	திருமதி K. N. S. பெரேரா திருமதி D. U. K. தங்கல்ல	கல்விசாரா ஊழியர்கள்
2022.02.18 2022.02.25	கணிப்பீடும் மதிப்பாய்வும்	கலாநிதி A. D. அம்பிட்டியாவத்த	2021/2022ஆண்டுக் கான கற்பித்தல் முறையியல் பயிற்சி நெறிக்காகத் தெரிவு செய்யப்பட்ட கல்வியாளர்கள்
2022.03.11 2022.03.18	உயர்கல்விக்கான ICT திறன்கள்	கலாநிதி R. L. தங்கல்ல	
2022.03.21 2022.03.22 2022.03.23 2022.03.24	வினைத்திறனும் தர முகாமைத்துவமும்	திருமதி K.N.S. பெரேரா திருமதி D.U.K. தங்கல்ல	கல்விசாரா ஊழியர்கள்
2022.03.25	பல்கலைக்கழகங்களுக் கான மூலோபாயத் திட்டமிடலும் முகாமைத்துவமும்	பேரா. W. A. K. C. ஞானபால	2021/2022 ஆம் ஆண்டுக்கான கற்பித்தல் முறையியல் பயிற்சி நெறிக்காகத் தெரிவு செய்யப்பட்ட கல்வியாளர்கள்
2022.03.31 2022.04.01	பாடத்திட்ட வடிவமைப்பும் மீளாய்வும்	பேரா. பண்டார வன்னிநாயக்க	
2022.04.08	பல்கலைக்கழக நிர்வாக நடைமுறைகள்	திரு. M. F. H. கரீம்	
2022.04.29	**விடயதானம் 1:** சமூகப் பரிணாமம் மற்றும் தொழில் துறை வளர்ச்சியில் ஆய்வின் வகிபங்கு **விடயதானம் 2:** ஆய்வுநெறிமுறைகள் **(இணையவழி)**	பேரா. M. M. P. சுமித்	
2022.04.30	**விடயதானம் 3:** ஆய்வு முன்மொழிவும் வரைபும்**(இணையவழி)**	பேரா. D. M. A. குணரத்ன	
2022.05.06	**விடயதானம் 4:** இலக்கிய மீளாய்வு **(இணையவழி)**	பேரா. H. M. S. பிரியநாத்	

பயிலரங்கு இடம்பெற்ற திகதி	பயிலரங்கின் பெயர்	வளவாளரின் பெயர்	இலக்குக் குழு
2022.05.07	**விடயதானம் 4:** கருதுகோள்கள், செயன்முறையாக்கல், உசாத்துணைமுறைமை **(இணையவழி)**	பேரா. H. M. S. பிரியநாத்	2021/2022ஆண்டுக் கான கற்பித்தல் முறையியல் பயிற்சி நெறிக் காகத் தெரிவு செய்யப்பட்ட கல்வியாளர்கள்
2022.05.20	**விடயதானம் 5: பண்புசார் தரவுப் பகுப் பாய்வு (இணையவழி)**	கலாநிதி Sampath ஃபெர்ணான்டோ	
2022.05.21	**விடயதானம்6: அளவைசார் தரவுப் பகுப் பாய்வு (இணையவழி)**	கலாநிதி சரத் முனசிங்ஹ	
2022.05.27	**விடயதானம்7: ஆய்வ**றிவியல் எழுத்து/ஆய்வு வெளி யீட்டுக்கான தொடர் பாடல் **(இணையவழி)**	பேரா. மனோஜ் ஆரியரத்ன	
2022.05.28	**விடயதானம் 8:** பதிப்புப் புரட்டு என்பது என்ன, ஏன், எவ்வாறு? **(இணையவழி)**	பேரா. பிரபாத்ஜயசிங்ஹ	
இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகத்தின் வணிக இடைத்தொடர்புகள் கூடமானது (UBLC) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை இல. 10/2016 இற்கமைய 2018 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நிறுவப்பட்டது. பல்கலைக்கழகத்தின் வணிக இடைத்தொடர்புகள் கூடத்தினை நிறுவி மேம்படுத்துவது தொடர்பான ஒப்பந்தமானது உயர்கல்வி விரிவாக்கம் மற்றும் வளர்ச்சியைத் துரிதப்படுத்தும் (AHEAD) செயற்திட்டத்திற்கும் இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகத்திற்கும் இடையே 2018 ஆம் ஆண்டு டிசம்பர் 27 ஆம் திகதி கைச்சாத்தானது. அதைத் தொடர்ந்து பல்கலைக்கழகத்தினுள் மேற்கொள்ளப்படும் ஆய்வுகள் மற்றும் புத்தாக்கச் செயற்பாடுகளை வெளிவாரி வணிக ரீதியான பங்கேற்பாளர்களுடன் தொடர்புபடுத்திவிடும் பொறுப்பினை இக்கூடம் ஏற்றுள்ளது. மேலும், இவ்வணிக இடைத்தொடர்புக் கூடமானது தனியார் மற்றும் அரச வணிகத் துறையாளர்களுக்கும் கல்வியாளர் சமூகம், பீடங்கள், பட்டதாரி மாணவர்களுக்கும் இடையிலான இடைவெளியினைக் குறைத்து, அவர்களுக்கிடையே தொடர்பினைக் கட்டியெழுப்பும் பணியினைச் செய்துவருகின்றது.

4.7.4 ஊழியர்கள்

பணிப்பாளர்

பேரா. D.A.I. தயாரத்ன - முகாமைத்துவக் கற்கைகள் பீடம்

ஆலோசனைச் சபை

சிரேஷ்ட பேரா. R.M.U.S.K. ரத்னாயக்க	- துணைவேந்தர், SUSL (ஆலோசனைச் சபைத் தலைவர்)
பேரா. H.M.S. பிரியநாத்	– பீடாதிபதி, பட்டதாரிக் கற்கைகள் பீடம், SUSL
பேரா. P.M.A.S. கருணாரத்ன	- பீடாதிபதி, விவசாய விஞ்ஞான பீடம், SUSLபேரா.
E.P.N. உதயகுமார	- பீடாதிபதி, பிரயோக விஞ்ஞான பீடம், SUSL திரு.
P.G. விபுல அபேரத்ன	- பீடாதிபதி, வரைபட(கேத்திர)கணித பீடம், SUSL
பேரா. M. நிர்மலி விக்ரமரத்ன	- பீடாதிபதி, மருத்துவ பீடம், SUSL
பேரா. W.K. அதுல ஞானபால	- பீடாதிபதி, முகாமைத்துவக் கற்கைகள் பீடம், SUSL
கலாநிதி M.A.C.S.S. ஃபெர்ணான்டோ	- பீடாதிபதி, சமூக விஞ்ஞானங்கள் மற்றும் மொழிகள் பீடம், SUSL
பேரா. K.R. கொஸ்வத்தகே	- பீடாதிபதிதொழினுட்பவியல் பீடம், SUSL
திரு. சம்பி குணசீல	பணிப்பாளர், சபரகமுவ வர்த்தக மற்றும் தொழிற் சபை
திரு. P.M. சமேந்திர சோமதுங்க	- தலைவர், ஃபுட் அன்ட் நேச்சர், பிரைவேட் லிமிட்டட்
திரு. D.A. டி. S. விக்ரமநாயக்க	- தலைவர், வரை. பெலவத்தே பாற்பொருள் தயாரிப்புத் தனியார் நிறுவனம்
திரு. W.R.N. தீபகொட	- பதில் உதவிப் பணிப்பாளர், தொழில் அபிவிருத்திச் சபை, இரத்தினபுரி
திரு. P. ரணசிங்ஹ	-பேரவை உறுப்பினர், இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம்
திரு. H.W. குணதாச	- பேரவை உறுப்பினர், இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம்
திரு. S. உயங்கொட	- பதிவாளர், இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம்

பீட ஒருங்கிணைப்பாளர்கள்

திரு. I.C. ஹெட்டிஆரச்சி	-	விவசாய விஞ்ஞான பீடம்
கலாநிதி திலினி C. கனகே	-	பிரயோக விஞ்ஞான பீடம்
கலாநிதி N.M.P.M. பியசேன	-	வரைபட(கேத்திர)கணித பீடம்
திருமதி A.W.G.C.N. விஜேதுங்க	-	முகாமைத்துவக் கற்கைகள் பீடம்
கலாநிதி A.M.S.U. அந்ததொல	-	மருத்துவ பீடம்
கலாநிதி K.S.N. பிரசங்கனி	-	சமூக விஞ்ஞானங்கள் மற்றும் மொழிகள் பீடம்
கலாநிதி N.P. லியனவடுகே	-	தொழினுட்பவியல் பீடம்

கூட முகாமையாளர்

செல்வி M.P.T.R. சங்கல்பனா

வணிக மேம்பாட்டு முகாமையாளர்

செல்வி S. M. M. N. குமாரி

4.7.5 சுயவிபரக் கோவை

இலங்கையின் சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் பல்கலைக்கழக வணிக இடைத்தொடர்புக் கூடமானது (UBLC) கல்வியாளர்களையும் தொழில்துறையையும் ஒரு நிலையான புத்தாக்க அமைப்பினை உருவாக்கும் நோக்கில் இணைக்கிறது. பல்கலைக்கழகங்களில் இருந்து உருவாகும் அறிவுக்கும் புத்தாக்க ஆர்வத்துடன் பொருட்கள், சேவைகளில் தேடலுடைய தொழில்துறை மற்றும் வணிக சமூகத்திலிருந்து உருவாக்கப்படும் அறிவுக்கும் இடையே உள்ள ஆராய்ச்சி இடைவெளியை இட்டுநிரப்பும் வகையில், புரட்சிகரமான சிந்தனைகளைக் கொண்ட அர்ப்பணிப்புள்ள, ஊக்கமளிக்கும் ஆராய்ச்சியாளர்களின் குழுமமே பல்கலைக்கழகத்தின் பலங்களில் ஒன்றாகும். பல்கலைக்கழகம், வணிகப் பங்காளிகள் மற்றும் பிற பொது மற்றும் தனியார் துறைகளுக்கு இடையேயான தொடர்பை வளர்ப்பதில் வணிகமயமாக்கலுக்கான நடைமுறைக் கட்டமைப்பின் மூலம் பல்கலைக்கழக ஆராய்ச்சி முடிவுகளைப் பரிமாற்றுவதற்கும், புலமைச் சொத்துக்களின் பாதுகாப்பையும் முகாமைத்துவத்தையும் உறுதி செய்வதற்கும் உதவுகிறோம். மேலும், UBLC ஆனது தொழில்துறைச் சிக்கல்களை சாத்தியமான தீர்வுகளுடன் கலந்தாலோசிப்பதன் மூலம் புத்தாக்கக் கண்டுபிடிப்பாளர்களுக்குச் சந்தையில் ஒரு முக்கிய இடத்தைப் பெறுவதற்கான தொலைநோக்கு தளத்தையும் உருவாக்குகிறது.

எமது தொழிற்பாடுகள்

- பொருத்தமான நிபுணத்துவ மற்றும் ஆலோசனைச் சேவைகளுக்கான அணுகலை வழங்குவதன் மூலம் வணிகம் சார்ந்த மாணவர்களின் செயற்திட்டங்களை உருவாக்குதலும் நடைமுறைப்படுத்தலும்

- மாணவர்கள், ஊழியர்கள் மற்றும் பிராந்திய SME களுக்கு பயிற்சி, பயிற்றுவிப்பு, வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனைச் சேவைகளை வழங்குதல்.

- பயிலரங்குகள், மாநாடுகள் மற்றும் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்வதன் மூலம் IP இன் முக்கியத்துவம் மற்றும் ஆராய்ச்சி சமூகத்திற்குள் சரியான IP முகாமைத்துவத்தின் அவசியம் பற்றிய விழிப்புணர்வை உருவாக்குதல்.

- கண்டுபிடிப்புகளின் மதிப்பை அடையாளம் காணவும், பாதுகாக்கவும், மதிப்பீடு செய்யவும், வணிகமயமாக்கவும் பல்கலைக்கழகத்தில் ஐபி கொள்கையைச் செயல்படுத்துதல்.

- தொழிற்துறை மற்றும் பல்கலைக்கழகம் இரண்டுக்கும் இடையே ஆராய்ச்சி ஒத்துழைப்பை ஊக்குவித்தல், இதன் விளைவாக பரஸ்பர நன்மை பயக்கும் கூட்டாண்மையை உருவாக்குதல்.

- அறிவு மற்றும் தொழில்நுட்பப் பகிர்வுத் திட்டங்கள் மூலம் உள்ளூர் மற்றும் சர்வதேச ஒத்துழைப்பை உருவாக்கும் வகையில் ஆராய்ச்சியாளர்களுக்கு உதவுதல்.

- உரிமம் மூலம் பல்கலைக்கழகக் கண்டுபிடிப்புகளைச் சந்தை மற்றும் சமூகமயமாக்குவதற்கு வசதி செய்தல்.

நோக்கங்கள்

- பொருளாதார மேம்பாட்டிற்கான முன்னுரிமைப் பிரிவுகளில் உட்சேர்க்கை அதிகரித்தல்
- உயர்கல்வியின் தரத்தை மேம்படுத்துதல்
- ஆராய்ச்சி, அபிவிருத்தி, புதுமை மற்றும் வணிகமயமாக்கலை ஊக்குவித்தல்
- பரந்துபட்ட சமூகத்திற்கு அறிவைப் பரப்புவதன் மூலம் சமூக ஈடுபாட்டை மேம்படுத்துதல்

4.7.6 2022 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள்

ஃபார்ம்கெமி பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துடனான உரிம ஒப்பந்தம்

இலங்கையின் சபரகமுவ பல்கலைக்கழகத்தின் வணிக இடைத் தொடர்புகள் கூடம் (UBLC), ஃபார்ம்கெமி பிரைவேட் லிமிடெட் மூலம் ஸ்பைஸ் லேப் உடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளது. அவ்வகையில், பேரா. சுமித் M. கமகே மற்றும் அவரது ஆராய்ச்சிக் குழுவினரால் மேம்படுத்தப்பட்ட செயற்றிட்டத்தினடியாகக் கறுப்புப் படைவீரன் ஈக்களின் (Black Soldier Fly /Hermetia illucens) முட்டைகளில் இருந்து தோன்றும் புழுக்களில் இருந்து விலங்குணவுகளை உற்பத்திசெய்து வணிகமயப்படுத்தும் உரிமம் கைமாற்றப்பட்டுள்ளது. இந்த விலங்குணவுத் தயாரிப்புகள் விவசாய விஞ்ஞான பீடம் மற்றும் உயர்கல்வி விரிவாக்கம் மற்றும் வளர்ச்சியைத் துரிதப்படுத்தும் (AHEAD) செயற்றிட்டத்தின் கூட்டு ஆராய்ச்சி முயற்சியின் விளைவாக உருவாக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்த முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு 08 ஆம் திகதி டிசம்பர் 2022 அன்று துணைவேந்தர் அலுவலகக் கூட்டமர்வு அறையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகத்தின் துணைவேந்தரும் சிரேஷ்ட பேராசிரியருமான உதய ரத்னாயக்க, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உப தலைவரும் சிரேஷ்ட பேராசிரியருமான சந்தன P. உடவத்த, AHEAD செயல்திட்டத்தின் ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கத்துக்கான முன்னணிக் கல்வியாளரான பேராசிரியர் துசித்த அபேதுங்க, ஃபார்ம்கெமி பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் திரு. உதித்த வணிகசிங்க ஆகியோரும் ஏனைய சிறப்பு அதிதிகளும் கலந்து சிறப்பித்தனர்.

கார்கில்ஸ் சிலோன் PLC நிறுவனத்துடனான உரிம ஒப்பந்தம்

இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகமானது தனது வணிக இடைத் தொடர்புகள் கூடத்தின் (UBLC) ஊடாக கார்கில்ஸ் சிலோன் PLC நிறுவனத்துடன் 5 ஆவது உரிம ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. அதன்படி, பேராசிரியர் அச்சினி டி சில்வா அவர்களாலும் அவரது ஆராய்ச்சிக் குழுவினராலும் கண்டறிந்து

செம்மைப்படுத்தப்பட்ட கறுவாவினால் தயாரிக்கப்பட்ட கோலா பானத்தை வணிகமயப்படுத்துவதற்கான முன்னெடுப்பு வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்தத் தயாரிப்பும் விவசாய விஞ்ஞான பீடம் மற்றும் உயர்கல்வி விரிவாக்கம் மற்றும் வளர்ச்சியைத் துரிதப்படுத்தும் (AHEAD) செயற்றிட்டத்தின் கூட்டு ஆராய்ச்சி முயற்சியின் விளைவாகவே உருவாக்கப்பட்டுள்ளமை சிறப்பு.

இந்த ஒப்பந்த நிகழ்வு துணைவேந்தர் அலுவலகக் கூட்டமர்வு அறையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகத்தின் துணைவேந்தரும் சிரேஷ்ட பேராசிரியருமான உதய ரத்னாயக்க, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உப தலைவரும் சிரேஷ்ட பேராசிரியருமான சந்தன P. உடவத்த, கார்கிள்ஸ் சிலோன் PLC நிறுவனத்தின் பணிப்பாளர்களான திரு. திலந்த ஜயவர்தன, திரு. புதிஷ ஹேரத் ஆகியோருடன் ஏனைய சிறப்பு அதிதிகளும் கலந்து சிறப்பித்தனர்.

2022 ஆம் ஆண்டில் கைச்சாத்தான புரிந்துணர்வு ஒப்பந்தம்

1. எத்திமலே பெருந்தோட்டத் தனியார் (வரையறு.) நிறுவனத்துடனான புரிந்துணர்வு ஒப்பந்தம்

இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகமானது தனது வணிக இடைத் தொடர்புகள் கூடத்தின் (UBLC) ஊடாக 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 26 ஆம் திகதி எத்திமலே பிளான்டேஷன் (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளது. விவசாய வணிக முகாமைத்துவத் துறை, விவசாய விஞ்ஞான பீடம் மற்றும் எதிமலே பிளான்டேஷன் (பிரைவேட்) லிமிடெட் ஆகியவற்றுக்கு இடையே விவசாய வணிகம் மற்றும் உணவு விஞ்ஞான ஆராய்ச்சிச் செயற்பாடுகளில் ஒத்துழைப்பை மேம்படுத்துவதும் பரஸ்பர நன்மை பயக்கும் வகையிலான ஒருங்கிணைப்பினை ஏற்படுத்துவதும் இந்த ஒப்பந்தத்தின் நோக்கமாகும். இந்த ஒப்பந்தத்தில் துணைவேந்தரும் சிரேஷ்ட பேராசிரியருமான உதய ரத்னாயக்க, எதிமலே பிளான்டேஷன் (பிரைவேட்) லிமிட்டெட்டின் தலைமைச் செயற்பாட்டு அதிகாரி திரு. தம்மிக்க சரத் விஜேசேகர, தோட்டத்துறை சார்ந்த துணைப் பொது முகாமையாளர் திரு. E. நயன டி Z அபேசேகர ஆகியோர் கைச்சாத்திட்டனர். ஒப்பந்தத்தின்படி, இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகமானது இந்த ஒருங்கிணைப்பினை வெற்றிகரமாகச் செய்வதற்குப் பொருத்தமான நிபுணத்துவத் தகவல்களையும் வசதிகளையும் வழங்கும் அதேவேளை, எதிமலே பிளான்டேஷன் (பிரைவேட்) லிமிட்டெட் ஆனது தொழில்துறை, ஆராய்ச்சி மற்றும் கல்வித்துறை சார்ந்த ஒத்துழைப்பினை உறுதிப்படுத்தும். அதன்படி, இந்த ஒப்பந்தத்தின் மூலம் இரு தரப்பினரும் அறிவு சார்ந்த செயற்பாடுகளை முன்னெடுத்து, ஊக்குவிப்பதன் மூலம் உலகளாவிய சந்தை வாய்ப்புக்கான வழிகளைத் திறந்துவிடுதல் சாத்தியப்படும்.

2. லங்கா சீனி (வரையறு- தனியார்) நிறுவனத்துடன் ஆராய்ச்சி ஒப்பந்தம்

கரும்புத் தோட்டங்களின் சுகாதார நிலைமைகளைக் கண்காணித்தல், கரும்புத் தோட்டங்களின் முதிர்ச்சி நிலைகளைக் கண்காணித்தல் ஆகியன தொடர்பாக

பரஸ்பர நன்மை பயக்கும் ஒத்துழைப்பை ஏற்படுத்துவதற்காக 2022 ஆம் ஆண்டு செப்டம்பர் 12 ஆம் திகதி பெல்வத்தை லங்கா சுகர் கம்பனி பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துடன் இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் வணிக இடைத் தொடர்புகள் கூடத்தின் (UBLC) ஊடாக ஆராய்ச்சி ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது. இந்த ஒப்பந்தத்தில் சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் துணைவேந்தரும் சிரேஷ்ட பேராசிரியருமான உதய ரத்நாயக்க, – லங்கா சுகர் கம்பனி பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் பெல்வத்த பிரிவின் தலைவர் திரு. ஜனக நிமலச்சந்திர ஆகியோர் கைச்சாத்திட்டார்கள்.

3. கொழும்புப் பங்குச் சந்தையுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்

இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகமானது தனது வணிக இடைத் தொடர்புகள் கூடத்தின் (UBLC) ஊடாகக் கொழும்பு பங்குச் சந்தையுடன் 29 நவம்பர் 2022 அன்று மூன்று வருடகாலப் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றை மேற்கொண்டுள்ளது. இந்த ஒப்பந்தத்தில் இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர், சிரேஷ்ட பேராசிரியர் உதய ரத்னாயக்க, கொழும்பு பங்குச் சந்தையின் சந்தைப்படுத்தல் பிரிவின் உபதலைவர் திரு. நிரோஷன் விஜேசுந்தர ஆகியோர் கைச்சாத்திட்டனர். இதனடியாக, இலங்கையின் மூலதனச் சந்தையைத் திறம்பட ஊக்குவிக்கும் வகையிலும், நிதி முகாமைத்துவம் மற்றும் வங்கியியலுடன் தொடர்பான பட்டக்கற்கைகளில் ஈடுபட்டுள்ள மாணவர்களுக்கு அத்துறைசார்ந்த வேலைகளில் பயிற்சி வாய்ப்புகளை மேம்படுத்துவதற்காகவும் இருதரப்பிலும் பரஸ்பரக் கூட்டிணைவு முன்னெடுப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சர்வதேசக் கூட்டிணைவு முன்னெடுப்புகள்

மலேசிய CUPPA நிறுவனத்துடனான கலந்தாய்வுக்கூட்டம்

இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் வணிக இடைத் தொடர்புகள் கூடமானது (UBLC) உலகின் சிறந்த வறுத்த கோப்பிகளை வழங்கும் நிறுவனங்களில் ஒன்றான மலேசிய நாட்டு CUPPA நிறுவனத்துடன் ஸூம் செயலி ஊடாக ஒரு கலந்தாய்வுக் கூட்டத்தினை 2022 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 29 ஆம் திகதி அன்று ஒழுங்கு செய்திருந்தது. அதில் பிரயோக விஞ்ஞான பீடத்தினால் கண்டுபிடிக்கப்பட்ட மல்லா எனப்படும் தாவரத்தைப் பயன்படுத்தி மூலிகைத் தேநீர் உருவாக்கத் திட்டத்தினைத் தயாரிப்பது தொடர்பில் கலந்தாய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த அமர்வின்போது, CUPPA நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் திரு. பிரதீப் ரூபகே அவர்கள் மேற்படி மூலிகைத் தேநீரை மலேசிய ஆட்புல எல்லைக்குள் வணிகமயப்படுத்துவது தொடர்பில் தனது விருப்பத்தினைத் தெரிவித்து இருந்ததோடு, இப்பரஸ்பரக் கூட்டிணைவினால் எதிர்காலத்தில் இரு தரப்பினரும் அடையக்கூடிய நலன்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

சுராவி ஹோல்டிங்க்ஸ் (வரையறு) நிறுவனத்துடனான கலந்தாய்வுக்கூட்டம்

இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் வணிக இடைத் தொடர்புகள் கூடமானது (UBLC) சுராவி ஹோல்டிங் (வரையறு) நிறுவனத்துடன் 2022 ஆம் ஆண்டு டிசம்பர் 20 ஆம் திகதி அன்று ஒரு கலந்தாய்வுக் கூட்டத்தினை ஒழுங்குசெய்திருந்தது. ஸூம் செயலி ஊடாக இடம்பெற்ற இக்கூட்டத்தின் போது, ஆரோக்கியமான சூப் கலவை, பூசணிக்காய் மா நூடில்ஸ் ஆகியவற்றை வணிகமயப்படுத்துவதற்கான ஆரம்ப முன்னெடுப்புகள் குறித்துக் கலந்துரையாடப்பட்டது. சுராவி ஹோல்டிங் (வரையறு) நிறுவனமானது அலோரா எனும் வியாபாரக் குறியீட்டின்கீழ் பழங்கள், மரக்கறிகள், மூலிகைப் பொருட்களை உற்பத்திசெய்து, அவற்றைப் பதப்படுத்திப் பாதுகாத்து வினியோகித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. சுராவி ஹோல்டிங் (வரையறு) நிறுவனத்தின் பணிப்பாளர் செல்வி அசேல குருப்பு ஆராச்சி பல்கலைக்கழகத்தின் மேற்படி கண்டுபிடிப்புகளை வணிகமயப்படுத்துவதற்கான தனது விருப்பத்தினைத் தெரிவித்து இருந்ததோடு, இப்பரஸ்பரக் கூட்டிணைவினால் எதிர்காலத்தில் இரு தரப்பினரும் அடையக்கூடிய நலன்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டமை விதந்துரைக்கத்தக்கது.

UBLC இனால் 2022 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பயிலரங்குகளும் வலையரங்குகளும்

1. UBL கூடத்தின் பணிப்பாளர் பேராசிரியர் D.A.I. தயாரத்ன அவர்களால் 2022 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 04 ஆம் திகதி, "புலமைத்துவச் சொத்து முகாமைத்துவம்" எனும் தலைப்பில் வலையரங்கொன்று ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது. இதில் சமூக விஞ்ஞானங்கள் மற்றும் மொழிகள் பீடத்தின் கல்வியாளர்களும் பட்டதாரி மாணவர்களும் கலந்து சிறப்பித்தனர். இந்த அமர்வில் பின்வரும் விடயதானங்கள் கலந்துரையாடப்பட்டன:

    - UBL கூடத்தின் வகிபாகம்
    - புலமைத்துவச் சொத்துப் பாதுகாப்பு
    - தேசிய மற்றும் சர்வதேச உரிமப் பாதுகாப்பு/ படைப்புரிமை மற்றும் அதனுடன் தொடர்புடைய உரிமைகளும் IP பாதுகாப்பின் பிற வடிவங்களும்
    - IP வணிகமயமாக்கல்
    - உரிமத் தகவல் தேடல்
    - செயற்கை நுண்ணறிவோடு தொடர்புடைய IP பாதுகாப்பு.

2. பல்கலைக்கழகத்தின் வணிக இடைத் தொடர்புகள் கூடம் (UBLC) 2022 மார்ச் 17 ஆம் திகதி அன்று மு.ப. 7.30 முதல் மு.ப. 9.30 வரை ஸூம் செயலி ஊடாக இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகத்தின் பட்டதாரிக் கற்கைகள் பீடக் கல்வியாளர்களுக்கும் பட்டதாரி மாணவர்களுக்கும், 'புலமைத்துவச் சொத்து முகாமைத்துவம்' தொடர்பில் வலையரங்கொன்றை ஏற்பாடு செய்திருந்தது. இந்நிகழ்வில் UBL கூடத்தின் பணிப்பாளர் பேராசிரியர் D.A.I. தயாரத்ன அவர்கள் உரை நிகழ்த்தினார்.

3. பல்கலைக்கழகத்தின் வணிக இடைத் தொடர்புகள் கூடம் (UBLC) 2022 ஜனவரி 18 ஆம் திகதி அன்று மு.ப. 9.00 முதல் மு.ப. 11.00 வரை ஸூம் செயலி ஊடாக இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகத்தின் விவசாய விஞ்ஞான பீடக் கல்வியாளர்களுக்கும் பட்டதாரி மாணவர்களுக்கும், 'புலமைத்துவச் சொத்து முகாமைத்துவம்' தொடர்பில் வலையரங்கொன்றை ஏற்பாடு செய்திருந்தது. இந்நிகழ்வில் UBL கூடத்தின் பணிப்பாளர் பேராசிரியர் D.A. இந்துனில் தயாரத்ன அவர்கள் உரை நிகழ்த்தினார்.

4. 2022 ஆகஸ்ட் 5 ஆம் திகதி ஸூம் செயலி ஊடாக இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவக் கற்கைகள் பீடத்தின் சந்தைப்படுத்தல் முகாமைத்துவத் துறையினால் 'புலமைத்துவச் சொத்து முகாமைத்துவம் மற்றும் பாதுகாப்பு' எனும் தலைப்பில் வலையரங்கொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்நிகழ்வில் பல்கலைக்கழகத்தின் வணிக இடைத் தொடர்புகள் கூடத்தின் (UBLC) பணிப்பாளர் பேராசிரியர் D.A. இந்துனில் தயாரத்ன அவர்கள் புலமைத்துவச் சொத்துக்களின் பாதுகாப்பு, முகாமைத்துவம், வணிகமயமாக்கல் என்பன தொடர்பில் உரை நிகழ்த்தினார்.

5. CLDP நேபால் நிகழ்வு

   நேபாளத்தின் காத்மண்டுவில் செப்டம்பர் 25-29, 2022 அன்று ஐக்கிய நாடுகளின் உரிமம் மற்றும் வர்த்தக முத்திரை அலுவலகம், கார்னெல் பல்கலைக்கழகம் ஆகியவற்றுடன் ஒருங்கிணைந்து, ஐக்கிய நாடுகளின் காப்புரிமை மற்றும் வணிகச் சட்ட மேம்பாட்டுத்துறையினால் (CLDP) ஒழுங்கமைக்கப்பட்ட தொழினுட்பப் பரிமாற்றப் பயிலரங்கில் இலங்கை சபரகமுவ பல்கலைக்கழக வணிக இடைத் தொடர்புகள் கூடத்தின் (UBLC) பணிப்பாளர் மற்றும் முகாமையாளர் பங்கேற்றார். இப்பயிலரங்கில், உரிம ஒப்பந்தங்கள், தொழினுட்ப மதிப்பீடு, பேச்சுவார்த்தை அடிப்படைகள் என்பவற்றுக்கான முக்கிய விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் குறித்து கவனம் செலுத்தப்பட்டது.

6. பல்கலைக்கழகத்தின் வணிக இடைத் தொடர்புகள் கூடமானது (UBLC) பல்கலைக்கழகத்தின் கல்வியாளர்கள் மற்றும் நிர்வாக ஊழியர்களுக்கான சுற்றுச்சூழல் புத்தாக்க அமைப்பிற்கான கொள்கைகள் மற்றும் தரநிலைகளை உருவாக்குதல் பற்றிய ஓர் ஊடாட்ட அமர்வினை நடாத்தியது. இந்நிகழ்வு ஒக்டோபர் 12ஆம் திகதி காலை 9.00 மணி முதல் பணியாளர் மேம்பாட்டு மையத்தில் இடம்பெற்றது. இந்த அமர்விலே பல்கலைக்கழகத் துணைவேந்தர், சிரேஷ்ட பேராசிரியர் உதய ரத்னாயக்க, பீடாதிபதிகள், மூதவை உறுப்பினர்கள், பல்கலைக்கழகத்தின் பதிவாளர், பொருளாளர், சிரேஷ்ட கல்வியாளர்கள் மற்றும் பல்கலைக்கழகத்தின் நிர்வாகப் பணியாளர்கள் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

7. 2022 ஜூன் 3 ஆம் திகதி இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகத்தின் பணியாளர் மேம்பாட்டு மையத்தினால் 'புலமைத்துவச் சொத்து முகாமைத்துவம் மற்றும் பாதுகாப்பு' எனும் தலைப்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வில் பல்கலைக்கழகக் கல்வியாளர்கள் மத்தியில் புலமைச் சொத்துக்களை முகாமைசெய்வதற்கான வழிமுறைகள் குறித்து விழிப்புணர்வூட்டப்பட்டது. இந்நிகழ்வில் பல்கலைக்கழகத்தின் வணிக இடைத் தொடர்புகள் கூடத்தின் (UBLC) பணிப்பாளர் பேராசிரியர் D.A. இந்துனில் தயாரத்ன அவர்கள் உரை நிகழ்த்தினார்.

UBLC இனால் 2022 ஆம் ஆண்டு முன்னெடுக்கப்பட்ட ஏனைய செயற்பாடுகள்

UBLC எம்டிவி1 தொலைக்காட்சியின் "ஜாதிக்க மெஹெவர" எனும் நிகழ்ச்சியில் பங்கேற்றமை

இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகத்தின் UBLC ஆனது, MTV TV I தொலைக்காட்சியின் "ஜாதிக்க மெஹெவர" எனும் நிகழ்ச்சியில் பங்கேற்பதற்காகத் தெரிவுசெய்யப்பட்டிருந்தது. அந்நிகழ்வில் UBLC இனால் முன்னெடுக்கப்பட்ட பணிகள் குறித்த தகவல்கள் ஒளிபரப்பப்பட்டதோடு, அங்கு இடம்பெற்ற மதிப்பீட்டில் மூன்றாம் இடத்தையும் தட்டிச் சென்றமை விதந்துரைக்கத்தக்கது. UBLC இனால் ஆய்வுக் குழுக்களுக்கு வழங்கப்பட்டு வந்த வெளியும் உறுதியான ஒத்துழைப்புமே இவ்வெற்றியைச் சாத்தியப்படுத்தியது எனலாம். இந்நிகழ்ச்சியானது 2022 ஆகஸ்ட் 18 ஆம் திகதி ஒளிபரப்பப்பட்டது. நிகழ்ச்சிக்கான இணைப்புச் சுட்டி வருமாறு: https://youtu.be/YYvT2mFZGuE

இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகத்தின் இனோவா கழகம் நிறுவப்பட்டமை

பல்கலைக்கழகச் சமூகத்தினரிடையே ஆராய்ச்சி முடிவுகள் மற்றும் புதுமையான யோசனைகளைப் பரிமாறிக் கொள்வதற்கும் அனுபவங்களைப் பகிர்ந்துகொள்வதற்கும் ஒரு தளத்தை உருவாக்கும் நோக்கத்துடன், இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழக UBLC ஆனது, "INNOVA CLUB" எனும் புத்தாக்கக் கழகம் ஒன்றை நிறுவியது. அதன் ஆரம்ப கட்டமாக, அதன் முதலாவது கூட்டம் 2022 அக்டோபர் 20 ஆம் திகதி அன்று பல்வேறு துறைகளைச் சேர்ந்த மாணவர் குழுக்களின் பங்கேற்புடன் சிறப்பாக இடம்பெற்றது.

UBLC இனது உத்தியோகபூர்வ வலைதளம் திறந்து வைக்கப்படல்

இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழக UBLC ஆனது தனது அதிகாரப்பூர்வ இணையதளத்தை 15 ஜூன் 2022 அன்று தொடங்கியுள்ளது. பல்கலைக்கழகத்தின் புத்தாக்கம் மற்றும் வணிகமயமாக்கல் முயற்சிகளை தேசிய மற்றும் சர்வதேச சமூகத்தின்முன் காட்சிப்படுத்து இந்த வலைதளத்தை உருவாக்கியதன் நோக்கமாகும். இந்த வலைத்தளத்தின் மூலம், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் தொழில்துறையினர் அணுகக்கூடிய பல அம்சங்களை நாங்கள் எளிதாக்கியுள்ளோம். வலைதளத்தின் இணைப்புச் சுட்டி: https://www.sab.ac.lk/ublc/

2022 ஆம் ஆண்டுக்கான புலமைத்துவச் சொத்துப் பாதுகாப்புப் புள்ளிவிபரங்கள்

2022 ஆம் ஆண்டில் UBLC ஊடாக விண்ணப்பிக்கப்பட்ட தேசியக் காப்புரிமங்கள்

காப்புரிம விண்ணப்ப எண்	காப்புரிமத் தலைப்பு	அடிப்படை வினவுநர்
22127	A Cinnamon Elixir with Cinnamomum zeyalanicum	பேரா. அச்சினி டி சில்வா
நிலுவையில் உள்ளது	Processing of a meal from black soldier fly larvae (BSFL) and method of preparing black soldier fly larvae meal incorporated fish feed for Labeo rohita thereof	பேரா. சுமித் P M. கமகே
22371	A Mechanical Calibration System for LengthMeasuring Sticks	கலாநிதி நளின் பிரசன்ன லியனவடுகே
22181	A Cinnamon Cola with Cinnamomum zeylanicum	பேரா. அச்சினி டி சில்வா
22155	A Cinnamon beer with Cinnamomum zeylanicum	பேரா. அச்சினி டி சில்வா

2022 ஆம் ஆண்டில் UBLC ஊடாக விண்ணப்பிக்கப்பட்ட சர்வதேசக் காப்புரிமங்கள்

சர்வதேச உரிமப் பதிப்பு எண்:	காப்புரிமத் தலைப்பு	அடிப்படை வினவுநர்
PCT/IB2022/050937	Herbal Beverage from Annona Muricata Extract,And Method of Preparation Thereof	கலாநிதி நிமல்பெரேரா

எதிர்காலத் திட்டங்கள்

மேற்கண்ட செயற்பாடுகளுக்குப் புறம்பாகப் பின்வரும் அடைவிலக்குகள் நம் நிகழ்ச்சிநிரலில் உள்ளீர்க்கப்படவுள்ளன:

- பல்கலைக்கழகத்தின் புதிய கண்டுபிடிப்பாளர்கள் UBLC மூலம் விண்ணப்பித்த தேசிய மற்றும் சர்வதேச காப்புரிமைகள், UBLC மூலம் கையொப்பமிடப்பட்ட ஒப்பந்தங்கள் மற்றும் UBLC க்கு சமர்ப்பிக்கப்பட்ட IDFகள் தொடர்பான தங்கள் விவரங்களை அணுகக்கூடிய விதத்தில் எங்கள் வலைதளத்தில் புதிய கண்டுபிடிப்பாளர்களுக்கான ஒரு தோற்றுவாயை உருவாக்குதல்.

- எமது பல்கலைக்கழக ஆராய்ச்சிப் பெறுபேறுகளை அடிப்படையாக வைத்துக் குறைந்தபட்சம் இரு விடயங்களையாவது தொடங்குதல்

- சாத்தியமான வணிகக் கூட்டாளர்களின் ஆதரவுடன் ஆராய்ச்சிக் குழுக்களால் உருவாக்கப்பட்ட குறைந்தபட்சம் மூன்று தயாரிப்புகளுக்கேனும் உரிமம் வழங்குதல்.

- எதிர்வரும் பெப்ரவரி 2வது வாரத்திற்குள் சோர்சாப் அடிப்படையிலான வைன் தயாரிப்பினை சந்தையில் அறிமுகப்படுத்துதல்.

- UBL கூடம் பற்றிய செய்திகள், நிகழ்வுகள், பல்கலைக்கழகப் புதிய கண்டுபிடிப்புகள், ஆராய்ச்சித் திட்டங்கள், கட்டுரைகள் போன்றவற்றைப் பற்றிய பெறுமதியான தகவல்களைப் பகிர்ந்துகொள்ள ஒரு காலாண்டுச் செய்திமடலை உருவாக்குதல்.

- புத்தாக்க முயற்சிகளுக்குப் பங்களிப்பதற்கு IP அமைப்பில் உள்ள பல்வேறு பங்காற்றுநர்களுக்குப் பொருத்தமான, பல்கலைக்கழகச் சமூகத்தின் பல்வேறு திறன்களைப் பயன்படுத்துமாறு வழிநடாத்துவதற்கு தேசிய புலமைச் சொத்துக்களுக்கான அலுவலகத்துடன் இணைந்து புலமைச்சொத்துப் பாதுகாப்பு குறித்த ஒரு பயிலரங்கினை நடாத்துதல்.

4.8 பால்நிலை சமத்துவம் மற்றும் சமநிலைக்கான மையம் (CGEE)


4.8.1 சுருக்க வரலாறு

இலங்கைப் பல்கலைக்கழகங்களில் பாலின மற்றும் பால்நிலை சமத்துவமின்மை, பாலியல் மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறைகள் (SGBV) உள்ளிட்ட வன்முறைகள் குறிப்பிடத்தக்க குறைபாடுகளாகப் பதிவாகியுள்ளன. இதற்கான ஒரு தீர்வாக, பல்கலைக்கழக மானியக் குழு (UGC)வானது SGBV உட்பட அனைத்து வகையான வன்முறைகளையும் மட்டுப்படுத்தும் வகையில் அனைத்துத் தேசியப் பல்கலைக்கழகங்களிலும் பாலின சமத்துவம் மற்றும் சமத்துவ மையங்களை நிறுவுவதனை ஊக்குவிப்பதற்கான முன்முயற்சியினை மேற்கொண்டுள்ளது. அதன்படி, அனைத்து மாணவர்களும், கல்விசார், நிர்வாக மற்றும் உதவி ஊழியர்கள், ஆண் – பெண் ஆகிய தரப்பினருக்கும் சம வாய்ப்புகள், மனித உரிமைகள் மற்றும் அனைத்து வகையான பாகுபாடுகளில் இருந்தும் விடுபட்டு வாழ்வதற்கான சூழலை உருவாக்குமுகமாக இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகப் பால்நிலை சமத்துவம் மற்றும் சமநிலைக்கான மையமானது 2017 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நிறுவப்பட்டது.

சபரகமுவ பல்கலைக்கழகத்தின் CGEE ஆனது பாலின சமத்துவம் மற்றும் சமத்துவம் பற்றிய உறுதியான கொள்கைக் கட்டமைப்பினைக் கொண்டுள்ளது. அத்துடன், இந்த மையத்தின் நிர்ணயிக்கப்பட்ட செயல்பாடுகளின் வழியே பாலினக் கல்வி தொடர்பான நிபுணர்களின் அடிப்படைக் குழுவை நிறுவுதல், அதுசார்ந்த ஆய்வுகளை முன்னெடுத்தல், பாலினம் சார்ந்த கொள்கைகளை மறுபரிசீலனை செய்தல், பல்கலைக்கழக மட்டத்தில் அது தொடர்பான கொள்கை உள்ளீடுகளை மேற்கொள்ளுதல், GEE இன் கருத்துகள் மற்றும் நடைமுறைகளை புகுத்தும் வகையில் பாடத்திட்டச் சீர்திருத்தங்களை மேற்கொள்ளுதல், SGBV இனைத் தடுக்கவும் எதிர்வினையாற்றவும்கூடிய வகையில் பல்கலைக்கழக ஊழியர்களையும் மாணவர்களையும் வலுவூட்டல், பாலியல் மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறை பற்றிய புகார்களை விசாரிக்கவும் பணியாளர்கள் மற்றும் மாணவர்களுக்கு அதிகாரம் அளிப்பதன் மூலம் SGBV ஐ தடுக்கவும் எதிர்வினையாற்றவும், குற்றவாளிகளுக்கு எதிரான ஒழுக்காற்று நடவடிக்கைகளையும், பாதிக்கப்பட்டவர்களுக்கான வசதிகளையும் பல்கலைக்கழகப் பேரவைகளுக்குப் பரிந்துரை செய்தல் என்பன தொடர்பில் பாலின சமத்துவம் மற்றும் சமத்துவம் குறித்த பயிற்சியைத் தொடர்ந்து வழங்கி வருகின்றது. மேலும், இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகத்தின் CGEE ஆனது, பீட மட்டத்தில் பாலினப் பிரக்ஞையுள்ள சூழலை உருவாக்கும் நோக்குடன் தற்போது பல்கலைக்கழகப் பீடங்கள் எட்டிலும் தனது கூடங்களைக் கொண்டமைந்துள்ளது.

4.8.2 சுருக்க அறிமுகம்

இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம் பாலின சமத்துவம் மற்றும் சமத்துவம் (GEE) மற்றும் பெண்கள் வலுவூட்டல் ஆகியவற்றை மேம்படுத்துவதற்கு அர்ப்பணிப்புடன் பணியாற்றி வருகிறது. இங்கு அனைத்து மாணவர்களும், கல்விசார், நிர்வாக மற்றும் உதவி ஊழியர்கள், ஆண் – பெண் ஆகிய தரப்பினருக்கும் சம வாய்ப்புகள், மனித உரிமைகள் மற்றும் அனைத்து வகையான பாகுபாடுகளில் இருந்தும் விடுபட்டு வாழ்வதற்கான சூழலை உருவாக்கப் பாடுபடுகிறது. மேலும், பல்கலைக்கழகச் சமூக உறுப்பினர்களுக்கு பல்கலைச் சமூகமானது துன்புறுத்தல், பாலின சமத்துவமின்மை, பாலியல் மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறை (SGBV) ஆகியவற்றிலிருந்து விடுபடுவதை உறுதிசெய்யும் பொறுப்பு உள்ளது.



GEE கூடத்தின் உள்ளடக்கம்

இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகத்தின் GEE பற்றிய கொள்கையானது பெண்கள் மற்றும் ஆண்களுக்கு இடையே சமத்துவத்தை மேம்படுத்துவதற்காகவும் சட்டவிரோதப் பாகுபாடு மற்றும் துன்புறுத்தலை அகற்றவும், அனைத்துப் பணியாளர்கள் மற்றும் மாணவர்களின் உரிமைகளும் கண்ணியமும் மதிக்கப்படவும் ஏற்ற வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. அவ்வகையில், மேற்படி அம்சங்களை உள்ளடக்கிய பணிக்கான மற்றும் கற்றலுக்கான சூழலை வழங்கி, அவர்கள் தமது முழுத் திறனையும் அடைவதில் அவர்களுக்கு உதவுதல் இதன் இலக்காகும். SUSL இற்குப் பணியாளர்களாகவோ மாணவர்களாகவோ விண்ணக்கும் எவரும் மேற்படி காத்திரமான வரப்பிரசாத நிலைமையினை அனுபவிப்பதில் ஏற்படக்கூடிய எத்தகைய தடைகளையும் நீக்கும் வகையில் இப்பல்கலைக்கழகம் செயல்படும்.

GEE கூடத்தின் நிர்வாக அமைப்பு

அ) துணைவேந்தர் (தலைவர்)
ஆ) பணிப்பாளர் – CGEE (இணைத்-தலைவர்)
இ) பீடாதிபதிகள்
ஈ) பதிவாளர்
உ) பொருளாளர்
ஊ) பணிப்பாளர்/ஊழியர் மேம்பாட்டு மையம்
எ) ஒவ்வொரு பீடத்திலுமுள்ள கல்வியாளர்களில் இரு பிரதிநிதிகள் (ஓர் ஆண், ஒரு பெண்)
ஏ) ஒவ்வொரு பீடத்திலுமுள்ள கல்வி உதவி ஊழியர்களில் இரு பிரதிநிதிகள் (ஓர் ஆண், ஒரு பெண்)
ஐ) ஒவ்வொரு பீடத்திலுமுள்ள இரு மாணவப் பிரதிநிதிகள் (ஓர் ஆண், ஒரு பெண்)

4.8.3 நிரந்தர ஊழியர்கள்

பணிப்பாளர் - கலாநிதி திலினி C. கனகே / பிரயோக விஞ்ஞான பீடம்

4.8.4 பால்நிலை சமத்துவம் மற்றும் சமநிலைக்கான மையத்தின் தொழிற்பாடுகள்

1. பாலின சமத்துவம் மற்றும் சமத்துவம் குறித்த பயிற்சி அளித்தல்

2. ஆய்வுகளை நடாத்துதல், கொள்கைகளை மீளாய்வு செய்தல், பல்கலைக்கழக மட்டத்தில் கொள்கை உள்ளீடுகளுக்குப் பங்களிப்புச் செய்தல்

3. GEE இன் கருத்துகள் மற்றும் நடைமுறைகளைப் புகுத்துவதற்காகப் பாடத்திட்ட சீர்திருத்தங்களை மேற்கொள்ளல்

4. பாலியல் மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறையைத் தடுப்பதும் எதிர்வினையாற்றுவதும்

5.பல்கலைக்கழகத்தில் SGBV ஐத் தடுப்பதற்கான வழிகளையும் வழிமுறைகளையும் கண்டறிவதோடு, அதனோடு தொடர்புடைய திறன்களை வளர்ப்பதன் மூலம் SGBV ஐத் தடுக்கவும் எதிர்வினையாற்றவும் முடியுமான வகையில் பல்கலைக்கழக ஊழியர்களையும் மாணவர்களையும் வலுவூட்டுதல்.

6. நிறுவன மட்டத்தில் GEE கொள்கையைச் செயல்படுத்துவதை எளிதாக்குவதற்கும் கண்காணிப்பதற்குமான திறனை மேம்படுத்துதல்.

7. பாலியல் மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறைகள் தொடர்பில் விசாரணை மேற்கொள்வதோடு, குறித்த வன்முறையாளர்களுக்கு எதிரான ஒழுக்காற்று நடவடிக்கைகள் தொடர்பில் பல்கலைக்கழகப் பேரவைகளிடம் முன்மொழிவுகளைக் கொண்டு சென்று, பாதிக்கப்பட்டவர்களுக்கான உதவிகளை வழங்குதல்.

4.8.5 2022 இல் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள்

1. சபரகமுவ பல்கலைக்கழகப் பீடங்கள் எட்டிலும் பாலினக் கூடங்களை நிறுவியமை.

2. பின்வரும் வலையரங்குகளின் ஸூம் இணைப்புகள் (CCS/SUSL வழியாக) இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் கல்வி/கல்வி சாரா ஊழியர்களுடன் பகிர்ந்து கொள்ளப்பட்டதோடு, அவ்விவாத அமர்வுகளில் ஆர்வமுள்ள பல கல்விசார் பணியாளர்கள் பங்குபற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

   அ. "பாலினத்தைக் கண்டடைதல்: ஆங்கிலத்திலும் தமிழிலும் ஓர் உரையாடல்" எனும் தலைப்பிலான வலையரங்கானது, யாழ். பல்கலைக்கழகத்தின் பால்நிலை சமத்துவம் மற்றும் சமநிலைக்கான மையத்தினால் (CGEE) 02 மார்ச் 2022 இல் ஒழுங்கு செய்யப்பட்டது.

   ஆ. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பால்நிலை சமத்துவம் மற்றும் சமநிலைக்கான மையத்தினால் (CGEE) 8 மார்ச் 2022 இல் சர்வதேச மகளிர் தினக் கொண்டாட்டம் ஒழுங்குசெய்யப்பட்டது.

3. "பல்கலைக்கழகக் கல்லூரிகளில் பாலின அடிப்படையிலான வன்முறை (GBV)", எனும் தலைப்பிலான வலையரங்கமானது 9 மார்ச் 2022 இல் பேராதனைப் பல்கலைக்கழக பாலின அடிப்படையிலான துன்புறுத்தல்கள் மற்றும் பாலியல் வன்முறைகளத் தடுக்கும் குழுவினால் ஒழுங்குசெய்யப்பட்டிருந்தது.

4. பாலின விழிப்புணர்வுப் பயிலரங்கு

   பாலின விழிப்புணர்வுப் பயிலரங்கானது இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகத் தொழினுட்பவியல் பீடம் மற்றும் பால்நிலை சமத்துவம் மற்றும் சமநிலைக்கான மையம் ஆகியவற்றினால் ஒழுங்குசெய்யப்பட்டு 5 மே மாதம் 2022 அன்று சபரகமுவ பல்கலைக்கழகப் பணியாளர் மேம்பாட்டு மையத்தில் மிக வெற்றிகரமாக இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

   ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB) யின் குடியுரிமை பணியில் பாலினச் சமூக உள்ளீட்டுச் சிறப்பு நிபுணர் செல்வி ரன்மினி விதானகம, வறுமை பகுப்பாய்வு மைய (CEPA)த்தின் சிரேஷ்ட ஆய்வு நிபுணர் செல்வி நாதியா நஜாப் ஆகியோர் இப்பயிலரங்கினை நடாத்தினர். தொழினுட்பவியல் பீடத்தின் கல்வியாளர்கள் மற்றும் கல்விசாரா ஊழியர்களும் இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகத்தின் ஏனைய பீடங்களிலும் பிரிவுகளிலும் உள்ள (கல்விசார்/கல்விசாரா) ஊழியர்களும் இப்பயிலரங்கில் கலந்து சிறப்பித்தனர்.

5. "இலங்கைப் பல்கலைக்கழகங்களில் பால்நிலை சமத்துவமும் சமநிலையும், பால்நிலை மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறைகளும்" எனும் தலைப்பிலான விழிப்புணர்வு அமர்வுகள் இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகத்தின் பால்நிலை சமத்துவம் மற்றும் சமநிலைக்கான மையத்தின் பணிப்பாளரால் பின்வரும் பீடங்களில் இடம்பெற்ற புதுமுக மாணவர் ஆற்றுப்படுத்தல் அமர்வுகளின்போது நடாத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது:

i. சமூக விஞ்ஞானங்கள் மற்றும் மொழிகள் பீடம் – 08 ஜூலை 2022
ii. பிரயோக விஞ்ஞான பீடம் – 19 ஆகஸ்ட் 2022
iii. தொழினுட்பவியல் பீடம் – 26 ஜூலை 2022

6. "பன்மைத்துவத்துடன் வாழக் கற்றல்" எனும் தலைப்பிலான புதிய பாட அலகு குறித்துப் பயிற்சியாளர்களுக்கான பயிற்றுவிப்பு (ToT) அமர்வு

இந்த ToT அமர்வானது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினதும் இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகத்தினதும் பால்நிலை சமத்துவம் மற்றும் சமநிலைக்கான மையத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. இப்பயிற்சி அமர்வானது 21 டிசம்பர் 2022 அன்று மு.ப. 9.00 முதல் பி.ப. 4.00 மணிவரை அனைத்துப் பீடங்களில் இருந்தும் பரிந்துரைக்கப்பட்ட கல்வியாளர்களுக்காக இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகப் பேரவை மன்றத்தில் நடாத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

ToT அமர்வின் வளவாளர்கள்:

i. பேராசிரியர் P.D.H.D. குணதிலக
பணிப்பாளர்/ CGEE/UGC, வணிக நிர்வாகத்துறைப் பேராசிரியர், முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வர்த்தக பீடம், இலங்கை ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்

ii. கலாநிதி துஷான் ஜயவிக்ரம
தலைவர்/சந்தைப்படுத்தல் முகாமைத்துவத் துறை,
முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வர்த்தக பீடம், இலங்கை ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்

iii. விசேட அதிதி:
செல்வி லக்ஷ்மி சுரேஷ்குமா, யுனிசெப்பின் இலங்கைக்கான கல்வி அலுவலர்

7. மாணவர் பகடிவதையினையும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பால்நிலை சமத்துவம் மற்றும் சமநிலைக்கான மையத்தின் இணையவழி முறைப்பாட்டுத் தோற்றுவாய் (complaint portal) மூலம் பெறப்படும் SGBV உடன் தொடர்புடைய முறைப்பாடுகளையும் கையாள்தல்.

இதற்கமைய, 01.01.2011- 31.12.2022 வரையான காலகட்டத்தில் ஏழு (07) முறைப்பாடுகள் பெற்றப்பட்டுள்ளதோடு, அவை உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான விண்ணப்பத்துடன் துணைவேந்தர் மற்றும் தொடர்புடைய பிற அதிகாரிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

8. பிரயோக விஞ்ஞான பீடத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட பின்வரும் நான்கு (04) நிகழ்வு மீளாய்வு அமர்வுகளில் பங்குபற்றியதோடு, மீளாய்வுச் செயற்பாட்டில் (போதிய ஆதாரங்களை வழங்குதல், மாணவர்களின் விழிப்புணர்வில் CGEE இன் வகிபாகம், SUSL இன் CGEE உடன் தொடர்புடைய மீளாய்வு செய்வோரின் ஐயப்பாடுகளைத் தெளிவுறுத்தல் என) முழுமையான பங்களிப்பு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

- கணினி மற்றும் தகவலமைப்புத் துறையினால் வழங்கப்பட்ட பட்டக் கற்கைநெறி சார்ந்த பாடத்திட்ட மீளாய்வு.
- உணவு விஞ்ஞானம் மற்றும் தொழினுட்பவியல் துறையினால் வழங்கப்பட்ட பட்டக் கற்கைநெறி சார்ந்த பாடத்திட்ட மீளாய்வு
- இயற்கை வளத்துறையினால் வழங்கப்பட்ட பட்டக் கற்கைநெறி சார்ந்த பாடத்திட்ட மீளாய்வு.
- பௌதீக விஞ்ஞானம் மற்றும் தொழினுட்பவியல் துறையினால் வழங்கப்பட்ட பட்டக் கற்கைநெறி சார்ந்த பாடத்திட்ட மீளாய்வு.

விழிப்புணர்வு அமர்வுகள் / பயிலரங்குகள், வலையரங்குகள், ToT அமர்வுகள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு, பின்வரும் நிலையான அபிவிருத்தி இலக்குகள் குறிப்பிடத்தக்க அளவில் எட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது:

- பயிலரங்குகள், வலையரங்குகள், விழிப்புணர்வு அமர்வுகள்/ மாணவர் ஆற்றுப்படுத்துகை நிகழ்வுகள் ஆகியவற்றை ஏற்பாடு செய்வதன் மூலமும் பல்கலைக்கழகக் கல்வியாளர்கள், மாணவர்கள், நிர்வாக மற்றும் கல்விசாரா ஊழியர்கள் உள்ளிட்ட பல்கலைக்கழகத்தின் அனைத்துத் தரப்பினர் மத்தியிலும் பாலினப் பிரக்ஞையுள்ள சூழலை உருவாக்குதலும் பெண்களை வலுவூட்டலும்

- புதிய பாடத்திட்ட உருவாக்கம் மற்றும் எதிர்காலத்தில் மாணவர்களின் பகடிவதை மற்றும் SGBV தொடர்பான வழக்குகளைத் தடுக்கும் நோக்கத்துடன் இளங்கலைப் பட்டதாரிகளுக்கான புதிய பாட அலகினைக் (பன்முகத்தன்மையுடன் வாழக் கற்றுக்கொள்வது) கற்பிப்பது குறித்துக் கல்வியாளர்களின் அடிப்படைக் குழுவுக்குப் (TOT திட்டங்கள் மூலம்) பயிற்சியளிக்கப்பட்டது.
- SGBV இனை அடையாளங்கண்டு தடுத்தல் மற்றும் பாதிக்கப்பட்டவர் சம்பவ ஆதாரத்துடன் முறைப்பாடு செய்யும் நடைமுறைகள் தொடர்பான விழிப்புணர்வை உருவாக்குதல்.

20 உள்வாரியான பட்டக் கற்கைகளுக்காக புதிய (உள்நாட்டு/ வெளிநாட்டு) மாணவர் நுழைவும் பதிவும்

20.1 உள்நாட்டு மாணவர்களுக்கான உள்வாரிப் பட்டக்கற்கை நெறிகளுக்கான புதிய நுழைவு

பீடம்	கற்கைநெறி	கற்கை ஆண்டு	சேர்க்கை ஆண்டு	பதிவு செய்த எண்ணிக்கை	கற்கையைத் தொடர்வோர் எண்ணிக்கை
விவசாய விஞ்ஞான பீடம்	விவசாய விஞ்ஞானத் துறையில் விஞ்ஞான இளமாணி	2020/2021	139	148	126
	உணவு வணிக முகாமைத்துவத் துறையில் விஞ்ஞான இளமாணி		135	143	138
பிரயோக விஞ்ஞான பீடம்	உணவு விஞ்ஞானம் மற்றும் தொழினுட்பவியலில் விஞ்ஞான இளமாணி		88	63	61
	உயிரியல் விஞ்ஞானத் துறையில் விஞ்ஞான இளமாணி		104	98	75
	பௌதீக விஞ்ஞானத்தில் விஞ்ஞான இளமாணி		100	103	89
	கணினி மற்றும் தகவலமைப்புத் துறையில் விஞ்ஞான இளமாணி		178	142	135
	விளையாட்டு விஞ்ஞானம் மற்றும் முகாமைத்துவத் துறையில் விஞ்ஞான இளமாணி		86	72	72
	உடற்கல்வித் துறையில் விஞ்ஞான இளமாணி		97	90	88
	மென்பொருள் பொறியியலில் விஞ்ஞான இளமாணி		58	65	63
வரைபட (கேத்திர) கணித பீடம்	அளவையியல் விஞ்ஞானத்தில் விஞ்ஞான இளமாணி		165	168	158
முகாமைத்துவக் கற்கைகள் பீடம்	முகாமைத்துவக் கற்கைகள் துறையில் விஞ்ஞான இளமாணி		386	411	355
	சுற்றுலாத்துறை மற்றும் விருந்தோம்பல் முகாமைத்துவத் துறையில் விஞ்ஞான இளமாணி		111	121	112
மருத்துவ பீடம்	மருத்துவம் மற்றும் அறுவைசிகிச்சையியலில் விஞ்ஞான இளமாணி		99	116	116
சமூக விஞ்ஞானங்கள் மற்றும் மொழிகள் பீடம்	இளங்கலைமாணி		281	314	271
	மேலதிக உள்நுழைவு		70	38	29
	மொழிபெயர்ப்புக் கற்கையில் இளங்கலைமாணி		30	31	27
தொழினுட்பவியல் பீடம்	பொறியியல் தொழினுட் பத்தில் விஞ்ஞான இளமாணி		114	110	110
	உயிரமைப்புத் தொழினுட்பவியலில் விஞ்ஞான இளமாணி		111	106	106

பீடம்	கற்கைநெறி	கற்கை ஆண்டு	சேர்க்கை ஆண்டு	பதிவு செய்த எண்ணிக்கை	கற்கையைத் தொடர்வோர் எண்ணிக்கை
விவசாய விஞ்ஞான பீடம்	விவசாய விஞ்ஞானத் துறையில் விஞ்ஞான இளமாணி	2019/ 2020	139	130	128
	உணவு வணிக முகாமைத்துவத் துறையில் விஞ்ஞான இளமாணி		135	133	125
பிரயோக விஞ்ஞான பீடம்	உணவு விஞ்ஞானம் மற்றும் தொழினுட்பவியலில் விஞ்ஞான இளமாணி		88	70	61
	உயிரியல் விஞ்ஞானத் துறையில் விஞ்ஞான இளமாணி		104	83	77
	பௌதீக விஞ்ஞானத்தில் விஞ்ஞான இளமாணி		100	82	60
	கணினி மற்றும் தகவலமைப்புத் துறையில் விஞ்ஞான இளமாணி		178	148	141
	விளையாட்டு விஞ்ஞானம் மற்றும் முகாமைத்துவத் துறையில் விஞ்ஞான இளமாணி		86	80	80
	உடற்கல்வித் துறையில் விஞ்ஞான இளமாணி		97	91	91
	மென்பொருள் பொறியி யலில் விஞ்ஞான இளமாணி		58	51	51
வரைபட (கேத்திர) கணித பீடம்	அளவையியல் விஞ்ஞானத் தில் விஞ்ஞான இளமாணி		165	145	138
முகாமைத்துவக் கற்கைகள்	முகாமைத்துவக் கற்கைகள் துறையில் விஞ்ஞான இளமாணி	2019/ 2020	386	415	369
	சுற்றுலாத்துறை மற்றும் விருந்தோம்பல் முகாமைத்து வத் துறையில் விஞ்ஞான இளமாணி		111	110	102
மருத்துவ பீடம்	மருத்துவ மற்றும் அறுவை சிகிச்சைத் துறையில் விஞ்ஞான இளமாணி		99	110	110
சமூக விஞ்ஞானக்கள் மற்றும் மொழிகள் பீடம்	இளங்கலைமாணி		281	293	274
	மேலதிக உள்நுழைவு		70	31	28
	மொழிபெயர்ப்புக் கற்கையில் இளங்கலைமாணி		30	39	35
தொழினுட்பவியல் பீடம்	பொறியியல் தொழினுட் பத்தில் விஞ்ஞான இளமாணி		114	119	115
	உயிரமைப்புத் தொழினுட்ப வியலில் விஞ்ஞான இளமாணி		111	122	121

20.2 பட்டக் கற்கைநெறிகளுக்காக உள்வாரியான புதிய (உள்நாட்டு) மாணவர் நுழைவு (மொத்த மாணவர் எண்ணிக்கை

பீடம்	கற்கைநெறி	கற்கை ஆண்டு	சேர்க்கை ஆண்டு	UGC சேர்க்கை (உள்நாட்டு மாணவர்)			பிந்திய சேர்க்கை *		
				ஆண்	பெண்	மொத்தம்	ஆண்	பெண்	மொத்தம்
விவசாய விஞ்ஞான பீடம்	விவசாய விஞ்ஞானத் துறையில் விஞ்ஞான இளமாணி	1 ஆம் ஆண்டு	2020/2021	20	105	125	1		1
	உணவு வணிக முகாமைத்துவத் துறையில் விஞ்ஞான இளமாணி			27	111	138			
பிரயோக விஞ்ஞான பீடம்	உணவு விஞ்ஞானம் மற்றும் தொழினுட்ப வியலில் விஞ்ஞான இளமாணி			17	53	70			
	உயிரியல் விஞ்ஞானத் துறையில் விஞ்ஞான இளமாணி			18	101	119			
	பௌதீக விஞ்ஞானத்தில் விஞ்ஞான இளமாணி			66	67	133			
	கணினி மற்றும் தகவலமைப்புத் துறையில் விஞ்ஞான இளமாணி			103	71	174			
	விளையாட்டு விஞ்ஞானம் மற்றும் முகாமைத்துவத் துறையில் விஞ்ஞான இளமாணி			30	51	81			
	உடற்கல்வித் துறையில்			36	62	98			

	விஞ்ஞான இளமாணி								
	மென்பொருட் பொறியியலில் விஞ்ஞான இளமாணி			120	38	158			
வரைபட (கேத்திர) கணித பீடம்	அளவையியல் விஞ்ஞானத்தில் விஞ்ஞான இளமாணி			126	24	8			
முகாமைத்துவக் கற்கைகள் பீடம்	முகாமைத்துவக் கற்கைகள் துறையில் விஞ்ஞான இளமாணி			91	264	355			
	சுற்றுலாத்துறை மற்றும் விருந்தோம்பல் முகாமைத்துவத் துறையில் விஞ்ஞான இளமாணி			30	82	112			
மருத்துவ பீடம்	மருத்துவம் மற்றும் அறுவைசிகிச்சையியலில் விஞ்ஞான இளமாணி			32	84	116			
சமூக விஞ்ஞானங்கள் மற்றும் மொழிகள் பீடம்	இளங்கலைமாணி			46	254	300			
	மொழிபெயர்ப்புக் கற்கையில் இளங்கலைமாணி			2	25	27			
தொழினுட்பவியல் பீடம்	பொறியியல் தொழினுட்பவியலில் இளங்கலைமாணி			96	22	110			
	உயிரமைப்புகள் தொழினுட்பவியலில் இளங்கலைமாணி			24	88	106			

பீடம்	கற்கைநெறி	கற்கை ஆண்டு	சேர்க்கை ஆண்டு	UGC சேர்க்கை (உள்நாட்டு மாணவர்)			பிந்திய சேர்க்கை *		
				ஆண்	பெண்	மொத்தம்	ஆண்	பெண்	மொத்தம்
விவசாய விஞ்ஞான பீடம்	விவசாய விஞ்ஞானத் துறையில் விஞ்ஞான இளமாணி	2 ஆம் ஆண்டு	2019/2020	30	98	128	3	1	4
	உணவு வணிக முகாமைத்துவத் துறையில் விஞ்ஞான இளமாணி			22	103	125			
பிரயோக விஞ்ஞான பீடம்	உணவு விஞ்ஞானம் மற்றும் தொழினுட்பவியலில் விஞ்ஞான இளமாணி			18	43	61			
	உயிரியல் விஞ்ஞானத் துறையில் விஞ்ஞான இளமாணி			20	57	77			
	பௌதீக விஞ்ஞானத்தில் விஞ்ஞான இளமாணி			30	30	60			
	கணினி மற்றும் தகவலமைப்புத் துறையில் விஞ்ஞான இளமாணி			88	53	141			
	விளையாட்டு விஞ்ஞானம் மற்றும் முகாமைத்துவத் துறையில் விஞ்ஞான இளமாணி			44	36	80			
	உடற்கல்வித் துறையில் விஞ்ஞான இளமாணி			38	53	91			
	மென்பொருட் பொறியியலில் விஞ்ஞான			31	20	51			

	இளமாணி								
வரைபட (கேத்திர) கணித பீடம்	அளவையியல் விஞ்ஞானத்தில் விஞ்ஞான இளமாணி			101	37	138			
முகாமைத்துவக் கற்கைகள் பீடம்	முகாமைத்துவக் கற்கைகள் துறையில் விஞ்ஞான இளமாணி			101	268	369			
	சுற்றுலாத்துறை மற்றும் விருந்தோம்பல் முகாமைத்துவத் துறையில் விஞ்ஞான இளமாணி			27	75	102			
மருத்துவ பீடம்	மருத்துவம் மற்றும் அறுவைசிகிச்சையியலில் விஞ்ஞான இளமாணி			32	78	110			
சமூக விஞ்ஞானங்கள் மற்றும் மொழிகள் பீடம்	இளங்கலைமாணி			34	268	302			
	மொழிபெயர்ப்புக் கற்கையில் இளங்கலைமாணி			2	33	35			
தொழினுட்பவியல் பீடம்	பொறியியல் தொழினுட்பவியலில் இளங்கலைமாணி			94	21	115			
	உயிரமைப்புகள் தொழினுட்பவியலில் இளங்கலைமாணி			29	92	121			

பீடம்	கற்கைநெறி	கற்கை ஆண்டு	சேர்க்கை ஆண்டு	UGC சேர்க்கை (உள்நாட்டு மாணவர்)			பிந்திய சேர்க்கை *		
				ஆண்	பெண்	மொத்தம்	ஆண்	பெண்	மொத்தம்
விவசாய விஞ்ஞான பீடம்	விவசாய விஞ்ஞானத் துறையில் விஞ்ஞான இளமாணி	3 ஆம் ஆண்டு	2018/2019	19	71	90	1		1
	உணவு வணிக முகாமைத்துவத் துறையில் விஞ்ஞான இளமாணி			17	56	73			
பிரயோக விஞ்ஞான பீடம்	உணவு விஞ்ஞானம் மற்றும் தொழினுட்ப வியலில் விஞ்ஞான இளமாணி			24	33	57			
	உயிரியல் விஞ்ஞானத் துறையில் விஞ்ஞான இளமாணி			9	46	55			
	பௌதீக விஞ்ஞானத்தில் விஞ்ஞான இளமாணி			19	23	42			
	கணினி மற்றும் தகவலமைப்புத் துறையில் விஞ்ஞான இளமாணி			57	39	96			
	விளையாட்டு விஞ்ஞானம் மற்றும் முகாமைத்துவத் துறையில் விஞ்ஞான இளமாணி			24	23	47			
	உடற்கல்வித் துறையில் விஞ்ஞான இளமாணி			15	32	47			
வரைபட (கேத்திர) கணித பீடம்	அளவையியல் விஞ்ஞானத்தில் விஞ்ஞான இளமாணி			66	34	100			
முகாமைத்துவக் கற்கைகள் பீடம்	முகாமைத்துவக் கற்கைகள் துறையில் விஞ்ஞான இளமாணி			85	187	272 i			
	சுற்றுலாத்துறை மற்றும் விருந்தோம்பல் முகாமைத்துவத் துறையில் விஞ்ஞான இளமாணி			18	47	65			
மருத்துவ பீடம்	மருத்துவம் மற்றும் அறுவைசிகிச்சையியலில் விஞ்ஞான இளமாணி			27	48	75			

சமூக விஞ்ஞானங்கள் மற்றும் மொழிகள் பீடம்	இளங்கலைமாணி			43	237	280			
	மொழிபெயர்ப்புக் கற்கையில் இளங்கலைமாணி			1	20	21			
தொழினுட்பவியல் பீடம்	பொறியியல் தொழினுட்பவியலில் இளங்கலைமாணி			63	10	73 iii			
	உயிரமைப்புகள் தொழினுட்பவியலில் இளங்கலைமாணி			27	48	75 ii			

i. முகாமைத்துவக் கற்கைகள் துறையில் விஞ்ஞான இளமாணி மூன்று மாணவர்கள் ஒத்திவைப்பு அடிப்படையில் 2018/2019 ஆம் ஆண்டுக்கான மாணவர் குழுமத்தோடு மீள்நுழைவு பெற்றனர்.

ii. உயிரமைப்புக்கள் தொழினுட்பவியலில் விஞ்ஞான இளமாணி ஒரு மாணவர் ஒத்திவைப்பு அடிப்படையில் 2018/2019 ஆம் ஆண்டுக்கான மாணவர் குழுமத்தோடு மீள்நுழைவு பெற்றார்.

iii. பொறியியல் தொழினுட்பவியலில் விஞ்ஞான இளமாணி ஒரு மாணவர் ஒத்திவைப்பு அடிப்படையில் 2018/2019 ஆம் ஆண்டுக்கான மாணவர் குழுமத்தோடு மீள்நுழைவு பெற்றார்.

பீடம்	கற்கைநெறி	கற்கை ஆண்டு	சேர்க்கை ஆண்டு	UGC சேர்க்கை (உள்நாட்டு மாணவர்)			பிந்திய சேர்க்கை *		
				ஆண்	பெண்	மொத்தம்	ஆண்	பெண்	மொத்தம்
விவசாய விஞ்ஞான பீடம்	விவசாய விஞ்ஞானத் துறையில் விஞ்ஞான இளமாணி	4 ஆம் ஆண்டு	2017/2018	16	49	65	1	3	4
	உணவு வணிக முகாமைத்துவத் துறையில் விஞ்ஞான இளமாணி			6	36	42			
பிரயோக விஞ்ஞான பீடம்	உணவு விஞ்ஞானம் மற்றும் தொழினுட்பவியலில் விஞ்ஞான இளமாணி			18	30	48			
	உயிரியல் விஞ்ஞானத் துறையில் விஞ்ஞான இளமாணி			11	39	50			
	பௌதீக விஞ்ஞானத்தில் விஞ்ஞான இளமாணி			17	26	43			
	கணினி மற்றும் தகவலமைப்புத் துறையில் விஞ்ஞான இளமாணி			54	34	88			
	விளையாட்டு விஞ்ஞானம் மற்றும் முகாமைத்துவத் துறையில் விஞ்ஞான இளமாணி			26	22	48			
	உடற்கல்வித் துறையில் விஞ்ஞான இளமாணி			28	19	47			
வரைபட (கேத்திர) கணித பீடம்	அளவையியல் விஞ்ஞானத்தில் விஞ்ஞான இளமாணி			79	18	97 i			

முகாமைத்துவக் கற்கைகள் பீடம்	முகாமைத்துவக் கற்கைகள் துறையில் விஞ்ஞான இளமாணி			79	186	265 ii			
	சுற்றுலாத்துறை மற்றும் விருந்தோம்பல் முகாமைத்துவத் துறையில் விஞ்ஞான இளமாணி			22	38	60			
மருத்துவ பீடம்	மருத்துவம் மற்றும் அறுவைசிகிச்சையியலில் விஞ்ஞான இளமாணி			29	41	70			
சமூக விஞ்ஞானங்கள் மற்றும் மொழிகள் பீடம்	இளங்கலைமாணி			22	198	220 iii			
	மொழிபெயர்ப்புக் கற்கையில் இளங்கலைமாணி			0	20	20			
தொழினுட்பவியல் பீடம்	பொறியியல் தொழினுட்பவியலில் இளங்கலைமாணி			14	61	75			
	உயிரமைப்புகள் தொழினுட்பவியலில் இளங்கலைமாணி			69	6	75			

i. அளவையியல் விஞ்ஞானத்தில் விஞ்ஞான இளமாணி
இரண்டு மாணவர்கள் ஒத்திவைப்பு அடிப்படையில் 2017/2018 ஆம் ஆண்டுக்கான மாணவர் குழுமத்தோடு மீள்நுழைவு பெற்றனர்.

ii முகாமைத்துவக் கற்கைகள் துறையில் விஞ்ஞான இளமாணி
நான்கு மாணவர்கள் ஒத்திவைப்பு அடிப்படையில் 2017/2018 ஆம் ஆண்டுக்கான மாணவர் குழுமத்தோடு மீள்நுழைவு பெற்றனர்.

iii. இளங்கலைமாணி
எட்டு மாணவர்கள் ஒத்திவைப்பு அடிப்படையில் 2017/2018 ஆம் ஆண்டுக்கான மாணவர் குழுமத்தோடு மீள்நுழைவு பெற்றனர்.

சமூக விஞ்ஞானங்கள் மற்றும் மொழிகள் பீடத்தின் 2017/2018 கல்வியாண்டுக்கான மாணவர் பதிவுகள் பின்வருமாறு:

இளங்கலைமாணி

- எட்டு மாணவர்கள் ஒத்திவைப்பு அடிப்படையில் 2017/2018 ஆம் ஆண்டுக்கான மாணவர் குழுமத்தோடு மீள்நுழைவு பெற்றனர்.

- 30.06.2019 திகதியிட்ட அறிக்கையில் ஆண் மாணவர்களின் எண்ணிக்கை 35 ஆகவும், 30.06.2020 தி திகதியிட்ட அறிக்கையில் 37 ஆகவும் இருந்தது. இரண்டு மாணவர்கள் 2016/2017 கல்வியாண்டை நீட்டித்துள்ளனர்.

- 30.06.2019 திகதியிட்ட அறிக்கையில் பெண் மாணவர்களின் எண்ணிக்கை 217 ஆகவும், 2010.06.30 திகதியிட்ட அறிக்கையில் 222 ஆகவும் இருந்தது. 06 மாணவர்கள் 2016/2017 கல்வியாண்டை நீட்டித்துள்ளனர். ஒரு மாணவி இடமாற்றம் பெற்றுள்ளார்.

- மேலும், 30.06.2019 திகதியிட்ட அறிக்கையில் கூடுதல் மாணவர்களின் எண்ணிக்கை தனித்தனியாகக் குறிப்பிடப்பட்டு, 30.06.2020 திகதியிட்ட அறிக்கையில் இளங்கலைமாணிப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளது.

2017/2018 பிரிவு	**ஆண்**	**பெண்**
இளங்கலைமாணி	31	174
மேலதிக உள்நுழைவு +	4	43
	35	217
ஒத்திவைப்பு +	2	6
	37	223
இடமாற்றம் -	0	1
மொத்தம்	37	222

பீடம்	கற்கைநெறி	கற்கை ஆண்டு	சேர்க்கை ஆண்டு	UGC சேர்க்கை (உள்நாட்டு மாணவர்)			பிந்திய சேர்க்கை *		
				ஆண்	பெண்	மொத்தம்	ஆண்	பெண்	மொத்தம்
விவசாய விஞ்ஞான பீடம்	விவசாய விஞ்ஞானத் துறையில் விஞ்ஞான இளமாணி	4 ஆம் ஆண்டு	2016/2017	28	69	97	3	2	5
	உணவு வணிக முகாமைத்துவத் துறையில் விஞ்ஞான இளமாணி			10	48	58			
பிரயோக விஞ்ஞான பீடம்	உணவு விஞ்ஞானம் மற்றும் தொழினுட்பவியலில் விஞ்ஞான இளமாணி			31	27	58			
	உயிரியல் விஞ்ஞானத் துறையில் விஞ்ஞான இளமாணி			10	41	51			
	பௌதீக விஞ்ஞானத்தில் விஞ்ஞான இளமாணி			11	13	24			
	கணினி மற்றும் தகவலமைப்புத் துறையில் விஞ்ஞான இளமாணி			55	38	93			
	விளையாட்டு விஞ்ஞானம் மற்றும் முகாமைத்துவத் துறையில் விஞ்ஞான இளமாணி			22	27	49			
	உடற்கல்வித் துறையில் விஞ்ஞான இளமாணி			24	24	48			
வரைபட (கேத்திர) கணித	அளவையியல் விஞ்ஞானத்தில் விஞ்ஞான			72	21	93			

பீடம்	இளமாணி								
முகாமைத்துவக் கற்கைகள் பீடம்	முகாமைத்துவக் கற்கைகள் துறையில் விஞ்ஞான இளமாணி			70	173	243			
	சுற்றுலாத்துறை மற்றும் விருந்தோம்பல் முகாமைத்துவத் துறையில் விஞ்ஞான இளமாணி			25	38	63			
சமூக விஞ்ஞானங்கள் மற்றும் மொழிகள் பீடம்	இளங்கலைமாணி			24	187	211			
	மொழிபெயர்ப்புக் கற்கையில் இளங்கலைமாணி			1	22	23			

- பிந்திய சேர்க்கை என்பது சிறப்பு ஒதுக்கீடுகளின் அடிப்படையில் உள்நாட்டு மாணவர்கள் அனுமதிக்கப்படவும் பகுதி வழியாகப் பட்டக்கற்கையை நிறைவுசெய்வதற்குமான ஏற்பாடாகும்.

- பிந்திய மாணவர் சேர்க்கைக்கான அனுமதி வழங்கலைப் பல்கலைக்கழகங்கள் தாமே கையாள்கின்றன.

20.3 வெளிநாட்டு மாணவர்கள் (வெளிநாட்டு மாணவர்களுக்கான இளங்கலைக் கற்கைக்கான பிரிவில்) மாணவர்களின் சேர்க்கை (மொத்த மாணவர்களின் எண்ணிக்கை) – 2022 (31 ஆம் திகதி 2022 க்குள்)

2022 ஆம் ஆண்டில் எந்தவொரு வெளிநாட்டு மாணவரும் சேர்த்துக்கொள்ளப்படவில்லை.

21 பட்டப்பின் கற்கைநெறிகளுக்கான உள்வாரியான புதிய மாணவர் நுழைவு மற்றும் மாணவர் பதிவு (மொத்த மாணவர்களில்)

21.1பட்டப்பின் கற்கைநெறிகளுக்கான உள்ளூர் மாணவர்களுக்கான உள்வாரி பட்டதாரிக் கற்கை நெறிகளுக்கான புதிய நுழைவு மற்றும் மாணவர் பதிவு (மொத்த மாணவர்களில்)

கற்கைநெறி	முழுநேரம்/ பகுதிநேரம்	புதிய மாணவர் நுழைவு (ஜனவரி – டிசம்பர் 2020)			மாணவர் சேர்க்கை (பதிவுசெய்த மொத்த மாணவர் எண்ணிக்கை) (31 டிசம்பர் 2020 முதல்)		
		ஆண்	பெண்	மொத்தம்	ஆண்	பெண்	மொத்தம்
பட்டப்பின் டிப்ளோமா (PG.Dip ….) எ-டு. கணினி விஞ்ஞானத்தில் பட்டப்பின் டிப்ளோமா							
வணிகநிர்வாகத்தில் பட்டப்பின் டிப்ளோமா	முழு நேரம்	13	2	15	48	18	66
ஆங்கிலம் மற்றும் கல்வித்துறையில் பட்டப்பின் டிப்ளோமா	முழு நேரம்	7	39	46	8	63	71
மொத்தம்		20	41	61	56	81	137
முதுமாணிப் பட்டம் (MSc, MA, MBA, …) எ-டு. அரசறிவியலில் முதுமாணி							
வணிகநிர்வாகத்தில் முதுமாணி	முழு நேரம்	20	12	32	88	93	181
ஆயுர்வேத மருத்துவமனை முகாமைத்துவத்தில் முதுமாணி	முழு நேரம்	10	25	35	70	143	213
அளவையியல் விஞ்ஞானத்தில்	முழு நேரம்	0	0	0	98	30	128
ஆங்கிலம் மற்றும் கல்வித் துறையில் முதுமாணி	முழு நேரம்	4	14	18	9	33	42
தகவல் தொழினுட்பவியலில் முதுமாணி	முழு நேரம்	14	8	22	28	16	44
மொத்தம்		48	59	107	293	315	608
முதுதத்துவமாணி எ-டு. பொருளியல் துறையில் முதுதத்துவமாணி							
விவசாய விஞ்ஞானத்தில் முதுதத்துவமாணி	முழு நேரம் / பகுதி நேரம்	0	3	3	4	7	11
கணினியியல் மற்றும் தகவலமைப்புத் துறையில் முதுதத்துவமாணி	முழு நேரம் / பகுதி நேரம்	0	1	1	7	3	10
வரைபட (கேத்திர) கணிதவியலில் முதுதத்துவமாணி	முழு நேரம் / பகுதி நேரம்	0	0	0	1	0	1
மனிதப் பண்பியல் துறையில்	முழு நேரம் / பகுதி நேரம்	0	3	3	0	6	6

முதுதத்துவமாணி							
பௌதீக மற்றும் இயற்கை விஞ்ஞானத்தில் முதுதத்துவமாணி	முழு நேரம் / பகுதி நேரம்	0	2	2	12	10	22
விளையாட்டு மற்றும் உடற்கல்வித் துறையில் முதுதத்துவமாணி	முழு நேரம் / பகுதி நேரம்	0	1	1	2	2	4
மனிதப் பண்பியல் துறையில் முதுதத்துவமாணி	முழு நேரம் / பகுதி நேரம்	3	0	3	7	3	10
பழங்குடிச் சமூகக் கற்கைகள் துறையில் முதுதத்துவமாணி	முழு நேரம்/ பகுதி நேரம்	1	0	1	1	0	1
மொத்தம்		4	10	14	34	31	65
கற்கைக் குழுமச் சான்றிதழுடன் MD கற்கை எ-டு: முதியோர் மருத்துவத்துக்கான MD மற்றும் முதியோர் மருத்துவத்துக்கான கற்கைக் குழுமச் சான்றிதழும்							

கற்கைநெறி	**முழுநேரம்/ பகுதிநேரம்**	**புதிய மாணவர் நுழைவு (ஜனவரி – டிசம்பர் 2020)**			**மாணவர் சேர்க்கை (பதிவுசெய்த மொத்த மாணவர் எண்ணிக்கை) (31 டிசம்பர் 2020 முதல்)**		
		ஆண்	**பெண்**	**மொத்தம்**	**ஆண்**	**பெண்**	**மொத்தம்**
கற்கைக் குழுமச் சான்றிதழுடன் MD கற்கை எ-டு: முதியோர் மருத்துவத்துக்கான MD							
கலாநிதிப் பட்டம் எ-டு: விவசாயத்துறையில் கலாநிதி							
விவசாய விஞ்ஞானத்தில் கலாநிதி	F/P	0	0	0	4	0	4
கணினியியல் மற்றும் தகவலமைப்புத் துறையில் கலாநிதி	F/P	0	0	0	0	1	1
மனிதப் பண்பியல் துறையில் கலாநிதி	F/P	0	0	0	2	0	2
பௌதீக மற்றும் இயற்கை விஞ்ஞானத்தில் கலாநிதி	F/P	0	0	0	1	1	2
முகாமைத்துவத் துறையில் கலாநிதி	F/P	0	0	0	4	1	5
சமூக விஞ்ஞானத் துறையில் கலாநிதி	F/P	0	1	1	2	1	3
பழங்குடிச் சமூகக் கற்கைகள் துறையில் கலாநிதி	F/P	2	0	2	2	0	2
மொத்தம்		2	1	3	15	4	19
முழுமொத்தம்		**74**	**111**	**185**	**398**	**431**	**829**

22 தேர்வுத் தரவுகள்

22.1 உள்வாரிப் பட்டதாரி மாணவர் பெறுபேறுகள் 2022

பீடம்	கற்கைநெறி	இறுதித் தேர்வுத் திகதி (மா/வ)	செல்லுபடியாகும் தேர்வுத் திகதி (மா/வ)	முதல் முறை/ மீள எழுதுதல்	பீடம்	UGC இன் உரிய சேர்க்கை ஆண்டு	இறுதித் தேர்வு எழுதியோர் எண்ணிக்கை		பட்டதாரிகளின் முழு எண்ணிக்கை									
									முதல் வகுப்பு		இரண்டாம் வகுப்பு மேல் நிலைச் சித்தி		இரண்டாம் வகுப்பு அடி நிலைச் சித்தி		சித்தி		மொத்தம்	
							ஆண்	பெண்	ஆண்	பெண்	ஆண்	பெண்	ஆண்	பெண்	ஆண்	பெண்	ஆண்	பெண்
விவசாய விஞ்ஞான பீடம்	BSc (சிறப்பு)	ஜூலை 2017,	மே 2022, டிச 2021	மே 2022, டிச 2021	முதல் முறை	2015/ 2016	16	85	-	-	1	30	8	41	7	12	16	83
	BSc (விசேட)	ஜன 2016	டிச 2021	டிச-2021	மீள் எழுதுகை	2014/ 2015	1	-	-	-	-	-	-	-	1	-	1	0
பிரயோக விஞ்ஞான பீடம்	BSc (சிறப்பு) - FST, SSM, PED,ESNRM	மே 2017.	மார் 2022	மார் 2022.	முதல் முறை	2017	59	64	1	3	3	18	21	26	20	13	45	60
		ஏப். 2016.	மார் 2022	மார் 2022..	மீள் எழுதுகை	2016	1	64	-	-	-	-	-	1	1	4	1	5
		ஏப். 2016.	2021	2021	மீள் எழுதுகை	2016	3	3	-	-	-	-	-	1	3	2	3	3
	BSc (சிறப்பு) - PST	மே 2017.	ஜூன் 2022	ஜூன் 2022.	முதல் முறை	2017	11	12	-	-	1	4	7	5	-	1	8	10
		ஏப். 2016.	2022	2022	மீள் எழுதுகை	2016	-	2	-	-	-	-	-	1	-	1	0	2
		ஏப். 2016.	2021	2021	மீள் எழுதுகை	2016	4	-	-	-	-	-	-	-	4	-	4	0
	BSc (சிறப்பு) - CIS	மே 2017.	ஜன 2022	ஜன 2022.	முதல் முறை	2017	39	36	-	-	4	9	21	23	13	2	38	34
		ஏப் 2016.	2021	2021	மீள் எழுதுகை	2016	3	-	-	-	-	-	1	-	2	-	3	0
	BSc (விசேட)	2014	2022	2022	மீள் எழுதுகை	2014	-	1	-	-	-	-	-	-	-	1	0	1
	BSc (விசேட)	2014	2021	2021	மீள் எழுதுகை	2014	8	2	-	-	-	-	-	1	8	1	8	2
வரைபட (கேத்திர) கணித பீடம்	BSc (சிறப்பு)	மே 2017	ஆக 2022	ஆக 2022.	முதல் முறை	2015/ 2016	61	11		1	4	8	15	2	29	-	48	11
	BSc (சிறப்பு)	ஜன 2016, ஏப். 2015	ஜூன் 2022, மார் 2022	ஜூன் 2022, மார் 2022	மீள் எழுதுகை	2014/ 2015, 2013/ 2014	12	-	-	-	-	-	-	-	8	-	8	0
முகாமைத்துவ கற்கைகள் பீடம்	BSc (சிறப்பு)	ஜன 2017	பெப். 2022.	பெப் 2022.	முதல்\ முறை	2015/ 2016	109	207	-	6	4	29	24	126	33	52	61	213
	BSc (Special)	2012,2013,2014	ஆக., செப்., ஒக் 2022	ஆக., செப்., ஒக். 2022	மீள் எழுதுகை	2012, 2013, 2014	22	9	-	-	-	-	2	7	20	2	22	9

கடனாளர் மற்றும் செலுத்த வேண்டியவை	19	199,042,493	200,288,899
மீளப்பெறக்கூடிய வைப்புகள்	20	12,187,322	13,538,027
ஏனைய பொறுப்புகள்	21	-	2,527,641
பணிக்கொட்டைக்கான ஒதுக்கீடு	22	11,920,879	3,160,273
ஒத்திவைக்கப்பட்ட வருமானங்கள்	23	38,301,638	43,873,313
மொத்த நடைமுறைப் பொறுப்புகள்		**807,010,208**	**462,957,500**
நடப்பு அல்லாத பொறுப்புகள்			
பணிக்கொட்டைக்கான ஒதுக்கீடு	22	644,188,690	511,506,220
மொத்த நடைமுறை அற்ற பொறுப்புகள்		**644,188,690**	**511,506,220**
மொத்த பொறுப்புகள்		**1,451,198,898**	**974,463,720**
நிகர சொத்துக்கள் / விகிதப் பங்குகள்		**4,255,293,006**	**810,651,873**

திரட்டப்பட்ட நிதிகள் மற்றும் ஒதுக்கீடுகள்			
நடைமுறை & மூலதன - திரட்டப்பட்ட நிதி	24	3,698,196,118	3,430,700,800
ஒதுக்கீடுகள்	25	195,442,097	59,643,941
கட்டுப்படுத்தப்பட்ட நிதி மற்றும் மானியங்கள்	26	40,517,614	34,786,285
தனி நிமித்த நிதிகள்	27	317,614,678	224,594,352
அறக்கொடை நிதிகள்	28	3,522,500	1,344,500
மொத்த நிகர சொத்துக்கள் / விகிதப் பங்குகள்		**4,255,293,006**	**3,751,069,877**

பக்கம் 10-53 இல் உள்ள கணக்கியல் கொள்கைகள் மற்றும் குறிப்புகள் இந்த நிதிநிலை அறிக்கைகளின் ஒ

"இந்த நிதி அறிக்கைகள் இலங்கையின் பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தால் வெளியிடப்பட்ட இலங்கை பொதுத்துறை கணக்கியல் தரநிலைகளுக்கு (SLPSAS) இணங்க தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளன "

பாடிய நகல் 2022 ஆண்டு அறிக்கையின் ஆங்கிலப் பதிப்போடு இணைக்கப்பட்டுள்ளது.

சப்பிரகமுவ பல்கலைக்கழகம் - இலங்கை
நிதி செயல்திறன் அறிக்கை
டிசம்பர் 31, 2022 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது

இலங்கை ரூபாய்களில்

டிசம்பர் 31ஆம் தேதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கானது	குறிப்புகள்	2022	மீள்கூற்று 2021
வருவாய்			
பரிமாற்றம் அற்ற பரிவர்த்தனையிலிருந்து வருவாய் - (நடப்பு)			
தொடர் செலவினங்களுக்கான அரசு மானியம்		2,150,000,000	2,104,000,000
மாணவர் உதவித்தொகைக்கான UGC மானியம்		89,570,000	65,852,000
மாணவர்களின் விளையாட்டு நடவடிக்கைகளுக்கான UGC மானியம்		2,500,000	
AHEAD மீண்டெழும் செயல்பாட்டு நடவடிக்கைகள	35	62,186,254	59,550,732
பத்திர மீறல் மீட்பு		24,541,032	4,440,449
பரிமாற்றம் அல்லாத பரிவர்த்தனையின் மொத்த வருவாய் - நடப்பு		**2,328,797,286**	**2,233,843,181**
பரிமாற்ற பரிவர்த்தனையிலிருந்து வருவாய் - நடப்பு			
வட்டி வருமானம்		32,350,575	6,586,143
சொத்துக்களிலிருந்து வாடகை		5,256,139	3,996,029
உளச்சார்புத் தேர்வு செயற்பாடு		3,619,977	
திட்டத்திற்கு வெளியே SUSL பங்களிப்பு		2,395,274	
நானாவித வருமானம்	29	33,825,467	40,206,525
சுயநிதி நடவடிக்கைகளின் வருமானம்	30	125,917,863	73,414,154
பல்கலைக்கழக வணிக இணைப்புக் கூடு	31	204,883	160,000
சொத்துக்களை முடிவுறுத்திப் பெற்ற இலாபம்	32	1,144,651	182,566
பரிமாற்ற பரிவர்த்தனையிலிருந்து மொத்த வருவாய் - நடப்பு		**204,714,828**	**124,545,418**
மொத்த வருவாய் - தற்போதைய		**2,533,512,114**	**2,358,388,599**
பரிமாற்றம் அல்லாத பரிவர்த்தனையிலிருந்து வருவாய் - மூலதனம்			
மூலதன பரிமாற்றம்	33	990,523,558	1,179,660,864
ஒத்திவைக்கப்பட்ட வருமானம்	34	-	
பரிமாற்றம் அல்லாத பரிவர்த்தனையின் மொத்த வருவாய் - மூலதன		**990,523,558**	**1,179,660,864**
மொத்த வருவாய்		**3,524,035,672**	**3,538,049,463**
செயல்பாட்டு செலவுகள் - தற்போதைய			
தனிப்பட்ட ஊதியங்கள்	34.1	1,850,233,083	1,719,762,219
பயணம்	34.2	1,604,329	1,611,527
வழங்கல் மற்றும் நுகர்பொருட்கள்	34.3	75,608,390	48,515,173
பராமரிப்பு	34.4	28,699,479	16,730,258
ஒப்பந்த சேவைகள்	34.5	245,116,974	216,165,677

பிற செயல்பாட்டு செலவுகள்	34.6	44,365,345	31,806,303
மகாபொல மற்றும் உதவித் தொகைக் கொடுப்பனவுகள்	34.7	95,942,000	65,852,000
பணிக்கொடை ஒதுக்கீடு	34.8	70,862,256	45,081,732
சுயநிதி நடவடிக்கைகளுக்கான செலவு	30	125,044,244	71,446,259
பல்கலைக்கழக வணிக இணைப்பு கூடு	31	204,883	160,000
AHEAD இயக்கச் செலவுகள் - (மீளெழும்)	35	62,186,254	59,550,732
உளச்சார்பு சோதனை செயற்பாடுகள்		1,777,535	
மொத்த இயக்கச் செலவுகள்		**2,601,644,771**	**2,276,681,880**
செயல்படாத செலவுகள்			
தேய்மானம் மற்றும் பணமதிப்பு நீக்கம்	36	530,657,673	428,302,675
ஆராய்ச்சி மற்றும் மனித மூலதன மேம்பாட்டுக்கு வலுவூட்டல்	37	10,287,335	7,532,222
மூலதனம் அற்ற இயல்புள்ள - புனர்வாழ்வு செலவுகள்		-	
மொத்த இயக்கமற்ற செலவுகள்		**540,945,007**	**435,834,897**
மொத்த செலவுகள்		**3,142,589,778**	**2,712,516,777**
காலத்திற்கான மொத்த உபரி / (பற்றாக்குறை)		**381,445,894**	**825,532,686**

குறிப்பிட்ட காலத்திற்கான மொத்த உபரி / (பற்றாக்குறை) நடப்பு மற்றும் மூலதன உபரி அல்லது (பற்றாக்குறை) பின்வருமாறு :

காலத்துக்கான மீண்டெழும் உபரி / (பற்றாக்குறை)	**(68,132,657)**	**81,706,719**
காலத்திற்கான மூலதன உபரி / (பற்றாக்குறை)	**449,578,551**	**743,825,967**

சப்பிரகமுவ பல்கலைக்கழகம் - இலங்கை

பணப் புழக்க அறிக்கை

டிசம்பர் 31, 2022ல் முடிவடைந்த ஆண்டுக்கானது

இலங்கை ரூபாய்களில்

டிசம்பர் 31ஆம் தேதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கானது	2022	மீள்கூற்று 2021
பணப்புழக்கம் / இயக்குதல் செயல்பாடுகளில் பயன்படுத்தப்பட்டது		
காலத்திற்கான உபரிகள் / (பற்றாக்குறை).	381,445,894	825,532,686
பணமில்லா இயக்கத்திற்கான சீராக்கல்		
பணமதிப்பிழப்பு	17,228,743	12,926,370
தேய்மானம் மற்றும் பணமதிப்பிழப்பு செலவுகள்	513,428,930	422,983,851
சொத்துக்களை முடிவுறுத்துவதில் பெற்ற இலாபம்		(182,566)
AHEAD மானிய மூலதனம்	(360,771,371)	
பரிசுகள் , நன்கொடைகள் , பொருட்கள்	(530,447)	
மானிய மூலதனம் - ஹெலபோஜுன் கட்டிடம்	(11,098,000)	
பணிக்கொடைக்கான ஏற்பாடு	70,898,456	44,546,790
அபராத வருமானம்		(175,500)
வட்டி வருமானம்	(48,315,359)	(7,003,055)
முது நிலைக் கற்கைகள்		(1,305,500)
மூலதன பரிமாற்றம்		(1,179,660,864)
வெளிப்புற திட்ட பங்களிப்பு	(2,395,274)	-
சொத்துக்களை முடிவுறுத்துவதில் பெற்ற இலாபம்	(1,144,651)	
நூலகம் மற்றும் ஆய்வக வைப்புத்தொகை கைவருதல்	(999,750)	
நடப்பு மூலதனத்தின் மாற்றங்களுக்கு முன் உள்ள இயங்கும் உபரி	**557,747,171**	**117,662,212**
கூட்டு / (குறை) பொருட் பட்டியல்	(8,536,125)	(7,531,193)
கூட்டு / (குறை) நடைமுறை சொத்துகள்	(43,198,887)	(10,792,429)
கூட்டு / (குறை) முற்பணங்களும் முற்கொடுப்பனவுகளும்	(5,366,510)	
கூட்டு / (குறை) நடைமுறைப் பொறுப்புகள்	82,232,002	(90,930,727)
பண உருவாக்கம் / (பாவனை) செயற்பாடுகளிலிருந்து	**25,130,480**	**(109,254,349)**
செலுத்தப்பட்ட பணிக்கொடை	(15,561,500)	(3,800,105)
இயக்குதல் செயல்பாடுகளிலிருந்து -நிகர தொகை	**567,316,151**	**4,607,758**
(பயன்படுத்தப்பட்ட) முதலீட்டு நடவடிக்கைகளில் இருந்து பணப்புழக்கம்		
சொத்து ஆலை மற்றும் உபகரணங்களை கையகப்படுத்துதல்	(105,556,038)	(114,290,458)
கட்புலனாகா சொத்துக்களை கையகப்படுத்துதல்	-	(9,180)
நடைமுறையில் இருக்கும் ஆக்கம்	(469,366,918)	(731,083,620)
கடன் கொடுப்பனவுகள்	(25,414,797)	(23,306,469)
கடன் மீட்பு	30,487,328	29,516,528

வட்டி வருமானம்	23,102,491	4,289,953
வைப்புக்கான கொடுப்பனவு , மனித மேம்பாட்டு நடவடிக்கைகள்	(3,269,289)	(54,908,180)
கருத்தறியும் அவையின் நடவடிக்கைகளுக்கான பற்றுச்சீட்டு	-	2,125,075
ஆய்வுகளுக்கான கொடுப்பனவு / கருத்தறியும் அவை நடவடிக்க	(11,750,438)	(3,035,869)
இவ்வாண்டுக்கான மூலதன மானியம்		972,085,247
நிகர நீண்டகால முதலீடு	(66,282,225)	
ஏனைய நிகர நிதிச்சொத்துக்கள்	(1,800,000)	
முதலீட்டு நடவடிக்கைகளில் பாவிக்கப்பட்ட நிகரப் பணம்	**(629,849,886)**	**81,383,027**

நிதி நடவடிக்கைகளில் பயன்படுத்தப்பட்ட பணப் பாய்ச்சல்		
கட்டுப்படுத்தப்பட்ட நிதி மற்றும் மானியங்கள் (நிக	10,843,147	
நியமிக்கப்பட்ட நிதிகள் (நிகர)	25,013,610	
நிகர அறக்கட்டளை நிதி	1,520,000	
கட்டுப்படுத்தப்பட்ட நிதிக்கான பெறுகை		35,878,297
கட்டுப்படுத்தப்பட்ட நிதிக்கான கொடுப்பனவு		(13,666,420)
முதலீட்டு நடவடிகைகள ஊடாக பெறப்பட்ட(பயனபடுததபபட்ட) நிகர பணப்பாய்க்கம்)	**37,376,757**	**22,211,877**
பணம் மற்றும் பணத்துக்கு சமமானவற்றின் நிகர அதிகரிப்பு/ (குறைட	(25,156,978)	108,202,662
ஆண்டின் தொடக்கத்தில் பணமும் பணத்துக்கு சமமானவையும்	133,220,719	25,018,057
ஆண்டின் இறுதியில் பணமும் பணத்துக்கு சமமானவையும்	**108,063,741**	**133,220,719**

சபரகமுவ பல்கலைக்கழகம்

நிதி மற்றும் கையிருப்புக்களில் ஏற்பட்ட மாற்றங்கள் பற்றிய அறிக்கை

டிசம்பர்31,2022 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது

இலங்கை ரூபாயில்

விளக்கம்	மறுமதிப்பீட்டு இருப்பு	திரட்டப்பட்ட நிதி மீண்டது	திரட்டப்பட்ட நிதி - மூலதனம்	வரையறுக்கப் பட்ட நிதி	மொத்தம்
31/12/2021 திகதிக்கான நிலுவை	59,643,941	(775,030,013)	-	4,201,525,661	**3,486,139,589**
கணக்கியல் கொள்கை மற்றும் தவறுகளின் மாற்றங்கள்	-	4,498,521	4,201,232,292	(3,940,800,524)	**264,930,289**
01.01.2022 அன்று மீள் கொணர்ந்த நிலுவை	**59,643,941**	**(770,531,492)**	**4,201,232,292**	**260,725,137**	**3,751,069,878**
குறித்த காலத்திற்கான மிகை / (பற்றாக்குறை)	-	(68,132,657)	449,578,551	-	**381,445,894**
மேலதிக ஒதுக்கீட்டுச் செலவுகளை மீளப் பெறுதல்	-				-
கட்டுப்படுத்தப்பட்ட (நிகர) நிதியிலிருந்து மூலதனச் செலவுக்கான பங்களிப்ப	-			5,731,330	**5,731,330**
நன்கொடைக்கான (நிகர) நிதியிலிருந்து மூலதனத்திற்கான பங்களிப்பு	-			2,178,000	**2,178,000**
ஒதுக்கப்பட்ட நிதிக்கான மாற்றுகை	-	(24,541,032)		93,020,325	**68,479,293**
முந்தைய ஆண்டிற்கான (நிகர) சீராக்கம்	-	(81,627,869)	(7,781,675)		**(89,409,544)**
வருடத்திற்கான நிகரப் பங்களிப்பு	-				-
மறுமதிப்பீட்டு இருப்பு	135,798,156				**135,798,156**
31.12.2022 இல் முன்கொணர்ந்த நிலுவை	**195,442,097**	**(944,833,049)**	**4,643,029,168**	**361,654,792**	**4,255,293,006**

இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம்
பாதீட்டு மற்றும் கையிருப்பு என்பவற்றுக்கிடையிலான ஒப்பீட்டு அறிக்கை
டிசம்பர்31,2022 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது

(இலங்கை ரூபாயில்)

டிசம்பர்31,2022 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது	பாதீடு	ஒப்பீட்டு அடிப்படையிலான நிலுவை
வருவாய்		
தொடர்ச்சியான செலவுகளுக்கான அரச மானியம்	2,195,000,000	2,150,000,000
வட்டி வருமானம்	7,750,000	32,350,575
வட்டி வருமானம்	3,500,000	5,256,139
இதர வருமானம்	25,440,000	33,825,467
சுய நிதி நடவடிக்கைகளின் ஊடான வருமானம்	41,832,000	125,917,863
மொத்த வருவாய்	**2,273,522,000**	**2,347,350,044**
நடத்துகை செலவுகள்		
தனிப்பட்ட ஊதியம்	1,876,482,000	1,850,233,083
பயணம்	1,200,000	1,604,329
பொருட்கள் மற்றும் நுகர்வுப் பொருட்கள்	41,000,000	75,608,390
பராமரிப்புச் செலவுகள்	19,500,000	28,699,479
ஒப்பந்தச் சேவைகள்	201,850,000	245,116,974
பிற செயற்பாட்டுச் செலவுகள்	46,450,000	44,365,345
மூலதனத்திற்கன மாற்றுகை	36,690,000	
பணிக்கொடை	8,518,000	15,561,000
சுயநிதித்திட்டச் செலவுகள்	41,832,000	125,044,244
தேய்மானத்திற்கு முன்னதான மொத்த செயற்பாட்டுச்	**2,273,522,000**	**2,386,232,843**
நிகர பற்றுச்சீட்டு / (கட்டணம்)	-	**(38,882,800)**

குறிப்பு: பாதீட்டு மற்றும் கணகீட்டு அடிப்படைகள் வேறுபட்டுள்ளன. பாதீட்டு மற்றும் கையிருப்பு தொடர்பான இவ்வறிக்கையானதுபாதீட்டு அடிப்படைகளை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது.

இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம்
நிதிக்கூற்றுகளுக்கான குறிப்புகள்

2022** டிசம்பர் மாதம் **31**ஆம் திகதியுடன் முடிவடையும் ஆண்டிற்கான**து

1. பொதுவான தகவல்

1.1 சட்டரீதியான உள்ளகப் படிவம்

இலங்கை சபரகமுவ பல்கலைக் கழகமானது 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின்கீழ் இலங்கையில் ஸ்தாபிக்கப்பட்ட அரச பல்கலைக் கழகமாகும். தற்போது அது 08 பீடங்களைக் கொண்டமைந்துள்ளது.

- பட்டதாரிக் கற்கைகள் பீடம்
- விவசாய விஞ்ஞான பீடம்
- பிரயோக விஞ்ஞான பீடம்
- வரைபட (கேத்திர) கணித பீடம்
- முகாமைத்துவக் கற்கைகள் பீடம்
- மருத்துவ பீடம்
- சமூக விஞ்ஞானங்கள் மற்றும் மொழிகள் பீடம்
- தொழினுட்பவியல் பீடம்

பட்டதாரிக் கற்கைகள் பீடமும் மருத்துவ பீடமும் **இரத்தினபுரியில் அமைந்துள்ளன. ஏனைய பீடங்கள் அனைத்தும் கொழும்பிலிருந்து சுமார்** 160 **கிலோமீட்டர் தொலைவிலே கொழும்பு - பதுளை அதிவேக நெடுஞ்சாலை ஊடறுத்துச் செல்லும் பெலிஹுலோயா நகருக்கு அண்மையில் பம்பஹின்னவில் அமைந்துள்ளன.**

இப்பீடங்களுக்கு மேலதிகமாக பதினாறு (16) கற்கை மையங்களும் உள்ளன. அவை வருமாறு:

- கணினி ஆய்வுகளுக்கான மையம்
- விவசாய - வணிக ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு

மையம் (ABRDS)

- தொழில் வழிகாட்டல் பிரிவு
- திறந்த மற்றும் தொலைக் கல்வி மையம் ((CODL)
- உடற்கல்வித் துறை
- ஊழியர் மேம்பாட்டு மையம் (SDC)
- பழங்குடிச் சமூகக் கற்கைகளுக்கான மையம்
- ஆராய்ச்சி மற்றும் அறிவுப் பரவலுக்கான மையம்
- உள்ளக தர உத்தரவாத மையம்
- பல்கலைக்கழக வணிக இணைப்பாக்கக்கூடம்
- பல்லுயிர் வகைமை மற்றும் சூழலியல் கற்கைக்கான மையம்
- பாலினச் சமத்துவம் மற்றும் சமநிலைக்கான மையம்
- AHEAD செயற்பாட்டுத் தொழினுட்பச் செயலகம்
- கலா மன்றம்
- சர்வதேசக் கூட்டிணைவுக்கான மையம்
- பல்கலைக்கழக நூதனசாலை

1.2 பிரதான செயற்பாடுகளும் அவற்றின் தன்மையும்

அடிப்படையில், **இப்பல்கலைக் கழகமானது உள்ளூர் மாணவர்களுக்கு விவசாயம்**, **பிரயோக விஞ்ஞானம்**, வரைபட (கேத்திர) கணிதம், **முகாமைத்துவக் கற்கைகள்**, **மருத்துவம்**, **சமூக விஞ்ஞானங்கள் மற்றும் மொழிகள்**, **தொழினுட்பவியல் முதலான துறைகளில் உயர் கல்வியையும் ஆய்வு முயற்சிகளையும் மேம்படுத்துவதற்கான வாய்ப்பினை வழங்குவதை முதன்மையாகக் கொண்டுள்ளது**.

1.3 நிதியியற் காலம்

இலங்கை சபரகமுவ பல்கலைக் கழகத்தின் இக்குறிப்பிட்ட **நிதியியற் காலமானது**, 2022 **ஆம் ஆண்டு ஜனவரி** 01 **ஆம் திகதி முதல் டிசம்பர்** 31 **ஆம் திகதி வரையான பன்னிரண்டு மாதங்களைக் கொண்டமைந்துள்ளது**.

1.4 வெளியீட்டிற்கான அதிகார பூர்வ அங்கீகாரத் திகதி

இலங்கை சபரகமுவ பல்கலைக் கழகத்தின் 2022 **டிசம்பர் மாதம்** 31 **ஆம் திகதிக்கான நிதிக் கூற்றானது வெளியிடப்படுவது தொடர்பில்**, 2023 **ஆம் ஆண்டு மார்ச்** 14 **ஆம் திகதி பல்கலைக்கழகப் பேரவையில் இடம்பெற்ற சிறப்புக் கூட்டத்தில் அதிகாரபூர்வமான அங்கீகாரம் பெறப்பட்டது**.

.

1.5 நிதிக் கூற்றுகள் தயாரிப்ப தற்கான அடிப்படை

1.5.1 இணக்க அறிக்கை

இலங்கை சபரகமுவ பல்கலைக் கழகத்தின் **நிதிக்கூற்றானது** இலங்கை அரச பிரிவின் கணக்கீட்டு நியமங்களுக்கு **அமைவாக** (SLPSASs) **இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் வெளியிடப்பட்டது**.

நிதிக்கூற்றானது, **நிதி நிலை அறிக்கை**, **நிதிச் செயல்திறன் அறிக்கை**, **நிதி மற்றும் கையிருப்பு மாற்றங்களின் அறிக்கை**, **நிதிப் பாய்ச்சல் அறிக்கை மற்றும் நிதிக் கூற்றுக்கான குறிப்புகள் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். பல்கலைக்கழகத்தால் உள்ளீர்க்கப் பட்டுள்ள அனைத்து கணக்கியல் கொள்கைகளும் முந்தைய ஆண்டில் நடைமுறைப்படுத்தப் பட்டவை அடங்கலாக தொடர்ந்து பயன்படுத்தப்பட்டு வருவதோடு**, **புள்ளிவிவரங்களில் தேவையான மாற்றங்களுக்கு ஏற்ப உரிய ஒப்பீடுகளினூடே சீராக்கப்பட்டு தற்போதைய ஆண்டுக்கான புள்ளிவிவரங்கள் முன்வைக்கப் பட்டுள்ளன. நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதில் பயன்படுத்தப்படும் முதன்மைக் கணக்கியல் கொள்கைகள் கீழே தரப்பட்டுள்ளன**.

1.5.2 தரநிலை மதிப்பீட்டிற் கான அடிப்படை

தொடர்புடைய குறிப்புகள் மூலம் தெளிவு படுத்தப்பட்ட நியாயமான பெறுமதி தொடர்பாகப் பொருத்தமான வெளிப்பாடுகள் செய்யப்படுவதைத் தவிர, நிதி அறிக்கைகள் நிகழ்வுற்ற செலவு அடிப்படையில் தயாரிக்கப் பட்டுள்ளன.

1.5.3 ஒப்பீட்டுத் தகவல்

தற்போதைய காலகட்டத்தின் நிதிநிலை அறிக்கைகள் தொடர்பான புரிதலை மேம்படுத்து வதற்கும் ஒப்பீட்டுத் திறத்தினை மேம்படுத்துவதற்கும் நிதிநிலை அறிக்கைகளில் தெரிவிக்கப்பட்ட அனைத்துத் தொகைகளுக்கும் முந்தைய காலத்தைப் பொருத்த மட்டில் அளவீட்டு, விவரண மற்றும் விளக்கத் தகவல்கள் உள்ளிட்ட ஒப்பீட்டுத் தகவல்கள் யாவும் வெளியிடப்படுகின்றன. தேவைப் படுமிடத்து, நடப்பு ஆண்டு முன்வைப்புக்கு ஏற்ப ஒப்பீட்டு புள்ளிவிவரங்கள் மறுசீரமைக்கப் பட்டுள்ளன.

1.5.4 நடைமுறை மற்றும் தொழிற் பாட்டு நாணயம்

பல்கலைக்கழகத்தின் நடை முறைத் தொழிற்பாட்டு நாணயம் என்ற வகையில், நிதி அறிக்கைகள் இலங்கை ரூபாயிலேயே முன்வைக்கப் படுகின்றன. இலங்கை ரூபாயில் முன்வைக்கப்பட்ட அனைத்து நிதித் தகவல்களும் கிட்டிய ரூபாய்க் கணக்குக்கு அண்ணளவாகுமாறு சீரமைக்கப்பட்டுள்ளன.

1.5.5 குறிப்பிடத் தக்க கணக்கியல் மதிப்பீடுகளும் முடிவுகளும்

SLPSAS **களுக்கு இணங்க நிர்வாகமானது நிதிநிலை அறிக்கைகள் தயாரித்து, முன்வைப்பது தொடர்பாக, அறிக்கையிடப்பட்ட சொத்துக்கள், பொறுப்புகள், வருமானம் மற்றும் செலவுகளை உள்ளடக்கி, கணக்கியல் கொள்கைகளின் பயன்பாட்டில் தாக்கம் செலுத்தக்கூடிய மதிப்பீடுகள் மற்றும்**

அனுமானங்களையும், அடிப்படை யாகக் கொண்டு உரிய முடிவுகளை மேற்கொள்ள வேண்டும். இந்த மதிப்பீடுகளும் அவற்றால் பெறப்படும் முடிவுகளும் உண்மையான பெறுபேறுகளில்இருந்து வேறுபடலாம்.

மதிப்பீடுகளும் அடிப்படை அனுமானங்களும் தொடர்ந்து மதிப்பாய்வு செய்யப்படுகின்றன. கணக்கியல் மதிப்பீடுகளுக்கான மீளாய்வுகள், அந்தக் கால கட்டத்தை மட்டுமே பாதிக்குமானால், அது அக்காலத்துக்கு மட்டும் உரியதாகக் கொள்ளப்படும். அவ்வாறன்றி, அந்த மதிப்பீடுகள் தொடர்பான மீளாய்வு நடப்பு மற்றும் எதிர்காலங்களைப் பாதிக்கும் வகையில் மேற் கொள்ளப் படுமாயின், அதற்கேற்ப அமையும். கணக்கியல் மதிப்பீடு கள் மற்றும் முக்கியமான முடிவு களில் ஏதேனும் மாற்றங்கள் ஏற்படுமாயின், நிதிநிலை அறிக்கைகளுடன் தொடர்புடைய குறிப்புகளில் அவை வெளிப் படுத்தப் படும்.

1.5.6 நடப்புத் தேவைகள்

பல்கலைக் கழகத்தின் நடப்புத் தேவைகள் தொடர்பான அனுமானத்தின் அடிப்படையில் நிதிநிலை அறிக்கைகள் தயாரிக் கப்பட்டுள்ளன.

2. இன்றியமையாத கணக்கியல் கொள்கைகளின் சுருக்கம்

2.1.சொத்துக்களும் அவற்றின் மதிப்பீட்டு அடிப்படைகளும்

2.1.1 சொத்து, ஆலைகள், உபகரணங்கள்

(அ) அங்கீகாரம் மற்றும் அளவீடு

சொத்துடன் தொடர்புடைய எதிர்காலப் பொருளாதார நன்மைகள் பல்கலைக் கழகத்திற்குக் கிடைக்கும் பட்சத்திலும், சொத்தின் விலை நம்பகத்தன்மையுடன் அளவிடப் படக் கூடியதாக இருக்கும் பட்சத்திலுமேயே சொத்து, ஆலை மற்றும் உபகரணங்கள் என்பன அங்கீகரிக்கப்படும். சொத்து, ஆலை மற்றும் உபகரணங்களின் அனைத்து பொருட்களும் ஆரம் பத்தில் விலையின் அடிப்படை யிலேயே அங்கீகரிக்கப்படு கின்றன. ஆரம்ப அங்கீகாரத் திற்குப் பிறகு, சொத்து, ஆலை மற்றும் உபகரணங்களின் அடுத் தடுத்த அளவீடுகள் - நிலத்தின் வகைகளைத் தவிர்த்து- குறைந்த திரட்டப்பட்ட தேய்மானத்தில் மேற்கொள்ளப்படுகின்றன.

பரிமாற்றாத பரிவர்த்தனைகள் மூலம் பெறப் பட்ட சொத்துக்கள் அதன் நியாய மான மதிப்பில் கையகப் படுத்தப்பட்ட திகதிக்கு உரியவையாக அங்கீகரிக்கப் படும். சொத்து, ஆலை மற்றும் உபகரணங்களில் அரசாங்க மானியங்கள், திட்டங்கள், ஆராய்ச்சி மானியங்கள், உள்நாட்டில் உருவாக்கப்பட்ட நிதி மற்றும் நன்கொடைகள்

மூலம் பெறப்பட்ட சொத்துக்கள் அடங்கும். SLPSAS 11 இன் படி, பரிசாகப் பெறப்பட்ட சொத்து ஆலை மற்றும் உபகரணங்களின் மதிப்பு மற்றும் நன்கொடைகள் பரிமாற்றம் அல்லாத பரிவர்த் தனையின் வருவாயாக அங்கீகரிக் கப்பட்டது. திருத்தம் மற்றும் பராமரிப்புச் செலவுகள் நிதிச் செயல்திறன் அறிக்கையில் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

(ஆ) தொடர் செலவினங்கள்

சொத்துக்களின் வருவாய்த் திறனைத் தொடர அல்லது அதனை விருத்தி செய்வதற்காக நிரந்தரத் தன்மை வாய்ந்த சொத்துக்களைப் பெறுதல், அவற்றின் பயன்பாட்டுக் காலத்தை நீட்டித்தல் அல்லது மேம்படுத்துதல் ஆகிய நோக்கத் திற்காகச் செய்யப் படும் செலவுகள் மூலதனச் செலவாகக் கருதப்படுகின்றன.

பிரதான பரிசீலனை மற்றும் முற்றாகப் பழுது பார்க்கும் செலவுகள் உட்பட, தனித் தனியாகக் கணக்கிடப்படும் சொத்து, ஆலை மற்றும் உபகரணங்களின் ஒரு பகுதியினை மாற்றுவதற்கு ஏற்படும் செலவு என்பன மூலதனமாக்கப்படுகின்றன. இந்த பகுதிக்குள் பொதிந்துள்ள எதிர்காலப் பொருளாதார நலன்கள் பல்கலைக் கழகத்திற்கு பாய்வதும், அதன் செலவை நம்பகத் தன்மையுடன் அளவிட முடியும் என்பதும் சாத்தியமாக இருந்தால் மட்டுமே அடுத்தடுத்த பிற செலவினங்கள் மூலதனமாக்கப்படும்.

(இ) சொத்து, ஆலை, உபகரண்ங்களின் மீள்மதிப்பீடு

2006 ஆம் ஆண்டு அரச மதிப்பீட்டுத் திணைக்களத்தைச் சேர்ந்த தொழில்சார் தகைமையாளரால் சொத்து, நிலம், கட்டிடடம், ஆலை, உபகரணம் என்பன மீள்மதிப்பீடு செய்யப்பட்டதோடு, மிகை மதிப்புத் தொகையானது முறைப்படி மீள் மதிப்பு உபரிக் கணக்கில் வரவு வைக்கப் பட்டுள்ளது.

அவ்வகையில், 226-5147, SG-RA-1220 எனும் இலக்கமிடப் பட்டவை, அஹெட் (AHEAD) மானியத்தால் வழங்கப்பட்ட SG-NE- 0859, SG-RH-3529 எனும் இலக்கமிடப்பட்டவை தவிர ஏனைய அனைத்து வகையான மோட்டார் வாகனங்களும் மீள் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன. மீள்மதிப்பீடு செய்யப்பட்ட வாகனங்களிலிருந்து எழும் மீள்மதிப்பீட்டு உபரி மீள்மதிப்பீட்டு இருப்புக்கு மாற்றப்பட்டு, நிதிச் செயல்திறன் அறிக்கையில் திரட்டப்பட்ட நிதி மற்றும் இருப்புகளில் சேர்க்கப் பட்டுள்ளது.

(ஈ) தேய்வுப் பெறுமானம்

சொத்து, ஆலை மற்றும் உபகரணங்களின் உபயோகத்திற்குக் கிடைக்கப் பெற்ற திகதியிலிருந்து மதிப்பிடப்பட்ட பயனுள்ள ஆயுட்காலம் ஆகியவற்றின் அடிப்படையில் ஒரு நேர்கோட்டு அடிப்படையில் நிதிச் செயல்திறனின் அறிக்கையில் தேய்மானம் அங்கீகரிக்கப் பட்டுள்ளது. நிலங்கள் தேய்மானம் அடையவில்லை.

பயன்பாட்டிற்குக் கிடைக்கும் ஆண்டில் தேய்மானம் முழுமையாக வழங்கப்படுகிறது என்பதோடு, அகற்றப்பட்ட ஆண்டில் தேய்மானம் வசூலிக்கப் படமாட்டாது. செயற்திட்டம், ஆராய்ச்சி மானியம் மற்றும் கட்டுப்படுத்தப்பட்ட நிதி ஆகியவற்றின் மூலம் வாங்கப்பட்ட சொத்து, ஆலை மற்றும் உபகரணங்களின் தேய்மானம் நிதிச் செயல்திறன் அறிக்கையில் முன்வைக்கப்படுகிறது.

மதிப்பிடப்பட்ட பயனுறுதிக்காலம் பின்வருமாறு:

சொத்து வகைமை	**மதிப்பிடப்பட்ட பயனுறுதிக் காலம்**
கட்டிடம்	20 ஆண்டுகள்
நீர் சுத்திகரிப்புத் திட்டம்	20 ஆண்டுகள்
வீதி வலையமைப்பு	20 ஆண்டுகள்
அலுவலக மற்றும் கற்பித்தல் உபகரணங்கள்	05 ஆண்டுகள்
கணினியும் துணைக் கருவிகளும்	05 ஆண்டுகள்
நூலக நூல்களும் பருவ இதழ்களும்	05 ஆண்டுகள்
தொடர்பாடற் கருவிகள்	05 ஆண்டுகள்
மோட்டார் வாகனங்கள்	05 ஆண்டுகள்
பட்ட மேலங்கி	05 ஆண்டுகள்
பிற கருவிகள்	05 ஆண்டுகள்

(உ) அங்கீகார ரத்து

சொத்து, ஆலை மற்றும் உபகரணங்களில் ஒன்று அகற்றப்படும்போது அல்லது அதன் பயன்பாடு அல்லது அகற்றலில் இருந்து எதிர்காலப் பொருளாதார நலன்கள் எதுவும் எதிர்பார்க்கப் படாதபோது அதற்கான அங்கீகாரம் ரத்தாகும்.

சொத்தின் அங்கீகார ரத்தினால் ஏற்படும் எந்தவோர் ஆதாயமோ நஷ்டமுமோ நிகர அகற்றல் வருமானத்திற்கும் எடுத்துச் செல்லும் தொகைக்கும் உள்ள வித்தியாசமாகக் கணக்கிடப்பட்டு, அந்த ஆண்டின் நிதிச் செயல்திறன் அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளதோடு, சொத்து அங்கீகார ரத்து செய்யப்பட்டுள்ளது.

2.1.2 நடப்புப் பணிகளும் மறுசீரமைப்பும்

நடப்பு மூலதன வேலைகளும் மறுசீரமைப்பும் செலவுக் கணக்கில் வரவு வைக்கப் பட்டுள்ளது. இவை, மூலதன மாக்கலுக்குக் காத்திருக்கும் சொத்து, ஆலை மற்றும் உபகரணங்களின் கட்டுமானம் மற்றும் மேம்பாடு ஆகியவற்றில் நேரடியாகச் செய்யப்படும் மூலதனச் செலவாகும். சொத்து பயன்பாட்டுக்குரியதாகவும் முழுச் செலவும் நம்பகத்தன்மையுடன் அளவிடப்படும்போதும் நடப்பு மூலதனப் பணி மற்றும் மறுசீரமைப்புச் செலவுகள், சொத்து ஆலை மற்றும் உபகரணங்களோடு தொடர்பு உடைய சொத்து வகைக்கு மாற்றப்படும்.

நிதி நிலை அறிக்கையின் திகதியில் உள்ள அங்கீகார அளவுகோல்களைப் பூர்த்தி செய்யாத ஆண்டில் ஏற்படும் மூலதனச் செலவுகள், நடப்பு மூலதனச் செலவுகள் மற்றும் மறுசீரமைப்பு என்றவாறு காட்டப்படுகின்றன.

2.1.4 கட்புலனாகாச் சொத்துக்கள்

எதிர்கால பொருளாதார நலன்கள் அல்லது சொத்திற்குக் காரணமான சேவைத் திறன் பல்கலைக் கழகத்திற்குப் பாயும் மற்றும் கட்புலனாகாச் சொத்தின் விலை நம்பகத்தன்மையுடன் அளவிடப் படும் போது கட்புலனாகாச் சொத்துக்கள் அங்கீகரிக்கப் படுகின்றன.

தனித்தனியாகப் பெறப்பட்ட அனைத்துக் கட்புலனாகாச் சொத்துக்களும்

ஆரம்பத்தில் செலவுக் கணக்கில் அளவிடப்படுகின்றன. அதன் பின்னர் இலங்கை பொதுத்துறை கணக்கியல் தரநிலை 20 (SLPSAS) க்கு இணங்க, செலவின மாதிரியின் கீழ் திரட்டப்பட்ட கடனைக் குறைக்கும் செலவில் இது மேற்கொள்ளப்படும். பரிவர்த்தனை மூலம் அல்லாமல், பெறப்பட்ட கட்புலனாகாச் சொத்துகளின் விலை, பரிமாற்றம் இடம்பெற்ற திகதியில் அவற்றின் நியாயமான மதிப்பின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

வரையறுக்கப்பட்ட பயனுள்ள ஆயுளைக் கொண்ட அனைத்து கட்புலனாகாச் சொத்துக்களும் அவற்றின் மதிப்பிடப்பட்ட பயனுறுதிக் காலத்தில் நேர்கோட்டு அடிப்படையில் மாற்றியமைக்கப்படுகின்றன என்பதோடு, அவை பின்வருமாறு நிதிச் செயல்திறன் அறிக்கைக்குள் உள்ளீர்க்கப்படுகின்றன:

(அ) கணினி மென்பொருள்

பெறப்பட்ட கணினி மென்பொருள் உரிமங்கள் பெறுவதற்கும் பயன்படுத்துவதற்கும் ஏற்படும் செலவின் அடிப்படையில் அவை மூலதனமாக்கப் படுகின்றன. இந்தச் செலவுகள் நேர்வரி அடிப்படையில் அவற்றின் மதிப்பிடப்பட்ட ஐந்து (5) **ஆண்டுப் பயனுறுதிக் காலத்திற்கு மதிப்பு நீக்கம் செய்யப்படுகின்றன**.

(அ) மனித மூலதன மேம்பாடு மற்றும் தர உத்தரவாதச் செலவுகள்

மனித மூலதன மேம்பாடு தொடர்பில் எதிர்பார்க்கப்படும் எதிர்காலப் பொருளாதார நன்மைகள் மீதும், ஒரு கட்புலனாகாச் சொத்தின் வரையறையைப் பூர்த்தி செய்யும் வகையில், இந்தப் பொருட்களுக்கான தர உத்தரவாதச் செலவிலும் பல்கலைக்கழகம் போதுமான கட்டுப்பாட்டைக் கொண்டிருக்கவில்லை ஆதலால், மனித மூலதன மேம்பாடு மற்றும் தர உத்தரவாதத்திற்காகச் செய்யப்படும் அனைத்து மூலதன இயற்கைச் செலவினங்களும் நிதிச் செயல்திறன் அறிக்கையில் செலவாக அங்கீகரிக்கப்படும்.

(ஆ) உள்நாட்டில் உருவாக்கப்பட்ட கட்புலனாகாச் சொத்துகள், ஆராய்ச்சிச் செலவுகள்

SLPSA 20 **இன் படி, ஆராய்ச்சி கட்டத்தில் இருந்து எழும் எந்தக் கட்புலனாகாச் சொத்துக்களும் அங்கீகரிக்கப்பட மாட்டாது என்பதோடு, ஆராய்ச்சிக்கான செலவுகள் ஏற்படும் போது அது ஒரு செலவாக அங்கீகரிக்கப்படும். அதன்படி, ஆராய்ச்சிச் செலவினங்களுக்காகச் செய்யப்படும் அனைத்துச் செலவினங்களும் ஒரு செலவாக அங்கீகரிக்கப்பட்டு நிதிச் செயல்திறன் அறிக்கையில் உள்ளீர்க்கப்படும்.**

(இ) அபிவிருத்திச் செலவினங்கள்

SLPSAS 20 **இன் பிரிவு** 55 **க்கு இணங்க மறுசீரமைப்பு அளவுகோல்கள் பூர்த்தி செய்யப்பட்டால் மட்டுமே உள்நாட்டில் உருவாக்கப்பட்ட அனைத்துக் கட்புலனாகாச் சொத்துக்களும் அங்கீகரிக்கப்படும்.**

2.1.5 முதலீடுகள்

நிலையான வைப்புகள் மற்றும் சேமிப்பு தொடர்பான முதலீடுகள் என்பன செலவுக் கணக்கிலும், குறுகிய கால முதலீட்டில் பெறப்படும் வட்டி என்பன வருமதிகளாகவும் நிதிநிலை அறிக்கையில் கணக்கிடப்படுகிறது. அத்துடன், நன்கொடை நிதிகள், நியமிக்கப்பட்ட நிதிகள், செயற்திட்டங்கள் முதலான கட்டுப்படுத்தி வைக்கப்பட்ட நிதிகளுடன் தொடர்புடைய வட்டி வருமானமானது தொடர்புடைய கட்டுப்படுத்தப்பட்ட நிதிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டு நிதி நிலை அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளது.

2.2 சரக்குகள்

2.2.1 சரக்குகள் (இருப்புகள்)

காலாவதியான பொருட்களுக்கான உரிய ஒழுங்குபடுத்தலுக்குப் பிறகு குறைந்த விலையிலும் உணரக்கூடிய நிகர மதிப்பிலும் சரக்குகள் குறிப்பிடப்படுகின்றன. அத்துடன், முதல் உள்வரவு – முதல் வெளியகற்றல் (FIFO) முறையின் அடிப்படையில் செலவு தீர்மானிக்கப்பட்டுள்ளது. சரக்குகளைக் கையகப்படுத்துவதற்கும், அவற்றை உரிய இடம் மற்றும் நிலைக்குக் கொண்டு வருவதற்கும் ஆகும் செலவை உள்ளடக்கியது. பல்கலைக்கழகச் சரக்குகளில் எழுதுபொருட்கள், நுகர்பொருட்கள், பராமரிப்புப் பொருட்கள் மற்றும் மருத்துவப் பொருட்கள் ஆகியவை உள்ளடங்கும்.

2.2.2 கால்நடைகள்

கால்நடை இருப்பு என்பது விவசாய விஞ்ஞான பீடத்தால் நிர்வகிக்கப்படும் கற்பித்தல் மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காகப் பயன்படும் விலங்குகளைக் கொண்டமைந்துள்ளது. கால்நடை இருப்பு ஆரம்ப அங்கீகாரத்தின் அடிப்படையிலும் ஒவ்வொரு அறிக்கையிடல் திகதிக்கு அமைவாகவும் அதன் மதிப்பில் குறைந்த நியாயமான விற்பனை விலையில் அளவிடப்படும்.

SLPSAS 18 **இன் ஏற்பாட்டின்படி கால்நடை இருப்பினை அதன் நியாயமான மதிப்பில் அங்கீகரிப்பதால் ஏற்படும் இலாபம் அல்லது நட்டம் மற்றும் நியாயமான மதிப்பில் ஏற்படும் மாற்றங்கள் உபரி அல்லது பற்றாக்குறையில் சேர்க்கப்படும்.**

2.2.3 பண்ணை உற்பத்திக் கையிருப்பு

விளைச்சல் இருப்பு என்பது விவசாயப் பண்ணையின் அறுவடையில் இருந்து பெறப்படும் உற்பத்தியைக் குறிக்கும். சரிபார்த்த திகதியில் நிலவும் சந்தை விலையின் அடிப்படையில் விளைச்சல் கையிருப்பு மதிப்பீடு செய்யப்பட்டது.

2.3 பணமும் பண நிகரிகளும்

பணமும் பண நிகரிகளும், கையிருப்புப் பணம், நடப்புக் கணக்கில் உள்ள பணம் ஆகியவை உள்ளடங்கும். அவ்வாறே, அழைப்பு வைப்பு, வங்கிக் கடன்கள் என்பவை தேவைக்கேற்பச் செலுத்தப்படும்.

2.4 பொறுப்புகளும் ஒதுக்கீடு களும்

2.4.1 பொறுப்புகள்

நிதி நிலை அறிக்கைத் திகதியில் அறியப்பட்ட அனைத்துப் பொறுப்புகளும் நிதிநிலை அறிக்கைகளில் சேர்க்கப்பட்டு உள்ளன. அத்துடன், கோரிக்கை யின் பேரில் அல்லது நிதி நிலை அறிக்கையிட்ட திகதியிலிருந்து ஒரு வருடத்திற்குள் பொறுப்புக் களுக்கான

சென்மதிகள் நிதி நிலை அறிக்கையில் தற்போதைய பொறுப்புகளாகக் கருதப்படு கின்றன. நிதி நிலை அறிக்கையின் திகதியிலிருந்து ஒரு வருடத்திற்குப் பிறகு செலுத்த வேண்டிய பொறுப்புகள் நிதி நிலை அறிக்கையில் நடப்பு அல்லாத கடன்களாகக் கருதப் படுகின்றன.

2.4.2 ஒதுக்கீடுகள்

கடந்த காலத்தில் இடம்பெற்ற ஒரு நிகழ்வின் விளைவாகப் பல்கலைக்கழகத்திற்கு ஒரு கடப்பாடு நேர்ந்திருக்குமானால், அக்கடப்பாட்டினை நிறைவு செய்வதற்கு சொத்துக்களின் வெளியேற்றம் ஏற்படலாம் என்பதோடு, அக்கடப்பாடு நம்பகத் தன்மையுடன் அளவிடவும் படுமாயின், அது நிதி நிலை அறிக்கையில் ஒதுக்கீடாக அங்கீகரிக்கப்படுகிறது.

2.4.3 மூலதனக் கடப்பாடுகள் மற்றும் எதிர்பாராச் செலவினங்கள்

எதிர்பாராச் செலவினம் என்பது கடந்த கால நிகழ்விலிருந்து பெறச் சாத்தியமான சொத்துக் கள் அல்லது கடமைகள் ஆகும். பல்கலைக் கழகங்களின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட நிச்சயமற்ற எதிர்கால நிகழ்வு கள் நிகழ்கின்ற அல்லது நிகழாத நிலையில் மட்டுமே அவை உறுதிப் படுத்தப்படும். தற்செயலான பொறுப்புகள் மற்றும் மூலதனப் பொறுப்பு களை பல்கலைக்கழகம் அங்கீகரிக்கவில்லை. ஆனால், பொருளாதார நன்மைகள் அல்லது சேவை ஆற்றலை உள்ளடக்கிய வளங்களின் வெளியேற்றம் அல்லது உள்வரத்துக்கான சாத்தியம் தொலைவில் இருந்தாலன்றி எந்தவோர் எதிர்பாராச் செலவினத்தினதும் விபரங்கள் நிதிநிலை அறிக்கைக் குறிப்பு களில் வெளியிடப்படுகிறது.

நிதி நிலைத் திகதியில் பின்வரும் வழக்குகள் தொடரப்பட்டன. அத்துடன், வழக்கு நடவடிக்கைகளால் ஏற்படும் பொறுப்புகள் தொடர்பாகக் கணக்குகளில் எந்த ஒதுக்கீடும் செய்யப்படவில்லை..

தொடுக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை

தொடுக்கப்பட்ட வழக்குகளின் வகைகள்	வழக்குகளின் எண்ணிக்கை
உச்ச நீதிமன்ற வழக்குகள்	04
உயர் நீதிமன்ற வழக்குகள்	01
வணிக உயர்நீதிமன்ற வழக்குகள்	02

மனித உரிமை ஆணையம்	03
மாவட்ட நீதிமன்ற வழக்குகள்	07
ஊழல் ஆணைய வழக்குகள்	03
தொழிற்துறை நீதிமன்றம்	01
மேல்முறையீட்டு நீதிமன்ற வழக்குகள்	02
பல்கலைக்கழகச் சேவை மேன்முறையீட்டு அவை	02

தொடர்ந்துள்ள வழக்கு களின் விபரப் பட்டியல்

வழக்கு எண்	தொடர்புடைய தரப்பு
உச்ச நீதிமன்றம்	
267/2014 (F/R)	B.M.D.G.A.D. பண்டார
CEFR/45/15	T.D. மாதறாரச்சி
SEFR/09/2015	R.A.H.S.S. கருணாரத்ன
SC/FRA/284/2020	M.W.G.R.பேஹர
உயர் நீதிமன்றம்	
HCR/LTA/09/2020	M.L.K.M. திஸாநாயக்க
வணிக உயர்நீதிமன்றம்	
HC /LA38/19	வடிவ ஆலோசகர்
HC /LA 39/19	வடிவ ஆலோசகர்
மனித உரிமை ஆணையம்	
HRC/642/15	H.M.G.P. குணதிலக
HRC/3562/15	W.D.A.S.விஜய
HRC/751/2016	லயனல் குருகே
மாவட்ட நீதிமன்றம்	
3947 / M	அனுராதா றொட்ரிகோ
3555/M	D.M. ரத்னாயக்க
4708-விசேட	M. மெத்சிரிஅத்துகோரள
4995/M	குமுதுனி அத்துகோரள
4248/M	W.S.D. பிரியதர்ஷினி
6204/M	J. லக்ஷ்மன்
6205/M	N. விக்டர் ஜெயகுமார்
மற்றும்	N. சுபரத்னசிங்ஹ
ஊழல் ஒழிப்பு ஆணையம்	
M.M. விமலசிரி	
M. மிலிந்த விமலசிரி	
M.L.M.K. திஸாநாயக்க	
தொழிற்துறை நீதிமன்றம்	
A/7/2049	P.B.M. ப்ரசாத்
மேல்முறையீட்டு நீதிமன்றம்	
CA/Writ/463/2019	M.N. வினீஷியா
CA/Writ/183/20 20	W.P. எல்விட்டிகல
பல்கலைக்கழகச் சேவை மேன்முறையீட்டு அவை	
USAB-1005	S. மலவிபத்திரன
USAB -1009	இந்திக பண்டார

2.4.4 வரையறுக்கப்பட்ட நலன்திட்டம் - ஓய்வுக்கான பணிக்கொடை

வரையறுக்கப்பட்ட நலன் திட்டம் என்பது, பங்களிப்புத் திட்டம் என்பதை விட, வேலை வாய்ப்புக்குப் பிந்தைய ஒரு நலன் திட்டம் ஆகும். அதன்படி 1983 ஆம் ஆண்டின் பணிக்கொடைச் சட்டம் எண். 12- இன் படி பணிக் கொடைக்கான ஏற்பாடு செய்யப் பட்டது. பணிக்கொடைப் பொறுப்புக்கு வெளிவாரியாக நிதியளிக்கப் படவில்லை என்பதோடு, அது உண்மையான மதிப்பைக் கொண்டிருக்க வில்லை.

04 ஜூன் 2019 திகதியிட்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் சுற்றறிக்கை எண்.05/0219 இன் படி, 1983 ஆம் ஆண்டின் பணிக்கொடைச் சட்டம் எண். 12 இன் படி ஜூன் 01, 2019 முதல்

பணிக்கொடையும் ஊழியர் களுக்கு வழங்கப்படும் MCA (மாதாந்திர இழப்பீட்டுக் கொடுப்பனவு) ஆகியவை பணிக்கொடைக் கணக்கீட்டிற்கு உட்பட்டதாகக் கருதப்படுகின்றன..

விவரணம்	தொகை மில். (ரூ)
வருட ஆரம்பத்தில் மீதி	600.8
குறித்த வருடத்தில் மேற்கொண்ட ஒதுக்கீடு	70.9
குறித்த வருடத்தில் செலுத்தப்பட்ட கட்டணங்கள்	15.6
வருட முடிவில் மீதி	**656.1**

2.4.5 வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டம் - பல்கலைக்கழக சேமலாப நிதி, ஊழியர்கள் நம்பிக்கை நிதி மற்றும் ஓய்வூதியத் திட்டம்

வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டம் என்பது வேலைவாய்ப்புக்குப் பிந்தைய ஒரு திட்டமாகும். இதன் கீழ் ஒரு நிறுவனமானது, மற்றொரு தனி நிறுவனத்துக்கு நிலையான பங்களிப்பை செலுத்துவதைக் குறிக்கும். அதன்படி, அதற்கு மேலும் எந்தவித மேலதிகத் தொகையையும் செலுத்துவதற்குச் சட்டப்பூர்வ அல்லது கட்டமைக்கப் பட்ட பொறுப்பேதும் அதற்கு இருக்காது. வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டங்களின் பங்களிப்புகளுக்கான கடப்பாடு கள், நிதிச்செயல் திறன் அறிக்கையில் அவை செலுத்த வேண்டிய நேரத்தில் செலவாக அங்கீகரிக்கப் படுகின்றன.

ஊழியர்கள் ‘பல்கலைக்கழக சேமலாப நிதிப் பங்களிப்புகள், ஊழியர் நம்பிக்கை நிதிப் பங்களிப்பு கள், பல்கலைக்கழக ஓய்வூதிய நிதி என்பவற்றுக்கு அந்தந்தச் சட்டங்கள் மற்றும் ஒழுங்கு முறைகளுக்கு ஏற்பத் தகுதி யுடையவர்கள். இவை நிதிச் செயல்திறன் அறிக்கையில் ஏற்படும் செலவாக அங்கீகரிக்கப் பட்டுள்ளன. பல்கலைக் கழகமானது, ஊழியர்களின் மொத்த ஊதியத்தில் 8%, 3%, 7% சதவீதங்கள் முறையே பல்கலைக் கழக ‘சேமலாப நிதி மற்றும் ஊழியர்களின் நம்பிக்கை நிதி, பல்கலைக்கழக ஓய்வூதிய நிதி ஆகியவற்றுக்கு வழங்குகிறது.

2.5 கட்டுப்படுத்தப் பட்ட நிதியும் மானியங்களும்

இனம் காணப்பட்ட செயற்திட்டம் அல்லது செயல்பாட்டில் பயன் படுத்துமுகமாக மானியங்கள்/ நன்கொடைகள் பெறப்பட்டால், அத்தகைய நிதிகள் கட்டுப் படுத்தப்பட்ட நிதிக் கணக்கில் வைக்கப்பட்டு, பயன்படுத்தப் படாத

நிதிகள் அவற்றுக்கான தேவை எழும் வரை அந்தந்த நிதிக் கணக்குகளில் வைக்கப்பட்டு, நிதி நிலை அறிக்கையில் திரட்டப்பட்ட நிதி மற்றும் இருப்புகளின் கீழ் சேர்க்கப்படும். அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட மானியத்தின் செலவு பெறப்பட்ட வருமானத்தை விட அதிகமாக இருந்தாலோ மீதி பெறப்படும் என்பதில் உறுதியாக இருந்தாலோ, அத்தகைய தொகைகள் நிதி நிலை அறிக்கையில் பெறத்தக்கவை களாக அங்கீகரிக்கப்படும்.

2.6 நியமிக்கப்பட்ட நிதிகள்

பேரவையின் ஒப்புதலுடன் ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காகப் பல்கலைக்கழகத்தால் நியமிக்கப் பட்ட எந்தவொரு நிதியும் நியமிக்கப்பட்ட நிதிகளாக இனம் காணப்படுகின்றன. பயன் படுத்தப்படாத நிதிகள் அந்தந்த நிதிக் கணக்குகளில் வைக்கப் பட்டு, அவை தேவைப் படும் நேரம் வரை நிதி நிலை அறிக்கையில் திரட்டப்பட்ட நிதி மற்றும் இருப்புக்களின் கீழ் சேர்க்கப்படும்.

2.7 நன்கொடை நிதி

சொத்துக்கள் மானியமாகப் பெறப்பட்டால், அத்தகைய சொத்துக்களிலிருந்து ஈட்டப்படும் வருமானம் மட்டுமே அங்கீகரிக்கப் பட்டு வருமானமாகப் பயன் படுத்தப் படலாம். சம்பந்தப்பட்ட ஒப்பந்தம் அல்லது நிகழ்வுக் குறிப்பு போன்றவை வேறுவிதமாக வழங்காத வரையில், முதலீட்டு வருமானம் மற்றும் அத்தகைய நன்கொடை முதலீடுகளிலிருந்து பெறப்படும் பிற ஆதாயங்கள் பொருத்தமான நிதிகளுக்கு ஒதுக்கப்படும்.

தங்கப்பதக்கம் மற்றும் புலமைப்பரிசுத் தொகையின் கீழ் நடத்தப்பட்ட உதவித்தொகைகள் போன்ற நன்கொடை நிதிகள் மீள்வகைப்படுத்தப்பட்டு, திரட்டப் பட்ட நிதிகள் மற்றும் இருப்புகளின் கீழ் நிதி நிலை அறிக்கையில் நன்கொடை நிதிகளின் கீழ் இடப்பட்டன.

2.8 உயர்கல்வி விரிவாக்கம் மற்றும் வளர்ச்சியை துரிதப்படுத்துவதற்கான (AHEAD) மானியம்

உயர்கல்வி விரிவாக்கம் மற்றும் அபிவிருத்தியை துரிதப்படுத்துதல் (AHEAD) என்பது இலங்கை அரசாங்கத்திற்கான உலக வங்கியின் நிதியுதவியுடன் கூடிய ஒரு திட்டமாகும். இது முன்னுரிமைப் பிரிவுகளில் மாணவர் சேர்க்கையை விரிவுபடுத்துதல், பட்டப்படிப்புகளின் தரத்தை மேம்படுத்துதல் மற்றும் உயர்தரமான ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்புகளை மேம்படுத்துதல் ஆகிய நோக்கங்களுடன் உயர்கல்வித்துறைக்கு ஆதரவளிக்கிறது. கல்வி அமைச்சு இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தும் முகவராகத் தொழிற்படுகிறது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு மற்றும் செயல்பாட்டுக் கண்காணிப்பு மற்றும் ஆதரவுக் குழு (OMST) ஆகியவை பல்கலைக்கழகங்களின் செயற்திட்ட நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து அவற்றுக்கு ஆதரவளிக்கின்றன.

மேற்படித் திட்டம் இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் செயல்பாட்டுத் தொழினுட்பச் செயலக அலுவலகம் (OTS) மூலம் தனித்தனியாக இயக்கப்படுவதால், AHEAD நடவடிக்கைகளுக்கான மானிய வருமதி மற்றும் செலவுகள் என்பன 2021 நிதியாண்டு முதல் நிதிநிலை அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளன. **இந்த மானியத்தின் மூலம் சொத்து**, **ஆலை மற்றும் உபகரணங்கள்**, **முடிக்கப்பட்ட கட்டுமானப் பணிகள் மற்றும் மனித மூலதன மேம்பாட்டுச் செலவுகள் உள்ளிட்ட மூலதனச் சொத்துக்கள்**, **நிதிச் செயல்திறனின் அறிக்கையில்** SLPSAS 11 **இன் படி பரிவர்த்தனை அல்லாத பரிவர்த்தனையின் வருவாயாக அங்கீகரிக்கப்பட்டு**, **நிதி நிலை அறிக்கையில் மூலதன உபரி**/ (**பற்றாக்குறை**)**யின் கீழ் திரட்டப்படுகிறது**.

2018 முதல் 2022 வரையிலான காலப்பகுதியில், சப்ரகமுவ பல்கலைக்கழகத்திற்கு AHEAD திட்டத்தின் கீழ் பல மானியங்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், குறிப்பு எண் 35 இல் கொடுக்கப்பட்டுள்ள மானியங்களின் சுருக்கம் வருமாறு:

2.9 வருவாய் ஏற்பு

வருவாய் என்பது வருடத்தில் பல்கலைக்கழகத்தால் பெறப்பட்ட மற்றும் பெறக்கூடிய பொருளாதார நலன்கள் அல்லது சேவைத் திறன்களின் மொத்த வரவுகளை உள்ளடக்கியது. அத்துடன், நிகர சொத்துக்கள்/ பங்குகளின் அதிகரிப்பையும் இது குறிக்கிறது.

SLPSAS 10 (பரிமாற்ற பரிவர்த்தனைகளில் இருந்துவரும் வருவாய்) மற்றும் SPSAS 11 (பரிமாற்றம் அல்லாத பரிவர்த்தனைகளில் இருந்து வரும் வருவாய்) ஆகியவற்றின் நிறுவப்பட்ட அளவுகோல்களைப் பின்பற்றி பல்கலைக்கழகம் இவ் வருவாயை அங்கீகரிக்கிறது.

2.9.1 பரிமாற்றப் பரிவர்த்தனை வருவாய்

(அ) இளமாணிக் கற்கை மற்றும் பிற உள்ளக வருமானங்கள்

இளமாணிப் பட்டக் கற்கை நெறிகளிலிருந்து பெறப்பட்ட அனைத்து வருமானமும் பிற உள்ளக வருமானமும் பண அடிப்படையில் நிதிச் செயல்திறன் அறிக்கையில் இடம்பெற்றுள்ளது.

(ஆ) சுயநிதி நடவடிக்கைகளால் உருவாக்கப் படும் வருமானம்

வழிகாட்டல் ஆலோசனை, முதுமாணிக் கற்பித்தல்கள், வெளிவாரிப் பட்டக் கற்கை நெறிகள் போன்ற சுயநிதி நடவடிக்கைகள், செலவு மீட்பு மற்றும் இலாப நோக்கற்ற அடிப்படையில் மேற்கொள்ளப் படுகின்றன. சுயநிதி நடவடிக்கை களின் வளர்ச்சி வாக்குகளுக்கான வருமானம், செலவு மற்றும் பங்களிப்பு ஆகியவை நிதிச் செயல்திறன் அறிக்கையின் குறிப்பு 30ன் கீழ் வெளிக் காட்டப்பட்டுள்ளன.

சுயநிதி நடவடிக்கைகளின் செலவினத்தின் மீதான வருமானத்தின் உபரியானது அபிவிருத்தி வாக்குகளுக்கு அமைவாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை 4/2016 இன் படி அங்கீகரிக்கப்பட்டது.

(இ) வட்டி வருமானம்

வெளிவாரியாகத் கட்டுப்படுத்தப் பட்டுள்ள நிதிகள், நியமிக்கப்பட்ட நிதிகள் மற்றும் நன்கொடை நிதிகள் ஆகியவற்றிலிருந்து ஈட்டப்பட்ட முதலீட்டு வருமானத் தைத் தவிர, குறித்த கால கட்டத்திற்குப் பெறப்பட்ட வட்டி வருமானம் நிதிச் செயல்திறன் அறிக்கையில் பரிமாற்ற வருவாயாகப் பதிவு செய்யப் படுகிறது. அந்த நிதிகளில் இருந்து ஈட்டப்படும் முதலீட்டு வருமானம் செலவை விட அதிகமாக இருந்தால், அதிகப் படியான தொகையானது தொடர்புடைய நிதியில் நேரடி அதிகரிப்பாகப் பதிவு செய்யப் பட்டு, திரட்டப்பட்ட இருப்புக்கள் மற்றும் மானியங் களின் கீழ் நிதி நிலை அறிக்கையில் சேர்க்கப் பட்டுள்ளது.

(ஈ) வாடகை வருமானம்

பல்கலைக்கழகச் சொத்துக்களை வாடகைக்கு விடுவதால் பெறப்படும் வாடகை வருமானம், வாடகை விதிமுறைகளை விட நேர்முகமாகக் கணக்கிடப்பட்டு வருவாயில் சேர்க்கப்படுகிறது.

2.9.2 பரிமாற்றம் அல்லாத பரிவர்த்தனை வருவாய்

பரிமாற்றம் அல்லாத பரிவர்த் தனைகள் என்பது பல்கலைக் கழகம் பரிமாற்றத்தின் போது தோராயமாகச் சமமான மதிப்பைக் கொடுக்காமல் மற்றொரு நிறுவனத்திடமிருந்து (எ.கா. ரொக்கம் அல்லது பிற சொத்துக்கள்) பெறுமானத்தைப் பெறுவதாகும்.

ஒரு சொத்தின் வரையறையைப் பூர்த்தி செய்யும் வகையிலான சேவைகளைத் தவிர, பரிமாற்றம் அல்லாத பரிவர்த்தனைகளில் இருந்து வளங்களின் வரவுகள் சொத்தாக அங்கீகரிக்கப்பட வேண்டுமானால்,
— பல்கலைக் கழகமானது தன்னளவில் பொருளாதார நலன்கள் அல்லது சேவைத் திறனைப் பெறுவது சாத்திய மாதல் வேண்டும்.
— நியாயமான மதிப்பை நம்பகத்தன்மையுடன் அளவிட முடியுமாயிருத்தல் வேண்டும்.

சொத்துகளாக அங்கீகரிக்கப்பட்ட பரிமாற்றம் அல்லாத பரிவர்த் தனைகளில் இருந்தான வளங் களின் உள்வரவு, அதே வரவுக்குப் பொறுப்பான பொறுப்பு அங்கீ கரிக்கப் படாத அளவிற்கு, பரிமாற்றம் அல்லாத வருவாயாக அங்கீகரிக்கப்படுகிறது.

பல்கலைக்கழகப் பரிமாற்றம் அல்லாத பரிவர்த்தனைகள் தொடர்பான சிறப்பு அங்கீகார அளவுகோல்கள் பின்வருமாறு:

(அ) அரச மானியம்/ மாற்றல்கள்

அரசாங்க மானியங்களிலிருந்து எழும் சொத்துக்கள், வருவாய் ஆகியவை, பரிமாற்ற ஏற்பாடு நியாயமான மதிப்பில் பிணைக்கப்படும் காலகட்டத்தில் அங்கீகரிக்கப் படுகிறது. ஒரு மாற்றுகை நிபந்தனைகளுக்கு உட்பட்டு, பரிமாற்றம் அல்லாத பரிவர்த்தனையின் விளைவான சமகாலக் கடமையாக அமையும் போது, குறித்த நிபந்தனைகள் நிறைவேற்றப் படும்வரை பல்கலைக்கழகம் அப்பொறுப்பை அங்கீகரிக்கிறது.

அரசாங்க மானியங்களிலிருந்து எழும் சொத்துக்கள் மற்றும் வருவாய் அங்கீகரிக்கப்பட்ட திகதியின் நியாயமான மதிப்பில் அளவிடப்படுகிறது. பணச் சொத்துக்கள் அவற்றின் பெயரளவு மதிப்பில் அளவிடப்படுகின்றன.

(ஆ) மீண்டெழும் மானியம்

தொடர்ச்சியான இயற்கைச் செலவினங்களுக்காகப் பெறப் பட்ட அரசாங்க மானியங்கள், **பரிமாற்றம் அல்லாத பரிவர்த்தனைகளின் கீழ் நிதிச் செயல்திறன் அறிக்கையில் அங்கீகரிக்கப்பட்டுள்ளன**.

ரூ. 2,150 மில்லியன் மதிப்புடைய அரசு மானியம் 2022 ஆம் ஆண்டுக்கான மீண்டெழும் மானியமாகப் பெறப்பட்டது.

விவரணம்	தொகை மில்(ரூ)
அங்கீகரிக்கப்பட்ட தொடர் வரவுசெலவுத் திட்டம்	2,195
ஆண்டுக்கான முன்பண ஒதுக்கீடு	**2,150**
தனிப்பட்ட ஊதியங்கள்	1,881
ஏனைய மீள்வருகைகள்	269

(இ) மூலதனத் தொகுதி மானியமும் பிற மாற்றல்களும்

SLPSAS 11 **இன் தேவைக்கு இணங்க**, 2022 **நிதியாண்டு முதல் அமுலுக்கு வரும் வகையில் பரிமாற்றம் அல்லாத பரிவர்த்தனைகளின் வருவாய்**, **மூலதனச்**

செலவினங் களுக்காகப் பெறப்பட்ட அரசாங்க மானியங்கள் மற்றும் பிற மூலதனப் பரிமாற்றங்கள் நிதிச் செயல்திறன் அறிக்கையில் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. மூலதன உபரி / (பற்றாக்குறை) மூலதனப் பரிவர்த்தனைகளிலிருந்து எழும் திரட்டப்பட்ட நிதியின் கீழ் திரட்டப்படுகிறது - நிதிநிலை அறிக்கையின் மூலதனம்.

2.9.3 திரட்டப்பட்ட - நிதி மூலதன மீள்வகைப் படுத்தல்

பல்கலைக்கழகமானது SLPSAS 11ஐ ஏற்றுக்கொண்டு 2022 ஆம் ஆண்டு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் பரிவர்த்தனை அல்லாத பரிவர்த்தனைத் தரநிலைக்கு அமைய வருவாயைப் பயன்படுத்துகிறது -

நிதிநிலை அறிக்கைகளைச் சமர்பிப்பதற்காக, செலவழிக்கப் பட்ட மூலதன மானியம், செலவழிக்கப்படாத மூலதன மானியம், பரிசு மற்றும் நன்கொடைகள் தொடர்பான ஒப்பீட்டுப் புள்ளிவிவரங்கள் SLPSAS 11 மற்றும் APFASL வழங்கிய வழிகாட்டுதலின்படி, நிதி நிலை அறிக்கையில் "திரட்டப்பட்ட உபரி மூலதனம்" என மீள்வகைப் படுத்தப்பட்டன.

ஆண்டுக்கான மூலதன மானியங்களின் சுருக்கம் பின்வருமாறு:

விவரணம்	தொகை மில்(ரூ)
திறைசேரி மானிய மூலதனம்	90.00
கல்வி அமைச்சு - மருத்துவ பீடத்துக்கான மானியம்	75.00
கல்வி அமைச்சு – பாரா சிகிச்சை நிலையக் கட்டிடத்துக்கானது	420.96
AHEAD மேலதிக உட்சேர்க்கை	28.37
சொத்துக்களுக்கான AHEAD செயற்திட்டம்	360.77
விவசாய அமைச்சு (ஹெலபொஜுன்)	11.09
மூலதன அன்பளிப்பு	0.53
சர்வதேச ஆய்வரங்குக்கான	3.79

வசூல்	
முழுமொத்தத் தொகை	**990.523**

(ஈ) அன்பளிப்புகள், நன் கொடைகள், ரொக்கப் பரிசுகள் முதலானவை

எவ்வித நிபந்தனைகளுக்கும் உட்படாத அன்பளிப்பு**கள்**, **நன்கொடைகள் என்பது**, **ரொக்கப் பரிசுகள் அல்லது பிற பணச் சொத்துக்கள் மற்றும் பொருட்கள் முதலானவை இயல்பாகவே சொத்துக்களில் இடம்பெறும்**.

அன்பளிப்பு**கள்**, **நன்கொடைகள் மற்றும் பெறப்பட்ட பரிசுப் பொருட்கள் என்பன எதிர்காலப் பொருளாதார நலன்கள் அல்லது சேவைத் திறன் பல்கலைக் கழகத்திற்கு பாயும்**, **சொத்துக்களின் நியாயமான மதிப்பை நம்பகத்தன்மையுடன் அளவிட முடியுமான நிலையில்**. **அவற்றின் நியாயமான மதிப்பில் பரிமாற்றம் அல்லாத வருவாயாக அங்கீகரிக்கப் படுகின்றன**.

2022 **ஆம் ஆண்டில்**, **பல்கலைக்கழகம்** 0.53 **மில்லியன் மதிப்புள்ள சொத்துக்களை அங்கீகரிக்கப்பட்ட நியாயமான மதிப்புக்கமைய**, **நிதிச் செயல் திறன் அறிக்கையில் பரிமாற்றம் அல்லாத பரிவர்த்தனை வருவா யின் கீழ் பெற்றது**.

2.10 செலவு ஏற்பு

நிகழ்ச்சி/ செயற்திட்டம்/ பொருள் வாரியாகச் செலவினங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு, UGC வழிகாட்டுதல்களின் அடிப்படை யில் வெவ்வேறு செலவினத் தலைப்புகளின் கீழ் அவை ஏற்படும் காலத்தில் பொதுவான அறிக்கையிடல் வடிவமைப்பிற்கு இணங்க பகுப்பாய்வு செய்யப்படுகிறது. இளமாணிக் கற்கையைப் பொறுத்தமட்டில் ஏற்படும் அனைத்துச் செலவுகளும் திரட்டல் அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்டு, நிதிச் செயல்திறன் அறிக்கையில் இடப்படும்.

2.11 நிதிப் பாய்ச்சல் அறிக்கை

நிதிப் பாய்ச்சல் அறிக்கையானது SLPSAS 02 இன் படி தயாரிக்கப் பட்டுள்ளது நிதிப் பாய்ச்சல் அறிக்கை மறைமுகமான முறையின் மூலம் அமையும்.

2.12 அறிக்கையிடல் காலத்திற்குப் பிந்தைய நிகழ்வுகள்

அறிக்கையிடல் காலத்திற்குப் பிறகு நிகழும் நிகழ்வுகளின் உண்மைத்தன்மை பரிசீலிக்கப் பட்டு, தேவையான இடங்களில், கணக்குகளில் பொருத்தமான மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

2.13 அந்நிய செலாவணிப் பரிவர்த்தனை

இலங்கை ரூபாய் அல்லாத பிறநாட்டுப் பரிவர்த்தனை நாணயங்கள், குறித்த பரிவர்த் தனைத் திகதியில் உள்ள உண்மையான விகிதங்களைத் தோராயமாக மதிப்பிடும் விகிதத்தில் இலங்கை ரூபாய்க்கு மாற்றப்படுகின்றன.

2.14 உள்ளகப் பிரிவின் பரிவர்த்தனை

உள்ளகப் பிரிவுக்கான பரிவர்த்தனைகள் மற்றும் செலுத்தப்பட வேண்டிய நிலுவை களை நீக்கியதாகவே நிதிநிலை அறிக்கை தயாரிக்கப் பட்டுள்ளது. அவ்வகை யில், பின்வரும் உள்ளகப் பிரிவு நிலுவைகள் அகற்றப்படுகின்றன:

திறந்த மற்றும் தொலைதூரக் கற்றலுக்கான மையத்திற்கு (CODL) செலுத்த வேண்டிய இருப்பு ரூ.16.01 மில்லியன், பட்டதாரிக் கற்கைகள் பீடத்துக்குச் (FGS) செலுத்தப்பட வேண்டிய நிலுவை ரூ. 4.57 மில்லியன்.

2.15 தொடர்புடைய தரப்புப் பரிவர்த்தனை

பல்கலைக்கழகத்தின் முக்கிய நிர்வாக ஆளுமைகளாகப் பல்கலைக்கழகப் பேரவையின் உறுப்பினர்களும் மூத்த நிர்வாக உறுப்பினர்களும் காணப்படுவர். பல்கலைக்கழகப் பேரவை என்பது பல்கலைக்கழகத்தின் நிர்வாக அமைப்பு மற்றும நிர்வாக அதிகார அமைப்பாகத் திகழும். இதில் துணைவேந்தர், பீடங்களின் பீடாதிபதிகள், மூதவையால் தேர்ந்தெடுக்கப்பட்ட இரண்டு உறுப்பினர்கள் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் நியமிக்கப்பட்ட வெளிப்புற உறுப்பினர்கள் ஆகியோர் உள்ளடங்கியுள்ளனர்.

நேரடியான அல்லது மறைமுக மான நலன்களின் அடிப்படையில் முக்கிய நிர்வாகப் பொறுப்பில் உள்ள எந்த ஓர் உறுப்பினருக்கும் பல்கலைக்கழகத்துக்கும் இடையே தொடர்புடைய தரப்பினர் மத்தியில் இக்கால கட்டத்தில் வழங்கப்பட்ட சேவை களுக்கான பணியாளர் ஊதியம் மற்றும் கொடுப்பனவுகள் தவிர, விற்பனை, கொள்முதல், கடன்கள், இடமாற்றங்கள், குத்தகை ஏற்பாடுகள், உத்தர வாதங்கள், பெறத்தக்க தொகை உள்ளிட்ட எந்தவிதப் பரிவர்த் தனைகளும்

மேற்கொள்ளப்பட மாட்டாது.

2.16 வரவு செலவுத் திட்டத்திற்கும் உண்மையான தொகைகளுக்குமான ஒப்பீடு

வரவு செலவுத் திட்டமும் கணக்கியல் அடிப்படையும் வேறுபட்டவை. பல்கலைக்கழகத் திற்கான வரவுசெலவுத் திட்டங்கள் ஆண்டு தோறும் பண அடிப்படையில் அங்கீகரிக்கப் படுகின்றன.

பல்கலைக்கழக நிதிநிலை அறிக்கையானது பல்கலைக் கழகத்தின் அனைத்து வித நிதி நடவடிக்கைகளையும் உள்ளடக்கி யிருந்தாலும், வரவு செலவுத் திட்டங்கள் அரசாங்க மானியங் களுக்கு மட்டுமே அங்கீகரிக் கப்படுகின்றன. வரவு செலவுத் திட்டம் மற்றும் உண்மையான தொகைகளின் ஒப்பீட்டு அறிக்கையானது, இறுதி வரவு செலவுத் திட்டத்தைத் தொடர்பு டைய வரவு செலவுத் திட்டத் தொகைகளின் அடிப்படையில் கணக்கிடப்பட்ட உண்மையான தொகைகளுடன் ஒப்பிடுகிறது.

3. இழப்புகள்/ பழுதுகள்/ இடைநிறுத்தங்கள்

3.1 இழப்புகளும் பழுதுகளும்

பிரயோக விஞ்ஞான பீடத்தின் இரசாயனவியல் ஆய்வுகூடம் எதிர்பாராத விதமாக வெடித்த தினால் ஏற்பட்ட சிதைவு காரணமாக, 2019 ஆம் ஆண்டு புதிய தளபாடங்கள், கண்ணாடி கள், பிற உபகரணங்களைப் பொருத்த நேர்ந்தது. கணிப்பிடப் பட்ட மொத்த மதிப்பு ரூபா. 617,229.52 ஆகும். இதில் ரூபா. 454,899.32 மதிப்புடைய தொகை முழுப் பீடத்துக்கான கட்டிடத் துடன் சேர்த்து மூலதன மாக்கப்பட்டது.

அசல் இழப்பீட்டுச் செலவுக் கணக்குக் கிடைக்காத காரணத்தால், 2019 ஆம் ஆண்டுக்கான செலவினக் கணக்கில் இது எடுத்துக்கொள்ளப் படவில்லை. நுகர்வு செய்யப்பட்ட மற்ற அனைத்துப் பொருட்களும் அவை வாங்கப்பட்ட காலகட்டத் தின் செலவுகளாக அடையாளம் காணப்பட்டன.

நடப்பு நிதியாண்டில் (2022) அல்ட்ரா கிளீன் (பிரைவேட்) லிமிடெட் (பாதுகாவலர் சேவை ஒப்பந்ததாரர்) மூலம் முங்கஸ்தென்னவில் உள்ள குப்பைக் கட்டிடம் (கழிவு

மறுசுழற்சி மையம்) தீயினால் அழிக்கப்பட்டது. மதிப்பீட்டிற் கமைய கட்டிடத்தின் மொத்த மதிப்பு ரூ. 2,190,889.92 ஆக இருந்ததோடு, துப்புரவுச் சேவைய கத்தின் இறுதி நிலுவையில் இருந்து அச்செலவை வசூலிக்க நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. மீட்கக்கூடிய மதிப்பு மற்றும் கட்டிடத்தின் நிகர மதிப்பு (செலவு குறைவான தேய்மானம் ரூ. 1,053,182.97) ரூ. 1,137,706.95 நடப்பு ஆண்டு நிதிநிலை அறிக்கையில் கட்டிடத்தின் அகற்றல் ஆதாயமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

3.2 இடைநிறுத்தம்

2022 நடப்பு நிதியாண்டில், இரத்தினபுரியில் உள்ள வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் மருத்துவ பீடத்திற்கான வாடகைக் கட்டிடத்தின் ஒப்பந்தம் காலா வதியாகி விட்டதால், இடை நிறுத்தப்பட்டு, அனைத்துச் சீராக்கங்களும் அகற்றப்பட்டு இரத்தினபுரி கல்கடுவாவத்தவில் உள்ள புதிய மருத்துவ பீடக் கட்டிடத்தில், மறுசீராக்கம் மேற் கொள்ளப்படும் என்று கூறப் பட்டது.

அறிக்கையிடும் முடிவுத் திகதி யான 2022 டிசம்பர் 31 அன்று அனைத்து விதமான மறுசீர மைப்புப் பணிகளும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. எனவே, மறுசீரமைப்புக்கான மொத்த மதிப்பு ரூ. 18,427,139.00 தொகை நடப்பு நிதியாண்டில் மதிப்பிழக்க வில்லை.

4. ஏனைய மானியங்கள்

பின்வரும் மூலதன மானியங்கள் பல்கலைக் கழகத்துடன் இணைந்து செயல்படுவதோடு, அவற்றின் அனைத்துப் பரிவர்த் தனைகளும் சுயாதீன மாகவும் இயக்கப் படுகின்றன. அவ்வாறே, செயற்திட்ட ஒப்பந்தத்தின்படி செயற்திட்டம் காலாவதி யான பிறகு அனைத்து விதமான பரிவர்த்தனைகளும் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

4.1 கன்பூசியஸ் அமைப்பு

செயற்திட்டத்தின் அனைத்து ரசீதுகளும் கொடுப்பனவுகளும் கட்டுப்படுத்தப்பட்ட நிதியின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டுள்ளன.

4.2 STHRD செயற்திட்டம்

பல்கலைக்கழகமானது தொழினுட் பவியல் பீடத்தின் சார்பில் ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியளிக்கப்படும் விஞ்ஞான மற்றும் தொழினுட்ப மனிதவள அபிவிருத்திச் செயற்திட்டத் துக்கான ஒப்பந்தத்தில் கைச்சாத் திட்டுள்ளது. அதன் மொத்த மானிய மதிப்பு 2192 மில்லியன் ரூபாவாகும். மேலும், நான்கு (4) ஆண்டுகளுக்கான நிதியின் மதிப்பு 3.24 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும். செயற்திட்டத் திற்கான காலமானது ஜூன் 2024 இல் காலாவதியாகும்.

4.3 மருத்துவ பீடக் கட்டுமானத் செயற்திட்டம் (அபிவிருத்திக் கான சவூதி நிதியத்தால் நிதியளிக்கப் பட்டது)

கல்வி அமைச்சானது பல்கலைக் கழகத்தின் சார்பாக மருத்துவ பீடக் கட்டிட வளாகத்தினை நிர்மாணிக்கும் வகையில் அபிவிருத்திக்கான சவூதி நிதியத் துடன் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளது. அதன் மொத்த மானிய மதிப்பு 50 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும்.

29 நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கான இலங்கை சபரகமுவ பல்கலைக் கழகத்தின் பங்களிப்பு 2022

நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவது தொடர்பில் **உள்ளகத் தர உத்தரவாத மையத்தின் பங்களிப்பு- 2022**

நாட்டின் நிலையான அபிவிருத்தியில் கற்றல் அமைப்புகளும் கல்வியும் முக்கிய கூறுகளாகத் திகழ்கின்றன. நிலையான இலக்குகளை அடைவதற்கான அறிவையும் திறன்களையும் வழங்குவதன் ஊடாக, நாட்டின் தேவைகளைச் சிறப்புறப் பூர்த்தி செய்யக்கூடிய தனிநபர்களை உருவாக்குவதில் உயர்கல்வி நிறுவனங்கள் மகத்தான பங்களிப்பைச் செய்துவருகின்றன. அக்கல்வி நிறுவனங்களில் தனித்துத் தீர்மானமெடுக்கும் திறனுடைய தலைமைப் பண்புகளைக் கொண்டவர்களாக மாணவர்கள் வார்த்தெடுக்கப்படுவதன் மூலம் எதிர்காலத் தலைவர்கள் உருவாக்கப் படுகின்றனர். நிலையான அபிவிருத்தியில் தீவிரமாகப் பங்குகொள்ளும் வகையில் கல்வியானது மாணவர்களை வலுவூட்டுகிறது. இந்த அம்சங்களில் தரமான கல்வியை வழங்குவது முதன்மை முக்கியத்துவம் வாய்ந்ததாகக் காணப்படுவதோடு, தரமான பட்டதாரிகளை உருவாக்குவதற்குப் பல்கலைக்கழகத்திற்குள் தரமான சூழமைவினைப் பேணுவதும் இன்றியமையாததாகும்.

எனவே, பல்கலைக்கழகத் தர உத்தரவாத மையமும் பீடத்தின் தர உத்தரவாதக் கூடமும் இணைந்து பல்கலைக்கழகத்தின் தரத்தை மேம்படுத்துவதில் முக்கிய தூண்களாகப் பங்கு வகிக்கின்றன. உயர்கல்வி நிறுவனங்கள் தமக்கான தரநிர்ணய மதிப்பீடுகளை காப்பகப்படுத்தினால், எங்கள் பட்டதாரிகள் தேசிய மற்றும் உலகளாவிய ரீதியில் நாடுகளின் வளர்ச்சியை உள்ளடக்கிய தேவைகளைப் பூர்த்தி செய்ய அல்லது நாட்டின் நிலையான அபிவிருத்திக்குப் பங்களிக்கக் கூடியதாக இருக்கும்.

நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவது தொடர்பில் **பணியாளர் மேம்பாட்டு மையத்தின் பங்களிப்பு - 2022**

இலக்கு **3** - ***ஆரோக்கிய வாழ்வை உறுதிப்படுத்துவதும் எல்லா வயதினரதும் நல்வாழ்வினை ஊக்குவித்தலும்***

ஊழியர் மேம்பாட்டு மையமானது, இம்புல்பே பிரதேசச் சுகாதார மருத்துவ அலுவலருடன் ஒருங்கிணைந்து 2022 ஆம் ஆண்டில் இலவச மருத்துவ முகாமொன்றையும் 'தொற்றா நோய்கள்' பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சியையும் நடாத்தியது. பல்கலைக்கழகத்தில் உள்ள அனைத்துக் கல்வியாளர்கள், நிர்வாக ஊழியர்கள், கல்விசாரா ஊழியர்கள், பாதுகாப்புச் சேவைப் பணியாளர்கள், துப்புரவுப் பணியாளர்கள் என அனைத்துத் தரப்பினரையும் உள்ளீர்த்ததாக இந்த நிகழ்வு

அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இலக்கு **4 -** ***அனைவரையும் உள்ளடக்கக்கூடிய வகையில் சமமான தரமான கல்வியை உறுதிப்படுத்துவதும் அனைவருக்கும் வாழ்நாள் முழுவதும் கற்றல் வாய்ப்புகளை மேம்படுத்துதலும்***

நாட்டில் சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட பட்டதாரிகளை உருவாக்குவதற்காகப் பணியாளர்களின் திறன்களையும் அணுகுமுறைகளையும் அவர்தம் மனப்பாங்கினையும் மேம்படுத்துவதே பணியாளர் மேம்பாட்டு மையத்தின் நோக்கமாகும். இவ்வகையில், பணியாளர் மேம்பாட்டு மையத்தின் செயற்பாடுகளாவன நிலையான அபிவிருத்தியின் 4வது இலக்காகத் திகழும் தரமான கல்வியினை வழங்குவதனை நேரடியாக ஆதரிக்கும் வகையில் அமைந்துள்ளன. தேவைப்பாடுகள் சார்ந்த பகுப்பாய்வின் அடியாக ஆண்டு தோறும் நிரல்படுத்தப்பட்டு நடைமுறைப் படுத்தப்படும், புதிதாகப் பணியில் இணைத்துக் கொள்ளப்பட்ட கல்வியாளர்களுக்கான உத்வேகமூட்டும் அறிமுக நிகழ்ச்சித் திட்டமும் தேவையை மையமாகக் கொண்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டமும் நிலையான அபிவிருத்தியின் தரமான கல்வி இலக்கை அடைவதற்கான நேரடிப் பங்களிப்பினை வழங்கி நிற்கின்றமை விதந்துரைக்கத் தக்கதாகும்.

இலக்கு **5 – பால்நிலைச் சமத்துவத்தை எய்துதலும் பெண்களை வலுவூட்டலும்**

ஊழியர் மேம்பாட்டு மையமானது இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் பாலின சமத்துவம் மற்றும் சமநிலைக்கான மையத்தினால் (CGEE) பல்கலைக்கழகத்தின் அனைத்து ஊழியர்களுக்கும் மாணவர்களுக்குமான பாலின சமத்துவம் மற்றும் சமநிலை (GEE)யைப் பேணி, பால்நிலை மற்றும் பாலின அடிப்படையிலான அனைத்துப் பாகுபாடுகளைக் களையும் வகையில் மேற்கொண்டுவரும் அனைத்துச் செயற்பாடுகளுக்கும் நிகழ்ச்சிகளுக்கும் தேவையான வசதிகளைச் செய்து கொடுக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

30 தணிக்கை அறிக்கை – 2022

எனது இல: SGCG/RT/D/SUSL/01/FA/2022 திகதி: 2023 மே மாதம் 31ஆம் திகதி

உபவேந்தர்
இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம்,

இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகத்தின் 2022 டிசம்பர் மாதம் 31ஆம் திகதியுடன் முடிவடையும் இறுதி ஆண்டிற்கான நிதிக் கூற்று மற்றும் ஏனைய சட்டரீதியானதும் ஒழுங்குபடுத்தப்பட்டதுமான தேவைப்பாடுகள் குறித்து 2018ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை.

---

1. நிதிக்கூற்று

1.1 தரநிலை மதிப்பீடு

இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகத்தின் 2022 டிசம்பர் மாதம் 31ஆம் திகதிக்கான நிதி நியமக் கூற்று மற்றும் அன்றைய திகதியில் முடிவடையும் இறுதி ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகை அறிக்கை, நிகர சொத்து மாற்ற அறிக்கை மற்றும் அன்றைய திகதியில் முடிவடையும் இறுதி ஆண்டிற்கான நிதிப் புழக்கங்களின் அறிக்கை மற்றும் நிதிக் கூற்றுக்களோடு தொடர்பான பதிவுகள், சுருக்கமான முக்கிய கொள்கைகளை உள்ளடக்கிய 2022 டிசம்பர் மாதம் 31ஆம் திகதியுடன் முடியவடையும் இறுதி ஆண்டிற்கான நிதிக் கூற்று 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் 107 (5) ஆம் உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிஸ குடியரசின் அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரை மற்றும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரகாரம் எனது கட்டளையின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டுள்ளது. பல்கலைக்கழக சட்டத்தின் 108 (1) உப பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வருடாந்த அறிக்கையுடன் வெளியிடப்பட வேண்டும் என நான் கருதுகின்ற எனது கருத்துத் தெரிவிப்புக்கள் மற்றும் அவதானங்கள் இவ் அறிக்கையில் உட்பொதிந்துள்ளது. அரசியலமைப்புச் சட்டத்தின் 154 (6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் எனது அறிக்கையினை வருங்காலத்தில் பாராளுமன்றில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

எனது அறிக்கையில் தரநிலை மதிப்பீட்டிற்கான அடிப்படைப் பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படுகின்ற தாக்கங்கள் தவிர, பல்கலைக்கழகத்தின் 2022 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கான நிதி நிலைமைகள் மற்றும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டிற்கான அதன் நிதி செயற்படுதன்மை மற்றும் நிதிப் புழக்கங்களை இலங்கை அரச பிரிவின் கணக்கீட்டு நியமங்களுக்கு உட்பட்ட வகையில் உண்மையானதும், நியாயமானதுமான தன்மைகளை காட்டுகிறது என்பது எனது கருத்தாகும்.

1.2 தரநிலை மதிப்பீட்டிற்கான அடிப்படை

(a) இலங்கை அரச பிரிவு கணக்கீட்டு நியமம் 7 இன் 65ஆம் பந்தியினதும் இலங்கை அரச பிரிவு கணக்கீட்டு நியமம் 20 இன் 103 ஆம் பந்தியினதும் பிரகாரம் அசையாச் சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலத்தை கணக்காய்வு செய்யாயதன் காரணத்தினால் ரூ. 1,405,884,194 செலவான நிலையான சொத்துக்கள் முழுமையாகத் தேய்வடைந்துள்ள நிலையில் தொடர்ந்தும் பாவனைக்கு எடுக்கப்பட்டு வந்துள்ளது. அதன் பிரகாரம் மதிப்பீடு செய்யப்பட்ட கோளாறினை இலங்கை அரச பிரிவு கணக்கீட்டு நியமங்கள் 3 இன் பிரகாரம் திருத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(b) முந்தைய ஆண்டில் ஒப்பந்தங்களை மீறிய அதிகாரிகளிடமிருந்து வசூலிக்கப்பட்ட ரூ.4,440,449 ஒப்பந்த மீறல் நிதிக்கு மாற்றப்படாததால், டிசம்பர் 31, 2022 நிலவரப்படி நிதியின் இருப்பு மற்றும் தொடர்ச்சியான ஒருங்கிணைந்த நிதியின் பற்றாக்குறை அதைவிடக் குறைவாகக் காட்டப்பட்டது.

(c) உலக வங்கியின் உயர்கல்வி விரிவாக்கம் மற்றும் அபிவிருத்தியை விரைவுபடுத்தும் திட்டத்திற்காக (AHEAD) முந்தைய ஆண்டுகளில் வழங்கப்பட்ட ரூ.97,480,511 தொகையானது இலங்கை பொதுத்துறை கணக்கியல் தரநிலை 03 இன் படி சரிசெய்யப்படுவதற்கு பதிலாக கணக்காய்வு செய்யப்பட்ட ஆண்டில் வருமானமாகக் கணக்கிடப்பட்டது. அதன் பிரகாரம், நிதிநிலை அறிக்கைகளில் உள்ள தொகையை விட ஆண்டின் உபரி அதிகமாக இருந்தது.

(d) சொத்து, ஆலை மற்றும் உபகரணங்களின் தேய்மானத்தைக் கணக்கிடுவதில் ஏற்பட்ட பிழைகள் காரணமாக, கணக்காய்வு செய்யப்பட்ட ஆண்டின் தேய்மானம் ரூ.25,487,787 அதிகமாகக் கணக்கிடப்பட்டது. மேலும், நிதி அறிக்கையில் சொத்து, ஆலை மற்றும் உபகரணங்களின் உபரி மற்றும் நிகர மதிப்பு அந்தத் தொகையை விடக் குறைவாக இருந்தது.

(e) ஜூலை 2022 இல் கட்டி முடிக்கப்பட்ட ஒரு கட்டிடத்திற்காக ஒப்பந்ததாரருக்குச் செலுத்த வேண்டியிருந்த ரூ. 1,255,557 கணக்கில் வரவில்லை. சொத்து, ஆலை மற்றும் உபகரணங்களின் இருப்பு மற்றும் கணக்காய்வுக்கு உட்பட்ட ஆண்டின் இறுதியில் மூலதனப் பற்றாளர் இருப்பு ஆகியவை மதிப்பைக் காட்டிலும் குறைவாகக் காட்டப்பட்டுள்ளன.

(f) மீளாய்வுக்கு உட்பட்ட ஆண்டில் லொக்கர்கள் மற்றும் படுக்கைகளை பழுது பார்ப்பதற்காகச் செலவழிக்கப்பட்ட ரூ.5,628,910 தொடரும் செலவினமானது மூலதனமாக்கப்பட்டது. மேலும், ஆண்டின் உபரி மற்றும் சொத்து, ஆலை, உபகரணங்கள் போன்றவற்றின் பெறுமானம் ஆகியவை நிதிநிலை அறிக்கைகளில் முறையே குறைவாகவும் அதிகமாகவும் குறிப்பிடப்பட்டுள்ளன.

(g) விவசாயப் பீடத்தில் கட்டிடத்தின் பணியைத் தொடங்குவதற்கு வழங்கப்பட்ட முன்பணங்களைக் குறைப்பதில், நிதிநிலை அறிக்கைகளில், VAT பதிவு செய்யப்படாததால் முடிக்கப்படாத பணியின் மதிப்பு ரூ.6,020,086 ஆல் குறைவாகவும், தீர்க்கப்படாத முன்பண நிலுவைத் தொகை அதிகமாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

(h) மருத்துவ பீடத்தின் பாரா கிளினிக் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக வழங்கப்பட்ட ஆரம்ப முற்பணமான ரூ.28,265,340 கணக்கிலெடுக்கப்படாமல், முற்பணக் கணக்கு மற்றும் மூலதன மானியங்கள் கணக்காய்வு ஆண்டிறுதி நிதிநிலை அறிக்கைகளில் அந்தத் தொகையை விடக் குறைவாக பதிவு செய்யப்பட்டது.

(i) கணக்காய்வுக்கு உட்பட்ட ஆண்டின் டிசம்பர் 31 ஆம் திகதியின்படி, ரூ.44,852,000 பர்ஸரி உதவித்தொகை செலுத்த வேண்டியிருந்தது. ஆனால், அது ரூ.38,180,000 ஆகக் கணக்கிடப்பட்டது. இதன் விளைவாக பர்ஸரி வருவாய் மற்றும் பெறத்தக்க உதவித்தொகை ரூ.6,672,000 ஆகக் குறைந்துள்ளது.

(j) 31 டிசம்பர் 2022 இன் படி ரூ.170,642,885 ஒப்பந்த மதிப்பு நிதிநிலை அறிக்கைகளில் வெளியிடப்படவில்லை.

(k) பிரயோக விஞ்ஞான பீடத்தில் இருப்பு மதிப்பைக் கணக்கிடும் போது அல்குக்கான விலை தவறாகக் கண்டறியப்பட்டிருந்ததால் 10 இரசாயனப் பொருட்களின் நிகர மதிப்பு ரூ.5,232,260 அதிகமாகக் கணக்கிடப்பட்டது. எனவே, மீதமுள்ள இருப்பு மற்றும் ஆண்டின் உபரி ஆகியவை நிதிநிலை அறிக்கைகளில் அதிகமாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. மேலும், இருப்புப் பதிவேடுகள் மற்றும் கொள்கலன் அட்டைகளை முறையாகப் பராமரிக்காததால் அலகுக்கான விலையை அடையாளம் காண முடியாதிருந்தது. எனவே, 106 இருப்புப் பொருட்களின் மதிப்பு கணக்கிடப்படவில்லை.

(l) ERASMUS செயற்திட்ட மானியங்கள் மூலம் பிரயோக விஞ்ஞான பீடத்திற்காக வாங்கப்பட்ட ரூ.2,683,360 பெறுமதியான சொத்துக்கள் கணக்கில் காட்டப்படாததால், சொத்து, ஆலை மற்றும் உபகரணங்கள் மற்றும் மூலதன மானியங்களின் இருப்பு நிதிநிலை அறிக்கைகளில் குறைவாகக் காட்டப்பட்டுள்ளது.

(m) கடந்த இரண்டு ஆண்டுகளாக கணக்காய்வுக் கட்டணமாக ரூ.468,000 அதிகமாக ஒதுக்கப்பட்டதையிட்டு நிதிநிலை அறிக்கைகளில் சரிசெய்தல் செய்யப்படவில்லை என்பதோடு, கணக்காய்விற்கு உட்பட்ட ஆண்டுக்குரிய கணக்காய்வுக் கட்டணங்களுக்கான ஒதுக்கீடுகள் எதுவும் செய்யப்படவில்லை..

(n) முந்தைய ஆண்டில் சொத்துக் கடன்களின் வட்டி விகிதம் குறைந்ததால், வங்கியில் இருந்து

திரும்பப் பெறப்பட்ட ரூ.1,412,765 தொகையானது முந்தைய ஆண்டின் லாபத்துடன் ஒப்பிடுவதற்குப் பதிலாக கணக்காய்வு செய்யப்பட்ட ஆண்டின் வருவாயாகக் கணக்கிடப்பட்டது. மேலும், கணக்கியல் ஆண்டின் இறுதியில் வட்டி வருமானம் ரூ.1,274,461 அதிகமாகக் கணக்கிடப்பட்டது. இதன்படி, கணக்காய்வு செய்யப்பட்ட ஆண்டின் உபரி ரூ.2,687,226 ஆகவும், பெற வேண்டிய வட்டி வருமானம் ரூ.1,274,461 ஆக அதிகமாகவும், நிதிநிலை அறிக்கைகளில் தொடர்ந்துவரும் ஒருங்கிணைந்த நிதி ரூ.1,412,765 ஆகக் குறைவாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

(o) திரட்டப்பட்ட செலவுகள் ரூ. 3,568,546 அதிகமாகக் கணக்கிடப்பட்டதன் காரணமாக, முந்தைய ஆண்டுக்கான செலவுகள் கணக்காய்வு செய்யப்பட்ட ஆண்டின் செலவுகளாகக் கணக்கிடப்பட்டன. அவ்வகையில், உபரி ரூ. 4,672,889 ஆகக் குறைவாகக் குறிப்பிடப்பட்டது. மேலும், தொடர்ந்துவரும் ஒருங்கிணைந்த நிதி மற்றும் நடப்புப் பொறுப்புகள் முறையே 1,104,343 மற்றும் ரூ.3,568,546 என நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

(p) 2023 ஆம் ஆண்டுடன் தொடர்புடைய, அதே ஆண்டில் செலுத்தப்பட்ட ஒரு செலவு பற்று வைக்கப்பட்டு, முறையே முந்தைய கட்டணக் கணக்கிலும், 2022 ஆம் ஆண்டில் திரட்டப்பட்ட செலவுக் கணக்கிலும் ரூ. 1,105,231 இனால் பதியப்பட்டுள்ளது. இதன் காரணமாக, தற்போதைய சொத்துக்கள் மற்றும் நடப்புக் கடன்கள் நிதிநிலை அறிக்கைகளில் அதைவிட அதிகமாகக் காட்டப்பட்டது.

(q) கடந்த ஆண்டுகளுடன் தொடர்புடைய 8,510,176 ரூபாய் செலுத்த வேண்டிய மூலதனச் செலவுகள் முறையான அனுமதியின்றி நடப்பு அல்லாத சொத்துக்களுக்கு எதிராக எழுதப்பட்டது. அத்துடன், எந்தெந்த சொத்துக்கள் தள்ளுபடி செய்யப்பட்டன என்பது குறித்து விவரம் எதுவும் தெரிவிக்கப்படவில்லை. மேலும், அந்தச் சொத்துக்கள் தொடர்பான தேய்மான ஒதுக்கீடுகள் ரூ.7,852,560 சம்பந்தப்பட்ட சொத்துக் கணக்குகளில் பற்று வைக்கப்பட்டுள்ளன. இதன்படி, கணக்காய்வுக்கு உட்பட்ட ஆண்டின் இறுதியில், சொத்து, ஆலை மற்றும் உபகரணங்கள் ரூ.657,616 ஆல் குறைவாகவும், செலுத்த வேண்டிய மூலதனச் செலவுகள் ரூ.8,510,176 ஆகவும், தேய்மானம் ஒதுக்கீடு கணக்கின் மீதி ரூ.7,852,560 ஆல் அதிகமாகவும் நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு உட்பட்ட வகையில் என்னால் இக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இவ் அறிக்கையின் நிதிக் கூற்று கணக்காய்வுகள் தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் எனும் பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. எனது தரநிலை மதிப்பீட்டிற்கான அடிப்படையினை வழங்கும் நோக்கில் என்னால் பெறப்பட்டுள்ள கணக்காய்வு ஆதாரங்கள் போதுமானவையாகவும் உசிதமானவையாகவும் உள்ளன என்பது எனது நம்பிக்கையாகும்.

1.3 இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகத்தின் 2022 வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள இதர தகவல்கள்

இக் கணக்காய்வு அறிக்கையின் திகதிக்கு முன்னர் நான் பெற்றுக்கொண்ட

பல்கலைக்கழகத்தின் 2022 வருடாந்த அறிக்கையில் உள்ளீர்க்கப்பட்டுள்ள, எனினும், நிதிக் கூற்றுக்களிலும், அவை தொடர்பான எனது அறிக்கையிலும் உள்ளடங்காதவை "இதர (ஏனைய) தகவல்கள்" என்பதாகப் பொருள்படும். இவ் ஏனைய தகவல்களுக்கு முகாமைத்துவம் பொறுப்புக் கூறல் வேண்டும்.

நிதிக் கூற்றுக்கள் தொடர்பிலான எனது கருத்தினுள் ஏனைய தகவல்கள் உள்ளடக்கப்படுவதில்லை என்பதுடன், அது குறித்து நான் எவ்விதத்திலும் உத்தரவராதப் படுத்தலையோ கருத்துரையினையோ வழங்க மாட்டேன்.

நிதிக் கூற்றுக்கள் தொடர்பான எனது கணக்காய்வுடன் தொடர்பாக மேலே அடையாளம் காணப்பட்ட ஏனைய தகவல்களை பெற்றுக்கொள்ள முடிந்ததென்றால் வாசித்தல் மற்றும் அவ்வாறு செய்கின்ற போது ஏனைய தகவல்கள் நிதிக் கூற்றுடன் அல்லது கணக்காய்வின் போது அல்லது வேறு ஒரு வகையில் பெற்றுக்கொள்ளப்பட்ட என் அறிவின் பிரகாரம் போதுமான அளவில் பொருந்துவதில்லையா என்பதை ஆராய்ந்து பார்ப்பதாகும்.
நிதிநிலை அறிக்கைகள் மீதான எனது கணக்காய்வின்படி, "பிற தகவல்களைப்" பெறும்போது அதைப் படிப்பதும், அத்தகவல்களுக்கும் நிதிநிலைக் கூற்றுக்கும் இடையில் தவறான விளக்கம் ஏதேனும் உள்ளதா என்பதை என் அறிவுக்கெட்டிய வகையில் ஆராய்ந்து சரிபார்ப்பதும் எனது பொறுப்பாகும்.
இக் கணக்காய்வு அறிக்கையின் திகதிக்கு முன்னர் நான் பெற்றுக்கொண்ட ஏனைய தகவல்களின் அடிப்படையிலும் என்னால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளின் அடிப்படையிலும் இவ் ஏனைய தகவல்களை குறித்த அளவு பிழையாகக் குறிப்பிடப்பட்டுள்ளது என்பதை நான் ஊகிப்பேனாயின், அவ்விடயங்கள் தொடர்பில் முகாமைத்துவத்துடன் தொடர்புகொள்ளப்பட வேண்டும் என்பதோடு, இது தொடர்பில் எனக்கு மேற்கொண்டு தெரிவிப்பதற்கு ஒன்றுமில்லை.

1.4 நிதிக் கூற்றுக்கள் தொடர்பான முகாமைத்துவத்தினதும் நிர்வகிக்கும் தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக் கூற்றானது இலங்கை அரச பிரிவு கணக்கீட்டு நியமங்களுக்கு உட்பட்ட வகையில் தயார் செய்தல் மற்றும் நியாயமான முறையில் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது பிழைகள் காரணமாக ஏற்படக்கூடிய பொய்யான கூற்றுக்களின்றி நிதிக் கூற்றுக்களைத் தயார் செய்ய முடியுமான வகையில் தேவைப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.
நிதிக் கூற்றுக்களை தயார் செய்கின்ற போது பல்கலைக்கழகத்தை தொடர்ந்து நடாத்திச் செல்வதற்கான இயலுமையை தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். அத்துடன், முகாமைத்துவம் பல்கலைக்கழகத்தினை கலைப்பதற்கு தீர்மானிப்பார்களாயின் அல்லது வேறு ஒரு மாற்றீடு இல்லாமல் போகின்ற போது செயற்பாடுகளை நிறுத்துவதற்கு

நடவடிக்கை எடுக்கப்படுமானாலேயே ஒழிய நீடித்த இருப்பின் அடிப்படையில் கணக்குகளை வைத்தல் மற்றும் பல்கலைக்கழகத்தின் நீடித்த இருப்புடன் தொடர்பான விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கைச் செயற்பாடுகளுடன் தொடர்பான பரீட்சிப்புப் பொறுப்புக்களை நிர்வகிப்பவர்களால் ஏற்றுக்கொள்ளப்படும்.

2018 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் சமகால நிதிக் கூற்றுக்களைத் தயார் செய்வதற்கு முடியுமான வகையில், சுய வருமானம், செலவுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்களையும், தகவல்களையும் சரியான முறையில் பேணிச் செல்லுதல் வேண்டும்.

1.5 நிதிக் கூற்றுக்களை கணக்காய்வு செய்தல் தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டுமொத்தமாக நிதிக் கூற்றுக்கள், மோசடி மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படுகின்ற போதிய பொய்யான கூற்றுக்கள் அற்ற முறையில் நியாயமான உறுதிப்படுத்தலை வழங்குதல், எனது கருத்துக்கள் உள்ளடங்கிய கணக்காய்வு அறிக்கையை வெளியிடுதல் போன்றவையே எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தலானது உயர் மட்ட உறுதிப்படுத்தல் ஆகின்ற படியால், இலங்கை கணக்காய்வு நியமங்கள் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்கின்ற போது அது எப்பொழுதும் போதிய பொய்யான கூற்றுக்களை வெளிப்படுத்திக் கொள்ளும் என்கின்ற உறுதிப்படுத்தலாக அமையாமல் இருக்கும். மோசடி மற்றும் பிழைகள் தனியாக அல்லது கூட்டாக முன்வைக்கப்படும் அழுத்தங்கள் காரணமாகப் போதிய பொய்யான கூற்றுக்கள் ஏற்பட முடியும் என்பதோடு, அதன் போதுமான தன்மை இந் நிதிக் கூற்றினை அடிப்படையாகக் கொண்டு பயனர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதார தீர்மானங்கள் தொடர்பிலான தாக்கங்களின் மீது தங்கி நிற்கிறது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஓர் அங்கமாக என்னால் கணக்காய்வு செய்யப்படுகின்ற போது தொழில் முறைத் தீர்ப்பு மற்றும் தொழில்முறைச் சந்தேகம் என்பவற்றோடு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

- மேலும், எனது கருத்தின் அடிப்படையில், மோசடி அல்லது பிழைகள் காரணமாக நிதிநிலை அறிக்கைகளில் உள்ள அளவு தவறான விளக்கங்களின் அபாயத்தைக் கண்டறிந்து மதிப்பிடுவதற்கு சரியான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதன் மூலம் மோசடி அல்லது பிழையால் ஏற்படும் அபாயங்களைத்

தவிர்ப்பதற்கு போதுமானதும் பொருத்தமானதுமான செயல் ஒழுங்குகளை திட்டமிட்டுச் செயற்படுத்தப்பட்டுள்ளது. மோசடி, தவறாகப் பிரதிநிதித்துவம் செய்தல், போலிப் புனைவு, திட்டமிட்ட ஏய்ப்பு அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளை ஏய்த்தல் முதலானவற்றை நோக்கி இட்டுச் செல்வதால், தவறான விளக்கங்களினால் ஏற்படுகின்ற தாக்கங்களை விட மோசடியினால் ஏற்படுகின்ற தாக்கங்கள் பலமானவை.

- உள்ளக நிர்வகிப்பின் செயல்திறன் பற்றிய கருத்தினை தெரிவிக்கும் நோக்கில் அல்லாவிட்டாலும், சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான வகையில் சரியான கணக்காய்வு ஒழுங்குகளை திட்டமிடுவதற்காக வேண்டி உள்ளக நிர்வாகம் குறித்த புரிதலொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தப்பாடு, கணக்காய்வு மதிப்பீடுகளின் உண்மைத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ள உரிய வெளிப்பாடுகள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- சம்பவங்கள் அல்லது தரநிலைகள் காரணமாகப் பல்கலைக்கழகத்தின் நீடித்த இருப்பு தொடர்பில் போதிய நிச்சயமற்ற தன்மை காணப்படுகிறதா என்பது குறித்து பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு ஆதாரங்களின் அடிப்படையில், கணக்கீட்டிற்குப் பல்கலைக்கழகத்தின் நீடித்த இருப்பு குறித்த அடிப்படையினை பயன்படுத்தவதன் பொருத்தப்பாடும் தீர்மானிக்கப்பட்டது. போதிய நிச்சயமற்ற தன்மை உள்ளதென நான் ஊகிப்பேனாயின், அது குறித்து நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்துதல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையில் அவதானம் செலுத்தப்பட வேண்டும் என்பதுடன், அவ்வெளிப்படுத்தல்கள் போதுமானவையாக இல்லாவிட்டால் எனது நிலைப்பாடு மாற்றியமைக்கப்பட வேண்டும். எவ்வாறிருப்பினும், எதிர்கால சம்பவங்கள் அல்லது நிலைமைகளின் பேரில் நீடித்த இருப்பு முடிவுறுவதற்கு முடியும்.

- நிதிக் கூற்றுக்களின் கடட்டமைப்பு மற்றும் உள்ளீடுகளுக்கு அடிப்படையாய் அமைந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் சரியான முறையிலும் நியாயமானதாகவும் உள்ளடங்கப்பட்டுள்ளதா என்பது பற்றியும், வெளிப்படுத்துதல்களை உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பிப்புக்கள் குறித்தும் மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டது.

எனது கணக்காய்விற்குள் அடையாளம் காணப்பட்ட முக்கிய கணக்காய்வுக் கண்டுபிடிப்புக்கள், பிரதான உள்ளக நிர்வகிப்பின் பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள்

தொடர்பில் நிர்வகிக்கும் தரப்பினர்கள் தெளிவுபடுத்தப்பட்டனர்.

2 ஏனைய சட்டரீதியான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைகள் குறித்தான அறிக்கை

2.1 2018ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பில் விசேட ஒதுக்கீடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.1.1 எனது அறிக்கையில் தரநிலை மதிப்பீட்டின் அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களால் ஏற்படுகின்ற தாக்கங்களை தவிர, 2018ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(அ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம், கணக்காய்வுக்குத் தேவைப்படுகின்ற அனைத்து தகவல்களும்ம் மற்றும் தெளிவுபடுத்தல்களும் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டதுடன், எனது பரீட்சிப்பின் படி சரியான நிதி அறிக்கைகள் பல்கலைக்கழகத்தினால் பேணிச் செல்லப்பட்டிருப்பது நிரூபணமாகியுள்ளது.

2.1.2 2018 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(d) (iii) ஆம் பிரவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டிற்கு அமைய பல்கலைக்கழகத்தின் நிதிக் கூற்றானது கடந்த வருடத்தோடு ஒத்துப் போகின்றது.

2.1.3 2018 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1) (d) (iv)ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் கடந்த வருடத்தில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் முன்வைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

2.2 பின்பற்றப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட ஆதாரங்களின் அடிப்படையிலும் போதுமான விடயங்களுடன் மட்டுப்படுத்தப்பட்டதற்குள் பின்வரும் கூற்றுக்களைத் தெரிவிக்கும் அளவிற்கு எந்தவொன்றும் எனது அவதானத்திற்கு உட்படவில்லை.

2.2.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் எண் தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12 (d) இன் தேவைக்கு இணங்க, பல்கலைக்கழகப் பேரவையின் எந்தவோர் உறுப்பினரும், சாதாரண வணிகச் சூழ்நிலையைத் தவிர வேறு எந்த ஒப்பந்தத்திலும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஈடுபடலாம்.

2.2.2 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12 (f) இற்கான தேவையின்படி அல்லது பின்வரும் அவதானிப்புகளைத் தவிர, வேறு ஏதேனும் பொருந்தக்கூடிய எழுத்துச் சட்டம் அல்லது பல்கலைக்கழகப் பேரவையால் பிறப்பிக்கப்பட்ட பிற பொது அல்லது சிறப்பு உத்தரவுகளின்படி செயல்படவில்லை.

பார்க்க: விதிகள்/ கட்டளை		அவதானங்கள்
(a)	2.2.2. (a) 1971 ஆம் ஆண்டின் நிதிச் சட்டம் எண். 38 பிரிவு 11 மற்றும் PED இன் பத்தி 8.2.2 / ஜூன் 02, 2003 திகதியிடப்பட்ட பொது நிறுவனங்களின் இயக்குநர் ஜெனரலின் சுற்றறிக்கை 12 இன் படி	நிறுவனத்தின் உபரிப் பணத்தை சம்பந்தப்பட்ட அமைச்சர் மற்றும் நிதி அமைச்சரின் ஒப்புதலுக்கு உட்பட்டு முதலீடு செய்ய முடியும் என்றாலும், அத்தகைய அனுமதியின்றி, மதிப்பாய்விற்கு உட்பட்ட ஆண்டில் 17 நிலையான வைப்புகளில் ரூ. 218,807,919 முதலீடு செய்யப்பட்டுள்ளது.
(b)	இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் நிதி ஒழுங்குமுறைகள்	
	(i) நிதி ஒழுங்குமுறை 371 (5)	2016 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு வரை, 34 வழக்குகளில் வழங்கப்பட்ட பல்வேறு முன்பணத் தொகையான ரூ.7,475,251 இற்குத் தீர்வு காணப்படவில்லை.
	(ii) நிதி ஒழுங்குமுறை 371 (2) (b)	வழங்கக்கூடிய அதிகபட்ச வரம்பான ரூ.100,000 ஐத் தாண்டிய 15 வழக்குகளில் ரூ. 3,440,461 மதிப்பிலான முன்பணக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டன. மேலும், 15 வழக்குகளில் பணியாளர்கள் அல்லாத பிரிவு அதிகாரிகளுக்கு மொத்தம் ரூ.646,456 முன்பணக் கொடுப்பனவுகள் வழங்கப் பட்டன.
	(iii) நிதி ஒழுங்குமுறை 571	2016 மற்றும் 2020க்கு இடைப்பட்ட காலப்பகுதியுடன் தொடர்புடைய ரூ. 35,773,655 பிடிமான வைப்புத் தொகை செலுத்தப்படவில்லை.
(c)	பல்கலைக்கழக மானியங்கள்	ரூ. 2000 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரை கல்விக்கான விடுப்பில் வெளிநாடு சென்ற

	ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங் களுக்கான ஸ்தாபனக் குறியீட்டின் அத்தி யாயம் 5 இன் பத்தி 7	25 அலுவலர்களிடமிருந்து பெற வேண்டிய பிணை முறிவுக்கான 140,721,766 ரூபாய் 2023 மே வரை மீட்கப்படவில்லை.
(d)	**பொதுச் செலவினங் களைக் கட்டுப் படுத்துவது தொடர் பாகக் கருவூலச் செயலாளரால் வெளி யிடப்பட்ட** 08 **ஆகஸ்ட்** 2022 **திகதி யிட்ட சுற்றறிக்கை எண்**. 04/2022 **இன் பத்தி** 2.9	**உள்நாட்டு நிதியைப் பயன்படுத்தி வெளிநாட்டுப் பயணம் அல்லது பயிற்சித் திட்டங்கள் இடைநிறுத்தப் பட்டாலும்**, **ஓய்வுக்கால விடுப்பில் வெளிநாடு செல்வதற்கான விமான டிக்கெட்டுகளை வாங்கியதற்காக ஒரு பெண் பேராசிரியருக்கு டிசம்பர்** 14, 2022 **அன்று ரூ**.1,057,600 **வழங்கப்பட்டது**.
(e)	பல்கலைக்கழக மானி யங்கள் ஆணைக் குழுவினால் வெளி யிடப்பட்ட 01 மார்ச் 2016 திகதியிட்ட சுற்றறிக்கை இலக்கம் 4/2016 இன் பத்தி 5.5	சுயநிதி நடவடிக்கைகளாவன செலவு மீட்பு மற்றும் இலாப நோக்கற்ற அடிப்படையில் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றாலும், மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டின் டிசம்பர் 31 இல், அத்தகைய 02 நடவடிக்கைகள் ரூ.74,908,394 நிகர நிதி உபரியை உருவாக்கியுள்ளன.
(f)	16 நவம்பர் 2021 திகதியிட்ட அரசுக்கு சொந்தமான நிறுவனங்களுக்கான செயல்பாட்டு கையேட்டின் பத்தி 6.6 சுற்றறிக்கை எண். 01/2021.	அந்த ஆண்டின் நிதிநிலை அறிக்கைகள் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் நாயகத்துக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்றாலும், மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டின் நிதிநிலை அறிக்கைகளைச் சமர்ப்பிப்பது மார்ச் 20, 2023 வரை தாமதமானது.

2.2.3 பல்கலைக்கழகத்தின் அதிகாரங்கள், பணிகள் மற்றும் செயல்பாடுகள் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசியக் கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12 (g) க்கு இணங்க அமையவில்லை.

2.2.4 As per the requirement mentioned in Section 12 (d) of the National Audit Act No. 19 of 2018, the resources of the University have not been procured and utilized in accordance with the relevant rules in a timely manner, efficiently and

effectively except for the following observations.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசியக் கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12 (d) இல் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டின்படி, பல்கலைக்கழகத்தின் வளங்கள் பின்வரும் அவதானிப்புகள் தவிர்ந்து, உரிய விதிகளின்படி உரிய நேரத்தில் திறமையாகவும், திறம்படவும் கொள்முதல் செய்யப்பட்டுப் பயன்படுத்தப்படவில்லை.

(a) பல்கலைக்கழகப் பிரயோக விஞ்ஞான பீடத்தின் இரண்டாம் கட்ட கட்டிட வளாகச் செயற்திட்டம் - பகுதி I 18 நவம்பர் 2018 அன்று கட்டுமான நிறுவனத்திற்கு ரூ.452,409,980 (VAT உட்பட) ஒப்பந்த மதிப்பிற்கு வழங்கப்பட்டது. இந்தச் செயற்திட்டமானது வடிவமைப்பு மற்றும் கட்டமைக்கப்பட்ட (ஆயத்த தயாரிப்பு) ஒப்பந்தம் என்பதால், அங்கீகரிக்கப்பட்ட செலவு மற்றும் செயற்திட்டங்களைத் திருத்தக்கூடாது, ஆனால், மேலதிகப் பணிகளுக்கான ரூ. 24,625,295 கூடுதல் ஒதுக்கீடுகள் செய்யாத நிலையில் அங்கீகரிக்கப்பட்டது. வரிகளுக்கு ஒதுக்கப்பட்ட ஒதுக்கீட்டை மற்றக் கொடுப்பனவுகளுக்குப் பயன்படுத்த முடியாத நிலையில், மதிப்பு கூட்டு வரி (VAT) விகிதத்தை 15 சதவீதத்தில் இருந்து 8 சதவீதமாக குறைத்ததில் இருந்து வரி சேமிப்பை பயன்படுத்திக் கூடுதல் பணிகளுக்காகக் கட்டணமாகச் செலுத்தப்பட்டன. இறுதி விலைப்பட்டியலில் சூரிய சக்தி அமைப்புக்கு ரூ.3,000,000 செலுத்த முன்மொழியப்பட்டாலும், உரிய பணி போதுமான அளவு முடிக்கப் படாததால் கட்டணம் இடைநிறுத்தப்பட்டது. மேலும், கூடுதல் பணி மதிப்பீட்டில் 02 பணி பாடங்களுக்கு ரூ.6,579,931 மற்றும் அசல் மதிப்பீட்டில் சேர்க்கப்பட்ட சூரியசக்தித் தெரு விளக்கு அமைப்பிற்கு ரூ.3,600,000 செலுத்தப்பட்ட போதிலும், அது தொடர்பான அசல் திட்டங்கள் மற்றும் முன்மொழிவுகள் பெறப்படவில்லை. மேலும், கூடுதல் பணிக்காக ரூ.328,269 கூடுதல் பணம் செலுத்தப்பட்டது.

(b) விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப மனித வள மேம்பாட்டுச் (STHRD) செயற்திட்டத்தின் கீழ், 2021 ஆம் ஆண்டில் ரூ. 25,871,615 க்கு 839 வெவ்வேறு புத்தக அலகுகளை வாங்க வினியோகத்தர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இது அரசாங்கக் கொள்முதல் வழிகாட்டுதல் கோவையின் வழிகாட்டுதல் 7.10 க்கு மாற்றாமாக அமைந்துள்ளது. இதன்படி, மொத்தக் கொள்முதலில் 74 சதவீதம் அல்லது ரூ.21,062,900 மதிப்புள்ள 449 புத்தகங்கள் மற்றும் பருவ இதழ்கள் வழங்குவதில் முன் அனுபவம் இல்லாத நிறுவனத்திடமிருந்து வாங்கப்பட்டன. 97 புத்தகங்களின் விலை தற்போதைய சந்தை விலையை விட மிக அதிகமாக இருந்ததால், ரூ. 5,611,926 இழப்பு ஏற்பட்டதோடு, ரூ. 4,516,000 பெறுமதியான 61 புத்தகங்கள் பயன்படுத்தப்பட்ட புத்தகங்கள் என்பதும் தெரியவந்தது. அவற்றில் வாங்க வேண்டிய ரூ. 2,499,400 பெறுமதியான 14 புத்தகங்கள் குறித்த விவரம் தெளிவாக இல்லை. மேலும், இணையத்தில் இருந்து இலவசமாக பதிவிறக்கம் செய்திருக்கக்கூடிய பிரசுரங்களை வாங்கி அவற்றுக்குப் பணம் செலுத்துவதில் ஏற்பட்ட பல்வேறு குறைபாடுகள் காரணமாக ரூ. 565,650 பெறுமதியான தொகையை இழக்க நேர்ந்துள்ளது.

(c) டிசம்பர் 2021 இல், மதிப்பாய்வுக்கு உட்பட்ட ஆண்டில் பல்கலைக்கழகத்தின் தூய்மை மற்றும் தோட்டப் பராமரிப்புக்காக ரூ. 61,440,000 பெறுமதியான ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன. ஒப்பந்தத்தின் விதிமுறைகளின்படி துப்புரவுப் பணியாளர்கள் தங்கள் வருகை மற்றும் புறப்பாடு ஆகியவற்றை கைரேகை இயந்திரங்கள் மூலம் பதிவு செய்ய வேண்டும் என்று இருந்தாலும், அதற்கு அனைத்துத் தொழிலாளர்களும் இணங்கவில்லை. மேலும், 2022 ஜனவரி முதல் செப்டெம்பர் வரையிலான காலப்பகுதியில், பல்கலைக்கழகத் துப்புரவுப் பணிக்கு எந்தவொரு சேவையையும் வழங்காத இருவருக்கு ரூபா 354,016 செலுத்தப்பட்டது.

(d) மருத்துவப் பீடத்திற்கு ஒளிக் குறி வாசிப்பு (Optical Mark Reader) இயந்திரம் வாங்குவதில், விலை ஏற்ற இறக்கங்கள் காரணமாக ஏலங்களை மதிப்பீடு செய்யவும், தொடர்புடைய காலகட்டத்தில் ஏலங்களை வழங்கவும் தவறியதால் பல்கலைக்கழகம் ரூ. 1,270,585 பெறுமதியான தொகையினை இழக்க நேர்ந்தது.

(e) 2016 முதல் 2019 வரையிலான காலகட்டத்தில், நிலையான சொத்துப் பதிவேடுக்கான மென்பொருளை உருவாக்குவதற்கும் மென்பொருளில் தரவை உள்ளிடுவதற்குமாக மொத்தம் 08 முறை ரூ.1,370,300 செலுத்தப்பட்டது. ஆனால், மே 2023 க்குள் கூட, அது தொடர்பில் நிலையான சொத்துப் பதிவு பூர்த்திசெய்யப்படவில்லை.

2.3 ஏனைய விடயங்கள்

(a) 2018 முதல் 2022 வரையிலான காலப்பகுதியில், பல்கலைக்கழகத்தின் கல்வி மற்றும் கல்விசாரா ஊழியர்களில் 335 பேருக்கு மொத்தம் ரூ.433,826, 884 ஆய்வுக் கொடுப்பனவுகளாக வழங்கப்பட்டுள்ளது, ஆனால், மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டு இறுதிக்குள், அலுவலர்கள் எவரும் உரிய ஆய்வு அறிக்கைகளைச் சமர்பிக்கவில்லை.

(b) 2015 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரை கல்விசார் ஊழியர்களைச் சேர்ந்த 41 பேருக்கு ரூ.66,258,551 பெறுமதியான ஆராய்ச்சிக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்ட போதிலும், அந்த ஆராய்ச்சித் திட்டங்களின் தேசிய மற்றும் சர்வதேசப் பங்களிப்புகளின் விவரங்கள் கணக்காய்வுக்காகச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(c) **பல்கலைக்கழக மாணவர்களின் நடமாட்டத்திற்கான ஐரோப்பிய சமூக நடவடிக்கைத் திட்டத்தில்**/ ERASMUS **செயற்திட்ட ஒதுக்கீட்டில் இருந்து**, **வெளிநாட்டு நிகழ்ச்சிகளில் பங்கேற்ற** 08 **அதிகாரிகளுக்குத் தவறுதலாக பயணச் செலவுகள் மற்றும் கூட்டுக் கொடுப்பனவுகளாக மேலதிகமான ரூ**. 1,760,745 **பெறுமதியான தொகை வழங்கப்பட்டுள்ளது**.

(d) 2015 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை முதுமாணிப் பட்டக் கற்கைகளுக்குப் பதிவு செய்த 66 இளமாணிப் பரீட்சார்த்திகள் பல்கலைக்கழகம் நிர்ணயித்த காலத்திற்குள் படிப்பை

முடிக்கவில்லை. அவர்களில் 12 பேர் மட்டுமே காலத்தை நீட்டித்துள்ளனர்.

(e) 2022 ஜனவரியில் வெளிநாட்டு மாணவர் ஒருவர் தனது படிப்பைக் கைவிட்டதால், வெளிநாட்டு மாணவர் உதவித்தொகை நிதியில் மீதமுள்ள ரூ. 3,544,756 தொகையானது, டிசம்பர் 31, 2022 வரை குறிப்பிட்ட நிதிக்கு அனுப்பப்படவில்லை அல்லது அரசாங்க வருவாயில் எடுக்கப்படவில்லை.

(f) இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம் நிலையான அபிவிருத்தி இலக்குகள் தொடர்பான 2030 "நிகழ்ச்சி நிரல்" பற்றி அறிந்திருந்த போதிலும், அதன் நோக்கத்தின்படி அடைய வேண்டிய நிலையான அபிவிருத்தி இலக்குகள் அடையாளம் காணப்படாததன் காரணமாக, இலக்குகள், அடிப்படைத் தரவு, இலக்குகளை அடைவதற்கான மைல்கற்கள் மற்றும் முன்னேற்றத்தை அளவிடுவதற்கான குறிகாட்டிகள் என்பனவும் அடையாளம் காணப்படவில்லை.

(g) 2019 ஆம் ஆண்டு முதல் மஹாபொல உயர்கல்விப் புலமைப்பரிசில் அறக்கட்டளை நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய ரூ.2,201,150 மற்றும் 2018 ஆம் ஆண்டு முதல் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்குச் செலுத்த வேண்டிய ரூ.2,380,750 ஆகியவையும் மீளாய்வுக்கு உட்பட்ட ஆண்டில் செலுத்தப்படவில்லை.

(h) 2014ஆம் ஆண்டு ரூ. 123,052,693 செலவில் நிர்மாணிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் விளையாட்டு மைதானத்தையும் காட்சிக் கூடத்தையும் பூர்த்தி செய்யுமாறு 2017ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 9ஆம் திகதி பொது நிறுவனங்களுக்கான குழு உத்தரவிட்டிருந்த போதிலும், அதன் தக்கவைப்புப் பணம் ரூ.5,156,160 இனைப் பயன்படுத்தி மே 2023க்குள் கூட விளையாட்டு மைதானத்தைச் சீரமைக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(i) இம்புல்பே உள்ளூராட்சி மன்ற உறுப்பினர் ஒருவரின் தனிப்பட்ட வேண்டுகோளுக்கு இணங்க, வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் நடைமுறைப்படுத்தப்பட்ட வீதி அபிவிருத்தித் திட்டத்தின் ஒப்பந்ததாரருக்குப் பல்கலைக்கழக மைதானத்தில் இருந்து 500 கனசதுர மண்ணை இலவசமாக வெட்டுவதற்குப் பேரவை அனுமதி வழங்கியிருந்தது. மண் எடுக்கப்பட்டதற்கான குறிப்புகளைப் பதிவுசெய்யுமுகமாகப் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒரு பதிவேட்டினைப் பயன்படுத்தியிருந்த போதிலும், மண் எடுப்பதற்காக வந்த லொறிகள், மண் எடுக்கப்பட்ட அளவு என்பன குறித்த எந்தத் தகவல்களும் அதில் இல்லை.

W.P.C. விக்ரமரத்ன,
கணக்காய்வாளர் நாயகம்

(சிங்கள ஊடகப் பிரிவில் கையொப்பமிடப்பட்ட பிரதிகள் இங்கே கிடைக்கின்றன.)

16. தணிக்கை அறிக்கைக்கான பதில்கள் - 2022

தேசிய கணக்காய்வு சட்டத்தின்2018 ,ம் ஆண்டின் ம் இலக்க இலங்கை சபரகமுவ 19 பல்கலைக்கழகத்தின் தற்போதைய நிலையை வெளிப்படுத்தும் ,சட்டப் படியான , 31 ,ஒழுங்குவிதிகளின் வேண்டுறுத்தல்களுக்கு ஏற்படிசம்பர் ல் முடிவடைந்த 2022 2022 ,வருடத்துக்கானவருடாந்த அறிக்கையில் இடை நுழைக்கப்பட வேண்டியநிதி நிலை , அறிக்கைகளது ஆய்வின் பின்னரான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

வரிசை எண்	கணக்காய்வு வினவல்	பதில்	தற்போதைய நிலைவரம்
1.2	**சூழ்நிலை மதிப்பீடு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**		
(அ)	இலங்கை பொதுத்துறை கணக்கியல் தரநிலை 07 20 மற்றும் 65 இன் பத்தி பத்திகளுக்கு 103 இன் அமைய முறையே நடப்பு அல்லாத சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலம் வருடாந்தம் மதிப்பாய்வு .ரூ ,செய்யப் படாததால் 1,405,884,194க்கான நிலையான சொத்துக்கள் முழுமையாகத் தேய்மானம் செய்யப்பட்ட போதிலும் தொடர்ந்தும் பயன்பாட்டில் இருந்தன . இலங்கை ,அந்தவகையில் பொதுத்துறை கணக்கியல் ன் 03 தரநிலை அடிப்படையில் மேற்படி மதிப்பிடப்பட்ட பிழையை மீளாய்வு செய்வதற்கு கப்பட நடவடிக்கை எடுக் .வில்லை	நிலையான சொத்துப் பதிவேட்டைத் தயாரிப்பதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன ,காணி . கட்டிடங்களை உள்ளடக்கிய நிலையான சொத்துகள் தூலமாக ,மதிப்பிடப்பட்டு கணினிமயப் ,சான்றளிக்கப்பட்டு நிலையான .படுத்தப்படுகின்றன சொத்துப் பதிவேடு தயாரிப்பதற்கான கள் நடவடிக்கை .எடுக்கப்படுகின்றன கணினிமயப் படுத்தப்படுகின்றனநிலையான . சொத்துப் பதிவேடு தயாரிப்பதற்கான நடவடிக்கைகள் %80இற்கு அதிகமான அளவு பணிகள் நிறை வடைந்த பின்னர் குறைபாடுகளும் ஒழிக்கப்படும் .	ஜூன் 28, 2023 அன்று பல்கலைக்கழக தினத்தையொட்டி, நிலையான சொத்து கள் பதிவு மென் பொருள் சம்பிரதாய பூர்வமாக அறிமுகப் படுத்தப்பட்டது. தற்போது, 20 சதவீதப் பணிகளை விரைவில் முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.
(ஆ)	முந்தைய ஆண்டில் ஒப்பந்தங்களை மீறிய அதிகாரிகளிடமிருந்து வசூலிக்கப்பட்ட ரூ 4,440,449. ஒப்பந்த மீறல் நிதிக்கு மாற்றப்படாததால் , டிசம்பர் 2022 ,31	எதிர்காலத்தில் சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்	இது No GJ AU 001 என்ற ஜர்னல் பதிவு மூலம் சரி செய்யப்பட்டது

	நிலவரப்படி நிதியின் இருப்பு மற்றும் தொடர்ச்சியான ஒருங்கிணைந்த நிதியின் பற்றாக்குறை அதைவிடத் தொகை குறைவாகக் காட்டப்பட்டது .		
(இ)	உயர்கல்வி விரிவாக்கல் திட்ட அபிவிருத்தியினை துரிதப்படுத்துவதற்காக எனும் (AHEAD) உலகவங்கியின் செயற் திட்டத்திற்காக கடந்த ஆண்டுகளில் ரூபா நிதி இலங்கை 97,480,511 பொதுத்துறை கணக்கியல் இன் பிரகாரம் 03 தரநிலை ஒழுக்காற்றுச் சீராக் கலுக்குப் பதிலாக மீளாய்வு ஆண்டின் வருமானமாகக் கணக்கீடு செய்யப் பட்டமையால் ஆண்டின் மிகையானது அத்தொகை யால் கூடுதலாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப் பட்டிருந்தது.	2022 ஆம் ஆண்டில், 2022 ஆம் ஆண்டில் திட்டத்தின் உண்மையான வருமானம் மற்றும் செலவினங்கள் முந்தைய ஆண்டுகளின் அறிவு மேம்பாட்டுச் செலவுகள் மற்றும் செயல்பாட்டில் உள்ள கணக்கு இருப்பு ஆகியவற்றின் கணக்கீடு காரணமாக அதிகமாகக் கணக்கிடப் பட்டுள்ளன.	31.12.2022 இற்குள், இந்த மூலதன வரவு திரட்டப்பட்ட நிதிக்கு மாற்றப்பட்டு – மூலதனமாக்கப்பட்டது. எனவே, இந்த நேரத்தில் (2023 ஆம் ஆண்டில்) மாற்றங்களைச் செய்ய வேண்டிய அவசியமில்லை. எதிர்காலத்தில் இவ்வாறான தவறுகள் இடம் பெறாமல் தவிர்க்கு மாறும், தற்போது உள்ளமுறைமைக்கு அமைவாகச் செயற் படுமாறும் உரிய தரப்பினருக்கு அறிவிக்கப் பட்டுள்ளது.
(ஈ)	பொறி மற்றும் ,சொத்து உபகரணம் ஆகியவற்றின் த் தேய்வுகளைக் பெறுமான கணிப்பீடு செய்யும் தவறுகள் காரணமாக மீளாய்வாண்டின் பெறுமானத் தேய்வு ரூபா . 25,487,787மிகையான கணக்கு வைக்கப்பட்டதன் காரணமாக ஆண்டின் மிகை மற்றும் ஆதனங்கள் , பொறிகள் மற்றும் உபகரணங்களின் தேறிய பெறுமதி அந்த அளவுடன் ஒப்பீட்டளவில் குறைவாக றுக்களில் நிதிக்கூற் .காண்பிக்கப்பட்டிருந்தது	கணக்காய்வாளரின் கருத்து சரியானது எதிர்காலத்தில் . தொடர்புடைய திருத்தம் செய்ய .நடவடிக்கை எடுக்கப்படும்	

(உ)	2022ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் வேலைகள் பூர்த்தியாக்கப் பட்டிருந்த கட்டிடமொன்று தொடர்பில் ஒப்பந்தக்காரருக்குச் செலுத்த வேண்டிய ரூபா . 1,255,557தொகையானது கணக்கீடு செய்யப் பட்டிருக்காமையினால் மீளாய்வாண்டின் இறுதியில் ஆதனங்கள் , பொறித் தொகுதி மற்றும் மூலதனக் கடன்கொடுத்தோர் மீதி அப் பெறுமதியால் குறைத்துக் .காண்பிக்கப்பட்டிருந்தது	மூலதனப் பிரிவினால் வழங்கப்படும் கணிப்பீடுகளுடம்ள் தொடர்புடைய ஒப்பந்த நிறுவனத்திற்கு மேற்கொள்ளப் படும் கொடுப்பனவுகள் மாத்திரம் உள்ளடக்கப்படுவதுடன் நிதிப்பிரிவின் கணிப்பீடுகளில் தொடர்புடைய ஒப்பந்தத்திற்கு பல்கலைக்கழகத்தால் மேற்கொள்ளப்படும் சகல கொடுப்பனவு களையும் பெறுமதிசேர் வரிவிலை , அதிகரிப்பு மீதான (price escalation) பத்திரிகை ,சீராக்கல்கள் ,அடிக்கல் நடல் ,விளம்பரங்கள் (நிலம் சீராக்கல் போன்றன இந்தக் .உள்ளடக்கப்படும் காரணங்களால் இரண்டு பிரிவுகளுக்கிடையில் கணிப்பீடுகள் சமமாக இருக்க முடியாதுஇந்த வேறுபாடு . தொடர்பான கணிப்பீடுகள் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பப்பட்டுள்ளனஆகவே . இந்த கணக்காய்வு வினாக்களை நீக்கிவிடுமாறு கேட்டுக் .கொள்கிள்றேன்	2023 ஆம் ஆண்டில், தொடர்புடைய கணக்குகள் சரி செய்யப்பட்டுள்ள.
(ஊ)	மீளாய்வாண்டின் போது லொக்கர்கள் மற்றும் கட்டில்களைத் திருத்து வதற்காகச் செலவிடப்பட்ட தொகையான ரூபா மீண்டெழும் 5,628,910 செலவினமாக இருப்பதனால் வருடாந்த மிகை மற்றும் பொறிகள் ,சொத்துக்கள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி முறையே குறைவாகவும் கூடுதலாகவும் நிதி ஏடுகளில் .காண்பிக்கப்பட்டிருந்தது	இலங்கை பொதுத்துறை கணக்கியல் தரநிலை இன 07் இற்கு அமைய சொத்துக்கள் அடையாளம் காணும் போது சொத்தின் அல்லது சேவையின் கிடைக்கக்கூடியதாகவுள்ள எதிர்கால பொருளாதார நன்மைகளின் அதிகரிப்பு மற்றும் குறித்த பொருளின் விலை அல்லது நியாய பெறுமதியினை உண்மையாக மதிப்பிட முடியுமாயின் மூலதனச் செலவினமாக கருத முடியும் உரிய திருத்த வேலைகள் மூலம் மாணவரின் தங்குமிடத்தின் லொக்கர்கள் மற்றும் கட்டில்கள் என்பவற்றை பயன்பாட்டிலிருந்து நீக்காது அவற்றினது பயன்பாட்டு	இது No GJ AU 004 என்ற ஜர்னல் பதிவால் சரி செய்யப்பட்டது

		ஆயுட் காலத்தை அதிகரிப்பதற்கும் எதிர்கால நன்மை களை வழங்குவதற்கும் தரமான சேவைகளை வழங்கியதாகத் தரச் சான்று அறிக்கை வழங்கப் பட்டிருப்பதால் மீண்டெழும் செலவினமாக இனங்கண்டு கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. .	
(எ)	விவசாய விஞ்ஞான பீட கட்டிடத்தின் நிர்மாணப் பணிக்காக வழங்கப்பட்ட வேலைகளை ஆரம்பித் தலுக்காக வழங்கப்பட்ட முற்பணத்தினை முற்பணக் கணக்கீடு செய்யும் போது வரி VAT இன்றிக் குறிப்பிடப்பட்டதன் காரண மாக மேற்கொள்ளப்படாத வேலைகளின் பெறுமதி . இனால் 6,020,086 ரூ செலுத்தப் ,குறைவாகவும் படாத முற்பணங்களின் மீதிகள் அதிகமாகவும் நிதி ஏடுகளில் காண்பிக்கப் பட்டிருந்தது.	விவசாயப் பீடத்தின் கட்டிடங்கள் தொடர்பாக வேலை ஆரம்பிப்பதற்கான முற்பணம் உடன் VAT வழங்கப்பட்டிருந்தாலும் கொடுப்பனவு பற்றுச்சீட்டு மற்றும் உரிய விபரங்கள் என்பன மூலதனப் பிரிவினால் இன்றி VAT தயாரிக்கும் போது குறைப்புகள் மேற் கொள்ளப்படுவதனால் கணக்கு வைக்கும் போதும் கணக்குகள் அதேபோல் வைக்கப்படுகின்றன.	இது No CJ AU 001 என்ற இதழின் மூலம் சரி செய்யப் பட்டது
(ஏ)	மருத்துவ பீடத்தின் பாரா சிகிச்சை கட்டிட நிர்மாணத்திற்காக வழங்கப் பட்ட ரூ . 28,265,340ஆக விருந்த வேலைகளை ஆரம்பிப்ப தற்கான முற்பணமானது கணக்கு வைக்கப் படாமையின் காரணமாக மீளாய்வாண்டின் இறுதியில் அந்த முற்பணக் கணக்கின் மீதி மற்றும் மூலதனக் கொடைகள் அந்தத் தொகை யால் குறைத்து கணக்கு ஏடுகளில் காண்பிக்கப் பட்டிருந்தது.	வேலை ஆரம்பிக்கும் முற்பணமானது பல்கலைக்கழகத்தினால் செலுத்தப் படவில்லை என்பதால் கணக்கு களிலிருந்து கழித்துக் காட்டப் பட்ட விலை குறித்த கடிதத்தின் பிரகாரம் அடுத்த கணக்கீட்டு வருடத்தில் சீராக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.	இது No CJ AU 001 என்ற இதழின் மூலம் சரி செய்யப் பட்டது

(ஐ)	மீளாய்வாண்டின் டிசம்பர் மாதம் ஆம் திகதியில் 31 உள்ளவாறு மாணவர் களுக்கான நிதியுதவி தொகை ரூபா 4,852,000 . அறவிடப்பட வேண்டியிருந்த போதும் , 38,180,000 .அது ரூபா என்பதாக குறிப்பிடப்பிடப் பட்டிருந்த தானது குறித்த ஆண்டின் மாணவர் நிதியுதவி வருமானம் மற்றும் கிடைக்க வேண்டிய மாணவர் .நிதியுதவி மீதி ரூபா தொகையானது 6,672,000 குறைத்துக் .ட்டிருந்ததுகாண்பிக்கப்ப	கணக்காய்வு விசாரணையில் குறிப்பிடப் பட்டவாறு கணக்காய்வு நடவடிக்கை களுக்காக மாணவர்களுக்குப் புலமைப் பரிசில் பிரிவினால் வழங்கப்பட்ட மாணவர்களுக்கான நிதியுதவிச் செலவாக செலவு செய்யப்பட்டுள்ள பணம் ரூ . ஆக இருந்த போதிலும் 95,812,000 ம் ஆண்டு வரை ஆ 2022 மாணவர்களுக்குப் புலமைப் பரிசில் பிரிவினால் வழங்கப்பட்ட பற்றுச் 2022 ,சீட்டுக்களின் பிரகாரம்ஆம் ஆண்டுக்கான மாணவர்களுக்கு வழங்கப்பட்ட நிதியுதவிச் செலவினம் ரூ 95,900,000 .ஆகக் கணக்கு வைக்கப்பட்டுள்ளது . எவ்வாறாயினும் , மாணவர்களுக்கான நிதயுதவி தொடர்பான அட்டவணையை தயாரிக்கும் போது இந்தச் செலவினம் ரூபா -/89,228,000 .வாக இனங்காணப் பட்டிருப்பதால் பேரேடு மற்றும் அட்டவணைக்கு இடையேயான வேறுபாடு ரூபா -/6,672,000ஆகும் . மாணவர்களுக்கான நிதியுதவிச் செலவினத்தை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு செய்யப்படுகின்ற கிடைக்க " வேண்டிய மாணவர் நிதியுதவி மாணவர் " மற்றும் "வருமானம் ரூபா "நிதியுதவி வருமானம் -/6,672,000குறைவாக இனங்காணப்பட்டுள்ளதுஇந்தத் . தவறை கணக்கீட்டுச் செயலியின் ஊடாக நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	இது No CJ AU 001 என்ற இதழின் மூலம் சரி செய்யப்பட்டது
(ஒ)	ஆம் ஆண்டு டிசம்பர் 2022 ஆம் திகதியில் 31 மாதம் உள்ளவாறு அறவிடப்பட .வேண்டிய மொத்தம் ரூபா 170,642,885பெறுமதியான முறியின் பெறுமதி நிதிக்	கணக்காய்வு விசாரணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு 2022 31 ஆண்டு டிசம்பர் மாதம் ஆம் ஆம் திகதியில் உள்ளவாறான அறவிடப்பட வேண்டிய தொகை நிதிக் குறிப்புக்களில்	அடுத்த ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கைகளைத் தயாரிப்பதில், வசூலிக்கப்பட வேண்டிய ஒப்பந்த மதிப்பு கணக்குக்

	குறிப்புக்களில் வெளிப்படுத்தப் பட்டிருக்க வில்லை	வெளிப்படுத்துவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை .எடுக்கப்படும்	குறிப்பு மூலம் வெளியிடப்படும்.
(ஓ)	பிரயோக விஞ்ஞான பீடத்தில் காணப்பட்ட இருப்புக்களின் பெறுமதியை கணிப்பீடு செய்யும் போது அலகுக் கிரயத்தினை சரியாக இனங் காணாத காரணத்தினால் 10 இரசாயனப் பொருட்களின் தேறிய பெறுமதிரூபா . 5,232,260தொகை அதிகரித்துக் கணக்கு வைக்கப்பட்டிருந்தது . எஞ்சிய ,ஆகையால் இருப்பு மீதியும் ஆண்டின் மிகையும் அதே அளவுகளில்கூடுதலாக நிதி ஏடுகளில் காண்பிக்கப்பட்டிருந்தன . களஞ்சிய இருப்பு ,மேலும் ஆவணங்கள் மற்றும் சிட்டைப் பற்றுச்சீட்டுக்கள் சரியாகப் பராமரிக்கப் படாமையால்அலகுக் , கிரயத்தை இனங்காணப் படாத வகையான 106 இருப்புக்கள் தொடர்பான பெறுமதி கணக்கீடு செய்யப் பட்டிருக்கவில்லை.	பிரயோக விஞ்ஞான பீடத்தின் இரசாயன இருப்பு உறுதிப்படுத்தும் அறிக்கையில் பற்றாக்குறைகள் மிகைகள் / காட்டப்பட்டிருந்த போதிலும், கணக்கு வைக்கும் போது இருப்பு உறுதிப்படுத்தும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த இருப்புக்களின் உண்மை பெறுமதி நிதி அறிக்கைகளில் சீராக்கப்பட்டுள்ளது இருப்பு மதிப்பீட்டுக் குழு அறிக்கையில்இருப்புக்கள் , பரீட்சார்த்தமாகச் சரிபார்க்கப்படும் சந்தர்ப்பத்தில் இந்த ஆய்வுகூடங்களில் -Bin அட்டைகளில் குறைபாடுகள் காணப்படுவதாகவும் , அடையாளம் காணப்பட்ட ஆய்வுகூட இரசாயனப் பொருட்களின் விலை நிர்ணய செய்வதற்கான மூலங்கள் (Invoice/GRN) சமர்ப்பிக்கப்படவில்லை என்பதாகவும் அறிக்கையிடப் பட்டிருப்பதால் இருப்புக்களின் உண்மையான மதிப்பு நிதி ஏடுகளில் பதியப்பட்டுள்ளது .	இது No GJ AU 002 என்ற ஜர்னல் பதிவால் சரி செய்யப்பட்டது
(ஔ)	ERASMUS வேலைத்திட்டத்தின் நிதியுதவி மூலமாகப் பிரயோக விஞ்ஞான பீடத்திற்காக மீளாய் வாண்டில் கொள்வனவு செய்யப் பட்டிருந்த ரூ . 2,683,360தொகையான சொத்துக்கள் கணக்கு ஏடுகளில் பதியப்படாமல் விடப்பட்டதன்	இந்த நிலையான சொத்துக்களாவன செயற்றிட்டக் காலப்பகுதியின் இறுதியில் செயற்றிட்ட மீளாய்வாளர்களிடமிருந்து பெறப்படும் வருமானம் - க்கை செலவினப் பகுப்பாய்வு அறி மற்றும் செயற்றிட்டம் இறுதியடையும் என பெறப்படும் Progress Report/Final) அறிக்கையை அடிப்படையாகக் (Report	அடுத்த ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கைகளைத் தயாரிக்கும் போது, இந்த நிலையான சொத்துகளின் மதிப்பு கணக்குக் குறிப்பு மூலம் வெளியிடப்படும்.

	காரணமாக சொத்துக்கள், பொறித்தொகுதி மற்றும் மூலதன நன்கொடைகள் அத் தொகையால் குறைத்து நிதி கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தன.	கொண்டு இந்த நிலையான சொத்துக்கள் மூலதானமாக்குவதற்கான நடவடிக்கைகள் எதிர்வரும் .மேற்கொள்ளப்படும் வரவுடங்களில் இருந்து இது தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	
(க)	முன்னைய இரண்டு ஆண்டுகளுக்காக கணக்காய்வுக் கட்டணங் களிற்கான மேலதிக ஒதுக்கீடு ரூ 468,000 . தொடர்பில் நிதிக் கூற்றுக்களில் சீராக்கங்கள் மேற்கொள்ளப்படவில்லை என்பதுடன்நிதிக் , கூற்றுக்களில் மீளாய்வாண்டுக்கான கணக்காய்வுக் கட்டணங்களுக்கான நிதி ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப் படவில்லை.	கணக்காய்வாளரின் கருத்து சரியானது ல் எதிர்காலத்தி . தொடர்புடைய திருத்தம் செய்ய .நடவடிக்கை எடுக்கப்படும்	01.01.2022 தேதியிட்ட ஜர்னல் எண். GJ 04 மற்றும் 2022.10.02 தேதியிட்ட GJ 07 கணக்காய்வுக் கட்டணமான ரூ. 468,000 முந்தைய ஆண்டுகளின் மிகை ஒதுக்கீடு ஆகும். எனவே, 2022 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வுக் கட்டணம் (VAT உடன்) GJ AU 008 ஆல் சரி செய்யப்பட்டது.
(ங)	முன்னைய ஆண்டில் ஆதனக் கடன்களின் வட்டி வீதம் குறைவடைந் தமையால் வங்கியில் இருந்து மீளச் செலுத்தப்பட்ட ரூபா . 1,412,765தொகை முன்னைய ஆண்டின் இலாபத்திற்குச் சீராக்கல் செய்வதற்குப் பதிலாக மீளாய்வாண்டின் வருமான மாகக் கணக்கீடு செய்யப் பட்டிருந்ததுடன் , கணக்கீட்டு ஆண்டின் இறுதியில் கிடைக்க வேண்டிய வட்டி 1,274,461 .வருமானம் ரூபா தொகை அதிகமாகக் கணக்கு வைக்கப் பட்டிருந்ததுஅதன் .	கணக்காய்வு வினாக்கள்டள் உடன்படுவதுடன் ரூபாய் -/1,412,765மீண்டும் செலுத்தப்பட்ட கடன் வட்டி வருமானத்தை முன்னைய ஆண்டிற்கு சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சொத்துக் கடன் வட்டி விகிதங்கள் குறைவதால், திருப்பியளிக்கப் பட்ட தொகை தற்போது (2023க்குள்) ஒருங் கிணைக்கப்பட்ட தொடர் கணக்கிற்கு மாற்றப்பட்டுள்ளது.எனவே, திருத்தம் தேவையில்லை. GJ AU 004 ஜர்னல் உள்ளீடுகள் மூலம் பெறத்தக்க வட்டி / வட்டி வருமானம் சரி செய்யப் படுகிறது.

	பிரகாரம் மீளாய்வாண்டிறக் கான மிகை ரூபா 2,687,226 . மற்றும் கிடைக்க வேண்டிய வட்டி வருமானம் ரூபா 1,274,461 . இனால் கூடுதலாக மீண்டெழும் ஒருங்கிணைந்த நிதியம் ரூபா தொகை 1,412,765 குறைவாக நிதிக் குறிப்புக்களில் காண்பிக்கப் பட்டிருக்கவில்லை.		
(ச)	3,568,546 .திரண்ட செலவு ரூ தொகை அதிகரித்துக் கணக்கு வைக்கப் பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்குரிய செலவினம் ரூபா மீளாய் 1,104,343 . வாண்டிற்கான செலவின மாக தொகைகள் கணக்கீடு செய்யப்பட்டிருந் தமையால் மீளாய் வாண்டிற்கான மிகை ரூபா 4,672,889 .தொகை குறைவாக காண்பிக்கப்பட்டிருந்ததுட ன், மீண்டெழும் திரட்டிய நிதியம் ரூபா 1,104,343 . இனாலும் தொழிற்பாடுகளிலிருந்தா 3,568,546 ன ரூபா இனாலும் கூடுதலாக நிதிப் பிரமாணத்தில் காண்பிக்கப் பட்டிருந்தது.	இது எதிர்காலத்தில் சரி செய்யப்படும்.	3,568,546 தொகையான திரட்டல் செலவுகளின் கணக்கியல் GJ AU 009 ஆல் சரி செய்யப்பட்டது. முந்தைய ஆண்டு தொடர்பான செலவினங்கள் ரூ. 1,104,843.00 (மீண்டெழும் 487,500 / பிற இயக்கச் செலவுகள் 616,843) ஒருங்கிணைந்த தொடர் நிதியில் சரிசெய்யப்பட்ட தால், திருத்தங்கள் எதுவும் தேவையில்லை.

(ஞ)	2023ஆம் ஆண்டிற்கு உரித்தான மற்றும் அந்த ஆண்டில் செலுத்தப்பட்ட செலவினம் ஒன்று 2022 ஆம் ஆண்டின் முற்கொடுப்பனவு கணக்குக்கும் அட்டுறு செலவினக்கணக்குக்கும் ரூபா 1,105,231 .வீதம் முறையே வரவு மற்றும் செலவு வைக்கப் பட்டிருந்தது ,எனவே . நடைமுறைச் சொத்துக்கள் மற்றும் நடைமுறைப் பொறுப்புக்கள் என்பன அவற்றின் தொகையினால் அதிகமாக நிதிக் கூற்றுக்களில் .காண்பிக்கப்பட்டிருந்தது	ஆம் திகதியில் 31/12/2022 உள்ளவாறான திரண்ட அடிப்படையில் செலவினங்களை இனங் காண்பதற்கான போது , கொடுப்பனவு வவுச்சர்களைக் கணக்கீட்டு மென்பொருளிற்கு உட்படுத்தும் போது மீளாய்வாண்டிற்கு ஏற்புடையதான செலவினம் ரூபா . எதிர்காலத்தில் -/221,774 செலுத்தப்பட வேண்டிய தொகை -/1,105,232என்பன தனித்தனியாக அடையாளங் காணப்பட்டு மொத்தப் பெறுமதியான ரூ . கடன்கொடுத்தோர் -/1,327,004 கணக்கிற்கு (ளர்கட்டுப்பாட்டா) 2023 செமைப்படுத்தப்பட்டுள்ளது ஆம் ஆண்டில் குறித்த கடன்கொடுத்தோர் கணக்கிலிருந்து பணம் கழிந்து செல்லும் வகையில் .செலுத்தப்படும்	இது No CJ AU 003 என்ற இதழின் மூலம் சரி செய்யப் பட்டது
